


தமிழ் நாடு காந்தி நினைவு நிதி வெளியீடு - 9

# ரகுபதிராகவ

(சத்தியமே கடவுள்)

## மகாத்மா காந்தி

தமிழாக்கம்:

## ராஜாஜி

தமிழ் நாடு காந்தி நினைவு நிதி, மதுரை.

முதற்பதிப்பு: மார்ச், 1958.
இரண்டாம் பதிப்பு: நவம்பர், 1961.

நவஜீவன் டிரஸ்டின் அனுமதியுடன்
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
வெளியிட்டது

விலை ரூபாய் ஒன்று

கிடைக்குமிடம்:
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி,
தல்லாகுளம் தபால் :: மதுரை–2.

சாந்தி பிரஸ், சென்னை-1.

# பதிப்புரை

மகாத்மா காந்தி அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வி முதலிய துறைகளில் பல அரிய காரியங்களைச் சாதித்து முடித்தார். அவருக்குக் கடவுள் மீது இருந்த உறுதியான நம்பிக்கையும், ஆண்டவனை அறிய அவர் செய்து வந்த இடைவிடாத சாதனைகளும் தான் அவைகளுக்கு அடிப்படையாகும் ஆண்டவனைப் பற்றி அவர் கூறியுள்ள கருத்துக்களை ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். எனவே, அவைகளைத் தொகுத்து விரைவில் புத்தகமாக வெளியிட வேண்டும் என்று நெருங்கிய நண்பர் ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன் சொல்லிக் கொண்டு வந்தார். அவர் கூறியது மிக நல்ல யோசனை. ஆகவே, அப்படிப்பட்ட புத்தகம் வெளிவர வேண்டுமென்ற விருப்பம் எங்களுக்கு இருந்துகொண்டு வந்தது.

1955-ஆம் ஆண்டில் ஆமதாபாத் நவஜீவன் காரியாலயத்தார், கடவுளைப் பற்றிய மகாத்மாஜியின் கருத்துக்களைத் தொகுத்து, "Truth is God" (சத்தியமே கடவுள்) என்ற பெயரில் வெளியிட்டார்கள். அவ்விதம் தொகுத்துத் தந்தவர், காந்திஜியின் எழுத்துக்களில் ஆழ்ந்த ஆராய்ச்சியுள்ளவரும், முன்பே காந்தி நூல்கள் சிலவற்றைத் தொகுத்தவருமான ஸ்ரீ ஆர். கே. பிரபு ஆவர். அந்நூலுக்கு நம் தலைவர் ராஜாஜி முன்னுரையும் எழுதியிருக்கிறார். நல்ல வாய்ப்பு கிடைத்தது; தகுந்தவர்களைக்கொண்டு மொழி பெயர்த்து விடலாம் என்று மிகுந்த ஆவலுடன் இருந்தோம்.

ராஜாஜி அவர்களே இதை மொழிபெயர்க்கப் போவதாகவும், 'கல்கி' யில் வாரா வாரம் சிறிது சிறிதாய் தொடர்ச்சியாய் அது வெளிவருமென்றும் அச்சமயம் கேள்விப்பட்டோம். எங்களுக்கு அது மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவ்வாறே சில நாட்களில் மொழி

பெயர்ப்பும் "கல்கி" யில் வெளி வரத் தொடங்கியது. 'ரகுபதி ராகவ' என்ற தலைப்பை அதற்கு அவர் கொடுத்திருக்கிறார். அதற்குக் காரணமும் அவர் தெரிவித்துள்ளார்.

சில பகுதிகள் வெளிவந்ததும், தமிழ்நாடு காந்தி நினைவு நிதியிலிருந்து அவைகளைப் புத்தமாக வெளியிட ராஜாஜியை அனுமதி கேட்டோம். மொழிபெயர்ப்புத் தொடர் முடிந்ததும் வெளியிடலாம் என்று அன்புடன் அவர் அனுமதி அளித்தார். ராஜாஜியைவிட சிறந்த மொழிபெயர்ப்பாளர் யாரும் இருக்க முடியாது. அவர் இப் பணியை ஏற்றுக்கொண்டது எங்கள் பாக்கியம்எனக் கருதினோம். அவருக்கு எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். தமிழ்நாடும் அவருக்குக் கடமைப் பட்டிருக்கிறது. 'கல்கி' பத்திரிக்கையினரும் அனுமதி தந்து உதவினார்கள். அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நவஜீவன் காரியாலயத்தாருடைய அனுமதியும் பெற்றுள்ளோம். அவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்ததாகும்.

இந்நூலின் இரண்டாவது கட்டுரையிலிருந்து மகாத்மாஜியினுடைய அருள் மொழிகள் ஆரம்பமாகின்றன. முதல் கட்டுரை இந்நூலுக்கு முன்னுரையாகும். அதை ராஜாஜி எழுதியுள்ளார்.

இந்நூலை அனைவரும் படிக்க வேண்டுமென்று நினைத்து விலை மிகவும் குறைவாக வைக்கப்பட்டிருக்கிறது. அன்பர்கள் அனைவரும் வாங்கிப் படித்துப் பயன் அடைய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

மதுரை,
25-1-'58.

நா. ம. ரா. சுப்பராமன்,
நிர்வாகி, தமிழ்நாடு காந்தி நினைவு நிதி.

# ராஜாஜி அவர்களின்

## முன்னுரை

காந்தியடிகளுடைய மனத்தைக் கவர்ந்த பிரார்த்தனைப் பாட்டு 'ரகுபதிராகவ ராஜாராம்' என்பது. இது அனைவருக்கும் தெரிந்த விஷயம். இந்தத் தலைப்பை வைத்து காந்தி மகான் அவ்வப்போது பகவத் விஷயமாக எழுதி வந்த வாசகங்களைத் தொகுத்து எழுதலாம் என்று ஆரம்பிக்கிறேன்.

'நவஜீவன்' காரியாலயத்தார் ஆங்கிலத்தில் ஒரு வசன மஞ்சரி "சத்தியமே தெய்வம்" என்கிற பெயரிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். அதில் காந்திஜி அவ்வப்போது கடவுளைப் பற்றியும் சமயத்தைப் பற்றியும் சொல்லி வந்ததையெல்லாம் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மஞ்சரியைத் தமிழ்ப் படுத்திக் 'கல்கி'யில் சிறு கட்டுரைகளாகத் தொடர்ந்து எழுதலாம் என்பது கருத்து. இதற்கு நவஜீவன் காரியாலயத்தார் சம்மதியும் தந்திருக்கிறார்கள்.

காந்தி மகான் நம்முடைய நாட்டுக்காகவும் மனித சமூகத்துக்காகவும் அநேக காரியங்கள் செய்தார். அவற்றில் மகோன்னதமான வெற்றிகள் அடைந்து புகழ் பெற்றார். அரசியல் துறையிலும், சமுதாய சீர்திருத்தத் துறையிலும், தொழில் துறையிலும், பல பிரசித்தி பெற்ற பணிகள் ஆற்றினார். இந்தக் கட்டுரைத் தொடரில் அடங்குகிற காந்தி வாசகங்கள் மற்ற விஷயங்களைத் தவிர்த்து, கடவுளைப் பற்றியும் சமயங்களைப் பற்றியுமே இருக்கும். சத்தியாக்கிரகம், கதர், தீண்டாமை ஒழிப்பு முதலான விஷயங்களைப் பற்றி எழுதியதை இந்த மஞ்சரியில் எதிர்பார்க்க வேண்டாம். பகவத் விஷயம் ஒன்றே இந்த 'ரகுபதி ராகவ' தொடரில் வரும்.

இந்தியாவுக்கு சுதந்திரத்தைச் சம்பாதித்துத் தந்த நமது அப்பன் வெறும் அரசியல் வாதியல்ல, தெய்வத்தைக்

காட்டிவந்த முனிவனுமாவான். காந்தி மகானுடைய அந்தரங்க உள்ளத்தை அறிய வேண்டுமானல் அவருடைய அரசியல் சரித்திரத்தைப் படித்துவிட்டால் மட்டும் போதாது. சம்பூரண காந்தியை அவருடைய பிரார்த்தனைக் கூட்டங்களில்தான் மக்கள் கண்டார்கள். எழுத்திலும்கூட அவருடைய அறவுரைகளில்தான் அவரைச் சரியாகக் கண்டு குறையின்றி உணரலாம்.

நம்முடைய சுதந்திரத்தின் தனிச் சிறப்பு என்னவென்ருல் அதன் வெற்றிச் சரித்திரத்தில் கலந்துவந்த கடவுள் பக்தியும், அதை யொட்டிய சாத்துவிகமும். அந்தத் தனிச் சிறப்பை மங்காமல் மறவாமல் நாம் காப்பாற்றி வர வேண்டும். அப்போதுதான் பாரத நாட்டுக்கு உலகத்தில் ஒரு தனி ஆசனம் இருக்கும். இல்லாவிடில் மற்றவர்களோடு பின் வரிசையில் பத்தோடு பதினென்ருக இருக்க வேண்டியதுதான்.

நம்முடைய காந்தி மிகக் கூர்மையான மூளையும் தற்கால விஞ்ஞானக் கல்வியும் படைத்தவர். இந்த யுகத்தின் ஆட்சேபணை ஐயப்பாடுகள் அனைத்தையும் அறிந்த இத்தகையவர், நம்முடைய அரசியல் தலைவர், ராம பஜனை செய்துவந்தார். மதங்கள் அனைத்திலும் ஒரே தெய்வம் என்பதைப் போதித்தார். இருபதாவது நூற்ருண்டில் ஒரு ஆஸ்திகராக விளங்கிஞர். இதைப் பாரத மக்கள் கல்லெழுத்தில் எழுதிய சாசனமாக வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும். அப்படி நடத்திஞல்தான் ஆண்டவன் அருள் பெற்று சுதந்திரத்துடன் சுகமும் பெறுவோம்.

## 1

*நான் உண்மையைக் கண்டுவிட்டவன் அல்ல. மெய்ப்பொருளை நாடும் மக்களில் நான் ஒருவன். அவ்வளவுதான். ஒரு பெருமை நான் சொல்லிக் கொள்ளலாம், உண்மையைக் காண்பதற்கு வழி கண்டேன்-அவ்வளவே. மெய்ப்

---

* இந்தக் கட்டுரைகளில் நான் என்னும் இடங்கள் காந்திஜியைக் குறிக்கும்.

பொருளைக் காணுவதற்கு இடையருமல் முயன்றுவருகிறே ஞறைலும் நாடும் பெரும் பொருளை இன்னம் காணவில்லை: ஒருவன் மெய்ப் பொருளை முழுதும் கண்டுவிட்டால் அவன் வீடு பெற்றவனே ஆவான்; வாழ்க்கையின் பலனை அடைந்துவிட்டு முக்தி கண்டவன் ஆவான்.

என்னுடைய குறைகளை நான் உணராமல் இல்லை. நன்ருகவே உணர்வேன். உணர்ந்து அதற்காக வருத்தமும் படுகிறேன். ஒருவன் தன் குறைகளைக் கண்டுகொண்டு விட்டால் அதுவே ஒரு பெரும் பாக்கியம். எனக்கு ஏதே னும் விசேஷ சக்தி இருப்பின் அதன் இரகசியம் என்ன வென்ருல் என் குறைகளை நான் நன்ருக அறிந்திருப்பதே ஆகும்.

மற்றவர்களுடைய குறைகளை யாருமே காண்பார்கள். தன்னுடைய குற்றம் குறைகளை ஒருவன் கண்டுகொள்வது அரிது. அதற்கு வேண்டிய ஞானம் எளிதில் கிடைக்காது. அந்த அறிவைப் பெற்றிருப்பதே என்னுடைய பாக்கியம்.

*　　　*　　　*

எனக்குப் பூரண அறிவு இல்லை என்பதற்கு என் னுடைய துயரமே போதும் சாட்சி. நான் சம்பூரண ஞானம் அடைந்தவனுக இருந்தால் நான் காணும் துயரம் என் உள் ளத்தைக் கலங்கச் செய்யாது. ஞானியானவன் துயரங் களைக் காண்பான். ஆனல் அவற்றைக் கண்டு கலக்கம் அடையமாட்டான். துயரத்துக்கு மருந்து என்ன என்ப தைச் சொல்வான்.

பூரண ஞானம் பெற்று நான் ஒரு சித்தனுக இருந் திருப்பேனுகில், நான் கண்ட உண்மையும் சொல்லும் மருந் தும் தாமாகவே பிறரை வசப்படுத்தியிருக்கும். நான் ஒன் றும் அதற்காகச் செய்யவேண்டியிருக்காது. நான் சொல் லிக் காட்டும் உண்மையே அதை உணரும் சக்தியைப் பிறருக்குத் தந்திருக்கும். நான் கண்டு விட்டதைப் பிறருக்கு எடுத்துக்காட்டி அறிவு ஊட்ட இவ்வளவு வருத் தப்பட வேண்டியிராது. என் அறிவானது குறையும் குற்ற மும் கலந்த அறிவு. பூரண அறிவு அல்ல. அதனுலேதான்

நான் கண்டதைப் பிறருக்கு உணர்த்தும் சக்தி எனக்குப் போதிய அளவில் உண்டாகவில்லை. நான் கண்டு என் மனத்தில் உறுதியாக நிற்பதைப் பிறர் காணும்படி செய்வது மிகவும் சிரமமாக இருக்கிறது. நான் சொல்லுவது பிறருக்கு எளிதில் விளங்குவதில்லை. பல சமயம் சொல்லுவதெல்லாம் வீணாகிறது. என் முயற்சி பலன் தராமலும் போகிறது. இதற்கெல்லாம் காரணம் என்னுடைய காட்சியிலுள்ள குறையே.

சம்பூரண ஞானியாகாத நான் என்னுடைய ஞானக் குறைவினால் நாட்டிலுள்ள வறுமையைக் கண்டு வருத்தம் அடைகிறேன். பூரண ஞானம் அடைந்தவனுக்குத் துயரம் என்பது இல்லை. முற்றிய அறிவு பெறாத ஒருவன் துயரத்தில் மூழ்கித் தத்தளிப்பவர்களைக் கண்டு அநுதாபம் இல்லாமல் இருந்தால் அவன் மிருகமே ஆவான் அல்லவா? நாட்டில் நாம் காணும் கஷ்டங்கள் இருக்கவேண்டியதில்லை. அவற்றைத் தவிர்த்துக் கொள்ளாமல் இருக்கிறார்களே என்று துயரம் உண்டாகிறது. ஆண்டவன் ஆளும் உலகத்தில் இவ்வித வறுமை ஏன்? மக்கள் ஊமைகளாக, எலும்பும் தோலுமாக ஏன் இருக்க வேண்டும்?—இவ்வாறு எண்ணி நான் துக்கத்தில் மூழ்கி நிற்கிறேன்.

[யங் இந்தியா 17.11.21]

## 2

நான் ஆசைப்படுகிறேன்; 'பாபம்' ஏதும் செய்யாமல் உண்மையை விட்டுப் பிறழாமல் எண்ணம், பேச்சு, செயல் மூன்றிலும் பழுதற்ற அஹிம்ஸையைக் கடைப்பிடித்து நடக்க ஆசைப்படுகிறேன். இதற்காகவே மிக அலைந்து வருகிறேன். என்னுடைய சக்தியோ அதற்குப் போதியதாக இல்லை. நான் ஆசைப்படும் நிலையேதான், நாம் அனைவரும் நாடவேண்டிய நிலை என்பதை அறிவேன். ஆயினும் ஆசைப்படி நடந்துகொள்ள என்னால் முடியவில்லை. இந்த மலைமேல் ஏறுவது மிகக் கடினமாக இருக்கிறது. ஆயினும்

ஏறும்போது உண்டாகும் வருத்தமே என் உள்ளத்துக்கு மெய்யான இன்பம் தருகிறது. ஏறும் ஒவ்வொரு அடியும் எனக்கு ஒரு புது சக்தி தருகிறது. அடுத்த அடி எடுத்து வைக்க பலம் தருகிறது.

[யங் இந்தியா 9-4-25]

நடந்து செல்லவேண்டிய பாதையை அறிவேன். அந்தப் பாதை அகலமான பாதை அல்ல. நேராகச் செல்லுகிறது. நல்ல கூரான கத்தி முனையைப் போன்று இந்தக் கஷ்டமான பாதையில் நடப்பது எனக்கு ஆனந்தம் தருகிறது. சில சமயம் தவறுகிறேன். தவறியபோது புலம்புகிறேன். ஆனால் பகவானுடைய வாக்கு இருக்கிறது. நல்வழியில் முயற்சி செய்பவனுக்குக் கேடில்லை.

பார்த்த ! நைவேஹ நாமுத்ர
விநாசஸ் தஸ்ய வித்யதே
நஹி கல்யாண க்ருத் கஸ்சித்
துர்கதிம் தாத கச்சதி.

இந்தச் சூளுரை பொய்யாகாது என்பது என் உறுதி. என் பலவீனத்தினால் ஆயிரம் முறை வீழ்ந்தேனானாலும் என் நம்பிக்கையை இழக்கமாட்டேன். இந்த ஊனுடலை ஒருநாள் இல்லாவிட்டால் ஒரு நாள் அடக்கியே தீருவேன். அடக்கித் தெளிவு பெறுவேன். இந்த அசையா நம்பிக்கையோடு உயிர் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

[யங் இந்தியா 17-6-26]

கடவுளை நான் என் கண்ணால் காணவில்லை. வேறு விதத்திலும் நான் கண்டுவிட்டேன் என்று சொல்ல முடியாது. உலகம் எல்லாம் நம்புகிறது, ஈசன் ஒருவன் இருக்கிறான் என்று. அந்த நம்பிக்கையைக் கொண்டு நானும் வாழ்க்கையைச் செலுத்துகிறேன். எனக்கு உண்டாகியிருக்கும் இந்த நம்பிக்கை அழிக்க முடியாத நம்பிக்கை. அழியாத நம்பிக்கை பிரத்யக்ஷ பிரமாணத்துக்குச் சம

மாகவே ஆய்விடுகிறது. என்றாலும் எவ்வளவு உறுதியானதாயினும் ஒரு நம்பிக்கையைப் பிரத்யக்ஷமாகக் கண்டேன் என்று சொல்லுவது உண்மைக்கு மாறாகும். ஆனபடியால் என்னுடைய கடவுள் நம்பிக்கைக்குச் சரியான ஒரு சொல்லை நான் காணவில்லை. இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன்.

[சுய சரிதம்]

## 3

குழந்தைப் பருவம் முதற்கொண்டு உண்மையை வழிபட்டு வருகிறேன் என்று என்னைப் பற்றி நான் சொல்லிக் கொள்ளலாம். உண்மையைக் கடைப் பிடிப்பது எனக்கு ஸ்வபாவமாகவும் எளிதாகவுமே இருந்து வந்தது.

தேடித் தேடி ஒன்று கண்டேன். அந்த உண்மை என் கண்களைத் திறந்தது. சத்தியமே தெய்வம் என்பதைக் கண்டேன். சாதாரணமாக தெய்வமே சத்தியம் என்பார்கள். அதை நான் இவ்வாறு மாற்றிக் கொண்டேன். மெய்ம்மையே கடவுள் என்பதை அறிந்தேன். அதைக் கண்ட பின் நான் கடவுளைப் பிரத்யக்ஷமாகவே கண்டேன் என்றும் சொல்லலாம். என் உடலின் ஒவ்வொரு நரம்பிலும் அவன் ஊடுருவிப் பரந்து நிற்பதை என் உணர்ச்சியில் காண்கிறேன். உணர்ச்சி முழுவதிலும் ஒரு பொருளை உணர்ந்து விட்டால் அது கண்களின் விழியாற் காண்பதை விடக் குறைவில்லை. மனமானது ஐயமறக் கண்டு விட்டால் அதற்கும் பிரத்யக்ஷக் காட்சிக்கும் பேதமில்லை.

ஜன் 9-8-42]

அஹிம்ஸையே என் தெய்வம், சத்தியமே என் தெய்வம். அஹிம்ஸையை நாடிச் செல்லும்போது, சத்தியம் எனக்குச் சொல்லுகிறது, "என் வழியாகத்தான் அதைக் காண்பாய்" என்று. சத்தியத்தை நாடித் தேடும்போது அஹிம்ஸை எனக்குச் சொல்லுகிறது, "என் வழியாகச் செல். நீ நாடும் சத்தியத்தைக் காண்பாய்" என்று

இரண்டும் இவ்வாறு ஒன்றுக்கொன்று பிணைந்து நிற்கின்றன. ஒன்றின்றி மற்றொன்றில்லை.

[யங் இந்தியா 4-6-25]

எங்கும் பரவி நிற்கும் மெய்ப்பொருளைக் காணவேண்டுமானால் சிருஷ்டியில் அடங்கிய ஈனப் பிராணிகளையும் தன்னுடையதைப் போல் பேணும் அன்பைப் பெற வேண்டும். இந்த அன்பைத் தன் உள்ளத்தில் காணும் ஒருவன், தெய்வத்தை நேருக்கு நேர் கண்டவன். அந்த நிலையை அடைய ஆசைப்படுகிற ஒருவன் எந்தத் தொழிலையும் வியாபாரத்தையும் இது எனக்குத் தகாது என்று ஒதுக்கி விட முடியாது. இதனாலேதான் உண்மையை வழிபடுகிற நான் அரசியலில் சம்பந்தப்பட வேண்டியதாயிற்று. கடவுள் வழிபாட்டுக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இல்லை, அதுவேறு இதுவேறு என்று சிலர் சொல்லுவார்களே, அதை நான் ஒப்புக் கொள்வதில்லை. இதை நான் மிக அடக்கத்துடன் சொல்லுகிறேன். ஆனால் ஐயமறச் சொல்லுவேன். சமய விசாரத்துக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லுவது முற்றிலும் தவறு. கடவுள் விஷயம் சரியாக அறியாதவர்கள்தான் அப்படி வேறுபடுத்துவார்கள்.

[சுய சரிதம்]

மக்களுக்குப் பணி செய்வதில் கடவுளைக் காண நான் முயற்சி செய்து வருகிறேன். ஈசன் மேலே எங்கேயோ வானுலகத்தில் இருக்கிறான் என்றாவது அல்லது கீழே எங்கேயோ பாதாளத்தில் இருக்கிறான் என்று சொல்லுவதாவது மடமை. நாம் அறியும் ஒவ்வொரு உயிரிலும் அவன் இருக்கிறான்.

[சுய சரிதம்]

## 4

எல்லா ஜீவராசிகளுடனும் ஒன்றி நிற்கும் நிலையை அடைய ஆசைப்படுகிறேன். சகல ஜீவன்களும் நானும்

ஒன்று என்று உணர முயல்கிறேன். மனிதப் பிறப்பு மட்டு மல்ல, ஊர்ந்து செல்லும் புழுவின் உயிருடனும் ஒன்று பட ஆசைப்படுகிறேன். ஊர்ந்து செல்லும் புழுக்களும் நானும் ஒரே பரம்பொருளினின்று உண்டானோம்- உயிரானது எந்த வடிவம் கொண்டு நின்றாலும் ஒன்று தானே ?

[யங் இந்தியா 4-4-29]

முக்திக்கு ஆசைப்படுகிறேன். அது வைகுண்டத்தில் தான் நான் அடைய முடியும். அதை அடைவதற்கு உலகத்தை விட்டுக் காட்டுக்குப் போய்த் தவம் செய்ய வேண்டியதில்லை. மலைக் குகையில் வாசம் செய்ய வேண்டியதும் இல்லை. என் உள்ளத்திலேயே ஒரு குகை இருக்கிறது. அதை அறிந்தேனானால், அதிலே தனித்திருந்து தவம் செய்ய முடியும். மலைக்குகையில் இருப்பவனும் உலக நினைவுகளை மறந்துவிடாமல், ஆகாயக் கோட்டைகள் கட்டி அநுபவித்துக் கொண்டு இருக்கலாம். அரண்மனையில் வசிப்பவனும்-ஜனகனைப் போன்ற ஒரு ராஜயோகி-எந்த மனக் கோட்டையிலாவது மோகத்திலாவது சிக்காமல் இருக்கலாம். மலைக் குகையில் உடலை மட்டும் வைத்து, மனத்தால் உலகம் எல்லாம் திரிந்து அலைவதும் உண்டு. அப்படித் திரிகிறவனுக்கு சாந்தி இல்லை. ராஜ மாளிகையில் சகல வைபவங்களுக்கும் இடையில் ஜனகன் தன் உள்ளத்தை சாந்தி நிலையில் நிறுத்திக் கொண்டான். என்னைப் பொறுத்தமட்டில் முக்திக்கு நான் கண்டவழி நாட்டுக்கு உழைத்து வருவதே ஆகும். இடையறாத உழைப்பை நாட்டுக்குச் செலுத்தி அதன் மூலம் உலகத்துக்குப் பணியாற்றுவதே நான் கண்ட முக்தி மார்க்கம் உலகத்திலுள்ள உயிர்களோடு ஒன்றுபட்டுப் போவதே என் ஆசை.

[யங் இந்தியா 3-4-24]

காந்தியம் என்று ஒரு தனி மார்க்கம் இல்லை. என்னுடைய பெயரில் ஒரு தனி மார்க்கத்தை விட்டுப் போக

நான் விரும்பவில்லை. ஒரு புது சமயத்தையோ கொள்கையையோ நான் கண்டு உபதேசிக்கவுமில்லை. சாதாரணமாக இருந்து வந்த பெரியோர்கள் கண்ட பழைய உண்மைகளைத் தினசரி வாழ்க்கையிலும், செய்யும் காரியங்களிலும், செலுத்திப் பார்க்கலாம் என்பது தான் என்னுடைய முயற்சி. சத்தியமும் ஜீவகாருண்யமும் புதிய விஷயங்கள் அல்ல. நம்முடைய ஆறுகளையும் மலைகளையும் போல் மிகப் பழைமையானதும், பழகி வந்ததுமான தத்துவங்கள். நான் புதிதாகச் செய்வது என்னவென்றால், இந்தப் பழைய தத்துவங்களை வைத்து என்னால் ஆன அளவு பிரயோகப் பரீட்சை விஸ்தாரமாகச் செய்து வருகிறேன். இவ்வளவே. இந்தப் பிரயோகத்தில் சில சமயம் தவறும் செய்திருக்கிறேன். தவறு செய்ததன் பயனாகத் திருத்தம் அடைந்து அறிவும் பெற்றிருக்கிறேன். வாழ்க்கையும் தினசரி விவகாரங்களும் என்னைப் பொறுத்தமட்டில் சத்தியம் அஹிம்ஸை இந்தத் தத்துவங்களின் சோதனைக் களங்களாகி விட்டன. சத்தியம் அஹிம்ஸை இந்தக் கொள்கையில் எனக்குள்ள பக்தியானது உறுதி யடைந்து வளர்ந்து வருகிறது.

[ஹரிஜன் 28-3-36]

## 5. "உளன் கண்டாய்!"

சத்தியம் அஹிம்ஸை இந்த இரட்டைக் கொள்கையில் எனக்குள்ள பக்தியானது நாளுக்கு நாள் உறுதியடைந்து வளர்ந்தே வருகிறது. இந்த இரு தர்மங்களையும் ஒவ்வொரு காரியத்திலும் கடைப்பிடித்தே என் வாழ்க்கையை நடத்தப் பார்க்கிறேன். ஆதலால், எனக்கு அவற்றில் உள்ள பக்தி வளர்ந்து வருவதைப் போலவே, நானும் ஒவ்வொரு நிமிஷம் வளர்ந்து பக்குவம் அடைந்து வருகிறேன். இன்னும் வளர்ந்து கொண்டே வருகிறேன். இத்தனை காலமாகியும் வளர்ச்சி நின்று விடவில்லை. இந்த சத்தியம் அஹிம்ஸை என்கிற தத்துவங்களில் தினமும் புதுப் புதுப் பொருளும் சக்தியும் மலரக் காண்கிறேன். என் அறிவு

தினந்தினம் விளக்கம் பெற்று விருத்தி அடைந்து வருகிறது. ஒவ்வொரு நாளும் நான் புதுப் புது விஷயங்களை அவற்றில் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

ஜூன் 2-3-40]

பிரபஞ்சத்தில் ஸர்வ வியாபகமான சக்தி ஒன்று இருந்து வருகிறது. அதன் தன்மையை முற்றிலும் அறிந்தவர் இல்லை. எங்கும் பரந்து நிற்பினும் நான் அதைக் கண்ணால் காணவில்லை. ஆயினும் அது எனக்குப் புலப்படுகிறது என்பதில் ஐயமில்லை. கண்களால் காணப்படாத இந்தப் பரம்பொருள் தன் சக்தியால் தன்னைப் புலப்படுத்திக் கொள்கிறது. எனினும் அதை யாரும் விவரித்து நிரூபிக்க இயலாது. நாம் காணும் எந்தப் பொருள் போன்றதும் அல்ல அந்தப் பொருள். அது நம்முடைய பஞ்சேந்திரியங்களுக்கு அடங்காது.

இவ்வாறானது பரம் பொருள். ஆயினும் நம்முடைய புத்தியை உபயோகித்து, ஈச்வரன் ஒருவன் இருக்கிறான் என்பதை ஓரளவு ஓர்ந்து உணர்ந்து கொள்ளலாம்.

சாதாரணமாக, தேசத்தில் உழைத்து வரும் சம்சாரிகளுக்கு, தேசத்தை யார் ஆண்டு வருகிறார்கள், ஏன் ஆண்டு வருகிறார்கள், எப்படி ஆண்டு வருகிறார்கள் யாதுமே தெரியாது. ஆயினும் ஏதோ ஒரு ஆதிபத்தியம் நடந்து வருகிறது என்பதை மாத்திரம் அனைவரும் உணர்வார்கள். சென்ற ஆண்டு நான் மைசூர் ராஜ்யத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தேன் அல்லவா? அப்போது அநேக ஏழைக் கிராமவாசிகளைக் கண்டு பேசினேன். மைசூர் தேசத்தை யார் ஆள்கிறார்கள் என்று அவர்களைக் கேட்டேன். "ஒரு தெய்வம் ஆள்கிறது" என்றார்கள். தங்களுடைய அரசனைப் பற்றி அவர்களுக்குத் தெரியவில்லை. அந்தக் கிராமவாசிகளுக்கே தங்கள் எஜமானரைப் பற்றி இவ்வளவுதான் தெரிந்தது என்றால், கடவுளுக்கும் எனக்கும் எவ்வளவு தூரம்!-இந்தக் கிராமவாசிகளுக்கும் அவர்களை ஆளுகிற மகாராஜாவுக்கும் இடையே

அவ்வளவு தொலை இல்லை. எனக்கு எவ்வாறு தெரியப் போகிறது, அரசர்களுக்கு அரசனுன பகவானைப் பற்றி? அவன் ஒருவன் இருக்கிருன் என்பதே எனக்குத் தெரியா மல் இருப்பதில் என்ன வியப்பு? ஆயினும் மைசூரில் நான் கண்ட ஏழை கிராமவாசிகள் தெரிந்து கொண்டிருக்கிற முறையில் நானும் பிரபஞ்சத்தைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறேன். இந்த உலகம் ஒரு ஆட்சியின் கீழ் அமைதி பெற்று வருகிறது. அனைத்தும் ஒரு நியமப்படி நடந்து வருகிறது. அந்த நியதியை யாரும் மாற்ற முடி யாது. யாவரும், எதுவும், உயிர் கொண்டதும் உயிர் அற்றதுமான எல்லாம் அதற்கு உட்பட்டவை - என்பதை நான் காண்கிறேன்.

அந்த நியதியும் ஒரு குருட்டு நியதியல்ல. உயிரற்ற கண்ணற்ற ஆதிக்கம் அல்ல. உயிர்கொண்ட ஜீவன்களை உயிரற்ற ஒரு ஆட்சி எப்படி அடக்கி ஆளமுடியும்? தாவரங் களுக்கும் மற்ற ஜடப் பொருள்களுக்கும்கூட உயிர் உண்டு, அபார சக்தியும் உண்டு என்பதைக் கண்டிருக்கிறேம் அல்லவா? நியதி வேறு; நியதியை அமைத்திருப்பவன் வேறல்ல. அனைத்தையும் ஆளும் ஒரு நியதி உண்டே அதுவே கடவுள் என்று உணர்வோமாக.

ஆட்சியும் அரசனும் ஒன்றே. ஆட்சியில்லை என்று சாதிக்க முடியாது. உலகத்துக்கு ஒரு அரசன் இல்லை என்றும் சாதிக்க முடியாது. உலக நியதியைப் பற்றியும், உலக அரசனைப் பற்றியும் எனக்குத் தெரிந்திருப்பது மிகக் கொஞ்சமே. அப்படியிருக்க, அவன் இல்லை என்று சொல்வ தில் என்ன அர்த்தம்? அரசன் இல்லையென்று நான் சொன் ஞல் அரசன் இல்லாமல் போவானு? ஆட்சி புரியும் அர சாங்கத்தை நான் இல்லை யென்று சொன்னுலும் அது இருந்தேதான் இருக்கிறது. அதற்கு உட்பட்டே தான் வாழ்க்கை நடத்துகிறேன். அதைப் போலவே ஈசன் இல்லை அவனுடைய ஆட்சியும் இல்லை என்று நான் பேசினுலும், அந்த நியதியிலிருந்து நான் விடுபட முடியாது, ராஜ்யத்தில் நடைபெறும் ஆட்சியை வெளிப்படையாக ஒப்புக்

கொண்டேனுல் அதற்குக் கீழ்ப்பட்டு வாழ்க்கை நடத்துவது சுகமாகிறது, அவ்வாறே தெய்வத்தின் ஆதிபத்யத்தை ஒப்புக்கொண்டு அதற்கு அடங்கியும் ஒடுங்கியும் நடந்து கொண்டேனுல், உயிர் வாழ்க்கையில் கஷ்டம் ஓரளவு குறைகிறது.

ஏதோ ஒரு மாதிரியாகத் தெரிந்ததும் தெரியாததுமாகக் காண்கிறேன். இந்த உலகத்தில் அனைத்தும் நிலையற்றவை இன்றிருந்த வடிவம் நாளை இல்லை. எல்லாம் மாண்டும் மறைந்தும் போகின்றன. ஆயினும் அசையாததும் மாறுதல் இல்லாததுமான சக்தி ஒன்று இருந்தே வருகிறது. அதுவே அனைத்தையும் சேர்த்துப் பிரித்து விடுகிறது. இதை நான் காண்கிறேன். ஓடும் ஜலம் கடலில் போய் விழுகிற ஒரு நதியின் நிலையாக இருந்து வருகிறது. அதுபோலவே மாறியும் அழிந்தும் உண்டாகியும் வரும் பொருள்கள் அனைத்தும் ஒரு நிலையான பிரபஞ்சமாகத் தோன்றி வருகிறது. சிருஷ்டியும் சம்மாரமும், புனர் உத்பவமும் செய்து வருகிற பராசக்தி ஒன்று இருக்கிறது என்பதைக் காண்கிறேன். எங்கும் பரந்து நின்று ஆளும் அந்தச் சக்தியே கடவுள். இந்தப் புலன்களால் நான் காணும் பொருள்களிலிருந்தும் புலனுக்குப் புலனுகாத அந்த சக்தியே நிலையானது. ஆண்டவன் ஒருவனே மெய்ப் பொருள்.

## 6. "வழி காட்டுவாய்!"

பராசக்தி கருணைகொண்ட சக்தியா அல்லது தீய சக்தியா? என் அறிவுக்கு அது கருணைகொண்ட சக்தியாகத் தான் தோன்றுகிறது. எவ்வளவு அழிவுக்கும் இடையே உயிர் நின்று வருகிறது. எவ்வளவு பொய்க்கும் இடையே மெய் நிலைத்து நிற்கிறது. எவ்வளவு இருள் சூழ்ந்து நின்றுலும், இருளுக்கு வெளிச்சம் தோற்றுவிடவில்லை. உயிரும் உண்மையும் ஒளியும் கடவுளே.

கடவுளே அன்பு. கடவுளே நலன்களுக்குள் மேலான நலன்.

கடவுளைக் காண்பது என்றால் பகுத்தறிவினால் முடியாது. ஐம்புலன்களைக் கொண்டு அறிய முடியாத கடவுளை ஒருவன் புலனுக்கு அப்பாற்பட்ட சக்தியால் கண்டுவிட்டால் அவன் உள்ளம் முழுதும் மாறி விடுகிறது. கடவுளைக் கண்ட உள்ளம் அதற்குமுன் இருந்த உள்ளம் அல்ல. முற்றிலும் வேறு தன்மை கொண்ட உள்ளம் ஆகிவிடுகிறது. கடவுள் உண்மை பக்தன் ஒருவனுடைய ஒவ்வொரு சிறு காரியத்திலும் புகுந்து காட்சி தருவான். புலன்கள் வழியாக நாம் அடையும் அறிவு உண்மையைப் போல் காட்டிச் சில சமயம் பொய்யாகவும் மோகமாகவும் போகும். புலன்களைச் சார்ந்து நிற்காத அறிவு நிலையான அறிவு. அத்தகைய ஞானம் கைவந்ததற்குப் பிரமாணம், ஒருவனுடைய சீலமும் பண்புமே ஆகும். உள்ளத்தில் ஈசன் கோயில் கொண்டால் பக்தனுக்கு மேம்பட்ட சீலமும் பண்பும் தாமாக வந்து சேரும். மேலே சொன்ன பிரமாணத்தை உலகம் கண்டிருக்கிறது. எல்லா நாடுகளிலும் கடவுளைக் கண்ட ஞானிகள் தோன்றியிருக்கிறார்கள். ஒருவர்பின் ஒருவராகக் காட்சி பெற்ற மகா புருஷர்களும் ரிஷிகளும் தோன்றி மக்களுக்கு உபதேசித்தும் வழி காட்டியும் வந்திருக்கிறார்கள். எல்லாமே பொய் புரட்டு என்று தள்ளிவிடுவது கண்ணை மூடிக் கொண்டு, நான் பார்க்கவில்லை, அதனால் இல்லையென்று சொன்னபடியே ஆகும்.

இந்தக் காட்சி பெறுவதற்குமுன் அசையா நிலையுடன் உள்ளத்தில் பக்தி நிறைந்து நிற்கும். யாரேனும் காட்சி அடைந்து அந்தப் பேரின்பத்தை அனுபவிக்க விரும்பினால் முதலில் பக்தி பூரணமாக வேண்டும். பக்திக்கு அடையாளம் சீலம். சத்தியமும் அன்பும் வாழ்க்கையில் சர்வாதிபத்தியம் கொள்ளவேண்டும். உண்மைக்கு மாறானது எதையும், அன்புக்கு மாறானது எதையும் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்று தீர்மானித்த பின்னரே பக்தியில் பயிலவேண்டும். அதுவே க்ஷேம மார்க்கம். உண்மை மார்க்கத்திலும் அன்பு மார்க்கத்திலும் சேராத மார்க்கம் பக்தி மார்க்கமாகாது.

உலகத்தில் ஏன் பாபம் இருந்து வருகிறது? இது எனக்கு விளங்கவில்லை. எவ்வளவு ஆராய்ந்து பார்த்தாலும் இந்தச் சிக்கலைத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை. ஆண்டவனுக்குச் சமமாக ஞானம் படைத்திருந்தவர்களே தீர்த்திருக்க முடியும். என் சக்தியின் வரம்பை அறிந்துகொண்டு அடக்கத்துடன் நான் தீர்மானித்துக் கொண்டது இவ்வளவே. என்னால் ஆகக்கூடிய காரியம், என்னால் செய்ய வேண்டிய கடமை, பாபத்தை வெறுப்பது ஒன்றே. ஆண்டவனுடைய பொறுமையைக் கண்டு வியந்து வருகிறேன். நமக்கு வரும் கோபம் அவனுக்கு இல்லை. ஆகா! எவ்வளவு பாபங்களை எவ்வளவு காலம் பொறுத்து வருகிறான். ஆண்டவனைப் பாபம் தீண்டாது. அவனே அதற்கு அடி ஆயினும் அது அவனைத் தீண்டாது. இவ்வளவே நான் உணர்ந்தது.

பாபத்தோடு போர் செய்யவேண்டியது என்னுடைய கடமை. இதையும் உணர்ந்தேன். உயிரைக் கொடுத்தும் அதர்மத்தினோடு போர் புரிய வேண்டும். இல்லாவிடில் கடவுளைக் காணும் ஆசையில் பயனில்லை. என் சிறு அனுபவத்திலிருந்தே ஒன்று கண்டுகொண்டேன். எம்மட்டும் நான் அதர்மத்தை ஒழித்து நன்னெறியில் நிற்கிறேனோ அந்த அளவுக்கு ஆண்டவனை அணுகிச் செல்கிறேன். எந்த அளவுக்கு தருமத்தினின்று அகல்கிறேனோ அந்த அளவுக்குப் பகவானுடைய காட்சி விலகிப் போகிறது. என் பக்தியும் சிரத்தையும் தற்போது எம்மட்டு உண்மை எம்மட்டு வேஷமோ தெரியவில்லை. வேஷமாக இருப்பதை விட்டு நான் விரும்பிய அளவில் அது உண்மையான பக்தியும் சிரத்தையும் ஆகிவிட்டால் ஆண்டவன் எனக்குக் காட்சி கொடுத்தே விடுவான். அவனுடைய தரிசனத்தை அடைவேன் என்பது நிச்சயம். அசையாமல் நிற்கும் ஒரு மலையைப் போல் என்னுடைய சிரத்தை சஞ்சலம் நீங்கி நிற்க வேண்டும். இமய மலையின் கொடுமுடிமேல் கவிந்து நிற்கும் உறை பனியைப் போல் என் சிரத்தையும் பக்தியும் மாசற்ற முழு வெண்மை அடையவேண்

டும் அப்போதல்லேவா ஆண்டவனை நான் நெருங்க முடியும் !

கிறிஸ்துவ யோகியான நியூமன் தன் சுவானுபவத்தைப் பாடினர். அவருடன் நாமும் பிரார்த்திப்போமாக :—

இருள் சூழ்ந்து நிற்கிறது ஆண்டவனே !
பரஞ்சுடரே வழிகாட்டுவாய்!
வெகு தூரத்தில் இருக்கிறேன்
பேரிருட்டில் அலைகிறேன்
என் அப்பனே ! எப்பொழுது ஊர் போய்ச் சேருவேன் !
வழி காட்டுவாய்! எந்தையே !
இருளில் வழிமுழுதும் தென்படவில்லை
ஓரடி ஓரடியாகப் பிறழாமல் வைத்துச் சென்றேனுல் போதும்
தடுமாறும் காலுக்குக் காவல் நிற்பாய்
என் பாதத்துக்கு வெளிச்சம் காட்டுவாய்
உன்னிடம் ஒப்படைத்து விட்டேன்
ஓரடி ஓரடியாகத் தடம் பிறழாது சென்ருல் போதும்
என் தளர் நடைக்கு அருள்வாய், ஆண்டவனே !

[யங் இந்தியா 11-10-28]

## 7. இல்லை என்பாரும் உண்டு என்பாரும்

கொள்கையில் நான் ஒரு அத்வைதி என்று என்னைப் பற்றிச் சொல்லலாம். ஆயினும் நான் த்வைத மார்க்கமும் சரியே என்பேன். அத்வைதிகள் பிரபஞ்சத்தை மாயை என்பார்கள். ஒவ்வொரு கணமும் பிரபஞ்சம் மாறி மாறி வருகிறது. இப்படி வேறுபட்டு வேறுபட்டு வரும் பிரபஞ்சத்தை நிலையில்லாத பொருள் என்றுதான் சொல்ல வேண்டும். எனினும், மாறுபட்டு வரும் நிலையில் மாறுபடாத ஒரு சத்து இருந்தே வருகிறது. ஆனபடியால் பிரபஞ்சத்தைப் பொய் என்று சொல்லுவதற்கும் இல்லை. உலகம் பொய்யும் மெய்யும், இரண்டுமே என்பேன்.

பண்டிதர்கள் ‘இவன் ஒரு அநேகாந்தவாதி, ‘அதாவது ஒரு நிச்சயமான முடிவு இவனுக்கு இல்லை, என்று

என்னைக் குறை கூறலாம். "இப்படி யிருக்குமானால் ஒரு முடிவு; அப்படி யிருக்குமானால் மற்றொரு முடிவு" என்று ஒருவன் வாதித்தால் அவனைப் புலவர்கள் 'ஸ்யாத்' வாதி என்று பெயரிட்டு இருக்கிறார்கள். (வட மொழியில் 'ஸ்யாத்' என்பது தமிழில் 'ஆயின்' என்கிற இடைச் சொல்.) என்னுடைய ஸ்யாத் வாதம் இந்தப் புலவர்கள் சொல்லும் ஸ்யாத் வாதம் அல்ல, என் கொள்கை ஒரு தனி ஸ்யாத் வாதம்.

என்னால் புலவர்களோடு ஸம்வாதம் செய்ய முடியாது. என்னுடைய நீண்ட அநுபவத்தில் நான் கண்டது என்ன வென்றால், என்னுடைய திருஷ்டி முனையிலிருந்து பார்த் தால் நான் சொல்வது முற்றிலும் நியாயமேயாகும். ஆனால் என்னோடு வாதம் செய்பவர்களுடைய நோக்கில் நான் சொல்வது தவறு என்றே படும். ஒரே பொருளை இருவர் ஆராயும்போது, ஒரே விஷயம் இரு பட்சத்திலிருந்தும் இரு விதமாகத் தோன்றும். இருபாலாருடைய அபிப்பிராயமும் சரியே என்று சொல்ல வேண்டியதாகிறது. இதை நான் நன்றாகக் கண்டிருக்கிறபடியால், என் வார்த்தையில் குற்றம் சொல்கிறவர்களை அக்கிரமக்காரர்களாக நான் பாவிப்ப தில்லை. குருடர்கள் ஏழு பேர்கள் யானையைக் காணப் போன கதை தெரியுமே. ஒவ்வொருவனுக்கு ஒவ்வொரு விதமாக ஏழு விதமாகப் புலனாயிற்று அல்லவா! ஏழு பேர் கள் கண்டதும் உண்மையே. ஏழு பேர்கள் கண்டதும் தவறே. அதைப் போலவே பிரபஞ்ச ரகசியமும். அவரவர் களுடைய பார்வையைப் பொறுத்து ஒரு மெய்ப் பொரு ளானது அநேக ரூபங்களாகக் காணப்படுகிறது. இந்த உண்மையை நான் அறிந்திருப்பதனாலேதான், முஸல்மான் களும் கிறிஸ்தவர்களும் நம்மைப் போலவே உண்மை மார்க் கத்திலேதான் இருக்கிறார்கள் என்பேன்.

முந்தி யெல்லாம் என் அபிப்பிராயத்திலிருந்து வேறு பட்டவர்களைக் கண்டு நான் வருத்தம் அடைவேன். இப் போது அவ்வாறில்லை. அவர்கள் பார்வையைக் கொண்டே என்னையும் அவர்களையும் நோக்கும் அறிவு எனக்கு வந்

திருக்கிறது. ஆனபடியால் என் அபிப்பிராயத்துக்கு மாறுபட்டவர்களிடம் அன்பு செலுத்த என்னால் முடிகிறது. உலகம் முழுவதையும் என் அன்புப் பசிக்கு உணவாக்க ஆசைப்படுகிறேன். என்னுடைய அநேகாந்த வாதமானது சத்தியம் அஹிம்ஸை என்ற இரட்டைக் கொள்கையிலிருந்து தோன்றியதாகும்.

கடவுளை நான் எப்படிக் கண்டு வழி படுகிறேனே அப்படியேதான் கடவுளைப் பற்றி நான் விவரிப்பதும். அது வன்றி நான் எப்படிப் பேச முடியும்? எனக்குக் கடவுள் சிருஷ்டிகர்த்தாவும் ஆவான், சிருஷ்டி என்பதே யில்லாத கேவலப் பொருளும்-அதாவது மாறுதலற்ற தனி மெய்ப் பொருளும்-ஆவான். உண்மை அநேக உருவங்கள் கொண்டது என்ற என் கொள்கையிலிருந்து இந்த விதமாக எல்லாம் தோன்றுகிறது.

ஜைனர்கள் கூறும் நியாயப்படி கடவுளுக்கு சிருஷ்டித் தொழில் என்பது இல்லை என்றும் சொல்லுவேன். அதோடு கூடவே, இராமாநுஜர் சித்தாந்தப் படுத்தியபடி ஆண்டவன் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தான் என்றும் சொல்லுவேன். கருத்துக்கு அடங்காத ஒரு பொருளைப் பற்றிப் பேசுகிறோம் அல்லவா? சொல்லி விளக்கமுடியாத ஒரு பொருளைச் சொல்லி விளக்கப் பார்க்கிறோம். அறிவுக்கு எட்டாத ஒரு பொருளை அறியப் பார்க்கிறோம். இதனாலல்லவோ நம்முடைய பேச்சும் வாதமும் குழறுபடுகிறது; ஒன்றுக் கொன்று முரண்படுகிறது.

ஆகையினாலேதான் பரம்பொருளை இது அல்ல அது அல்ல என்று வேதங்கள் விளக்குகின்றன. நம்மால் அறிந்துகொள்ளக்கூடிய எதுவும் கடவுளைப்பற்றிய விளக்கமோ உவமையோ ஆகாது. இந்தக் காரணத்தைக் கொண்டு, கடவுள் உண்டு என்பது பற்றி ஐயப்படுவதற்கில்லை. நாம் இருப்பது உண்மையானால் நம்மைப் பெற்றோரும் அவர்களைப் பெற்றோரும் உண்மையானால் பிரபஞ்சத்தைப் பெற்றவனும் உண்மை. அவனில்லையேல் நாமும் இல்லைதான். இதனாலேயே உலகத்தில் அனைவரும் ஒரு

கடவுளைப் பல பெயர்கள் இட்டு வழிபட்டு வருகிறார்கள். பரமாத்மா, ஈசுவரன், யஹோவா, சிவன், விஷ்ணு, ராமன், அல்லாஹ், க்ஹுதா முதலியவாறு எண்ணற்ற நாமங்கள். அவன் ஒரு தேவனுமாய் இருக்கிறான்; பல தேவர்களுமாய் இருக்கிறான். அணுவுக்கும் சிறியவன்; இமயத்தைக் காட்டிலும் பெரிய வடிவம் கொண்டவன். கையில் எடுத்த ஒரு துளி நீரிலும் அவன் இருக்கிறான்; ஏழு சமுத்திரங்களும் அவனைக் கொள்ளும் பரிமாணம் இல்லை. புத்திக்கு எட்டாதவன். பக்தியே அவனைக் காண முடியும்.

வாதங்கள் பல உண்மைகளைச் சாதிக்கும்; உண்மையல்ல என்று பல விஷயங்களை நிரூபிக்கும். நாஸ்திகன் ஒருவன் வாதித்து என்னைத் தோல்வியுறச் செய்யலாம். ஆனால் என் புத்தியை முந்திக்கொண்டு என் பக்தி பறந்தோடுகிறது. உலகமெலாம் இல்லை யென்றாலும் நான் "கடவுள் உண்டு, கடவுள் உண்டு, கடவுள் உண்டு, என்றும் உண்டு" என்று சொல்லுவேன்.

இல்லை என்று சொல்ல விரும்புகிறவர்கள், அப்படியே சொல்லிக்கொண்டு போகட்டும் ஆண்டவன் கருணைக்கு எல்லையில்லை. அவன் எதையும் பொறுப்பான். அவனுடைய ஆட்சியை நாம் ஒப்புக் கொள்ளுவதற்காக நம்முடன் அவன் போர் செய்து வெற்றி கொள்ள அவனுக்கு ஒரு சேனை வேண்டியதில்லை. எப்படியாயினும் நடந்து கொள்ளுங்கள் என்று விட்டிருக்கிறான். அவன் கருணையே நம்மைக் கொள்ளை கொண்டு அவனை வணங்கச் செய்கிறது. 'அவனிட்டபடி' என்று வணங்காத மூர்க்கருக்கு அவன் சொல்லுவது; 'சரி, அப்படியே போ. என் ஞாயிறு உனக்கும் வெயில் தரும். என் வானம் உனக்கும் மழை தரும். உன் இஷ்டப்படி போ.' இவ்வாறு விட்டிருக்கிறான். கருணை மூர்த்தியான கடவுளை இல்லை என்பார், இல்லை என்றே சொல்லிப் போகட்டும். அவன் உண்டு என்று நம்பும் கோடிக்கணக்கான அறிஞர்களில் நான் ஒருவன். அவனை வணங்குவதும் அவனைத் துதிப்பதுமே என் ஆனந்தம்.

[யங் இந்தியா 21-1-26]

# 8

என்னைப் பொறுத்தமட்டில் கடவுள் என்பதும் சத்தியம் அன்பு என்பதும் ஒன்றே. கடவுளே ஆசாரம். கடவுளே நன்னெறி. கடவுளே சீலம். கடவுளே அச்சம் இன்மை. ஒளியைத் தருபவனும், உயிருக்கு மூலமும் கடவுளே. இவை யெல்லாம் உண்மையாயினும் இவை மட்டுமே கடவுள் அல்ல. இவற்றிற்கு அப்பால் நிற்பவன் ஆண்டவன். நாஸ்திகனுடைய நாஸ்திகமும் அவனே. அவனுடைய எல்லையற்ற காருண்யமே நாஸ்திகனையும் ‘இரு’ என்று அனுமதி தருகிறது. அவன் நம் உள்ளங்களைச் சோதித்து உள்ளதை உள்ளபடி அறிகிருன் வாக்கும் மனமும் தாண்டி அப்பால் நிற்கிருன். அதாவது அவன் தன்மையைக் கருத்தில் கொள்வதும் சொல்லால் விளக்குவதும் முடியாத காரியம்.

நம்மை நாம் அறிவதில்லை. நம் உள்ளங்கள் நமக்குப் பூரணமாகத் தெரிவதில்லை. அவன்தான் நம் உள்ளங்களை அறிவான். நம்மைப் பற்றி நாம் சொல்வதை அவன் ஒப்புக் கொள்ள மாட்டான் நம்மைப் பற்றியும் நம் எண்ணங்களைப் பற்றியும் பேசும்பொழுது நாம் உண்மை பேசுவதில்லை. உண்மையை மாற்றிச் சொல்லுகிறோம். அவனே உண்மையைக் கண்டு கொள்கிருன்.

ஆண்டவன் கல்யாண குணங்கள்கொண்ட புருஷோத்தமன் ஆவான். அத்தகைய கடவுளை வேண்டுவோருக்கு, அதை வேண்டாத ஞானிகளுக்கு அவ்யக்தப் பொருளாக நிற்பான். கையால் தொட்டு வழிபட வேண்டும் என்று ஆசைப்படும் மக்களுக்கு அழகிய ‘மூர்த்தியும் ஆவான். ஞானிகளுக்கு சுத்த ஸத்வமாக அருவமாய் நிற்பான். அவரவர்களது வழிபாட்டு அவசியத்தின்படி மூர்த்தியாகவோ, அருவமாகவோ விளங்குவான். அவரவருடைய அறிவின்படி ரூபமும் அரூபமும் கொள்வான். நம் உள்ளத்தில் நமக்குள் கோவில் இருக்கிருன். நமக்கு அப்பாலும் வெளியிலும் இருக்கிருன்.

காங்கிரஸ் நடவடிக்கைகளினின்று கடவுள் என்ற சொல்லை நீக்கித் தள்ளிவிடலாம். ஆனால் சொல்லை அப்புறப்படுத்த முடியும். பொருளை அப்புறப்படுத்திவிட முடியாது. "உறுதிமொழி" என்றால் என்ன, "கடவுள் சாட்சியாக" என்றால் என்ன? இரண்டும் ஒன்றேயில்லையாயின், உறுதி மொழி என்பதில் பொருள் இல்லை. நான்கு எழுத்துக்கள் கொண்ட "கடவுள்" என்பதையே மனச்சாட்சி என்று நீட்டியும் பொழிப்புரையாகவும் சொல்லுவது.

கடவுள்பேரில் சிலர் அநீதியும் அக்கிரமமும் கொடூரமும் செய்வதினால், அவனில்லாமல் போக மாட்டான். அவனை வைத்துச் செய்யப்படும் அக்கிரமங்களை அவன் பொறுத்து வருகிறான். பொறுத்தாலும் அவனை அலட்சியம் செய்ய முடியாது. மகா பயங்கரன். கடன்களை யெல்லாம் ஒன்று விடாமல் வசூலிப்பான் அவன். நிர்த்தாட்சண்யமாக வசூலிப்பான். வட்டிக்குக் கடன் கொடுக்கிற எவனும் அவனைப் போல் கண்டிப்புக்காரன் இல்லை. மனிதர்களோ மிருகங்களோ மற்றப் பிராணிகளிடம் நாம் எந்தமாதிரி நடந்து கொள்கிறோமோ அவ்வித அனுபவத்தையே நாமும் பெறுவோம். நியதியை அறியாமல் செய்துவிட்டேன் என்றால் அது அவனிடம் ஒரு சாக்காகச் செல்லாது. ஆயினும் அவனுடைய கருணைக்கு எல்லை யில்லை. குற்றத்தை உணர்ந்து மனம் வருந்துவதற்கு எப்போதும் இடம் தருவான். காலம் கடந்து மீறிவிட்டது என்பதில்லை. உலகத்தில் அவனைப் போன்ற ஜனநாயகக் கொள்கைக்காரன் இல்லை. நன்மையோ தீமையோ எது வேண்டுமானாலும் செய் என்று நம் ஒவ்வொருவருக்கும் பூரண சுதந்திரம் தந்திருக்கிறான். ஆயினும் அவனைப் போன்ற கொடுமைக்காரனும் இல்லை. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாமல் செய்து விடுகிறான். ஆத்ம சுதந்திரம் என்று கொடுத்ததாகக் காட்டித் தன் விளையாட்டைத்தான் காட்டுகிறான். நம்முடைய சாஸ்திரங்களில் அவனுடைய காரியங்களை அவனுடைய விளையாட்டு என்றுதான் சொல்வார்கள். லீலை என்றோ மாயை என்றோ சொல்லப்படுவது இதுவே. நாம் இருப்பது என்

படுதே ஒரு இல்லாத விஷயம். இருப்பது அவன் ஒருவனே. கடவுள் ஒன்றே மெய்ப்பொருள். நாமும் இருக்கவேண்டும் என்று விரும்பினேமானால் அவனைத் துதித்துக்கொண்டிருக்கவேண்டும். விடாமல் துதித்துக் கொண்டும், விடாமல் அவன் அடிமைகளாக நடந்துகொள்ள வேண்டும். அவன் கருத்துக்கு நாம் கருவிகளாக வாழ வேண்டும்; அவனுடைய வேணுகானத்துக்கு நாம் ஆட வேண்டும். அப்போது எல்லாமே நலமாக முடியும்.

[யங் இந்தியா 5—3—25.]

## 9

ஸ்விஸ் நாட்டில் ஒரு சமயம் நடந்த சம்பாஷணையில் காந்தியடிகள் சொன்னதன் சாராம்சம்:

சத்தியமே தெய்வம் என்று ஏன் சொல்கிறாய் என்பது உங்கள் கேள்வி. நான் சிறுவனாயிருந்தபோது ஹிந்து சம்பிரதாயப்படி ஆண்டவனுடைய ஆயிரம் நாமங்களைப் பாடக் கற்றேன். ஆண்டவனுக்கு நாமங்கள் ஆயிரம் அல்ல, இன்னும் அதிகத் தொகையே. உலகத்தில் எத்தனை ஜீவன்கள் இருக்கின்றனவோ, அத்தனை ஜீவன்களின் பெயர்களும் கடவுளின் பெயர்கள் ஆகும். இதனாலேயே தான் ஆண்டவன் பெயரில்லாதவன் என்கிறோம். ஆண்டவன் அநேக ஸ்வரூபம் கொண்டவன். அதனாலேயே அவனை ரூபமற்றவன் என்கிறோம். அவன் ஆயிரக்கணக்கான பாஷைகள் பேசுகிறான். இதனால் அவனைப் பேச்சற்றவன் என்கிறோம்.

நான் இஸ்லாம் மதத்தை ஆராய்ந்தேன். அதிலும் ஆண்டவனுக்கு அநேகம் பெயர்கள் உண்டு என்று அறிந்தேன். அன்பே கடவுள் என்பார்கள். அதற்கும் நான் ஆமென்று சொல்லுவேன். ஆயினும் என்ன காரணமோ என் மனத்தில் சத்தியமே கடவுள் என்கிற கருத்து உறுதிப்பட்டு வந்திருக்கிறது. மற்ற எல்லாக் குணங்களையும் விட இதுவே அவனுடைய முக்கிய இலக்கணம் அல்லது பண்பு என்பது என்னுடைய எண்ணம். நம் அறிவைக்

கொண்டு நாம் கடவுளை விளக்க முடியுமானால், உண்மையே கடவுளின் முழு விளக்கம் என்று சொல்லவேண்டும். இரண்டு வருஷத்துக்கு முன்வரையில் இது என் அபிப்பிராயமாக இருந்து வந்தது. பிறகு அதற்கும் ஒரு படி மேலே சென்று விட்டேன். சத்தியமே கடவுள் என்கிற முடிவுக்கு வந்தேன். சத்தியமே பகவானுடைய உருவம் என்பது என்னுடைய கொள்கையாயிற்று. பல்வேறு மூர்த்தியாக ஆண்டவனைப் பாவிக்கிறார்கள் அல்லவா, அந்த முறையில் என் இஷ்டா மூர்த்தி சத்தியம்.

அன்பை ஏன் அவனுடைய வடிவமாக வைத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்கலாம். அன்புக்கு உலகத்தில் பல பொருள் கொள்வார்கள். ஒரு பொருளில் அன்பு காமவேகம் ஆகிறது. உண்மையில் அன்பு வெறும் காமவேகம் ஆகுமா ? இல்லை. ஆனபோதிலும் சத்தியம் இம்மாதிரிப் பல பொருள்களில் அடிபடுவதில்லை. நாஸ்திகர்களும்கூட சத்தியத்தை வழிபடுகிறார்கள். ஏன், சத்தியத்தில் அவர்களுக்குள்ள தீவிர பற்றினால் அவர்கள் உள்ளத்தில் எழும் சந்தேகத்தை வைத்து, கடவுளே இல்லை என்ற அளவுக்குச் சொல்கிறார்கள். சத்தியத்தில் அவர்களுக்குள்ள அபார மதிப்பும் பற்றும் இவ்வளவு தூரம் செல்கிறது. இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் உலகத்தில் அனைவரும் ஆராதிக்கும் பொருள் சத்தியமானபடியால் அதுவே கடவுளின் சரியான வடிவம் என்று என் கருத்தில் பட்டது. சத்தியமே தெய்வம் என்று சொல்ல ஆரம்பித்தேன். கடவுளின் பல பண்புகளில் சத்தியம் ஒன்று என்று சொல்லி வந்ததை விட்டுவிட்டு, சத்தியமே கடவுள் என்று மாற்றிக் கொண்டேன்.

ஆனாலும் ஒன்று உறுதியாகச் சொல்லுவேன். கடவுளுக்கு அதாவது சத்தியத்திற்கு எது நேர் வழி என்று பார்த்தால் அன்பு ஒன்றே சரியான நேர்வழி. சத்தியத்தைப் பற்றி யாரும் விவாதிப்பதில்லை. அதைக் குறை கூறுவாரே இல்லை. நாஸ்திகர்களுங்கூடச் சத்தியம் என்றால் அதற்குத் தலை வணங்குகிறார்கள், ஆயினும் உண்மை

யைக் காண வாழ்நாள் முழுதும் உழைக்கும் விஞ்ஞானி கள் உண்மையைக் காண்பதற்காகப் பெருந் தவறுகளும் செய்கிறார்கள். பிராணிகளை உயிருடன் இம்சை செய்கிறார் கள். உண்மையைக் காணத்தான் இப்படி செய்கிறார்கள். ஆனபடியால் உண்மையே கடவுள் என்று விவகரிப்பதி லும் கஷ்டங்கள் இருந்துவருகின்றன. ஒப்புக்கொள்ளு கிறேன். விளக்க முடியாத ஒரு பொருளை விளக்கித் தீர்க்க முயல்வதில் எப்படி வெற்றிகாண முடியும்? முடியாது. நமது ஆராய்ச்சிக் கருவி நம்முடைய புத்தி. அதைத் தவிர வேறு இல்லை. அந்தக் கருவி ஒரு வரம்புக்குள்தான் பயன் படும். வரம்பு அற்ற ஒரு பொருளை அந்தக் கருவியைக் கொண்டு எப்படிக் காணமுடியும்!

ஹிந்து சாஸ்திரத்தில் இன்னொரு விஷயம் சொல்லப் படுகிறது. கடவுள் உண்டு என்பதைத் தவிர கடவுள் ஒன்றே உண்மை. வேறு ஏதும் இல்லை என்பது ஹிந்து ஞானிகளின் கொள்கை. இஸ்லாமிய மந்திரத்திலும் இப் படியே சொல்லப்படுகிறது. ஆண்டவன் ஒருவனே மெய்ப் பொருள். வேறு ஏதும் உண்மையல்ல என்று இஸ்லாத்தில் சொல்லப்படுகிறது. ஸம்ஸ்க்ருத பாஷையில் சத்தியம் என் கிற பதத்தைச் சோதித்துப் பார்த்தால் அதன் பொருள் "உள்ளது" என்பதுதான். (தமிழிலும் அவ்வாறே உண்மை என்றால் உளது என்பதுதான் பொருள்.) இதனு லும் இன்னும் சில காரணங்களினாலும் நான் கடவுளை விளக்கும் பல பெயர்களில் மெய்ம்மை, உண்மை, சத்தியம் என்கிற பெயரே உத்தமமான பெயர் என்கிற முடிவுக்கு வந்தேன். இந்தப் பெயரே என் உள்ளத்துக்குத் திருப்தி யும் தருகிறது.

சத்தியம் என்கிற வடிவத்தில் ஆண்டவனைக் காண வேண்டுமானால் அதற்கு வழி அன்பு ஒன்றே என்று சொன் னேன் அல்லவா? எந்த ஜீவனையும் இம்சை செய்யாமல் இருப்பது, அதாவது அஹிம்ஸை,—இது என்னுடைய வாழ்க்கைத் தத்துவம் என்பது உங்களுக்குத் தெரியும். அடையக் கருதும் பயனும் அடையச் செல்லும் வழியும்

இரண்டும் ஒன்றே ஆகும் அல்லவா? எனவே சத்தியமே தெய்வம் என்பதும், அன்பே தெய்வம் என்பதும், இரண்டும் ஒன்றே என்று வைத்துக்கொள்ளலாம்.

சத்தியம் என்றால் என்ன என்பது அடுத்த கேள்வி. கஷ்டமான கேள்வி. என்னைப் பற்றிய மட்டில் நான் உணர்ந்தது ஒன்று. உள்ளத்தில் ஒரு குரல் பேசுகிறது. அதன் பேச்சே உண்மை.

பலர் பலவிதமாக அல்லவோ கருதியும் பேசியும் செய்தும் வருகிறார்கள். மாறுபட்டல்லவோ கருத்துகள் நிற்கின்றன. நீ சொல்வது எப்படிப் பொருந்தும் என்று கேட்பீர்கள். ஒருவன் கண்டது அவனுக்கு உண்மை. அது மற்றொருவனுக்கு உண்மை ஆகாது. அவனவன் கண்டதே அவனவனுக்கு உண்மை. உண்மையைக் காணும் முயற்சியில் சில முறைகளைக் கையாள வேண்டும். இல்லாவிடில் பொய்யை மெய்யாகக் கொண்டு பிழைகளில் சிக்கிக் கொள்ளுவோம். பௌதிக ஆராய்ச்சிகளில் சில சோதனை முறைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் அல்லவா? அப்படியே ஆத்மீக உண்மையைக் காணும் முயற்சிகளிலும் இன்றியமையாத சில நிபந்தனைகள் உண்டு. ஆத்மீக சோதனையில் ஈடுபடுகிறவர்கள் சில கடினமான விரதங்களை அனுஷ்டிக்க வேண்டும். 'என் உள்ளம் இப்படிச் செல்லுகிறது. அதுவே எனக்கு உண்மை' என்று சொல்லும் அதிகாரத்தை ஒருவன் பெற வேண்டுமானால் அவன் தன்னுடைய அறிவு, சீலம், ஆற்றல் இவற்றின் வரம்பை உணர்ந்து கொள்ளவேண்டும். ஹிந்துக்களாகிய நாம் அநுபவத்தின் பேரில் விதித்துக் கொண்டிருப்பது என்னவென்றால் கடவுளைக் காணும் முயற்சியில் இறங்குவதற்கு முன் சில விரதங்களைக் காத்து அவற்றில் வெற்றி பெறவேண்டும். வாய்மை விரதம், பிரும்மசரிய விரதம், ஜீவன்களைத் துன்புறுத்தா விரதம், வறுமை வாழ்க்கை, எனது என்று பொருள் திரட்டாமல் இருத்தல் முதலியன. காமிகனுடைய ஆசை வேகத்தைப் போல மெய்ப் பொருளைக் காணும் ஆர்வம் இருக்கவேண்டும். பொருளைத் திரட்டும் வேலை வைத்துக்கொண்டால் இந்த

ஆர்வத்துக்கு இடம் இராது. மனைவிக்கும் கடவுளுக்கும் அன்பை வேண்டிய அளவுக்குப் பிரித்துக் கொடுப்பது கஷ்டமான காரியம் என்பதை அனைவரும் கண்டிருக்கிறார்கள். இந்த விரதங்களைக் காத்து வெற்றி பெற்றால் ஒழிய ஒருவன் மெய்ப் பொருளைத் தானே காணும் முயற்சியில் பிரவேசித்தல் கூடாது. இந்த நிபந்தனைகள் மட்டுமல்ல. ஹிந்து சாஸ்திரத்தில் வேறு வழிகளும் உண்டு. அவை யெல்லாவற்றையும் இப்போது நான் சொல்லப் புகவில்லை. ஒன்றுமட்டும் சொல்லுகிறேன்: என் உள்ளம் இப்படிச் சொல்லுகிறது அதுவே உண்மை என்றும் சொல்லும் அதிகாரம் அனைவருக்கும் இல்லை. இதுவே நம்மோர் அனுபவத்தினின்று கண்ட உண்மை. அதிகாரம் படைக்காதவர்கள் எல்லாம் இது என் மனசாட்சி, நான் உள்ளத்தில் கண்ட உண்மை என்று சொல்லியும் செய்தும் வருவதாலேதான் உலகத்தில் பலர் உண்மை இல்லாதவற்றை மக்களிடையே குழப்பி வருகிறார்கள்.

அடக்கம் இல்லாதவர்கள் உண்மையைக் காணமாட்டார்கள். உண்மை என்கிற வெள்ளத்தில் படகேறிச் செல்ல அடக்கம் மேற்கொள்ள வேண்டும். அடக்கம் இன்றி அகம்பாவம் கொண்டால், பாரம் அதிகமாகி மூழ்கித்தான் போவோம். நான் என்பதைச் சூன்யமாக்கிக்கொள்ளவேண்டும். அப்போது ஓடம் சரியாகச் செல்லும்.

[யங் இந்தியா 31-12-31]

## 10

பௌதிக விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள், அணுக்களுக்கு இடையில் ஒரு சக்தி உண்டு. அதனால் அணுக்கள் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டு நிற்கின்றன என்று. இந்தப் பிரகிருதி சக்தி இல்லாவிடில், பூமி பொடியாகிப்போகும். எல்லா ஜீவராசிகளின் தேகங்களும் நீருகிப் போகும். உயிருக்கு இடமே இராது. அசேதனப் பொருள்கள் வடிவங்கொண்டு நிலைத்து நிற்க இந்தப் பிணைப்புச் சக்தி எவ்வளவு

அவசியமோ, அப்படியே சேதன உயிர்களின் வாழ்க்கைக்கு அன்பு என்கிற பிணைப்புச் சக்தியும் அவசியம். தகப்பனும் பிள்ளையும் அன்பினால் கட்டுப்படுகிறார்கள். அதுவே சகோதரர்களுக்குள்ளும், சகோதர சகோதரிகளுக்குள்ளும், நண்பர்களுக்குள்ளும் பிணைப்பைக் காக்கும் சக்தி. அன்பு என்கிற விஸ்வ சக்தியை நாம் கண்டு விஸ்தரித்துப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதைக்கொண்டு உயிருள்ள சகல பிராணிகளும் ஒன்றாக இணைந்து நிற்கச் செய்யவேண்டும். இதுவே ஈசுவரனை அறியும் மார்க்கம். அன்பே உய்யும் வழி. வெறுப்பு நாசத்துக்கு வழி.

[யங் இந்தியா 5-5-20]

ஒன்று கூட்டும் பிணைப்புச் சக்தியைப் போலவே இயற்கையில் பிரித்து விலக்கும் சக்தியும் உண்டு. ஆயினும் இவ்விரண்டில் பிணைப்பு வேகமே ஓங்கி வேலைசெய்யும். பிணைப்பினால்தான் உலகத்தில் உயிர் நிலைத்து வருகிறது. பரஸ்பர அன்பினாலேதான் உலகம் நடைபெற்று வருகிறது. மற்றப் பிராணிகளை அழித்து ஒரு மனிதன் வாழ முடியாது. தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்வதற்காயினும் மற்றப் பிராணிகளை மனிதன் பேணுவது அவசியம்.

ஒருவரை ஒருவர் காத்து வருவதாலேதான் சமூகங்கள் நிலைத்து நிற்கின்றன. ஒரு தேசத்து மக்கள் ஒருவரை ஒருவர் மதித்து ஒருவருக்கொருவர் உதவியும் வந்து, சமூக வாழ்க்கையைக் காப்பாற்றி வருவதைப்போல் பிரபஞ்சம் முழுவதற்கும் அந்த அன்பு முறையை விஸ்தரித்துப் பெருக்க வேண்டும். குடும்பப் பிணைப்பைத் தேசத்துக்கும் சமூகத்துக்கும் விஸ்தரித்திருக்கிறோம். சமூகப் பிணைப்பை உலகளவு விஸ்தரிக்கவேண்டும். உலகம் முழுதும் ஒரு பெரிய குடும்பம் ஆகவேண்டும்.

[யங் இந்தியா 2-3-22]

காலனுடைய அட்டூழியம் பெரிதே யாயினும் அதற்கிடையில் உயிர் அழியாமல் இருந்து வருகிறது. பிரகிருதி

யில் உயிர்த் தத்துவத்தின் வேகம் மேலானது. யம னுடைய ஆதிக்கத்துக்கு இடையில் உயிர் வெற்றிபெற்று வருகிறது. உலகத்தின் உண்மைப் பண்பு அழிவல்ல. உயிர்த் தத்துவமே உலகப் பண்பு. இந்தத் தத்துவத் தைக் கண்டபின் நாமும் அதைப் பற்றி நிற்க வேண்டும். தினசரி வாழ்க்கையில் அதைத் தர்மமாகக் கடைப்பிடித்து வாழவேண்டும். பிணக்கமோ பகையோ ஏற்பட்டால் அன் பைக் கொண்டு அதைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். அன்பைச் செலுத்திப் பகைவனை வெல்லவேண்டும். என் வாழ்க்கையில் இந்த முறையைத்தான் நான் அனுசரித்து வந்திருக்கிறேன். தப்பும் தவறும் ஆயினும் இந்த உபா யத்தைத்தான் உபயோகித்து வந்திருக்கிறேன். எல்லாச் சிக்கல்களையும் நான் தீர்த்துக் கொண்டேன் என்று சொல்லமாட்டேன். ஆனால் ஒன்று நிச்சயம்; வெறுப்பினால் நான் ஒன்றும் சாதித்ததில்லை. நான் கண்ட வெற்றி யெல் லாம் அன்பின் வழியேதான்.

[யங் இந்தியா 1-10-31]

மனித வர்க்கம் ஒப்புரவினால் மேம்பாடு அடைந்து வருகிறது. முன்னேற்றம் பெறச் செய்யும் சக்தி அன்பே யாகும். அன்பே மனிதனைக் காக்கும் சக்தியும் உயர்த்தும் சக்தியும் ஆகும். நம்மையும் அறியாமல் மனித வர்க்கத்தி லுள்ள இந்த ஒப்புரவு வேலை செய்து வருகிறது. மனித ஜாதி உயிருடன் இருப்பதே, பிரித்து விலக்கும் வேகங் களைக் காட்டிலும், ஒன்று சேர்க்கும் அன்புவேகமே அதிக சக்தி வாய்ந்தது என்பதற்கு அத்தாட்சியாகும்.

[யங் இந்தியா 12-11-31]

வாழ்க்கைக்கு மந்திரம் அன்பு அல்லது அஹிம்ஸை. இல்லாவிடில் கட்டாயமாக யுத்தங்கள் வந்துகொண்டே யிருக்கும். ஒரு யுத்தத்துக்கு மேல் அடுத்த யுத்தத்தின் கோரம் அதிகரித்துக் கொண்டே போகும்.

[ஹரிஜன் 28-9-36]

## 11

பூவுலகத்தில் அவதரித்து உபதேசித்த மகான்கள் அனைவரும் அன்புதான் வாழ்க்கை முறை என்பதைக் காட்டி வந்திருக்கிறார்கள். சிலர் இதை வற்புறுத்தியும், சிலர் வேறு விஷயங்களை அதிகமாக வற்புறுத்தியும் வந்திருக்கிறார்கள். ஆனால் எல்லாரும் வாழ்க்கையின் அடிப்படைத் தர்மம் அன்பே என்று உபதேசித்து வந்திருக்கிறார்கள். அன்பு என்னும் வேகம் மனித குலத்தை நடத்தியிரா விட்டால் மனித ஜாதி அழிந்தே போயிருக்கும். காலனுக்குத் தினமும் தோல்வி தந்து வருவது அன்பின் வேகம். மிருகத்துக்கும் மனிதனுக்கும் உள்ள பெரிய வித்தியாசம் மனிதன் தன் வாழ்க்கையில் பரஸ்பர அன்புக்குப் பிரதான்யம் கொடுத்து வருவதேதான். உலகத்தில் அவதரித்து வழி காட்டி மறைந்த பெரியார்கள் எல்லாரும் அன்பே நல் வாழ்க்கையின் ரகசியம் என்று தங்கள் வாழ்க்கையில் நிதர்சனமாகக் காட்டியுள்ளார்கள். நம்முடைய உள்ளங்களுக்குள் இன்னும் மறைந்து நிற்கும் மிருக தத்துவம் அவ்வப்போது தலை தூக்கி வருகிறது. ஆயினும் அது அன்பின் ஆட்சியைப் பொய்யாக்கிவிடாது. தருமம் உண்மையாயினும் நடத்துவது கடினம். கடினம் இல்லாவிடில் அதன் சிறப்பு என்ன? அனைவரும் அன்பின் ஆட்சியை ஒப்புக் கொண்டு அனைத்திலும் அதைச் செலுத்தி விட்டார்களாகில் பூவுலகமே ஆண்டவனுடைய தேவலோகம் ஆகிவிடும். இகமும் பரமும் நமக்குள்ளேதான் இருக்கின்றன என்பதை அறிவேன். ஆனால் நாம் அறிந்தது இகம். நமக்குள்ளே இருக்கும் பரத்தை நாம் காணவில்லை.

அன்பு வாழ்க்கையை ஒரு சிலர் நடத்துவார்கள் என்று ஒப்புக்கொண்டால் ஏன் மற்றவர்களால் முடியாது? அது முடியாது, அதற்கு முயற்சிப்பது வீண் என்று சொல்வது அகம்பாவம் ஆகும். மனிதர்கள் ஒரு காலத்தில் மிகவும் கோரமான வாழ்க்கை நடத்தியிருக்கிறார்கள். அப்போதுமே சிலர் அது வேண்டாம் என்று சொல்லி, அது

காரணமாகப் பரிகாசத்துக்கு ஆளாகியும் வந்திருப்பார்கள். 'ஒருவரை ஒருவர் ஏன் கொன்று சாப்பிடக் கூடாது. நீ சொல்வது அதிசயமாக இருக்கிறது. உளராதே' என்றும் அவர்களைப் பார்த்து ஏளனம் செய்தே இருப்பார்கள். அதுபோலவே நான் இப்போது அன்பைப் பற்றிச் சொல்வதை இது முடியாத காரியம் என்றும் விஷயம் தெரியாத பேச்சு என்றும் சிலர் ஆட்சேபிக்கிறார்கள்.

[ஹரிஜன் 26-9-36]

ஆண்டவன் எங்கேயோ வானத்திலிருந்து கொண்டு ஆட்சி புரியவில்லை. நமக்குள் மறைந்து நிற்கிறான். நம்முடைய ஊனுக்குள், உயிருக்குள் அந்தரங்கமாக இருக்கிறான். நமக்குள் நாம் காணாத சக்தி எவ்வளவோ இருக்கிறது. ஆராய்ச்சியும் முயற்சியும் இடைவிடாது செய்து வந்தால் நமக்குள் இருக்கும் சக்தியை நாம் காண்கிறோம். அப்படியே நமக்குள் இருக்கும் ஆண்டவனையும் கண்டு கொள்ளலாம். அதற்கு வைராக்கியமும் விடா முயற்சியும் வேண்டும். நமக்குள் குடியிருக்கும் தெய்வத்தைக் காண்பதற்குப் பல துறைகள் உண்டு. அவற்றில் அஹிம்ஸை ஒரு துறை. ஈசன் நமக்குள் இருக்கிறான். ஒவ்வொருவருள்ளும் இருக்கிறான். எல்லா உயிரிலும் ஆண்டவனைக் கண்டு, எல்லா உயிரும் பகவான் சொரூபமே என்பதை உணர வேண்டும். அதுவே அஹிம்ஸையாகும். அனைத்தும் ஒன்று என்பதை பௌதிகத்தில் விசுவ ஆகர்ஷண சக்தியாக விஞ்ஞானிகள் காண்கிறார்கள். உயிர் உணர்ச்சிகளில் அந்த வேகத்தை நாம் அன்பு என்கிறோம். பௌதிகப் பொருள்களைக் கட்டிப் பிணைக்கும், 'க்ராவிடேஷன்', கொஹிஷன் என்று பெயரிடப்பட்ட வேகங்களைப் போலவே உயிர்களை ஒன்றாகப் பிணைத்துக் கட்டும் சக்தி, அன்பு. அதுவே உயிர்களைக் கடவுளுடன் பிணைக்கிறது. அன்பு என்பதே அஹிம்ஸை; அம்ஸை என்பதே அன்பு.

[1-6-42 இல் எழுதிய ஒரு கடிதத்திலிருந்து]

## 12

சச்சிதானந்தம் என்று கடவுளைச் சொல்லுகிறோம். சத்தியம் என்கிற சொல், 'சத்' என்கிற பகுதியிலிருந்து பிறந்தது. 'சத்' என்றால் 'இருப்பது', 'உளது' என்பது பொருள். உண்மை ஒன்றே உளது. சத்தியம் ஒன்றே சத் ஆகும். சத்தியம் அல்லாதது சத் அல்ல. இதனாலே தான் சத் என்பது ஆண்டவனுடைய பல பெயர்களில் முக்கியமான ஒரு பெயர். என்னுடைய கருத்தில் உண்மையே கடவுள். சத்தியமே பரம்பொருள்.

அரசனின்றி மக்கள் வாழ முடியாது. தளபதி இன்றி சேனை இருக்க முடியாது. அதுபோலவே பிரபஞ்சத்துக்கு ஆட்சி செய்யும் ஒரு அரசன் வேண்டும். ஆதலால் கடவுளுக்கு ஈச்வரன், ஆண்டவன், புருஷோத்தமன் முதலிய பெயர்கள் வழங்கி வருகின்றன. ஆயினும் சத்தியம் என்பதே கடவுளுடைய முழுத் தத்துவத்தைச் சரியாகக் குறிக்கும் நாமமாகும்.

உண்மையைக் காண்பதே அறிவு. உண்மையறிவைக் குறிக்கும் சொல் "சித்". அதுவும் ஆண்டவனுடைய பெயர்களில் ஒன்று. உண்மையறிவுடன் ஆனந்தம் எப்போதும் கூடும். உண்மை அறிவே ஆனந்தம். ஆனபடியால் கடவுளை சச்சிதானந்தம் என்று தியானிக்கிறோம். பூரண மெய்ம்மையும் ஞானமும் ஆனந்தமும் கலந்து நிற்கும் பொருள் கடவுள்.

நாம் வாழ்வதன் இலட்சியப் பயனானது உண்மைக்குக் கட்டுப்பட்டு இருக்கவேண்டும். நாம் செய்யும் செயல்கள் அனைத்தும் சத்தியத்தில் காலூன்றி இருக்கவேண்டும். உண்மைக்கு மாறான செயல்கள் பாவமாகும். உடலுக்கு சுவாசம் உயிர் தருவதுபோல் வாழ்க்கைக்கு உண்மை அமைந்து உயிர் தரவேண்டும். ஜீவயாத்திரையில் உண்மையைத் தவறாது பற்றுவது என்று ஏற்பட்டுவிட்டால் பிறகு எல்லா தர்மங்களும், நியதிகளும், ஒரு சிரமமுமில்லாமல் அமைந்துவிடும். ஆசாரமும் சீலமும் தாமாகத்

தோன்றிக் காக்கப்படும். ஒரு பிரயத்தனமுமின்றி எல்லாம் நடைபெறும். வாய்மையைக் காக்காவிடில் வேறு எந்த அறமும் காக்கப்படாது தவறிப் போகும்.

உண்மை யென்றால் பொய் பேசலாகாது என்பது ஒன்று மட்டும் அல்ல. சத்தியம், மெய்ம்மை, உண்மை என்பதை நாம் விஸ்தரித்து முழுப் பொருளை உணரவேண்டும். மனம் வாக்கு செயல் மூன்றிலும் உண்மை காக்கப்படவேண்டும். இப்படி உண்மையைப் பூரணமாக உணர்ந்தவனுக்கு வேறு ஒரு அறிவும் வேண்டியதில்லை. எல்லா ஞானமும் அதில் அடங்கிப்போகும். உண்மைக்குள் அடங்காதது அறிவு ஆகாது. ஞானமும் ஆகாது. அறிவு இன்றி உள்ளத்தில் சாந்தி இல்லை. உண்மை என்கிற உரைகல்லில் எதையும் தேய்த்து உரைத்துப் பார்க்கத் தெரியவேண்டும். இதைத் தெரிந்துவிட்டோமானால் பிறகு ஒரு குறையும் இல்லை. எதைச் செய்யலாம் எதைச் செய்யக்கூடாது, எதைப் பார்க்கலாம் எதைப் பார்க்கலாகாது, எது படிக்கத்தக்கது எது படிக்கலாகாது, என்பதெல்லாம் மிக எளிதாகக் கண்டு கொள்ளலாம்.

இவ்வாறு எல்லாவற்றையும் கொடுக்கும் காமதேனுவைப் போன்ற உண்மையை, நாம் எப்படி அடைவது? 'மனம் முழுதும் செலுத்திய அப்யாஸத்தாலும், வேறு பொருள்கள்மேல் ஆசை வைக்காமல் இருக்கும் வைராக்கிய நிலையாலும்' என்கிறது சாஸ்திரம். பக்தியோடு நாடினாலும், ஒருவனுக்கு உண்மையாகத் தோன்றுவது மற்றொருவனுக்கு உண்மையாகத் தோன்றாது. இதனால் குற்றமில்லை. தூய உள்ளத்தோடு செய்யப்பட்ட முயற்சியினால் காணப்படும் உண்மை, ஒருவனுக்கு ஒருவிதமாகவும் இன்னொருவனுக்கு மற்றொரு விதமாகவும் வேறுபட்டுத் தோன்றுவது ஒரு மரத்திலுள்ள பல இலைகள் மாதிரி. ஆண்டவன் பல்வேறு வடிவங்களில் காணப்படுகிறான். ஆயினும் அவன் ஒருவனே என்று அறிவோம். சத்தியமே அவன் வடிவமும் பெயரும். பலவிதமாக நாம் உண்மையைக் கண்டு பக்தி செலுத்துவதில் குற்றமில்லை. அவனவனுக்கு அது சத்தியமேயாகும்.

அவனவன் கண்ட உண்மையைத்தான் அவனவன் பக்தி செலுத்த வேண்டும். அவ்வாறு செய்தால், குற்றம் இருப்பினும் நீங்கிப் போகும்.

உண்மையை நாடுவது ஒரு தவமாகும். உண்மைக்காகச் செய்யும் தவத்தில் உற்ற நோய்களைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். உயிரையும் இழக்கவேண்டியதாகும். சுயநலத்தை முற்றிலும் விலக்கி உண்மையை நாடவேண்டும். அப்படிச் செய்வதால் வழி தப்பிப்போகாது. தப்பினாலும் அது நெடுங்காலம் பிறழாது. தவருன வழியில் சென்ருல் கட்டாயம் இடறி விழவேண்டியதாகும். பின்பு நேர் வழிக்கு வந்துவிடுவோம்.

சத்தியமே பக்தியுமாகும். அதுவே தெய்வத்தை யடையும் மார்க்கம். இதில் பயப்படுவதற்கு இடமில்லை. தோல்வியும் இல்லை. உயிர் நீத்தாலும் அதுவே அமிருத நிலைக்குக் கோபுரவாயில், ஹரிச்சந்திரன், பிரகலாதன், ராமச்சந்திரன், இமாம்ஹஸன், இமாம்ஹுஸேன், மற்றும் கிறிஸ்துவ முனிவர்கள் இவர்களுடைய சரித்திரங்களைக் கற்றுத் தியானிக்க வேண்டும்.

ஆகா! உலகத்தில் அனைவரும் சத்தியத்தையே கடைப்பிடித்து எல்லாக் காரியங்களிலும் உண்மையே வழி என்று நடந்துகொள்வார்களாகில் இந்த உலகம் எவ்வளவு சுந்தரமாக இருக்கும்! எல்லாவற்றிலும் சத்தியமே நம்முடைய வழி என்று நடந்துகொண்டு முடிவில் உடலைவிட்டு உயிர்பிரியும் தருணம், அந்த சத்தியப் பொருளிலேயே ஒன்றுபட்டுப் போவோமானல் உலகம் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்! சத்தியமே ஆண்டவனுடைய வடிவமாகவும் என்னுடைய செல்வமாகவும் இருந்துவந்திருக்கிறது. அனைவருக்கும் அவன் அருளால் அவன் சத்திய ரூபமே செல்வமாகுக!

[யரோதா சிறையில் எழுதியது]

## 13. இயற்கை கடவுள் நியதியே

கடவுளினுடைய சட்டதிட்டங்கள் நமக்கு இன்னும் முற்றிலும் தெரியாது. அவை இயங்கும் விதமும் நாம் அறியோம். மேம்பட்ட பௌதிக விஞ்ஞானிகள் கண்டதும் சாஸ்திர தத்துவார்த்தம் கற்ற பண்டிதர்களினுடைய அறிவும் ஆண்டவனுடைய நியதிகளின் அடங்கலுக்கு ஒரு துகள் மாத்திரமே ஆகும். கடவுளை நான் என்னைப்பெற்ற தகப்பனைப் போல் ஒரு பூத உடல் கொண்டவனாகப் பாவிக்காவிட்டாலும் அதைவிட மிஞ்சிய அபார சம்பந்தம் கொண்டவனாகக் கருதுகிறேன். என்னுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு சிறு விஷயத்திலும் அவன் என்னை ஆட்படுத்துகிறான். ஒரு இலையுங்கூட அவன் ஆணையின்றி அசைவதில்லை என்பது என்னுடைய நிச்சயமான கருத்து. வெறும் உபசாரப் பேச்சு அல்ல. நான் விடும் ஒவ்வொரு மூச்சும் அவன் சம்மதத்தைப் பொறுத்து நிற்கிறது.

[ஹரிஜன் 16-2-34]

அவன் வேறு, அவன் நியதி வேறு அல்ல. நியதியே கடவுள். ஆண்டவனுக்கு நாம் கூறும் குணங்கள் வெறும் இலக்கணங்கள் அல்ல. இலக்கணமே அவன், அவனே இலக்கணம். அவனே சத்தியம், அன்பு, நியதி, இன்னும் நாம் தேடிச் சொல்லக்கூடிய கோடிக்கணக்கான தத்துவங்களும்.

இயற்கை விதிகள் மாறாதவை. அவற்றுக்குப் புறம்பாக எதுவும் நடைபெறாது. அந்த விதிகளுக்கு விலக்கு என்பது இல்லை. இயற்கை விதிகளுக்கு விலக்காக நடைபெறுவது தான் அற்புதம் என்றால் அவ்வித அற்புதங்கள் நடக்க இடம் இல்லை. அவனுக்குக் காலம் என்பது இல்லை. அவனுடைய காலம் முதலும், நடுவும், முடிவும், அளவும் அற்றது. நமக்குத் தான் இறந்த காலம், நிகழ் காலம், வருங்காலம் என்கிற கால பேதம். நாம் வாழும் நூறு ஆண்டுகள்

அனந்த காலத்தில் எம்மாத்திரம்! ஒரு தூசித் துகளுக்கும் ஆகாது.

[ஹரிஜன் 17-4-37]

தான் செய்திருக்கும் சட்டங்களை மாற்றும் உரிமையை ஆண்டவன் வைத்துக் கொள்ளவில்லை. அப்படி மாற்ற வேண்டிய அவசியம் அவனுக்கு என்னத்திற்கு? அனந்த வீரியமும் அனந்த அறிவும் பெற்றவன் அல்லவோ அவன்! கழிந்ததும், நிகழ்வதும், வருவதும் அனைத்துமே அவனுக்கு ஒரு சிரமமும் இன்றி ஒரே சமயத்தில் அவன் காண்பான் அல்லவா? ஆனபடியால் அவன் ஏன் எதையும் மாற்றவேண்டும்? ஏன் எதையும் புனராலோசனை செய்ய வேண்டும்? திருத்தவோ மாற்றவோ சீர்ப்படுத்தவோ அவனுக்கு அவசியமில்லை.

[யங் இந்தியா 25-11-26]

பூவுலகில் நாம் வாழும் வாழ்க்கை, மாதர்கள் அணிகிற உடைந்து போகும் கண்ணாடி வளையல்கள்மாதிரி, நிலையற்றது. ஒரு பெட்டியில் போட்டுப் பத்திரப்படுத்தினால் ஆயிரம் ஆண்டுகள் கூட அந்த வளையல்கள் நிற்கும். ஆனால் நம்முடைய ஆயுளோ ஒரு இமைப் பொழுதில் அழிந்து போகக் கூடும். ஆனபடியால் உயிருள்ளபோதே, இப்போதே, உள்ளங்களைச் சுத்திசெய்து கொள்வோம். ஏழையென்றும் ஈனன் என்றும் வித்தியாசப்படுத்தித் தருவதை ஒழிப்போம். ஒரு பூகம்பமோ வெள்ளமோ வேறேதும் விபத்தோ அல்லது நடைமுறையில் வரும் மரணமோ, நம்மை வந்து எய்துவதற்குள் ஆண்டவன் முன்னிலையில் நிற்பதற்கு ஆயத்தம், ஆவோம்.

[ஹரிஜன் 2-2-34]

பெரிய உற்பாதங்கள் நாம் செய்த பாபங்களுக்குத் தண்டனையாக வருவதென்று மக்கள் எண்ணுவதுண்டு. நானும் அவ்வாறே எண்ணுகிறேன். உள்ளத்தில் உண்மையில் அந்தக் கருத்துத் தோன்றினால் அச்சமயங்களில் மக்

கள் ஆண்டவனைத் தியானித்துப் பிரார்த்திப்பார்கள். செய்த பாபங்களுக்கு வருந்துவார்கள். உள்ளம் அழுக்கு நீங்கிப் புனிதமாவார்கள். ஆண்டவனுடைய சித்தத்தை நான் எம்மட்டும் அறிவேன்? பெரும் விபத்துக்கள் அர்த்தமின்றி உண்டாவதாக நான் எண்ணவில்லை. பொருளற்ற இயற்கைச் சேஷ்டைகளாக அவற்றை நான் கருதவில்லை. உற்பாதங்களுக்கும் நியதிகள் உண்டு. சந்திரனும் சூரியனும் மற்ற கிரகங்களும் நியதிப்படி சுற்றிச் சஞ்சரிப்பது போலவே இந்த உற்பாதங்களும் நியதிக்கு அடங்கியவை. இந்த நியதிகள் நமக்குத் தெரியாதபடியால், அவற்றை விபத்து என்றும் தற்செயல் என்றும் உற்பாதம் என்றும் சொல்லி வருகிறோம்.

[ஹரிஜன் 2-2-34]

ஒவ்வொரு பௌதிகப் பெருவிபத்தும் ஆண்டவன் கருத்தைக் கொண்டே நடைபெறுகிறது. பூகம்பங்கள் எப்பொழுது நிகழும் என்று கணக்கிட்டுக் கண்டு பௌதிக சாஸ்திரம் வருங்காலத்தில் முன்னறிக்கை தரக்கூடும். சூரிய சந்திர கிரஹணங்களைக் கணக்கிட்டுச் சொல்வது போல் பூகம்பங்களையும் சொல்லும் காலமும் வரலாம். மானிட அறிவின் வெற்றி அந்த அளவுக்கும் செல்லலாம். ஆனால் அந்த வெற்றி அல்லது அதைப்போல நூறு வெற்றிகளும் நம்முடைய உள்ளங்களைச் சுத்தப் படுத்துமா? அது இன்றி என்ன பயன்?

[ஹரிஜன் 8-6-35]

உள்ளத்தின் மலம் அகன்று செம்மை பெற வேண்டும் என்று விரும்புவோர் அனைவரும் சேர்ந்து பிரார்த்திப்போமாக. இத்தகைய விபத்துக்களை ஏன் ஆண்டவன் விதித்தான் என்பதை அவன் அருளால் காண்போமாக! நம்முடைய அகங்காரம் நீங்கி அடக்கம் பெறுவோமாக, ஆண்டவன் முன்னிலையில் நிற்கத் தகுதி பெறுவோமாக. கூடப் பிறந்த மக்களின், அவர்கள் யாரேயாயினும் அவர்களின்

துன்பங்களிலும் துயரங்களிலும் சேர்ந்து பங்கு கொள்வோமாக.

[ஹரிஜன் 8-6-35]

## 14

உலகத்தில் தீமை இருப்பதற்கு ஆண்டவனே காரணமும் பொறுப்பும் என்று எண்ணும்போது கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் சுகத்துக்கும் சந்தோஷத்துக்கும் அவன் காரணமாக இருந்தால் துன்பத்துக்கும் தீமைக்கும் அவன்தானே காரணம். ராவணனுடைய ராக்ஷஸபலமும் ஆண்டவன் அனுமதித்துத் தானே வளர்ந்தது. அறியக்கூடாத ஒரு பொருளை அறிந்ததாக விவகரிப்பதால் குழப்பங்கள் உண்டாவது இயற்கை. கடவுளை நம்மைப்போன்ற ஒரு மனிதனாக எண்ணிப் பேசுகிறோம் அப்போது இவ்வாறான பல கேள்விகள் கிளம்புகின்றன. ஈசுவரனுடைய தன்மையையாவது குணங்களையாவது நாம் கண்டு உணர்ந்து உழைக்க முடியுமா? அவனே நியதியை அமைப்பவன். அவனே நியதி. அவனே அதை நிறைவேற்றுபவன். இவ்வளவும் ஒரு தனி மனிதன் வகிக்க முடியாதல்லவா? வகித்தால் அவனைக் கொடுங்கோலன் என்றல்லவா சொல்லுவோம். இவற்றை வகிக்கக் கூடியவன் ஈசுவரன் ஒருவனே.

24-2-46]

நன்மை தீமை இரண்டுக்கும் மூலம் ஆவான் ஈசன். கொலை செய்யும் கத்தியும் நோயைத் தீர்க்கும் ரண வைத்தியன் கத்தியும் இரண்டும் அவனுடைய கருவிகளே. நன்மை தீமை இரண்டுமே அவனுடைய உபாயங்கள் ஆயினும் நமக்குள் அவ்வாறு இரண்டையும் ஒன்றாக்கிக் கொள்ள முடியாது. மக்களின் காரியங்களில் நன்மை வேறு; தீமை வேறு. ஒன்று மற்றொன்றாகாது. இருளும் ஒளியும்போல் ஒன்றுக்கொன்று எதிரிடையாக நிற்கும்.

[ஹரிஜன் 20-2-37]

என்னைப் பொறுத்தமட்டில் பரம்பொருளை நம்மைப் போன்ற ஒரு பிறவியாக நான் கருதவில்லை. சத்தியமே எனக்குத் தெய்வம். நியதி வேறு நியந்தா வேறு என்று நான் எண்ணவில்லை. மனிதர்களுக்குள் அரசன் வேறு, அரசனுடைய சட்டம் வேறு. ஈசனைப்பற்றி அவ்வாறு பிரிப்பதற்கில்லை. அவனே அரசனும், அவனே சட்டமும். நம்முடைய செயல்கள் அனைத்துக்கும் அவனே காரணம். அவன் ஆணையின்படியே எந்தத் துரும்பும் அசையும். நம்முடைய சுதந்திரம் எல்லாம் கடலில் செல்லும் ஒரு கப்பலில் கூட்டமாகக் கூடியிருக்கும் பிரயாணிகளுடைய சுதந்திரத்தின் அளவே. அவ்வளவுகூட இல்லையென்று சொல்லலாம். ஆயினும் கப்பலில் செறிந்து கூடியிருக்கும் பிரயாணிகளைப்போல், நெருக்கடி உணர்ச்சி நமக்கு இல்லை.

சுதந்திரம் இருக்கிறதாகவே கருதுகிறோம். உண்மையில் ஒரு பெரிய சுதந்திரம் உண்டு-முயற்சி சுதந்திரம். நம்முடைய ஆன்ம வளர்ச்சிக்கு நாமே சுதந்திரத்தையும் பொறுப்பையும் வகித்திருக்கிறோம். முயற்சி நமதாயினும் பயனைத் தருவதும் தராததும் ஈசன் செயல். அதில் நமக்குச் சுதந்திரம் இல்லை. பயன் நம் கையில் இருக்கிறது என்று எண்ணினால் அகங்காரத்தில் சிக்கிக் கொள்வோம். பயனைப்பற்றிக் கவலைப்பட்டோமானால் துன்பத்தில் வீழ்வோம். இதுவே கீதையின் உபதேசம்.

[ஹரிஜன் 23-3-40]

## 15

பெயரும் அளவும் கடந்த ஈசனுக்கு நம்முடைய அறிவை ஒட்டி நாம் வைக்கும் பெயர்கள் பல்லாயிரம். அவற்றில் தரித்திர நாராயணன் என்பதும் ஒரு பெயர். வறுமையில் கஷ்டப்படும் மக்கள் வழிபடும் மூர்த்தி. ஏழைகளுடைய இதயத்தில் குடியிருக்கும் தெய்வம் என்பது அதற்குப் பொருள்.

[யங் இந்தியா 4.4.29]

ஏழை மக்களின் கருத்தெல்லாம் தங்களுடைய கஷ்டத்தை எப்படி நிவாரணம் செய்வது என்பதிலேயே செல்லும். ஆத்ம உபதேசம் அவர்கள் உள்ளத்தை எட்டாது. போதிய உணவு இன்றித் தவிக்கும் மக்களின் மனத்தை மற்ற விஷயங்களில் இழுக்க முடியாது. என்ன சொன்னாலும் ஏறாது. ஆனால் தங்களுக்கு உணவு கொடுத்தவனைத் தெய்வம் என்று நினைப்பார்கள். வேறு கருத்துக்கள் பசியில் தவிப்பவர்களின் உள்ளத்தில் ஏறாது.

[யங் இந்தியா 5-5-27]

ஏழைகளின் கந்தல் துணியில் முடிபோட்டு வைத்திருந்த செப்புக் காசுகளை, களிம்பேறிய தம்பிடிகளை நான் அவர்களிடம் இந்தக் கையால் வாங்கியிருக்கிறேன். அவர்களிடம் நான் புது நாகரிகங்களைப் பற்றியும் முன்னேற்றங்களைப் பற்றியும் பேசவா? அவர்களிடம் போய் வேதாந்தம் பேசுவது அவர்களைப் புண்படுத்துவது ஆகும். பேசினால் என்னையும் உங்களையும் கொடிய அரக்கர்களாகப் பாவிப்பார்கள். அவர்களறிந்த தெய்வம் கருணையற்ற கொடுங்கோல் தெய்வமே அல்லவா?

கோபமும் பயங்கரமும் நிறைந்த தெய்வந்தான் அவர்கள் கண்டது. இவர்களிடம் நான் ஆண்டவனைப்பற்றி என்ன பேச முடியும்? பேச எனக்குத் தைரியமில்லை. இந்த ஏழை மக்களின் ஒளியற்ற கண்களைப் பார்க்கும்போது அவர்களிடம் ஆண்டவனைப் பற்றிப் பேச எனக்கு எப்படி மனம் வரும்? சோறே அல்லவோ அவர்களுக்குத் தெய்வம். ஊமைப் பிராணிகளிடம் நான் சாஸ்திரம் பேசுவதைப் போலவே ஆகும். இவர்களிடம் நான் தெய்வ உபந்யாஸம் செய்வது! அவர்களுக்குக் கூலி தரும் வேலையைக் காட்டிய பிறகே நான் அவர்களிடம் ஆண்டவனைப் பற்றிப் பேச முடியும். இங்கே நாம் கூடி உட்கார்ந்து காலைப் பலகாரம் நன்றாக முடித்து மத்தியானச் சாப்பாடு என்னவாக இருக்கலாம் என்று யோசனை செய்யும் நிலையில் நாம் தெய்வத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யலாம் ஒருவேளைச்

சோற்றுக்கே திண்டாடும் நிலையில் வாழும் மக்களிடம் நான் என்ன தெய்வ ஆராய்ச்சி செய்ய முடியும்? அவர்களுக்கு ஈசனுடைய அவதாரம் சோறும் சாறுமே. ஏழைக் குடியானவர்கள் நிலத்தை உழுது சோறு சம்பாதித்துக் கொள்வார்கள். அந்தச் சோற்றுக்கு 'வஞ்சனம்' கிடைக்குமாறு ராட்டையைக் கொடுத்தேன். இன்று நான் முழங்காலுக்கு மேல் வேஷ்டி கட்டிக்கொண்டு பசியில் தவிக்கும் அந்த ஏழை மக்களின் தனிப் பிரதிநிதியாக உங்கள் முன் நிற்கிறேன்.

[யங் இந்தியா 15-10-31]

என் நாட்டு ஏழை மக்களின் உள்ளம் எனக்குத் தெரியும். அவர்களிடையில் அல்லவோ நான் வாழ்ந்து வருகிறேன். அவர்களுடைய நலமே என்னுடைய முதல் கவலை. மற்றதெல்லாம் அதற்குப் பின். அவர்கள் நிலை சீர்திருத்தப்பட்டால் என் கவலை தீர்ந்தது. அவர்கள் உள்ளத்தில் காணும் நாராயணனே என்னுடைய நாராயணன். அந்த நாராயணனை அவர்கள் காணவில்லை, நான் காண்கிறேன். கண்டு வணங்குகிறேன். அவர்களுக்குப் பணி செய்து சத்திய தெய்வத்தைக் காண்கிறேன். எந்த சத்தியம் தெய்வமோ, எந்த தெய்வம் சத்தியமோ அதைக் காண்கிறேன்.

[ஹரிஜன் 11-3-39]

நாமெல்லாரும் திருடர்கள் என்றே சொல்லவேண்டும். என்னுடைய அவசியத்துக்குமேல் இந்தச் சமயம் எனக்கு வேண்டாதது ஒன்றை நான் எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்தேனானால், அதை நான் திருடியவனே ஆவேன். மற்றவர்களின் அவசியத்துக்கு வேண்டியதுதான ஒன்றை அவர்களுக்குக் கிடைக்காமல் நான் மூடி வைத்தால் அது திருட்டே அல்லவா? மக்கள் சமூகத்துக்கு வேண்டியதை இயற்கை அன்னை தருகிறாள். அவனவனுக்கு வேண்டியதை அவனவன் அந்த அளவில் மட்டுமே எடுத்துக் கொண்டு வாழ்ந்தால் இந்த உலகத்தில் பிச்சை எடுக்கும்

ஏழைகள் இருந்தே இருக்கமாட்டார்கள். யாருமே பசியால் சாகமாட்டார்கள்.

[1918]

இந்தியாவில் தற்போது ஒருவேளை உணவு உண்டு இருப்போர் லக்ஷக்கணக்கு. அந்த ஒருவேளைச் சாப்பாட்டில் நெய்யுமில்லை, எண்ணெயுமில்லை. இந்த லக்ஷக்கணக்கான ஏழைகள் பசியாற உண்டு, மானம் காக்க உடையும் அடைந்த பிறகே நீங்களும் நானும் எதையும் நமது என்று சொல்லி உரிமை பாராட்ட முடியும். நமக்கு அறிவு வேண்டும். நம்முடைய ஆசைகளைக் குறைத்துக்கொண்டு ஏழைகளுக்கு ஓரளவு மிஞ்சும்படி செய்வது நம்முடைய கடமை.

[1918]

## 16

'ஆண்டவன் எனக்கு இதைச் சொன்னான்; அவன் குரல் கேட்டு இதைச் சொல்கிறேன்' என்று நான் அடிக்கடி சொல்லி வருவது புது விஷயம் அல்ல. ஆனால் ஆண்டவன் குரலை நான் கேட்டேன் என்று எப்படிப் பிறர்க்கு நிரூபிக்க முடியும்? காரியங்களின் பயனைக் கொண்டுதான் ருஜுப்படுத்த முடியும். சாட்சியம் காட்டித் தன்னை மெய்ப்பிக்க இடந்தந்தால் அதன் பிறகு அவன் பரம்பொருள் என்ற தன்மையை இழந்துவிடுவான் அல்லவா?

ஆனபோதிலும் தன்னுடைய உண்மைப் பக்தனுக்கு 'எல்லாம் உனது' என்று முழுப் பாரமும் ஒப்படைத்துவிட்ட அடிமைக்கு எத்தகைய அக்கினிப் பரீட்சையையும் வெற்றியுடன் தாண்ட அவன் சக்தி தருவான். மிக்க கண்டிப்பான இந்த யஜமானனுக்கு ஐம்பது ஆண்டுகளாக 'உன் இஷ்டப்படி செய்' என்று எழுதிக்கொடுத்துவிட்ட அடிமை நான். ஆண்டுகள் செல்லச் செல்ல அவனுடைய குரல் மிகத் தெளிவாக என் காதில் ஒலிக்கிறது. என்னை அவன் எப்போதும் கைவிட்டதில்லை. பேரிருள் மூடிய சமயங்

களிலும் காப்பாற்றி யிருக்கிறான். சில சமயங்களில் என் விருப்பங்களைப் புறக்கணித்தே என்னைப் பிழையினின்று தவிர்த்தருளி யிருக்கிறான். எனக்குச் சுதந்திரமே யில்லாமலும் செய்திருக்கிறான். முற்றிலும் ஒப்படைத்துவிட்ட மகிழ்ச்சியை நான் என்னென்று சொல்வது! எந்த அளவுக்கு அவன்பேரில் பாரம் போட்டேனோ அந்த அளவுக்கு என்னுடைய ஆனந்தமும் அதிகரித்து வந்திருக்கிறது.

[ஹரிஜன் 6-5-33]

மனிதன் ஒருவனுடன் ஆண்டவன் பேசுவதாவது! அது ஒருநாளும் இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. அப்படிச் சொன்னதாக நான் இதுவரையில் அறியவில்லை. இந்த உலகத்தில் யாரேனும் ஒருவனாவது ஈசன் எனக்கு நேரில் ஆணையிட்டான் என்று சொல்லி, அதை மெய்ப்பித்துவிட்டால் அது மக்களுக்குப் பெரும் நன்மையாகும். அநேகர் இப்படிச் சொல்லிக் கொள்ளுவார்கள். ஆனால் நிரூபிக்க முடியாது. பலர் பொய்யைச் சொல்லி மோசம் செய்கிறார்களே என்பதற்காக உண்மையில் ஒருவன்-ஆண்டவன் குரலைக் கேட்டவன்-தன் அனுபவத்தை மறைக்க வேண்டிய அவசியமில்லை; கூடாது. வேஷதாரிகள் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களை நாம் என்ன செய்ய முடியும்? போலிகள் பலர் இருக்கிறார்களே யென்று, உண்மைச் சீலத்தை நாம் விட்டுவிட முடியுமா? அந்தராத்மாவின் சொற்படி உலகத்தில் பலர் செய்துவந்திருக்கிறார்கள். அதனால் உலகம் கெட்டுப்போனதில்லை. அது பிழையாயினும் சரி, உண்மையில் ஆண்டவனுடைய குரலாயினும் சரி, அதனால் உலகம் அழிவு அடைந்ததில்லை.

அந்தராத்மாவை உண்மையில் உணர்ந்து தெளிவதற்குக் கடினமும் நீடித்ததுமான அப்பியாசங்கள் வேண்டும். அப்படிப் பயிற்சி பெற்றவனுக்கு, இது உண்மையில் அந்தராத்மாவின் குரலா அல்லது போலிக் குரலா என்பது எளிதில் தெரிந்துவிடும். மேலும் வேஷதாரிகளை உலகம் சீக்கிரமே கண்டு கொண்டுவிடும். ஆனபடியால் என்னைப்

போன்ற ஒரு ஏழை இம்மாதிரிப் பிடிவாதமாய்ச் சொல்லி வருவதனால் தீமை ஒன்றும் விளையாது. உண்மையில் நம்பி, என் அந்தராத்மாவிடமிருந்த செய்தியை நான் விளக்குகிறேன். இதனால் யாரும் ஏமாந்துபோய் உலகத்துக்குத் தீமை நேராது.

[ஹரிஜன் 18-3-33]

ஆண்டவன் சொன்னது, மனச்சாட்சி, சத்தியம், அந்தராத்மா, உள்ளம் சொன்னது இவையெல்லாம் எனக்கு ஒன்றேயாகும். நான் வடிவம் எதையும் கண்டதில்லை. காண முயன்றதும் இல்லை. என்னைப் பொறுத்தமட்டில் ஆண்டவன் வடிவமற்றவன், நான் கேட்டது வெகு தூரத்தில் பேசியதுபோன்ற ஒரு குரல். ஆயினும் மிக அண்மையில் இருந்ததாகவே தோன்றிற்று. ஒரு மனிதன் என்னிடம் பேசினால் எப்படி யிருக்குமோ அப்படியே யிருந்தது. அதைப் பிரமை என்று சொல்ல முடியாது. குரல் என் காதில் கேட்ட சமயத்தில் நான் தூங்கவுமில்லை, கனவு கண்டு கொண்டிருக்கவும் இல்லை. அந்தக் குரல் கேட்பதற்கு முன் எனக்குள் ஒரு பெருங் குழப்பமாக இருந்தது. திடீரென்று அந்தக் குரல் காதில் பட்டது. கவனித்துக் கேட்டேன். இது உண்மை அந்தராத்மாவின் செய்தியே என்று தீர்மானித்துக் கொண்டேன். உடனே குழப்பம் நின்றுவிட்டது. உபவாசத்தின் காலமும் தேதியும் மணியும் நிச்சயித்துவிட்டேன். நிச்சயித்து விட்டதும் உள்ளத்தில் ஆனந்தம் நிறைந்தது. இது நேற்றிரவு பதினொரு மணிக்கு மேல் நள்ளிரவுக்குமுன் நிகழ்ந்தது. அதன்பேரில் நிம்மதி யடைந்து எழுதினேன். அதைத்தான் அனைவரும் அறிவார்கள்.

நான் கேட்டது ஆண்டவன் குரல். என்னுடைய பிடிவாதத்தினால் உண்டான பிரமையல்ல என்பதை நான் இதற்குமேல் என்ன சொல்லி நிரூபிக்க முடியும்? சந்தேகப் படுகிறவர்களை நான் திருப்தி செய்ய இயலாது. என்னிடம் வேறு சாட்சியம் ஒன்றும் இல்லை. அவர்கள் இது பிரமை

என்றே சொல்லிப் போகட்டும். பிரமையாகவும் இருக்கலாம். ஆனாலும் உலகம் முழுவதும் ஒன்றுசேர்ந்து பிரமை என்றாலும் ஆண்டவன் குரலே என்று நான் நம்புவதை மாற்ற இயலாது.

[ஹரிஜன் 8-7-33]

## 17

சிலர் எண்ணுகிறார்கள், சொல்லியும் வருகிறார்கள். கடவுள் என்கிற தத்துவம் மனிதனுடைய கற்பனையே என்று. மனிதனுடைய சிந்தனையில்தான் ஆண்டவன் தோன்றினான் என்று அவர்களுடைய வாதம். இந்த வாதத்தை ஒப்புக் கொண்டால் கடவுள் மட்டுமே அல்ல, உலகத்தில் எந்தப் பொருளுமே மனிதனுடைய உள்ளத்தில் தோன்றிய ஒரு தோற்றமாகும். பூத உலகில் பிண்டமாகத் தோற்றம் காட்டும் ஒவ்வொரு பொருளும் உண்மையில் நம் உள்ளத்தில் தான் நிற்கிறது. அனைத்தும் நம்முடைய மனத்தில் உண்டான கற்பனையும் பாவமுமே என்று வைத்துக்கொள்ள வேண்டியதாகும். ஒரு மரம் நம்முன் நிற்பதற்கு நம்முடைய மனத்தைத் தவிர்த்து வேறு என்ன சான்று உண்டு? பஞ்சேந்திரியங்களினால் மரம் இருப்பதைக் காண்கிறோம். அந்த இந்திரிய உணர்ச்சி நம் மனத்துக்குள் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியே அல்லவா ? எவ்விதப் பிரமாணமும் முடிவில் மனிதனுடைய உள்ளத்தில் நிகழும் நிகழ்ச்சியே அன்றி வேறில்லை. ஆனபடியால் கடவுள் இருப்பது நம்முடைய உள்ளத்துக்குள் தான் என்றால் பூதஉலகம் அனைத்துமே நம் உள்ளத்துக்குள்தான் நிற்கிறது. இப்படி வைத்துக் கொண்டாலும் சேதனர்களாகிய நாம், நம்முடைய உணர்ச்சியில் எது பிண்டமாகத் தோன்றுகிறதோ, எது உண்மையாகத் தோன்றுகிறதோ, எது வெளியுலகத்தில் ஒரு பொருளாகத் தோன்றுகிறதோ அதைஉண்மையாகவே வைத்துக் கொண்டுதான் வாழ்க்கை நடத்த வேண்டும். இது ஒரு மரத்திற்கும் பொருந்தும், ஒரு வீட்டுக்கும் பொருந்தும், மகனுக்கும் பொருந்தும், விரோதிக்கும்

பொருந்தும், கடவுளுக்கும் பொருந்தும். உண்மையென்று நாம் வைத்துக்கொண்டிருப்பதும் எதுவும் அந்த அளவிலே தான் உண்மை: நம்முடைய மனத்தைத் தவிர உண்மையை அறிய வேறு சாதனம் கிடையாது. மனத்தைத் தாண்டிச் சென்று ஒரு அத்தாட்சி பெற முடியாது.

ஆகையினலேதான் என்னுடைய அந்தராத்மாவின் உண்மை என்னுடைய தேகத்தின் உண்மையைப் போன்றதே என்று வைத்துக்கொண்டு வருகிறேன். ஏன்? என்னுடைய தேகத்தின் உண்மையைக் காட்டிலும் நிச்சயமாகவே நான் என் அந்தராத்மாவில் கேட்கும் குரல் எனக்கு உண்மையாகும். அது என்னை எப்போதும் பொய்த்ததில்லை. ஏன்? மற்றவர்களுக்கும் அது பொய்யாகவில்லை.

மேலும் சொல்கிறேன்: உண்மையில் தம் அந்தராத்மாவின் குரலைக் கேட்க விரும்புகிறவர்கள் எவருக்குமே அந்த ஒலி கேட்காமல் போகாது. ஒவ்வொருவனுடைய உள்ளத்திலுமே அது பேசுகிறது. நம்முடைய செவிட்டுத்தனத்தை நாம் குறைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு அப்பியாசம் வேண்டும்.

[ஹரிஜன் 8-7-33]

இதில் பிரமை ஒன்றும் இல்லை. என்னை நான் ஏமாற்றிக் கொள்ளவில்லை. அனைவரும் செய்துபார்த்துச் சோதித்துக் கொள்ளும்படியான உண்மை. மனம் இணங்க வேண்டும். பொறுமை வேண்டும். இதற்கு வேண்டிய அதிகாரத்தை, தகுதியை அடைவதற்கு உறுதியான எண்ணமும், சாந்தமும், பொறுமையும் வேண்டும். அதுவும் கஷ்டமல்ல. ஆனல் உண்மை வேட்கை வேண்டும். தாகத்துக்கு தண்ணீர் விரும்புவதுபோல் விரும்ப வேண்டும். வேறொருவரை நீங்கள் நம்ப வேண்டியதில்லை, உங்களை நீங்கள் நம்பினல் போதும். உங்களுடைய அந்தராத்மா பேசுவதற்கு நீங்கள் காது கொடுக்க வேண்டும். அந்தராத்மா என்கிற பேச்சை விரும்பாவிடில் உங்களுடைய பகுத்தறிவு என்றே வைத்துக்

கொள்ளுங்கள். உங்கள் அறிவு உங்களுக்கு என்ன சொல்லுகிறதோ அதைக் கேளுங்கள். கடவுளை வேண்டாதவர்கள் கடவுள் என்கிற பெயரை விட்டுவிடலாம். ஆனால் அதற்குப் பதில் வேறொரு சொல்லைத் தேடியே தீரவேண்டும். முடிவில் அந்தச் சொல்லும் கடவுளாகவே முடிந்து தீரும். பிரபஞ்சத்தில் கடவுளைத்தவிர வேறொன்றில்லை என்பதினால் அல்லவோ இப்படி முடியும்!

இன்னும் ஒப்புக் கொள்ளுகிறேன் : தம் அந்தராத்மா இப்படிச் சொல்லுகிறது என்று பலர் வேஷம் போடலாம். வேஷம் போடுகிறவன் ஒவ்வொருவனும் அந்தராத்மாவைக் கண்டு பேசியவன் அல்ல என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். சிலர் வேஷதாரிகளாக இருக்கலாம். அல்லது தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டு மோசமும் போயிருக்கலாம். எதற்குமே முயற்சியும் பயிற்சியும் வேண்டும். பலர் முயன்று சிலரே வெற்றி பெறுவார்கள். அப்படி வெற்றிபெற்ற சிலரை நாம் அடைவதற்கு, வெற்றி பெறாதவர் பலரைப் பொறுத்துத்தான் வரவேண்டும்.

பொய்யன் ஒருவன் "எனக்கு ஆண்டவன் சொன்னான்" அல்லது "என் அந்தராத்மாவின் உத்தரவு இது" என்று மக்களை மோசம் செய்தால் தப்பிப் போகமாட்டான். ராஜாவின் உத்தரவின்றி ராஜாவின் பெயரைச் சொல்லி ஏமாற்றினவன் என்ன பாடு படுவானோ, அதற்கும் மேல் அந்தராத்மாவின் பெயரைச் சொல்லி மோசம் செய்தவன் படுவான். சந்தேகமில்லை. அவன் அடையும் தண்டனை பெருந் தண்டனையாகும்.

சாதாரண மோசக்காரர்கள் அடையும் தண்டனை உடலைப் பொறுத்தது. இந்த மோசக்காரன் அடையும் தண்டனை சர்வ நாசம் ஆகும். கதியற்ற நிலையடைவான்.

என்னைப்பற்றிக் குற்றம் சொல்லுகிறவர்கள் என்னிடம் அவர்கள் வைத்திருக்கும் அன்பினால், என்னை மோசக்காரன் என்று சொல்லவில்லை. பிரமை என்று சொல்லுவார்கள். என்னைப் பொறுத்தமட்டில் இரண்டும் ஒன்றே. வெறும் பிரமையாக இருந்து அதைப் பின்பற்றி நடந்தேனானால் அது

மோசத்தைப் போலவே ஆகும். அடக்கத்துடனும் பயத்துடனும் மிக ஜாக்கிரதையாக ஒருவன் நடந்துகொள்ள வேண்டும், ஆண்டவனுடைய அருளைப் பெறுவதற்கு. அகங்காரத்திலும் பிரமையிலும் சிக்கிக்கொள்ளாமல் அவனுடைய அருளைப் பெற்று அவனுடைய குரலைக் கேட்கும் தகைமை பெறவேண்டுமானால் ஒருவன் தன்னை முழு சூன்யமாக்கிக் கொள்ள வேண்டும். இதற்குமேல் நான் என்ன சொல்வேன்!

[பம்பாய் கிரானிகிள் 18-11-33]

# 18

சத்தியம் என்பது பல கிளைகள் கொண்ட மரம். வாய்மை மட்டும் அல்ல, சத்தியம், எண்ணத்திலும் உண்மை வேண்டும். உண்மை என்பது பௌதிக உலகத்தில் நாம் வைத்துக்கொண்டிருக்கும் உண்மை மட்டும் அல்ல; பேருண்மை. மெய்ப்பொருள் என்கிற பேருண்மை- அதாவது கடவுளேயாகும். கடவுளுக்குக் குணங்களும் இலக்கணங்களும் ஆயிரக்கணக்கில் சொல்கிறார்கள். அவை அனைத்தும் என் மனத்தைக் கவர்ந்தாலும் சத்தியம் ஒன்றே நான் வழிபடும் மூர்த்தி. அந்த மூர்த்தியை நான் இன்னும் முற்றிலும் காணவில்லை. காண முயன்று வருகிறேன். அதற்காக வேறு எதையும் பொருட்படுத்தாமல் இழந்துவிடச் சம்மதப்படுவேன்.-உயிரும் உள்பட! இதற்கு வேண்டிய உறுதியை ஆண்டவன் அருள்வானாக! பூரண உண்மையைக் காணும் வரையில் நான்கண்ட உண்மையே உண்மையென்று கருதிக் கடமைகளைச் செய்துகொண்டு போகவேண்டும். சம்பூரண உண்மையைக் காணும்வரையில் ஔபாதிக உண்மைதான் எனக்கு வழிகாட்டும் தீபமாகும். அதுவே என் யுத்தங்களில் கத்தியும் கேடயமும் ஆகும். அதுவே என் நடைபாதை. இந்தப் பாதை கத்தி முனையைப் போன்றது. இந்த ஒடுக்கமான பாதையே நான் கண்ட பாதைகளில் தாமதமும் தவறுமின்றி

ஊர் போய்ச் சேரும்பாதை. பிழை பலவாயினும், இமயம் போன்று பெரிதாயினும் நேர் வழியில் போகும் வரையில் எனக்கு அது சிறிதாகவே படும். குற்றத்தின் கேடின்றித் தப்பும் வழி அதிலேதான் உண்டு. யாத்திரை தடைபடுவதில்லை. இப்படி நேர் வழியில் செல்லும் யாத்திரையில் சம்பூரண உண்மையே, மெய்ப்பொருளே ஒவ்வொருசமயம் காட்சியும் தந்திருக்கிறது. மெய்ப்பொருள் ஒன்றே உண்மை. மற்றதனைத்தும் பொய் என்பதை இந்த யாத்திரையில் கண்டுகொண்டு வருகிறேன்.

இன்னும் ஒன்று கண்டுவருகிறேன். நான் செய்வதைச் சிறு குழந்தையும் செய்யக்கூடும். உண்மைப் பயிற்சிக்கு வேண்டிய கருவிகள் மிக எளியவை. அகங்காரிகளுக்கு அந்தக் கருவிகள் மிகக் கஷ்டம். குற்றம் அறியாத குழந்தைக்கு மிகச் சுலபம். உண்மையை நாடுகிறவனுக்குக் கர்வம் கூடாது. தன்னைத் தூசிக்குச் சமானமாகப் பாவிக்க வேண்டும். தூசியைக் காலில் துவைத்து உலகம் நடக்கிறது. ஆனால் உண்மையைக் காதலிப்பவன், அந்தத் தூசியின் கீழ்த் துவைபட்டு நிற்கும் தூசியாகத் தன்னைக் கருத வேண்டும். அப்போதுதான் மெய்ப்பொருள் நமக்குக் காட்சி தரும்.

[சுய சரிதம்]

கடவுளைப் பகுத்தறிவைக்கொண்டு காணமுடியாது. வாதித்துக் காணமுடியாது. பக்தியினால்தான் காண முடியும். கண்ட பின்னும்கூட பக்தியைக் கொண்டுதான் காட்சியை நிறுத்திக்கொள்ள முடியும். சிருஷ்டி அமைப்பில் வேறு மார்க்கம் இல்லை. நமக்கு இட்ட வரம்பை நாம் எப்படித் தாண்டமுடியும்! இந்தத் தேகத்தில் நிற்கும் வரையில் முழுக்காட்சி முடியாத காரியம். முழுக்காட்சி நமக்கு என்னத்திற்கு! அதைக்கொண்டு என்ன செய்வோம். நான் அடையக்கூடும் மேன்மையை உண்மை பக்தியைக் கொண்டே அடையமுடியும். நேரில் கண்டு முழுக்காட்சி அடைந்து அதற்குமேல் நாம் அடையக்கூடியது வேறு

ஏதும் இல்லை. நமக்கு வெளியேயா கடவுள் இருப்பது? வெளியே இருப்பதற்கு அல்லவோ கண் பயன்படும். பார்ப்பவனுக்கு உள்ளேயே இருப்பதை முற்றிலும் அவன் எப்படிக் கண்ணால் காணமுடியும்? இந்திரியங்களினால் அவனைக் காண முயல்வது வீண். உயிரைக் காண்பது உணர்ச்சி ஒன்றே. அவனைக் காண்பதும் அவ்வழியே. இந்திரியங்களை இழுத்து உள்ளடக்கினால்தான் அவனைப் பற்றிய உணர்வு பெறுவோம். வெளியே நிகழும் இரைச்சல்களினால் உள்ளே ஒலிக்கும் சின்ன மேளம் நம் காதில் கேட்கவில்லை. அந்த உன்னத வாத்யம் நிற்காமல் இசைத்துக்கொண்டேதான் இருக்கிறது: நாம் காதால் கேட்கும் வாத்தியங்கள் அந்த அந்த இசைக்குச் சமானம் அல்ல. ஆனால் இரைச்சலை நிறுத்தவேண்டும். ஆண்டவன் வடிவமெடுத்து நம்முன் நிற்க மாட்டான். பேராபத்துக்களினின்று தப்புகிறோமே அந்த நிகழ்ச்சிகளின் வழியாகத்தான் தன்னைக் காட்டுகிறான்.

[ஹரிஜன் 13-6-36]

சத்தியமே தெய்வம் என்று சொல்லிவருகிறேன். நான் சத்தியத்தின் வழியாகக் கண்டது பரம்பொருளின் பூரண ஜோதியல்ல. ஓரளவேதான். அதுவே சதகோடி சூரிய ஒளியாகும். இந்த சத்தியமார்க்கம் அஹிம்சை வழியாகத் தான் கடைப்பிடிக்க முடியும் என்பதை என்னுடைய சோதனைகள் அனைத்தும் ஊர்ஜிதம் செய்துள்ளன.

[யங் இந்தியா 7-2-29]

## 19

மற்றவர்களைவிட எனக்குப் பிரத்தியேகமாகக் கடவுளுடைய சித்தம் வெளிப்பட்டதாக நான் எண்ணவில்லை. ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலுமே தெய்வம் பேசுகிறது. நாம்தான் அது கேட்காதபடி காதைப் பொத்திக் கொள்ளுகிறோம். நமக்கு முன்னால் ஒளிப் பிழம்பாக நிற்கும் அந்த ஜோதியைப் பார்க்காமல் கண்ணை மூடிக்கொள்ளு

கிறேம். அவ்வளவேதான். நான் என்னைப்பற்றிச் சொல்லக் கூடியது என்னவென்றால் ஆண்டவன் எங்கும் பரவி நிற் கிறன் என்பதை உணர்ந்தேன். அவ்வளவே.

[யங் இந்தியா 25-5-21]

வாழ்க்கைப் பயன் ஆண்டவனைக் காண்பதுதான். மனிதனுடைய சகல காரியங்களும், எல்லாத் துறைகளி லும், ஆண்டவனைக் காணுவதற்கான முயற்சிகளாகவே இருக்கவேண்டும். சுற்றியுள்ளவர்களுக்கு உபகாரம் செய்து வாழும் வாழ்க்கை தெய்வ தரிசனம் பெறும் முயற்சியாகும். ஆண்டவன் படைத்திருக்கும் மக்களிலும் பிராணிகளிலும் அல்லாது வேறு எங்கே ஆண்டவனை நாம் காண்போம்? நம்முடைய உயிரைப் பிற உயிர்களில் ஒன்றுபடுத்திக் காண வேண்டும். பிற உயிர்களோடு தன் உயிரை ஒன்றுபடுத்து வது அந்த உயிர்களுக்குச் செய்யும் பணியினலேதான் முடி யும். உலகத்தில் நான் ஒரு பிளவுபடாத பாகம். மக்கள் உயிரில்தான் நான் அவனைக் காண்கிறேன். அவன் வேறு; மக்கள் வேறு அல்ல. இந்தப் பெரிய உலகில் எனக்கு நெருங்கியிருப்பது என்னுடைய தாய்நாடு. இந்த நாட்டு மக்களின் நிலைமையைப் பார்த்தால் என்னுடைய பூரண முயற்சியும் அவர்களுக்குச் செய்யவேண்டிய பணியில் செலுத்தவேண்டியதாகிறது. ஆகையினல் என்னுடைய தெய்வபக்தி இந்தத் துறையில் செல்கிறது. இமயபர்வதத் தில் ஒரு குகையில் ஆண்டவனைக் காண என்னல் முடிவதா யிருந்தால் அங்கேயே போய்த் தவம் செய்திருப்பேன். ஆனல் மக்களைத் தவிர்த்து மலையில் அவனை என்னல் காண முடியும் என்று நான் எண்ணவில்லை.

[ஹரிஜன் 29-8-36]

மெய்ப் பொருளை நாம் காண முடியாமல் இருப்பதும், அது மறைந்து நிற்பதும் நமக்கு நன்மையே ஆகும். ஓர் அடி எடுத்து வைக்கத்தான் முடிகிறது. அதற்கு வேண்டிய வெளிச்சத்தைத்தான் தருகிறன். அது நமக்குப் போதும்

அல்லவா? ந்யூமனுடன் நாமும் பாடலாம்: "ஓர் அடி எடுத்து வைக்கிறேன், அது தவறிப் போகாமல் காத்துத்தா". பாதையில் ஒரு அடி சரியாக எடுத்து வைத்தோமானல் அடுத்த அடி எங்கே வைக்க வேண்டும் என்பது தானாக விளங்கும். அதைப் பற்றிச் சந்தேகமில்லை. பாதை இருட்டாக இருக்கிறது. என்பது மாயை. பொறுமையைக் காத்தோமானல் வெளிச்சத்துக்குக் குறைவில்லை. படிப் படியாகச் செல்வோம். நடக்கும் பாதையில் அடி அடியாக வைத்துச் செல்லச் செல்ல வெளிச்சம் தருகிருன். அடுத்த அடிக்குஅப்பால் இருக்கும்பாதை இருள் மூடினதாகக் காண்கிறது. அதற்காக நாம் பொறுமை இழந்துவிடக் கூடாது.

[ஹரிஜன் 20-4-34]

நானும் நீயும் இந்த அறையில் உட்கார்ந்திருப்பது உறுதியல்லவா? அதைவிட உறுதி எனக்கு ஆண்டவன் இருப்பது. இன்னும் சொல்லுவேன்; காற்றும் நீரும் இல்லாமல் ஒரு வேளை நான் பிழைத்திருப்பேன். ஆனல் அவன் இன்றி என் உயிர் நிற்காது. என்னுடைய கண்களைப் பிடுங்கி விடலாம். அது என்னைக் கொல்லாது. என் மூக்கை அரிந்து விடலாம். அதுவும் என்னைக் கொல்லாது. ஆண்டவன் இருக்கிருன் என்கிற என் உறுதியைக் கெடுத்து விட்டீர்களானல் நான் செத்தே போவேன். என்ன முரட்டு மூடத்தனம் என்று சொல்லுவீர்கள். ஆனல் இந்த மூட பக்தியை நான் அணைத்துக் கட்டிக்கொண்டு பிழைக்கிறேன். குழந்தைப் பருவத்தில் நான் இருட்டிலே நடக்க நேர்ந்தால், 'ராம் ராம்' என்று சொல்லிக் கொண்டே நடப்பேன், என்னை வளர்த்த ஒரு பாட்டியம்மை இதை எனக்குச் சொல்லித் தந்தாள். அதைப் போலவே தெய்வம் உண்டு என்கிற என்னுடைய இந்த மூடநம்பிக்கை.

[ஹரிஜன் 14-5-38]

ஆண்டவன் பெரும் சோதனைக்காரன். லேசில் விடமாட்டான். யாருமே அவனைப்போல் கண்டிப்புகிடையாது.

என்னுடைய பக்தியோ தேகத்தின் சுக நிலேயோ குறைந்து போனல் எப்படியோ அவன் வந்து உதவியும் செய்கிருன். நாம் எப்போதுமே அவன் திருவருளில் வைத்திருக்கும் நம்பிக்கையை இழக்கலாகாது என்று அடிக்கடி நிரூபிக்கிருன். எப்போதுமே அவன் நம்மைக் கைதூக்கிவிடக் காத்திருக்கிருன். ஆனல் நாம் சொன்ன வழியிலேதான் அவன் உதவ வேண்டும் என்று கோரினல் அது நடக்காது. இதை நான் நன்ருகக் கண்டுவிட்டேன். எந்தச் சமயத்திலும் அவன் என்னேக் கைவிட்டதில்லே. எல்லாம் போயிற்று என்று பயந்துபோன கடைசி நேரத்தில், எப்படியோ அவனுடைய உதவி கிட்டியிருக்கிறது.

[1933]

## 20

சத்திய மார்க்கம் எவ்வாறு கத்தி முனேபோன்றதோ, அவ்வாறே அஹிம்ஸா மார்க்கமும். இழுத்துக்கட்டிய கயிற்றின்மேல் ஆட்டக்காரன் சாமர்த்தியமாக நடக்கிருன் அப்பியாசத்தினல் இந்தக் கஷ்டமான காரியத்தைச் செய்யப் பயில்கிருன். சத்தியமும் அஹிம்ஸையும் கூடிய மார்க்கத்தில் வழி பிசகாமல் நடப்பதற்கு அதைவிட அதிகமான பயிற்சி வேண்டும். இடைவிடாத கவனம் வேண்டும். அஹிம்ஸை என்ருல் பிறரை அடிக்கலாகாது, குத்தலாகாது என்று மட்டும் அல்ல அது சாமானியம். 'இன்ஞ செய்யாமை' என்ருல் எந்த விதத்திலும் புண் படுத்தலாகாது என்பது. வெறுப்பும் தூஷணேயும் தேகத்திலே உண்டாக்கி புண்ணேப் போலவே ஆகும். பொய்யும், அடக்கம் அற்ற காரியமும், பகை யெண்ணமும், அசூயையும், பொருள் நசையும், எல்லாமுமே இன்ஞ செய்ததாகும். இவை அனேத்தையும் தவிர்க்க வேண்டும். இவ்வாறு எந்த உயிருக்கும் எந்த நோவும் உண்டாக்காமல் பிழைக்க இயலுமா? இயலாது.

நாம் உண்ணும் உணவுங்கூடப் பிற உயிர்களுக்கு ஆகவேண்டியதை நாம் எடுத்துக் கொண்டதாகும். நாம்

நடக்கும் பாதையில் கண்ணுக்குக் காணப்படாத அநேக கிருமிகளை நாசம் செய்கிறோம். உயிரை விட்டுவிட்டாலே தான் இந்த ஹிம்சைகளைச் செய்யாமல் தவிர்க்க முடியும். உயிரை விட்டாலுமே என்ன? உயிரை நாம் அழிக்க முடியாது. அது வேறு உடலைத் தேடிச் செல்லும். உடலை நீப்பது தற்கொலையால் முடியாது. வேறு உடல் அந்த உயிருக்குக் காத்திருக்கிறது. உடலின்மேல் உள்ள பற்றுக்களை நீக்கினால்தான் உடலை நீத்ததாகும். பற்றுக்களை அறவே நீப்பது கடவுளைக் காண்பதே ஆகும். இது அவசரத்தில் முடியுமா? முடியாது. இந்த உடல் நமது என்று எண்ணுவது பிரமை. அது நமதல்ல. அது நம்மிடம் இருக்கும் அளவு அதைச் சரியாக பரிபாலிக்க வேண்டியது, அவ்வளவே. உடலையும் உடலுக்கு வேண்டிய எல்லாவற்றையுமே இந்த முறையில். பரிபாலித்து வந்தால் உடலின் பாரம் ஒருகாலம் நீங்கும். நமக்குள்ள சக்தியைக்கொண்டு உடலுக்கு ஏற்பட்டிருக்கும் வரம்புகளை உணர்ந்து, இடையறாத முயற்சி செய்ய வேண்டும்.

அஹிம்ஸையும் சத்தியமும் பின்னிப் பிணைந்து நிற்கிறபடியால் அவற்றை வேறுபடுத்த முடியாது. தட்டிப் பார்க்கும் ஒரு ரூபாயின் முன்புறம் பின்புறம்போல். இரண்டும் சேர்ந்ததே ஒரு பொருள். எது முன்புறம் எது பின்புறம் என்று கூடச் சொல்ல முடியாது. அஹிம்ஸை முக்கியமா, சத்தியம் முக்கியமா என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது. சத்தியமே முடிவு. அஹிம்ஸையே மார்க்கம். ஒரு முடிவை அடைவதற்கு ஒரு சாதனம் கண்டால் அந்தச் சாதனம் இடைவிடாத அப்பியாசத்தில் இருக்க வேண்டும். ஆனபடியால் அஹிம்ஸையே வாழ்க்கையின் பிரதான கடமையாகி விடுகிறது. சாதனத்தைக் கவனித்தோமானால் முடிவை அடைவது நிச்சயம். என்ன இடையூறு நேர்ந்தாலும், என்ன கஷ்டங்களைக் கண்டாலும், தோல்விகளை அனுபவித்தாலும் முறையைக் கைவிடலாகாது.

[எரவாடா சிறையில் எழுதியது]

இன்னா செய்யாமை என்பது பெருஞ் சக்தியாகும். எதிர்மறை மொழியாயினும், அது ஒரு சக்தியின் கருவாகும். நமக்குள் மறைந்து நிற்கும் பரம்பொருளின் சக்தியாகும். உயிருக்குள்ள ஆத்ம சக்தியாகும். அந்த சக்தியின் முழு வடிவத்தை நாம் காணப் பெறவில்லை. கண்டால் அதன் ஜோதி-வேகத்தைத் தாங்கமாட்டோம். ஒரு சிறி தளவேனும் அது நம்முள்ளிருந்து வேலை செய்ய ஆரம்பித்தால் வியப்புக்கு உரிய காரியங்கள் நடைபெறும். ஆகாயத்தில் நிற்கும் சூரியனுடைய ஒளி உலகம் முழுதும் பரவி உயிர் கொடுப்பதுபோல், பராசக்தியில் ஒரு சிறு பாகமான நம்முடைய அஹிம்ஸை, வியப்புக்குரிய வேலை செய்யும். சூரியனண்டை நெருங்கினால் எரிந்து போவோம். அதுபோல் நாமும் அஹிம்ஸையைப் பூரணமாக அடைய முடியாது. பராசக்தியாக நாம் ஆகிவிட முடியாது. ஓரளவு நெருங்கலாம். அவ்வளவே. ஒரு துகள் ரேடியம் என்கிற தாதுப்பொருள் புற்று நோயில் உண்டாகும் விஷச் சதையைத் தீர்ப்பதுபோல், ஓரளவு அஹிம்ஸையும் சமுதாயத்திலுள்ள புற்று நோயை யாரும் காணமல் வேலை செய்து தீர்க்கும்.

[ஹரிஜன் 12-11-38]

## 21

சத்தியம், உண்மை என்று சொல்லிக்கொண்டு அடக்கம் இல்லாமல் போனல், கர்வத்திலும் அகம்பாவத்திலுமே முடியும். அடக்கத்தோடு உண்மையைக் கடைப்பிடித்தால்தான் வாழ்க்கை அழகுபெறும். இல்லாவிடில் நல்ல சித்திரத்துக்கும் குறும்புக் கோணல் சித்திரத்துக்கும் உள்ள பேதத்தைப் போலவே ஆகும்.

உண்மையைக் கடைப்பிடித்து வாழ்க்கை நடத்துவது மிகக் கடினம், இது முயன்று பார்ப்பவர்களுக்கு நன்ருகத் தெரியும். சத்திய மார்க்கத்தில் முயல்கிறவன் வெற்றி பெறும்போது மக்கள் அவனைப் பாராட்டுகிருர்கள்.

தோல்வி அடைந்து தவறியபோது உலகத்துக்கு அது தெரிவதில்லை. ஆனால் அவனுக்கு நன்றாகத் தெரியும். தோல்வியைக் கண்ட மெய்த்தொண்டன் அந்தத் தோல்வியினால் தண்டனை அடைந்து சுத்த நிலை பெறுவான். அடக்கமும் பெறுவான்.

உயிர் கொண்ட ஜீவன்கள் அனைத்துக்கும் அன்பு செலுத்த வேண்டும் என்று விரும்பும் ஒருவன், 'உனக்கு நான் பகைவன்' என்று சொல்லிக் கொள்ளுகிறவனிடத்திலும் அன்பு செலுத்த விரும்புவான். இதை ஒருவன் தன் சக்தியைக் கொண்டே செய்ய முடியுமா? முடியாது. ஆண்டவனைப் பிரார்த்தித்துச் சக்தி அடைந்தால்தான் முடியும். தன்னை ஒரு தூசியாக நினைத்துப் பிரார்த்திக்க வேண்டும். அருள் மார்க்கத்தில் அடக்கம் தானாக வளரும். தன்னைத் தூசியாகப் பாவித்துக்கொண்டு சூன்யமாக ஆகிவிட்டால்தான் ஆண்டவனை நேருக்கு நேர் காண முடியும். இல்லாவிடில் ஆண்டவனை ஒருபோதும் காண இயலாது. 'வெற்றி பெற்றேன்' என்று யாரே தன்னைத் தான் பாராட்டிச் சொல்லிக்கொள்ள முடியும்? நமக்குள் கோயில் கொண்டிருக்கும் ஆண்டவன் அல்லவோ வெற்றி பெற்றது. நாமல்ல. சத்தியாக்கிரக யுத்தத்தில் பொறுத்துக்கொள்ள வேண்டிய கஷ்டங்களைக் கண்டு சிலர் திகைக்கிறார்கள். ஆயுதங்கள் கொண்டு நடத்திய மகா யுத்தத்தில் வெற்றி பெறுவதற்குமுன் எத்தனை லட்சக் கணக்கில் மக்கள் மாண்டார்கள். அந்த யுத்தத்தைவிடப் பெரியதல்லவா ஆன்மயுத்தம். ஆன்ம சக்தியைக்கொண்டு நடத்தும் யுத்தத்தில் பல பேர் உயிர் இழப்பது என்ன வியப்பு? பலர் மாண்டால்தான் சத்தியத்துக்கு முழுச் சான்றாக ஒருவனாவது நிற்க முடியும்.

[யங் இந்தியா 25-6-25]

## 22

மனிதனுக்கு உள்ள ஆயுதங்களுக்குள் மகத்தான ஆயுதம் அஹிம்ஸை. படை வீரர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள் அனைத்தையும் விட பலம் கொண்ட ஆயுதம்.

மானிட தர்மத்திற்குக் கொலை என்பது முற்றிலும் மாறுபட்டது. மனிதன் முன்னேற வேண்டுமானால் கொல்லுவதல்ல வழி; தன் உயிரை நீப்பதற்கு ஆயத்தமாக இருப்பதே வழி. ஒவ்வொரு கொலையும், வதையும் எந்தத் தனிக்காரணம் எந்தத் தனிச் சந்தர்ப்பத்தில் நடந்தாயினும் அது உலகத்துக்கே செய்த ஒரு துன்பமாகும்.

[ஹரிஜன் 20-7-35]

சிலருக்கு ஒரு சந்தேகம். ஹிம்ஸையைக் கையாளும் எதிரிகளின்மேல் அஹிம்ஸை என்ன பயன்படும் என்று, அசத்தியம், ஹிம்ஸை, துவேசம், கொடுமை இவற்றிற்கு எதிராக நின்று சோதனையில் வெற்றிபெற்றால் அல்லவோ சத்தியம், அன்பு, அஹிம்ஸை, கருணை இவை வெற்றி பெற்றதாகும். ஒரு கொலையாளிக்கு முன் அஹிம்ஸையைக் கடைப்பிடித்த ஒருவன் நின்றால் சாவது நிச்சயம்தான். ஆனால் அதற்குத்தான் அஹிம்ஸை என்று பெயர். அந்தச் சோதனையிலும் பின்வாங்காமல் இருந்தாலேதான் அஹிம்ஸையாகும். ஆனால் என்னால் ஒன்றும் செய்ய இயலாது என்று பலவீனத்தினால் இறந்தவன் சோதனையில் வெற்றி பெற்றவன் என்று கருதப்படமாட்டான். இறக்கும்போதும் தன்னைக் கொன்றவன் பேரில் கோபம் இல்லாமல் உயிர் துறக்கவேண்டும். ஏன்? ஆண்டவன் அவனை மன்னிப்பானாக என்று பிரார்த்தனையும் செய்ய வேண்டும். அதுதான் உண்மையான அஹிம்ஸை. இப்படியே செய்தான் என்று ஏசுநாதனைப்பற்றிச் சரித்திரத்தில் சொல்லப்படுகிறது அல்லவா ?

"எந்தையே! இவர்களை மன்னித்தருள், அறியாமையினால் செய்கிறார்கள்!" என்று சொல்லி உயிர்நீத்ததாக

எழுதப்பட்டிருக்கிறது அல்லவா ? மற்ற மார்க்கங்களிலும் இதைப்போன்ற சம்பவங்கள் பல உண்டு. ஆனால் ஏசு நாதரின் சரித்திரம் உலகப்பிரசித்தம். அதற்காகத்தான் அதை எடுத்துச் சொன்னேன்.

நம்முடைய அஹிம்ஸை உச்சநிலையை அடையவில்லை என்பதை ஒப்புக்கொள்ளலாம். அது நம்முடைய குற்றம் அல்லது அனுபவக்குறைவு. அதற்காக நாம் அஹிம்ஸா தத்துவத்தின் கொடியைத் தாழ்த்தவேண்டியதில்லை. தத்துவத்தின் பூரண அளவை அறிந்தால்தான் அந்த மார்க்கத்தில் நாம் எந்த முயற்சியையும் சரிவரச் செய்ய முடியும். அஹிம்ஸையின் பூரண சக்தியை ஆராய்ந்து உணரவேண்டியது அவசியம்.

[ஹரிஜன் 28-4-46]

## 23

அஹிம்சை என்பது பேரடங்கலான ஒரு தத்துவம். பிரபஞ்ச ஹிம்ஸை என்கிற பெரிய தீயில் அகப்பட்டுக் கிடக்கிறது. அதில் சிக்கியிருக்கும் நாம் என்ன செய்ய முடியும் ? உயிருக்கு உயிர் உணவாக உலகம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஜீவஹிம்ஸை, தெரிந்தோ தெரியாமலோ, சற்றேனும் செய்யாமல் ஒரு நிமிஷம்கூட வாழமுடியாது. சாப்பிடும்போதும் நீரருந்தும் போதும் இடம் பெயர்ந்து அசையும் பொழுதும் உயிர்கொண்ட மனிதன், பிறவுயிரை ஒவ்வொரு நிமிஷமும் துன்புறுத்தியோ கொன்றோதான் வருகிறான். கண்ணுக்குக் காணாத உயிர்களாயிருப்பினும் உயிர்கள்தானே ! ஆனபடியால் அஹிம்ஸைப் பக்தன் அஹிம்ஸைக் கொள்கையை இவ்வளவுதான் செய்ய முடியும். உள்ளத்திலும் ஒவ்வொரு செயலிலும் கருணையிருக்கவேண்டும். ஆனமட்டில் எந்தச் சிறு உயிரையும் ஹிம்ஸை செய்யாமல் இருக்கப் பார்க்கவேண்டும். கொல்லாமல் உயிர்களைக் காப்பாற்றப் பார்க்கவேண்டும். நம்மை வளைத்துப் பற்றிக்கொண்டிருக்கும் ஹிம்ஸையி

லிருந்து ஒவ்வொரு கணமும் இடைவிடாமல் தப்பித்துக் கொள்ள முயலவேண்டும். அவ்வளவேதான். இப்படிச் செய்தோமானல் புலனடக்கமும் இரக்கமும் வளர்ந்து கொண்டே போகும். ஆனல் ஒருநாளும் ஹிம்ஸை என்கிற குற்றத்திலிருந்து முற்றிலும் தப்பமுடியாது.

[சுய சரிதம்]

தவிர, நாமென்ன செய்தபோதிலும் பிறருடைய ஹிம்ஸையிலும் நமக்குப் பங்குண்டு. அதிலிருந்து தப்புவதும் கஷ்டம். உயிர்கள் எல்லாம் ஒன்றே அல்லவா? ஒருவனுடைய பிழை அனைவரையும் சார்கிறது. சமூகத்தில் நடைபெறும் குற்றங்கள் எல்லாம் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவனையும் பொறுத்தது. இல்லாவிடில் ஒருவன் சமூகத்தில் அடங்கியவன் ஆகமாட்டான். இரண்டு மனித ஜாதிகளுக்குள் சண்டை ஆரம்பித்தால் அஹிம்ஸாவாதியினுடைய கடமை யுத்தத்தை நிறுத்தவேண்டியது. ஆனல் அப்படிச் செய்யச் சக்தியில்லாதவன், யுத்தத்தை எதிர்த்து நிற்கும் வலிமையற்றவன், தன்னுடைய அரசாட்சி யுத்தத்தில் புகுவதை எதிர்ப்பதற்கு வேண்டிய தகுதியைப் பெறாதவன், யுத்தத்தில் கலந்துகொண்டேதான் போகவேண்டும். ஆயினும் அதிலிருந்து தானும் தன் ஜாதியும் உலகமும் தப்புவதற்கு வேண்டிய காரியங்களை இடைவிடாமல் செய்து கொண்டே போகவேண்டும்.

[சுய சரிதம்]

## 24

ஆண்டவனைத் தியானித்துக் கொஞ்ச நேரமாவது பிரார்த்தனையில் செலுத்துவது மிக அவசியம். நம்முடைய வாழ்நாளை நல்ல வழியில் பயன்படுத்த வேண்டுமானல் உள்ளத்தில் குழப்பமில்லாமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால்தான் நம்மைச் சுற்றியுள்ள மக்களுக்கு நாம் பயன்படுவோம். பிறருக்குப் பயன்படுவதற்

காகவே அல்லவா நாம் பிறந்திருப்பது. மனிதன் உள்ளத்தில் எப்போதும் ஒரு போராட்டம் நடந்துகொண்டேயிருக்கிறது. அறிவும் அறியாமையும் இவற்றுக்கிடையில் எப்போதும் மனத்தில் போர் நடந்துகொண்டே யிருக்கிறது. அந்தப் போரில் அறியாமையானது தோற்று அறிவு வெற்றி பெற வேண்டுமானால் தியானமும் பிரார்த்தனையும் அவசியம். ஆண்டவனை தியானித்துப் பிரார்த்தனை செய்வோருடைய உள்ளம் குழப்பம் இல்லாமல், வெறுப்பும் துவேஷமும் இல்லாமல், சாந்தி நிலையில் இருக்கும். உள்ளத்தில் ஆண்டவன் நினைவு இல்லாமல் உலக வியாபாரத்தில் கலந்து கொண்டு வேலை செய்கிறவனுக்கு சாந்தம் இராது. துயரப்படுவான். மற்றவர்களுக்கும் துயரம் தருவான். உடலை நீத்தபின் நம்முடைய கதி என்ன என்பது ஒருபுறம் இருக்க, உலக வாழ்க்கைக்கே பிரார்த்தனை வழக்கம் மிகப் பயன்படும். தினசரி வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களும் துயரங்களும் அடங்கி, உள்ளத்தில் அமைதி உண்டாவதற்குப் பிரார்த்தனையைவிட வேறு வழியில்லை. இந்த உண்மையை உணர்ந்து கவனித்துப் பார்த்தோமானால் மற்றச் சிக்கல்கள் தாமாக விடுபடும். வாழ்க்கைச் சிக்கல்கள், அநேகம் இருந்தாலும், முக்கியமான இந்த ஒரு முறையைக் கடைப்பிடித்தால் போதும். ஒன்றன்பின் ஒன்றாகச் சிக்கல்கள் தீரும்.

ஆனபடியால் தினசரி எந்தக் காரியம் செய்வதற்கு முன்னும் பிரார்த்தனை செலுத்தவேண்டும். பிரார்த்தனையில் முழு உள்ளத்தையும் செலுத்தவேண்டும். உள்ளம் உருகி ஆண்டவனைத் தியானிக்கவேண்டும். அப்படிச் செய்தாலேதான் காலையில் செய்த பிரார்த்தனை இரவு வரையில் உள்ளத்தில் நிற்கும். பகலில் செய்யும் வேலை முடிந்து தூங்கப்போகும் சமயம் மறுபடி ஆண்டவனைத் தியானித்து அமைதி அடையவேண்டும். அப்படிச் செய்தால் இரவில் கெட்ட கனவுகள் இல்லாமல் தூங்குவோம்.

எந்தச் சொற்களை வைத்து எந்த முறையில் பிரார்த்தனை செய்வது என்பதைப்பற்றிக் கலவரப்பட வேண்டாம். எந்த வடிவத்திலாவது அமைத்து ஆண்டவனோடு கலந்து சம்பாஷிக்கலாம்: அதற்கு வேண்டிய சொற்களையும் முறையையும் அவனவன் தேடிக்கொள்ள வேண்டும். ஒன்றே ஒன்று கவனிக்கவேண்டும். பிரார்த்தனை மொழிகள் வாயினின்று வெளிப்படும்போது, உள்ளம் வேறு இடத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும்படி விடலாகாது.

மக்களுக்குப் பயன்படும் வழியில் வாழவேண்டும் என்று நினைப்பவர்கள் ஒழுங்கும் கட்டுப்பாடும் வைத்துக் கொள்ளாவிட்டால் சிதறித்தான் போவார்கள். உலகம் சந்திர சூரிய நக்ஷத்திரங்கள் உள்பட, ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறது. ஒழுங்கில்லையேல், பிரபஞ்சம் ஒரு விநாடி நிற்காது. கலைந்துபோகும்.

தனிமனிதன் தன்னைத்தானே பிரார்த்தனையின் மூலம் கட்டுப்படுத்திக்கொண்டு வாழ்க்கை நடத்தினால் பிறருக்குப் பயன்படுவான். நமக்கும் மிருகங்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுவே. தியானமும் பிரார்த்தனையும் வேண்டாம் என்று சொன்னால், நாலுகால் பிராணியே ஆய்விடுவோம். மனித சொருபத்தை நிறுத்திக்கொள்ள வேண்டுமானால் அடக்கமும் தியானமும் பிரார்த்தனையும் யாருடைய நிர்ப்பந்தமும் இன்றி நாமே மேற்கொள்ள வேண்டும்.

[யங் இந்தியா 23-1-30]

## 25

"பிரார்த்தனை என்னத்திற்கு? ஆண்டவன் ஒருவன் இருந்தால் நம்முடைய விஷயம் அவனுக்குத் தெரியாதா ? அவனுக்கு நாம் சொல்லித்தான் தெரிய வேண்டுமா? அவன் செய்ய வேண்டியதை நாம் அவனுக்குச் சொல்லிகாட்ட வேண்டுமா ?"

"இல்லை, ஆண்டவனுக்கு நாம் நினைவூட்ட வேண்டியதில்லை. அவன் வெகு தூரத்தில் இல்லை. நமக்குள்ளேயே இருக்கிறான். அவன் அனுமதியின்றி எதுவும் நடப்பதில்லை. நம்முடைய பிரார்த்தனை நம்முடைய உள்ளத்தைச் சோதிப்பதற்காகவேதான் அவசியமாகிறது. ஆண்டவனுடைய அருள் இன்றி நாம் ஒன்றுமே செய்து முடிக்க இயலாது என்பதைப் பிரார்த்தனையினால் நமக்கு நாம் நினைவூட்டிக் கொள்கிறோம்."

எந்த முயற்சியும், பிரார்த்தனையின்றிச் செய்தால் அது முயற்சியாகாது. ஆண்டவனுடைய அருள் கிட்டாமல், மனிதனுடைய எந்தப் பெருமுயற்சியும் ஒருபயனும் பெறாது என்பதை நாம் உணரவேண்டும். இந்த அடக்கத்தைப் பெறுவதற்குப் பிரார்த்தனை செய்கிறோம். உள்ளத்தில் உள்ள அழுக்கைத் துடைப்பதற்காகவே இதைச் செய்ய வேண்டும்.

[ஹரிஜன் 8-6-35]

ராமன், ரஹிமான், அஹுரமஸ்தா, பகவான், கிருஷ்ணன், ஆங்கிலத்தில் GOD இவை அனைத்தும் சக்திகளுக்குள் பராசக்தியான சக்திக்கு, மனிதன் ஒரு பெயர்வைத்து அழைக்கும் முயற்சியாகும். அவ்வளவே.

குறையும் குற்றமும் நிறைந்த மனிதன் தன் குறையை நீக்கிக்கொள்ள சதா முயல்கிறான். குழந்தை நடக்கப் பார்ப்பது போல் நடந்தும் விழுந்தும் எழுந்தும் நம்முடைய அறிவைக் கொண்டு பராசக்தியை உணர்ந்து கொள்ளப் பார்க்கிறோம். அறிவுக்கு எட்டாத ஒரு பொருளை அறிவைக் கொண்டு எட்டப் பார்க்கிறோம். குழந்தை நடக்கக் கற்றுக் கொள்வதற்கும் இதற்கும் பேதம் இல்லை. இப்படிச் சொல்வதில் மிகை ஒன்றும் இல்லை, மனிதன் வழங்கும் சொற்களில் ஈசன் அடங்குவானா? அடங்காமற் போனாலும் அடங்கியதாக வைத்துக்கொண்டு பேசுகிறோம். சொல்லினைக் கடந்த

அவனுக்கு நாம் சொல்லி விளக்கவேண்டிய அவசியமில்லை. நமக்குத்தான் வேண்டும், ஒருவாறு அவனைக் குறிக்கும் சொற்கள். இதை ஒப்புக்கொண்டால் பிரார்த்தனைச் சொற்கள் என்னத்திற்கு என்று கேட்கமாட்டீர்கள். நம்முடைய குறைபட்ட அறிவைக்கொண்டு முற்றுப் பொருளை உணரப் பார்க்கிறோம். ஈசனாகிய பெரும் பொருள் கடலைப் போன்றது. நம்முடைய அறிவு ஒரு நீர்த்துளி. சமுத்திரத்தை உணர வேண்டுமானால் அதில் விழுந்து மூழ்கித் தீர்ந்துபோனால் தான் காண்போம். இது நம்மால் செய்ய முடியுமா? ஆன படியினால் எந்த முறையில் பிரார்த்தனை செய்தபோதிலும் நம்மை ஓரளவு சுத்தப்படுத்திக் கொண்டு பார்க்கிறோமே தவிர, உண்மையில் நாம் ஆண்டவன் தரிசனத்தை அடைவதில்லை என்று ஒரு காலத்தில் மதாம்ப்ளவாட்ஸ்க்கி சொன்னது உண்மை. நமக்குள் ஈசன் இருக்கிறான் என்பதை முற்றிலும் உணர்ந்து நிச்சயஞானம் பெற்றால் தான் நம்முடைய பிரார்த்தனை பலன்பெறும். தனக்குள் ஈசன் இருப்பதை ஒப்புக்கொள்ளாதவன் பிரார்த்தனை செய்யவேண்டியதே இல்லை. அதனால் ஆண்டவன் கோபித்துக் கொள்ள மாட்டான். நமக்குத்தான் நஷ்டம். இதை என் அனுபவத்தில் கண்டு நான் சொல்கிறேன்.

நான் மேலே சொன்னதை எல்லாம் ஒப்புக்கொண்டால் ஆண்டவனை எந்த வடிவத்தில் தியானித்தாலும் சரியே ஆகும் என்பது விளங்கும். ஒருவன் ஆண்டவனைப் புருஷ வடிவத்தில் தியானிக்கலாம். மற்றொருவன் தாய் வடிவம் தந்து வணங்கலாம். வேறு சிலர் அவனை வடிவ மற்ற ஒரு சக்தியாகவே வைத்துக் கொண்டு வழிபடலாம். அவரவர்களுக்கு அவரவர்களின் பாவனை சரியானதேயாகும். தத்தம் பாவனா சக்தியைக் கடந்து அதற்கு அப்பாற்பட்ட வழி ஒன்றைத் தேடுவதில் பயனில்லை. அப்பாற்பட்டது அப்பாற்பட்டே நிற்கும், அனைத்துக்கும் மேலான சக்தி என்று ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டால் போதும். அனைத்திலும் பரந்து அனைத்தையும் தன்னுள் அடக்கி, மனிதனுடைய அறிவைக்கடந்து, உயிருக்கு உயிராகியும்

சக்திக்குச் சக்தியாகவும் இருக்கும் பரம்பொருளை ஈசன் என்று பெயர் வைத்து வழிபடுகிறோம்.

[ஹரிஜன் 18-8-46]

## 26

வழிபாட்டின் சாரமும் உயிரும் பிரார்த்தனை. வழிபாடு இல்லாமல் மனிதன் பிழைத்திருக்க முடியாது. ஆகவே பிரார்த்தனை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது. சிலர் தங்களுடைய பகுத்தறிவை மெச்சித் தமக்கு சமய வழிபாடு வேண்டியதில்லை என்றே சொல்லுவார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், எனக்கு மூச்சு இருக்கிறது, ஆனால் மூக்கு இல்லை என்று சொல்லுவதுபோல் ஆகும். பகுத்தறிவைக் கொண்டோ, இயற்கை உணர்வைக் கொண்டோ, அல்லது மூடபக்தியினாலோ ஏதோ ஒருவிதத்தில் பராசக்தியின் தொடர்பை மனிதன் ஒப்புக்கொண்டே தீருகிறான். தீவிர நாஸ்திகனும், கடவுட் தத்துவம் அறிவுக்கு எட்டாதது என்று வாதிப்பவனும் யாருமே நன்னெறி வேண்டும் என்றே சொல்லுகிறார்கள். நன்னெறியில் நடப்பது நல்லது என்றும், தவறுவது தீது என்றும் சொல்லித்தான் வருகிறார்கள். ப்ராட்லா என்பவர்-அவருடைய நாஸ்திகம் உலகம் அறிந்தது-தான் உண்மை என்று கொண்டதை மறைத்துவைக்க இயலாது, பகிரங்கமாகப் பறைசாற்றி வரவேண்டும் என்று வற்புறுத்தி வந்தார். இதற்காகப் பல தொந்தரவுகளும் பொறுத்தார். அதிலேயே அவருக்கு மகிழ்ச்சி. சத்தியமே முறையும் பயனும் என்பார். சத்திய மார்க்கத்தில் சந்தோஷத்தைக் கண்டார். கஷ்டங்களுக்கு இடையில் இந்தச்சந்தோஷம் அவருக்கு எங்கிருந்து உண்டாயிற்று? பராசக்தியின் தொடர்பினால் தான் என்பேன். இதனாலேதான் நான் சமயமே வேண்டாம் என்பவனும் கூட ஏதோ ஒருவித வழிபாட்டை ஒப்புக்கொண்டு தான் வாழ்கிறான் என்பேன்.

இப்போது பிரார்த்தனையைப் பற்றிப் பேசுவோம். பிரார்த்தனை என்றால் வேண்டுதல் அல்லது தியானம். ஒன்றுவேண்டும் என்று இறைஞ்சுதலும் பிரார்த்தனையே. உள்ளத் தியானத்தில் நிறுத்துதலும் பிரார்த்தனையே. முடிவில் இரண்டும் ஒன்றேயாகும். இறைஞ்சுதலாயினும் உள்ளத்தை மாசு நீக்கிச் சுத்தப்படுத்துதலையே வேண்டுதல் செய்யவேண்டும். மேலே மூடிக் கிடக்கும் அறியாமையும் இருளும் அகலவேண்டும் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும். தனக்குள்ளே இருக்கிற தெய்வப் பண்பை எழுப்பி அனுபவிக்க வேண்டும் என்று ஆசைப்படுபவன் இறைஞ்சித்தான் தீரவேண்டும். ஆனால் பிரார்த்தனை என்பது வெறும் மந்திர உச்சாரணமோ ஜபமோ செய்வது அல்லது செய்வதைக் கேட்பது அல்ல. ராம நாமத்தை ஆயிரந்தடவை செய்தாலும் உள்ளம் கரையாமல் செய்தால் பயனில்லை. பிரார்த்தனைச் சமயத்தில் ஒருவன் வாய் திறவாமல் உள்ளத்தினால் அதில் கலந்து கொள்ளலாம். ஒருவன் வாய்க்குள் உச்சரித்துக் கொண்டே உள்ளம் சேராமல் இருக்கலாம். பேச்சின்றிப் பிரார்த்தனையில் கலந்து கொண்டவன் மேலானவன். வாயில்சொல்லும் மந்திரமோ வாக்கியமோ உள்ளத்தினின்று எழுந்த ஆர்வத்தோடு ஒட்டி யிருக்கவேண்டும். பசி யடைந்தவன் இலைமுன் உட்கார்ந்து எப்படி உணவை அனுபவிக்கிறானோ, அவ்விதம் பசி கொண்ட உள்ளம் பிரார்த்தனையினால் மகிழ்ச்சி காண்கிறது.

என்னுடைய அனுபவத்தைச் சொல்கிறேன். என்னுடைய சகாக்களின் அனுபவத்தையும் சொல்கிறேன் பிரார்த்தனையின் அற்புத ஆனந்தத்தைக் கண்டவர் பல நாள் உணவு இல்லாமல் இருக்கமுடியும். ஒரு கணமும் பிரார்த்தனை இல்லாமல் மட்டும் இருக்கமுடியாது. பிரார்த்தனை இன்றி உள்ளத்தில் குழப்பம் அடங்கி அமைதி நிலவாது.

அப்படியாயின் எந்த ஒரு நிமிஷமும் இடைவிடாமல் பிராாத்தனை செலுத்திக் கொண்டே இருக்க வேண்டுமோ

ர—5

என்று சிலர் கேட்பார்கள். உண்மை தான். ஆனால் ஒரு க்ஷணநேரம் முற்றிலும் ஒடுங்கி தியானம்செய்வதே நமக்குக் கஷ்டமாக இருக்கிறதே. நாம் எப்படி எந்நேரமும் தியானத்தில் மூழ்க முடியும் ? இதனாலேதான் ஒரு நேரம் குறிப்பிட்டு ஓரளவு காலம் பாசமும் பற்றும் நீக்கிக்கொண்டு தியானிக்க யத்தனம் செய்கிறோம். இந்தத் தேகத்தைவிட்டுக் கொஞ்ச நேரமாவது உயிரைத் தனியே நிறுத்தப் பார்க்கிறோம். சூரதாசரின் பாடல் கேட்டிருப்பீர்களே. ஈசனோடு கலந்து போகவேண்டும் என்று புலம்புகிறார். நாம் அவரை ஒரு புனித பக்தராகப் பாவிக்கிறோம். அவருடைய கணக்கில் தன்னைத்தான் ஒரு பெரும் பாவியாகக் கருதுகிறார். நம்மைவிட வெகு தூரம் மேல் சென்று விட்ட அவர் ஈசனை நோக்கி ‘நீ எவ்வளவோ தூரத்தில் இருக்கிறாயே ?’ என்று புலம்புகிறார். அந்தத் தொலைவின் அளவு மிகப் பெருந்துன்பம் தருகிறது. அதனால் தன்னைத்தான் இகழ்ந்தும் வெறுத்தும் புலம்புகிறார். “என்னைப் போன்ற ஒரு கொடியவன், மோசக்காரன், காமுகன் யார் உண்டு ?” என்கிறார்.

மோஸம கௌந குடில கல காமீ

## 27

பௌத்த தர்மத்தைப் பின்பற்றிய டாக்டர் பாவ்ரி அவர்கள் அபட்டாபாத் என்ற ஊரில் காந்திஜியைச் சந்தித்தார். “பிரார்த்தனையினால் கடவுளுடைய சிந்தனையை மாற்றமுடியுமா? அல்லது அறியமுடியுமா ?” என்று கேட்டார்.

காந்திஜி சொன்னதாவது: “நான் பிரார்த்தனை செய்யும்போது இன்னதைச் செய்கிறேன் என்று என்னால் முற்றிலும் விளக்க முடியாது. ஆயினும் உங்களுடைய கேள்விக்குப் பதில் சொல்லப் பார்க்கிறேன். தெய்வ சங்கல்பத்தை மாற்ற முடியாது. ஆனால் கடவுள் உயிர் கொண்ட ஒவ்வொரு

பிராணியின் உள்ளத்திலும் ஜடப் பொருளிலுமே இருக்கிறன். என் இதயத்துக்குள் துயிலும் தெய்வத்தைப் பிரார்த்தனையினல் எழுப்ப முயலுகிறேன். அந்தத் திருப்பள்ளி எழுச்சிக்குத்தான் பிரார்த்தனை என்று பெயர். மேதையினல் அடையும் அறிவுக்கும் உண்மை உணர்வுக்கும் பேதம் உண்டல்லவா? என்னுள் கடவுள் இருப்பதை மேதையினல் மட்டும் அறிந்தால் போதாது. அந்த அறிவு பக்தி நிலையை அடைவதற்காகப் பிரார்த்தனை வேண்டும். நான் இந்தியாவுக்கு விடுதலை விரும்புகிறேன். அந்த விருப்பம் பூர்த்தியாவதற்கும் அந்த முயற்சியில் ஈடுபட எனக்குச் சக்தி உண்டாவதற்கும் நான் பிரார்த்தனை செய்கிறேன். பிரார்த்தனையினல் என் உள்ளத்தில் நிறைவேற வேண்டிய பள்ளி எழுச்சி நிறைவேறும் என்று நான் நம்புகிறேன். நான் அடைய வேண்டிய சக்தியை என்னுடைய பிரார்த்தனையினல் அடைவேன் என்பது என்னுடைய நிச்சயம்."

இதைக் கேட்டுப் பாவ்ரி சொன்னர்: "அப்படியானல் நீங்கள் செய்வது பிரார்த்தனை அல்ல. விண்ணப்பத்துக்குத் தானே பிரார்த்தனை என்று பெயர்? விண்ணப்பம் இல்லாவிடில் பிரார்த்தனை ஏது?"

"ஆம்" காந்திஜி. "விண்ணப்பந்தான் செய்கிறேன். நான் செய்யும் விண்ணப்பம் என்னுடைய உள்ளத்துக்குச் சொல்கிறேன். தாழ்ச்சி பெற வேண்டாம். உயர்ந்து நில் என்று விண்ணப்பிக்கிறேன். உன்னை நீ முழுதும் அறிந்து கொள்ளவில்லை என்று என் உள்ளத்துக்குச் சொல்கிறேன். அனைத்தும் அடங்கி நிற்கும் பரம்பொருளில் கலந்து ஒன்றிப் போக இடைவிடாமல் முயல்வதே பிரார்த்தனை!"

"அம்முறையில் பிரார்த்தனை செய்ய முடியாதவர்கள் என்ன செய்வது?" என்று கேட்டார் பாவ்ரியார்.

"அடக்கம் கொள்வாய் என்பேன். பிரார்த்தனை செய்யவேண்டியதில்லை என்று எண்ணுகிறவர்களை அடக்கம் இல்லாதவர்கள் என்று சொல்லுவேன். புத்த பகவானே பிரார்த்தனை செய்தார் என்று நான் சொல்லுவேன். அடக்கத்துடன் அவரும் பிரார்த்தனை செய்தபடியினல் கோடிக்

கணக்கான மக்களை அவர் ஆட்கொள்ள முடிந்தது. மேதைக்கும் அதனால் அடையும் அறிவுக்கும் மேம்பட்டது ஒன்றுண்டு. அதுதான் மக்களை ஆட்கொள்ளுகிறது. ஆஸ்திகர் அல்லாத சந்தேகவாதிகளையும் அதுதான் ஆட்கொள்கிறது. வாழ்க்கையில் சங்கடம் ஏற்பட்டபொழுது தத்துவார்த்தமும் சந்தேகமும் பயன்படுவதில்லை. சங்கடத்தில் அலையும் உள்ளத்துக்கு ஒரு பற்றுக்கோடு வேண்டும். என்னிடம் யாரேனும் வாதம் செய்தால் நான் அவர்களுக்கு இதைத்தான் சொல்லுவேன்: உன்னுடைய சிறுமையை நீ உணர வேண்டும். அப்படி உணர்ந்து அடக்கம் பெற்றால் கடவுள் எதற்கு, பிரார்த்தனை எதற்காக என்பதை அறிவாய். உன்னுடைய மேதை மிகப்பெரிதாயினும், இந்தப் பிரபஞ்சத்தில் அது எம்மட்டாகும்? உன்னுடைய அறிவு உன்னுடைய உள்ளத்துக்குக்கூடத் திருப்தி தராது. செல்வத்தினாலும் அன்பினாலும் பெறக்கூடிய சம்பத்து அனைத்தும் வாழ்க்கையில் சில சந்தர்ப்பங்களில் சற்றும் உதவாமல் போகிறது. அப்போதுதான் ஆண்டவனுடைய ஒளியில் ஒரு சிறிது துளையின் வழியாக நம்மை அடைகிறது. நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு கணத்துக்கும் நாயகனான அவனுடைய தரிசனம் ஓரளவு பெறுகிறோம். அந்த தரிசனமே நான் பிரார்த்தனை என்பது. பாவ்ரி: அதைத்தான் நாங்கள் உள்ளத்து அனுபவம் என்கிறோம். அறிவைவிட அது சிறந்தது. என் வாழ்க்கையில் இரண்டு தடவை நான் அதை அடைந்ததுண்டு. ஆனால் அந்த அனுபவம் மறைந்து போயிற்று. இழந்துவிட்டேன். புத்தர் சொல்லியிருக்கும் இரண்டு வாக்கியங்கள் எனக்கு ஆறுதல் தருகின்றன. 'துக்கத்துக்குக் காரணம் ஆசையும் ஆணவமுமே' என்றார். மற்றொன்று 'ஏதும் நிலையில்லை. நினைவில் வையுங்கள்' என்றார். இந்த இரண்டு கருத்துக்களையும் தியானித்தால் அது ஆஸ்திகமே யாகும் அல்லவா?" காந்திஜீ: அதுவே பிரார்த்தனை என்று முடித்தார்.

[ஹரிஜன் 19-8-39]

## 28

நவஜீவன் பத்திரிகையின் வாசகர் ஒருவர் கேட்டார்: "கடவுளை வணங்கு என்று அடிக்கடி சொல்லுகிறீர்கள். பிரார்த்தனை செலுத்து என்று அடிக்கடி சொல்லி வருகிறீர்கள். ஆனால் எந்த முறையில் எந்தப் பெயரில் கடவுளை வைத்துப் பிரார்த்தனை செய்வது என்பதை நீங்கள் சொல்லுவதில்லை. தயவுசெய்து கொஞ்சம் விளக்குங்கள்."

இந்தக் கேள்விக்குப் பதிலாக எழுதுகிறேன்.

கடவுளை வழிபடுவது என்றால் ஆண்டவனை ஸ்தோத்திரம் செய்வதே. இதனால்தான் வழிபாட்டுக்குத் 'துதி' என்று பெயர். 'துதி' என்கிறசொல் ஸ்துதி என்கிற வடமொழியின் திரிபு. அதன் பொருள் ஸ்தோத்திரம் செய்வது அல்லது புகழ்வது. ஆண்டவனைப்போல் வேறு யார் புகமுக்கு உரியவர்? ஆண்டவனைத் துதிக்கும்போது நம்முடைய துன்பத்தையும் குறைகளையும் குற்றங்களையும் சொல்லி முறையிடுகிறோம்.

ஆண்டவனுக்கு ஆயிரம் நாமங்கள் உண்டு. அதாவது அவன் நாமமே இல்லாதவன். நமக்கு இஷ்டப்பட்ட பெயரை வைத்துப் பகவானை வணங்கலாம், அல்லது பிரார்த்திக்கலாம். சிலர் அவனை ராமன் என்று அழைக்கிறார்கள். சிலர் அவனைக் கிருஷ்ணன் என்கிறார்கள். வேறு சிலர் ரஹீம் என்கிறார்கள். ஸ்வாமி என்கிறார்கள். ஈஸ்வரன் என்கிறார்கள். GOD என்கிறார்கள். எந்தப் பெயர் வைத்தாலும் ஒரு சக்தியைத்தான் வணங்குகிறார்கள். உணவு வேறுபாட்டைப்போல் பெயர் வேறுபாடுகளும். எல்லா உணவும் எல்லாருக்கும் ஒத்துக்கொள்ளாது. அப்படியே நாம பேதங்களும். அவரவருடைய மனோபாவத்துக்கும் பயிற்சிக்கும் பொருந்தியவாறு பெயர் வைத்துவழிபடுவார்கள். அனைவருடைய உள்ளத்திலும் அவன் அந்தராத்மாவாக இருக்கிறபடியாலும், அனைத்தையும் அறிந்தவனானபடியாலும், எல்லையற்ற உணர்வு உடையவனானபடியாலும் அவரவர்கள் மனத்தில் உள்ள அந்தரங்க பாவங்களை அறிந்து அவரவர்களுடைய தகுதிக்கு இசைய எல்லாம் தருவான்.

வாயினால் அல்ல, பிரார்த்தனை செய்வதும், வழிபடுவதும், உள்ளத்தைக் கொண்டு பூஜை செலுத்த வேண்டும். வாயில்லா ஊமையும் ஆண்டவனுக்குப் பிரார்த்தனை செலுத்துவான். கொன்னல் பேச்சுக்காரனும் படிப்பு இல்லாதவனும் சுத்த மடையனும் எல்லாருமே ஆண்டவனை வழிபடலாம். தேன் கசியும் மொழியை ஆள்பவருங்கூட உள்ளத்தில் விஷத்தை மறைத்து வைத்திருப்பார் அல்லவோ? அத்தகையோருடைய பிரார்த்தனை ஆண்டவனைப்போய் சேராது.

கடவுளைப் பூஜை செய்யப் புகுவதற்கு முன், உள்ளத்தைத் துப்புரவாக்கிக்கொள்ள வேண்டும். ராமனுடைய நாமத்தை உச்சரித்து உச்சரித்தா ஹநுமான் பூசை செய்தான்? தன் உள்ளத்தில் அல்லவோ ராமனை வைத்து விட்டான்? அப்படி வைத்துவிட்டதனால் அல்லவோ எல்லையற்ற சக்தியை ஹநுமான் அடைந்தான். அந்தச் சக்தியைக் கொண்டல்லவோ கடலைத் தாண்டினான், மலையைத் தூக்கினான். நாமும் அத்தகைய பக்தியைக் கொண்டு அலைகடல் சம்சாரத்தில் படகை ஓட்டலாம். பக்தியிருந்தால் மலையும் நகரும், கடலையும் நாம் தாண்ட முடியும்.

பக்தி என்றால் என்ன? அந்தரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் ஆண்டவனைக் கண் திறந்து உணர்வது தான். இதைச் செய்து வெற்றி பெற்றவனுக்கு வேறு என்ன வேண்டும். ஒன்றும் வேண்டியதில்லை. உடல் முழுதும் நோய் பட்டு அழுகிப்போயிருந்தாலும் அவன் ஆன்மா பூரண ஆரோக்கிய நிலையிலேயே சுத்தமாக இருக்கும். ஆத்ம சம்பத்தை அனுபவிப்பான்.

இந்த அளவுக்கு உள்ளத் துப்புரவு எப்படி அடைவது என்பது கேள்வி. பேசும் மொழியைச் சொல்லித்தரலாம். உள்ளத்தின் பாஷையை யார் சொல்லித்தர முடியும்? பக்தர்களுக்குத்தான் அந்த பாஷை தெரியும். அவர்கள் தான் சொல்லித் தரமுடியும். பகவத் கீதையில் மூன்று இடங்களில் யார் உண்மை பக்தன் என்பதைக் கண்ணன் விளக்கியிருக்கிறான். பொதுவாக கீதை முழுவதிலுமே பக்தனைப்பற்றிச்

சொல்லப்படுகிறது: பக்தனுடைய இலக்கணத்தைப் படித்து நாம் ஒன்றும் அடைய முடியாது. இந்த உலகத்தில் அந்த இலக்கணத்தில் அடங்கிய பக்தர்கள் வெகு சிலர். இதனாலே தான் நான் ஒரு எளிய முறையைச் சொல்லுகிறேன்-பிறருக்குச் சேவை செய்வதே வழிபாடு என்று. மக்களுக்குச் சேவை செய்தோமானால் நம்முடைய உள்ளத்தைத் தேடிக்கொண்டு ஆண்டவன் வந்து சேருவான். நல்ல இருப்பிடத்தை அவனே தேடிக்கொண்டு வருவான். ஆனபடியாலேதான் தெய்வத்தைக் கண்ட ஞானி நரசிம்ம மேத்தா பாடினர். பிறர் துக்கத்தைக் கண்டு கரைந்து அழுகிறவனே உண்மை வைஷ்ணவன் என்று. அபூபென் ஆதமைப் பற்றியும் இதையே சொல்லுவார்கள். மக்களுக்கு அவன் சேவை செய்தான். ஆனபடியால் அவன் பெயர் ஆண்டவனுடைய புனிதப் பட்டியலில் முதல் இடம் பெற்றது. மக்களுக்குச் சேவை செய்தோமானல் ஆண்டவனுக்கே சேவை செய்ததாகும்.

யார் தீனர்கள்? யாருக்கு நாம் சேவை செய்ய வேண்டும்? வறுமையில் கஷ்டப்படுகிறவர்களுக்கு, திக்கற்றவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும். அப்படிச் செய்கிறவர்கள்தான் பக்தர்கள் ஆவார்கள். உடலும் உள்ளமும் செலுத்திச் செய்யவேண்டும்.

பிறப்பினல் 'தீட்டு' என்றுசிலரை ஒதுக்கிவைப்பவர்கள் எப்படி உடலைக் கொண்டு அவர்களுக்குச் சேவை செய்ய முடியும்? முடியாது. ஏழைகளுக்கு என்று நூல் நூற்கப் பிரியப்படாதவர்கள், ராட்டையைச் சுற்றுவதற்கு உடல் வளையாதவர்கள், நொண்டிச்சாக்குச் சொல்லுகிறவர்கள் இவர்களுக்குச் சேவை என்றால் பொருள் விளங்கவில்லை என்றே சொல்லவேண்டும். ஆரோக்கியமாய் இருக்கும் ஒரு ஏழைக்குப் பிச்சை போடுவது தவறாகும். உழைத்து உணவடையச் செய்யவேண்டும். பிச்சை தருவது அவனைத் தாழ்த்தும். அத்தகையோன் எதிரில் நாம் ராட்டையைச் சுழற்றி நூல் நூற்று அவனையும் அப்படியே செய் என்று வழி காட்டினோமானல் நாம் ஆண்டவனுக்கு நல்ல முறையில் கைங்கரியம் செய்தவர்கள் ஆவோம். இலையோ பூவோ ஒரு அற்பப்

பழமோ பக்தியுடன் தந்தால் அவன் என் தாசன் ஆவான் என்று கண்ணன் கீதையில் சொல்லியிருக்கிறன். ஏழைகள் குடியிருக்கும் குச்சு வீடுகளிலல்லவோ ஆண்டவன் பாதம் வைத்து அருள்கிறன். அந்த ஏழைகளுக்காக நாம் ராட்டையைச் சுழற்றினல் அதுவே பெரிய பூஜையும் வேள்வியும் ஆகும்.

ஆகவே, எந்தப் பெயரை வைத்தும் பிரார்த்தனை செய்யலாம். பக்தி நிறைந்த உள்ளம் வேண்டும். உள்ளத்தில் பக்தியை நிறைப்பதற்கு வழி சேவை' இந்த யுகத்தில் தீண்டாதார்களுக்கு உள்ளத்தில் அன்போடு சேவை செய்யும் வைஷ்ணவர்களும் சைவர்களும் உண்மை வைஷ்ணவர்களும் சைவர்களும் ஆவார்கள். எந்த சமயத்தினர் ஆயினும், எந்தச் சம்பிரதாயத்தினர் ஆயினும் பக்தியோடும் அன்போடும் ஏழைகளுக்காக ராட்டையில் நூற்பவர்கள் ஆண்டவனுக்குப் பூஜைசெலுத்துகிறவர் ஆவார்கள்.

[யங் இந்தியா 24-9-25]

## 29

ஆண்டவனுக்கு பூஜை செலுத்த எந்த நேரம் எந்தக் காலம் என்று திட்டம் வேண்டியதில்லை. அப்படித் திட்டம் போடமுடியாது. அவரவருடைய உள்ளத்தின் இயல்பைப் பொறுத்தது. தினசரித் திட்டத்தில் பிரார்த்தனை நேரம் மிக முக்கியமான பகுதி. உள்ளத்தில் உள்ள அழுக்கு நீங்குவதற்கு வேண்டிய காரியக் கிரமமாகும். அடக்கம் தரும் சாதனமாகும். ஆண்டவனுடைய சித்தமின்றி ஏதும் நடைபெருது என்று உணர்வதற்குப் பயன்படும் அப்பியாசமாகும். நாம் எல்லாம் அந்தக் குயவன் கையில் களிமண் என்பதை உணர்வதற்குப் பிரார்த்தனையே வழி. பிரார்த்தனை செய்யும் போது நாம் செய்துவிட்ட குற்றங்களைக் காண்கிறோம். நம்

முடைய குறைகளைக் கண்டு கொள்கிறோம். தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம். குற்றங்களும் குறைகளும் தீர்ந்து நல் வழியில் நடக்கச் சக்தி அடைய வேண்டிக் கொள்கிறோம்.

சிலருக்கு ஒரு நிமிஷமே போதும். சிலருக்கு இருபத்து நாலு மணி நேரமும் போதாது. சிலர் மனத்தில் எப்போதுமே ஆண்டவன் நினைவு வருகிறது. அத்தகையோருக்கு உடல் உழைப்பே பிரார்த்தனையும் ஆகிவிடும். அவர்கள் வாழ்க்கை முழுதுமே இடையறாத ஒரு ஜபம். வேறு சிலர் வாழ்க்கையெல்லாம் சிற்றின்பத்தில் கழிப்பார்கள். பாவங்கள் செய்வார்கள். சுய நன்மைக்கே பாடுபடுவார்கள். அவர்கள் ஆண்டவனைத் தியானித்துப் பிரார்த்தனை செலுத்த வேண்டுமானால் நீண்ட நேரம் வேண்டும். பொறுமையோடும் பக்தியோடும் ஆண்டவனைத் தங்கள் உள்ளத்துக்குள் காணும்வரையில் இறைஞ்சி இறைஞ்சி மாசு நீங்குவதற்கு வேண்டிக்கொள்ள வேண்டும். இரண்டும் இல்லாத நம்மைப் போன்ற சாதாரண மக்கள் இவ் இரண்டுக்கும் இடையில் நிற்போம். வாழ்க்கையே பூஜையாகும் என்று நம்பியிருப்பதற்கும் இல்லை. கதியற்ற மகாபாபிகளும் ஆக மாட்டோம். ஆனபடியால் எல்லா மார்க்கங்களிலும் பிரார்த்தனைக்கு என்று சில நேரங்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய துரதிருஷ்டவசத்தினால் திட்டப்படி செலுத்தும் பிரார்த்தனைகள் வெறும் சடங்காகவும், வேஷமாகவும் போய் விட்டன. உள்ளத்தைச் செலுத்தாத பிரார்த்தனை பயனில்லை.

"எனக்கு ஒன்று தா" என்று குறிப்பிட்டு ஆண்டவனைக் கேட்கவேண்டுமானால், அது தாய் தகப்பனோடு பேசும் பாஷையிலேதான் இருக்கவேண்டும். இதைப் பற்றிச் சந்தேகமில்லை. 'தருமம் ஓங்கவேண்டும், எல்லா உயிர்களிடத்தும் அறம் பிறழாமல் நான் நடந்துகொள்ள வேண்டும்' என்று ஒருவன் பிரார்த்தனை செய்தால், அதுவே மிகச் சிறந்த பிரார்த்தனையாகும்.

[யங் இந்தியா 10-6-26]

## 30

உபவாசத்தைப்பற்றி காந்திஜியின் கருத்து, என்னவென்பதை நன்ருகப் புரிந்துகொள்ளவேண்டும். அவர் எழுதியிருப்பதாவது :

உள்ளத் தூய்மையோடு அனுசரிக்கப்பட்ட உபவாச விரதம்—உடல், மனம், ஆன்மா மூன்றையும் சுத்தமாக்கும். உபவாசமானது ஊனை வருத்தி ஆன்மாவுக்கு அந்த அளவுக்கு விடுதலை தரும். உள்ளத்தைச் செலுத்திச் செய்யப்பட்ட பிரார்த்தனையில் அற்புத பயன்களைக் காணலாம். மாசு நீங்கி சுத்த நிலை அடைவதற்கு உள்ளம் ஆசைப்படுவதே பிரார்த்தனை. அடக்கமுடியாத ஆசையாக இருக்கவேண்டும். உள்ளத்தில் சுத்தம் ஏற்பட்டு அது ஒரு மேன்மையான காரியத்துக்காகப் பயன்பட்டால் அது ஒரு பெரிய வேள்வியாகும். நோயில் வருந்தும் ஒருவனுக்கு ஆரோக்கியம் உண்டாவதற்காக காயத்ரீ ஜபம் செய்யலாம். நாடும் மக்களும் சமூகமும் பெரும் கஷ்டங்களில் சிக்கி வருந்தும்போது, அடக்கத்துடனும் ஒருப்பட்ட மனத்துடனும் காயத்ரீ ஜபம் செய்தால் அபாயங்களினின்றும் விபத்துக்களினின்றும் தப்பலாம். காயத்ரீ ஜபம் செய்வதும், இஸ்லாமியர்கள் 'நாமாஸ்' செய்து தொழுவதும், கிறிஸ்தவர்கள் ஜபம் செய்வதும் மூடநம்பிக்கை, அவை பாமரர்களுக்குத்தான் தகுந்தவை என்று எண்ணுவது பெருந்தவறு. உபவாசமும் ஜபமும் உள்ளத்தூய்மை யடைவதற்குப் பெரும் சாதனங்கள். கடமைகளைச் சரிவரச் செய்வதற்கு அவற்றின் வழி யடைந்த உள்ளத் தூய்மை மிகவும் பயன்படும். கடமைகளைச் செய்து நமது குறிக்கோளை யடையலாம். சில சமயம் விரதமும் ஜபமும் பயன் தராமல் போகலாம். அதற்குக் காரணம் நாம் அதைத் தூய முறையில் கையாளவில்லை என்பதே.

கிருஷ்ணஜயந்தி யன்று அநேகம் பேர்கள் பகலில் உண்ணுமல் இருக்கிருர்கள். ஆனுல் நாள் முழுதும் சீட்டாடுவார்கள். பணம் வைத்து ஆடுவார்கள். இத்தகைய உபவாசத்தால் உள்ளத் தூய்மை அடையமுடியுமா ? முந்திய நிலையைவிடத் தாழ்ச்சியைத்தான் அடைவார்கள். உப

வாசம் இருக்கும்பொழுது உள்ளத்தைத் தாக்கும் கெட்ட எண்ணங்களைத் தடுத்துக்கொள்ளவேண்டும். நல்ல கருத்துக்களுக்கும் சங்கற்பங்களுக்கும் மனத்தைத் திறந்து வைக்க வேண்டும். ஒரு வேண்டுதல் வேண்டிக்கொண்டால் அது நல்ல வேண்டுதலாக இருக்கவேண்டும். அந்தப் பிரார்த்தனையில் உள்ளத்தைச் செலுத்தி அதனுடன் ஒன்றித்துப் போகவேண்டும். ஜபமாலையைக் கையில் வைத்துக்கொண்டு விரல்களினால்மணிகளைத் தள்ளி நாக்கில் ஆண்டவன் பெயரைச் சொல்லி உள்ளம் இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தால் பயன் இராது.

[யங் இந்தியா 24-3-20]

சில உபவாசங்கள் பலாத்காரமே யாகும். சுயநலத்துக்காக மேற்கொள்ளும் உபவாசங்கள் இத்தகையவேயாகும். ஒருவனிடமிருந்து பண உதவி அடைவதற்காக உண்ணா விரதம் இருப்பது பலாத்காரமாகும். எந்த விதமான லாபத்தை ஒருவன் தனக்கென்று அடைவதற்காக எடுத்துக்கொள்ளப்படும் உபவாச விரதங்கள் எல்லாம் இதைப் போலவே யாகும். பலாத்காரம் செய்வதற்கும் அதற்கும் ஒன்றும் பேதமில்லை. அத்தகைய பலாத்காரத்துக்கு இசையாமல் தடுப்பதே நியாயம். இதைப்பற்றி எனக்குச் சந்தேகமே கிடையாது. அநேகம்பேர் என்னைப் பயமுறுத்தவே உபவாச விரதங்கள் ஆரம்பித்ததுண்டு. நான் அவற்றைப் பொருட்படுத்தாமல் தடுத்து வந்திருக்கிறேன். எது சுய நன்மைக்காகச் செய்யப்படும் உபவாசம், எது நல்ல நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் உபவாசமென்று நிச்சயப் படுத்துவது சிலசமயம் கஷ்டமாக இருக்கும். ஆயினும் நான் சொல்லுவேன், ஒரு விரதம் சுயநலத்தைக் கருதி எடுத்துக்கொள்ளப்பட்டது அல்லது வேறு விதத்தில் தவறானது என்று நாம் கருதினால் அந்த உபவாசத்தை எதிர்த்து விடவேண்டும். அதற்குப் பயந்து அடங்கலாகாது. அந்த

உபவாசக்காரன் கோரும் கோரிக்கைக்கு ஒப்பக்கூடாது. உபவாசக்காரன் இறந்து போனாலும் பொருட்படுத்த லாகாது. தவறான கருத்தைக்கொண்டு செய்யப்படும் உப வாசங்களை மக்கள் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டால் அந்த விதமான சேஷ்டைகள் நின்று போகும்.

மானிட வழக்கங்களும் ஸ்தாபனங்களும் நன்மை தீமை இரண்டுக்கும் உதவும். தீமையைக் கண்டு பயந்து சத்தி யாக்கிரக சாதனங்களில் ஒரு பெரும் சாதனமாகிய உப வாச விரதத்தை விட்டுவிடுவதற்கில்லை. பலாத்காரம் செய்து ஒரு பயனை அடைவதற்குப்பதில் சத்தியாக்கிரகம் என்கிற அஹிம்ஸை முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந் தப் புது சாதனத்திற்கு இன்னும் பரிபூரண வடிவம் நாம் தர வில்லை. பலவிதத்தில் சோதனையும் முயற்சியும் செய்த பிறகு தான் அது பூரண வடிவம் பெறும். என்னுடைய நவீன சத்தியாக்கிரக முறையை இந்தச் சந்தேகத்தின் காரணமாக நான் விட்டுவிட முடியாது. மனத் தூய்மையுடன் யோக்கிய மான முறையில் அதை நான் அனுசரித்துக் கொண்டுதான் போகவேண்டும். பிழைகளைக் கண்டு பயந்துபோய் விட்டு விடுவதற்கில்லை.

[ஹரிஜன் 9-9-33]

## 31

நம்முடைய சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் இதி காசங்களிலும் உபவாச விரதத்தைப் பல இடங்களில் காணலாம். ஹிந்து சமுதாயத்தில் இன்றுகூட சாதாரண காரணங்களுக்காகவும் ஆயிரக்கணக்கில் உபவாசமிருந்து வருகிறார்கள். பல விரதங்களுக்குள் உபவாச விரதம் மிக ஈத்வீகமானதென்றே சொல்லலாம்.

எதுவுமே நன்மைக்கும் தீமைக்கும் பயன்படும். உபவாசமும் அவ்வாறே. இதற்கு நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. சிலர் கெட்ட வழியில் பயன்படுத்துகிறார்கள் என்ற காரணத்தினால் ஒரு நல்ல விஷயத்தை நாம் விட்டு விட முடியாது.

எனக்குப் பல கிறிஸ்தவ ப்ராடஸ்டண்ட் நண்பர்கள் உண்டு. அவர்களுடைய அன்பை நான் பெரிதும் பாராட்டி வருகிறேன். அவர்களிடத்தில் எனக்கு அளவற்ற மதிப்பு. உண்ணாவிரதங்கள் அவர்களுக்குப் பிடிக்காது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் எனக்குப் புரியவில்லை.

ஊனை வருத்தும் தவமுறைகளை எந்தக்காலத்திலுமே உலகில் மக்கள் கையாண்டு வந்திருக்கிறார்கள். உபவாசமின்றி அதாவது தேகம் வேண்டுவதை ஓரளவு தள்ளி வைப்பது இன்றி எந்தப் பிரார்த்தனையும் செல்லாது. பிரார்த்தனைக்கு நோன்பு இன்றியமையாத அவயவம். உணவு ஏற்காமலிருப்பதைவிட ஒருவன் வேறு என்ன செய்ய முடியும், தான் என்கிற உணர்ச்சியை நீப்பதற்கு? உபவாசமே உண்மையான ஜபமாகும்.

“என்னுடைய ஆவியும் உனதேயாகக் கடவது; அது எப்போதும் முற்றிலும் உனதே” என்று கிறிஸ்தவர்கள் சொல்வது வெறும் வாய்ப்பேச்சாக விட்டுவிடலாமா? மகிழ்ச்சியுடன் கவலையும் கஷ்டமுமின்றி எடுத்துக்கொள் என்று உயிரைக்கொடுத்து விடுவது நியாயந்தானே? உண்ணாமலிருப்பதும், நீரும் கூட அருந்தாமலிருப்பதும் அந்த அர்ப்பணத்துக்கு முதல்படியேயாகுமல்லவா?

என் கருத்துக்களை இவ்வாறு நான் எழுதிக் கொண்டிருக்கும்போது ஒரு புஸ்தகம் என் கைக்கு வந்து சேர்ந்தது. ஜோனா மூன்றாவது அத்தியாயத்திலிருந்து ஒரு மேற்கோள் அந்தப் புஸ்தகத்திலிருந்து எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. அதில் ஒரு உண்ணாவிரதம் வெற்றிகரமாக நடந்ததைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. நயினீவா என்கிற பெரிய நகரம், அழிந்து போகாமலிருப்பதற்காக ஒரு பூரண

உண்ணாவிரதம் மக்கள் பூண்டார்கள் என்றும் அதைக் கண்டு ஆண்டவன் நகரம் அழிந்து போகாமல் காத்தான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. உயிர் நீங்கும் வரையில் உண்ணாவிரதம் இருப்பது கிறிஸ்தவ சாஸ்திரத்திலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. எல்லா உண்ணாவிரதமும் தற்கொலையாகாது. நயினீவா மக்களும் அந்த நகரத்து அரசனும் இருந்த உண்ணாவிரதம் ஒரு நல்ல தவமேயாகும். என்னுடைய உண்ணாவிரதமும் ஒரு தவம் என்றே அடக்கத்துடன் சொல்வேன். ஜோனா அத்தியாயத்தில் வர்ணிக்கப் பட்டிருக்கும் பெரிய உண்ணாவிரதம் ராமாயணத்தில் நாம் படிக்கும் புனிதக் கதை யொன்றைப் போலவே இருக்கிறது.

[ஹரிஜன் 15-4-33]

## 32

குருக்ஷேத்திர யுத்தம் ஒன்று நம் உள்ளத்தில் எப்போதும் நடைபெற்று வருகிறது. வழக்கப்பட்டுப்போன தீய குணங்களோடு சண்டையிட்டு பாவத்துக்குத் தோல்வி கொடுத்து நன்மை வெற்றிபெறச் செய்வது மனிதனுடைய கடமை; பிறந்ததன் பயன். இது நாம் செய்யவேண்டிய யுத்தம். இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு சாஸ்திரம் நமக்கு வழி காட்டுகிறது. இல்லாவிடில் அந்த சாஸ்திரத்தில் பயனில்லை. இந்த யுத்தத்தில் வெற்றியடைவதற்குக் குறுக்குப்பாதை கிடையாது. பயம் என்பதே பெரிய பாபம். கோழைத்தனத்தினால் ஹிம்சை செய்கிறோம். கொலை, அட்டகாசம் முதலிய பாவச் செயல்களை விடக்

கோழைத்தனம் மக்களுக்குப் பெரிய சத்துருவாகும்: தெய்வ பக்தி குறைந்தால்தான் கோழைத்தனம் உண்டாகிறது. ஆண்டவனுடைய குணங்கள் அறியாமலிருப்பதால் பயம் ஏற்படுகிறது. என்னுடைய அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். உள்ளம் கரைந்து பிரார்த்தனை செய்வதே பயத்தைத் தீர்க்கும். பாவ வழக்கங்களிலிருந்து விடுபடுவோம். நமக்குள் ஆண்டவன் கோயில் கொண்டிருக்கிறான் என்கிற நம்பிக்கை இருந்தாலேதான் பிரார்த்தனை செய்து வெற்றி பெறமுடியும்.

ஆண்டவனுக்கும் சைத்தானுக்கும் யுத்தம் என்று கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் சொல்வது உள்ளத்தில் நடக்கும் இந்தக் குருக்ஷேத்திர யுத்தத்தைத்தான். பார்ஸி மதமும் இந்த யுத்தத்தைத்தான் அஹுர் மஸ்த்துக்கும் அரிமானுக்கும் யுத்தம் என்று சொல்வார்கள். இந்து புராணங்களில் சொல்லப்படும் யுத்தங்களும் இதுவே. அவர்களோடு சேருவோமா, தேவர்களோடு சேருவோமா என்பது கேள்வி. தேவர்களோடு சேருவதென்றால் அதற்கு முதல்படி பிரார்த்தனையாகும். அசுரர்களிடமிருந்து மீளவேண்டுமானால் ஆண்டவனோடு உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டும். அந்த உடன்படிக்கைக்குத்தான் பெயர் பிரார்த்தனை.

வாயினால் சொல்லும் மந்திரம் மட்டும் பிரார்த்தனையாகாது. உள்ளத்திலிருந்து பிரார்த்தனை தோன்றவேண்டும். அப்போது ஒவ்வொரு செயலும் எண்ணமும்கூட பிரார்த்தனையாகும். பிரார்த்தனை செய்யும் சமயத்தில் ஒரு பாப எண்ணம் உள்ளத்தில் தோன்றினால் செய்யும் ஜெபம் மோசம் என்பதை அறியலாம். மனம், வாக்கு, காயம் மூன்றும் சுத்தம் அடைந்தால், செய்யும் பிரார்த்தனை உண்மை பிரார்த்தனையாகும். மூன்றுவித பாபத்தின் தாக்குக்கும் உண்மையான பிரார்த்தனை ஒரு கேடயமாகும்.

இப்படி உண்மையாகப் பிரார்த்தனை செய்யும் முயற்சியில் முதல் முதலில் வெற்றி அடையாமலிருக்கலாம். நம்

மோடு நாமே யுத்தம் செய்யவேண்டியதாகும். வருஷக் கணக்காகவும் முயற்சி செய்யவேண்டியதாகும். பொறுமையுடன் முயலவேண்டும். தோல்விக்குமேல் தோல்வி, இருளுக்குமேல் இருளாயினும் தைரியத்துடன் பயமின்றிப் போர் புரியவேண்டும். பிரார்த்தனை செய்பவனுக்கு யுத்த களத்தினின்று பின்வாங்கி, புறங்காட்டி ஓடுவது என்பது கிடையாது.

நாம் சொல்வது ஒரு கட்டுக்கதையல்ல; வெறும் கற்பனைச் சித்திரமல்ல. பிரார்த்தனையைக்கொண்டு எல்லா இடையூறுகளையும் தாண்டிச் சென்ற பெரியோர்களுடைய அனுபவத்தையும் என்னுடைய அனுபவத்தையும்கொண்டு சொல்லுகிறேன். என்னைப் பொறுத்தமட்டில் பக்தியும் பிரார்த்தனையும் ஒன்றேயாகும். ஏதோ ஒரு சம்பவத்தையாவது அல்லது சில நாட்களில் நடந்த நிகழ்ச்சியைக் கொண்டாவது நான் பேசவில்லை. நாற்பது ஆண்டுகளின் அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன்; வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் எல்லாம் கண்டிருக்கிறேன். அந்தகாரம் மூடிய நாட்களுண்டு. நிராசையாகப் போன நாட்களும் உண்டு. அதைரியப்பட்டிருக்கிறேன். பயந்திருக்கிறேன். அகங்காரத்தால் மோசமும் போயிருக்கிறேன். ஆயினும் என்னுடைய பக்தியானது கஷ்டங்களை யெல்லாம் தாண்டுவதற்கு உதவியிருக்கிறது. என்னுடைய பக்தி மிகக்குறைவான பக்தி. அது இன்னும் பூரணமடையவில்லை என்பதை அறிவேன். ஆயினும் அந்தக் குறைவுபட்ட பக்தியே இதுவரையில் நான் கண்ட இடையூறுகளை யெல்லாம் அகற்றவும் தாண்டவும் எனக்குச் சக்தி தந்திருக்கிறது.

ஆண்டவனோடு நாம் வியாபாரம் செய்யமுடியாது. நம்முடைய ஆணவத்தை அகற்றிவிட்டு நாம் நம்மைச் சூன்யமாகச் செய்துகொண்டால்தான், அவன் பாதங்களில் வேறு கதியில்லை என்று விழுந்தால்தான் நமக்குள் தோன்றும் தீய எண்ணங்கள் விலகும். உண்மை விமோசனத்துக்கு வழி வேறில்லை. முற்றிலும் நம்மை நாம் அவனுக்கு

அர்ப்பணம் செய்துவிட்டால்தான் விமோசனம் பெறு வோம். நம்மை நாம் முற்றிலும் அர்ப்பணம் செய்துவிட்டு ஒன்றுமில்லாமல் நின்றோமானால் பிற ஜீவன்களுக்குத் தொண்டு செய்யும் தொண்டர்களாகிப் போவோம். அந்தத் தொண்டே ஆனந்தமாகிவிடுகிறது. வேறு விளையாட்டும் வேடிக்கையுமே வேண்டியதில்லை. புத்துயிர் பெற்று மற்ற வர்களுக்குப் பணி செய்வதிலேயே மகிழ்ச்சி கண்டு அதற்கு வேண்டிய தேக பலமும் மனோபலமும் அடைவோம்.

[யங் இந்தியா 20-12-28]

## 33

அன்பின் சக்தி, அஹிம்சையின் சக்தி மிகப் பெரிது. வேறு எதற்கும் அந்த அளவு சக்தி இல்லை. ஆனால் இந்தச் சக்திக்குப் படாடோபம் உதவாது. ஆரவாரம், வேஷம், விளம்பரம் இவற்றுக்கு இதில் இடமில்லை. தன்னம்பிக்கை தான் இதன் அடிப்படை. உள்ளத்தில் தன்னம்பிக்கை உண்டாவதற்கு உள்ளத்தில் பரிசுத்தம் இருக்கவேண்டும். உள்ளத்தை ஒருவன் களங்கமறக் காப்பாற்றிக்கொண் டால், அவனுடைய சுத்தமும், தைரியமும் பிறருடைய உள் ளத்தையும் சுத்தப்படுத்தும். அவனிடம் சேரும் மக்கள் அனைவரும் உள்ளத் தூய்மையடைவார்கள். சூழ்நிலை முழு துமே துப்புரவடையும்.

[யங் இந்தியா 6-9-28]

தன்னுயிரும் பிற உயிரும் ஒன்றே என்கிற உணர்ச் சியை அடைவதற்கு முதலில் மனத்தில் தூய்மை வேண் டும். உள்ளம் துப்புரவாக இல்லாமற்போனால் அஹிம்சை என்பது வெறும் கனவேயாகும். உள்ளத்தில் மாசு வைத்

திருப்பவன் ஆண்டவனைக் காணமாட்டான். எல்லாக் காரியங்களிலும் தூய்மை யிருக்கவேண்டும். தன் உள்ளத்தைத் தான் சுத்தப் படுத்திக்கொண்டால் சூழ்நிலை தானாகவே சுத்தப்படும்.

எப்படிச் சுத்தத்தை அடைவது? எளிதல்ல. கஷ்டமான காரியமே. மனம், வாக்கு, செயல் மூன்றிலும் ஆசையாவது துவேஷமாவது இருக்கக்கூடாது. விருப்பு வெறுப்பு என்கிற இரண்டு வேகங்களையும் எதிர்த்துச் செல்லவேண்டும். கருத்து, பேச்சு, செயல் இம்மூன்றும் பூரண பரிசுத்தத்தை அடைவதற்காக நான் இடைவிடா முயற்சி செய்து வருகிறேன். என் முயற்சி இன்னும் பூரண வெற்றி அடையவில்லை இந்த நிலையில் எல்லாரும் என்னைப் புகழ்ந்து பேசுகிறார்கள். அது எனக்கு மகிழ்ச்சி தரவில்லை; கஷ்டம் தான் தருகிறது. படையெடுத்து விரோதிகளை வென்று, ராஜ்யம் சம்பாதிப்பதைக் காட்டிலும் நம்மைத் தாக்கும் விருப்பு வெறுப்புகளை வென்று சாந்தி நிலையடைவது அதிக கஷ்டமான காரியம்.

[சுயசரிதம்]

முயற்சியை விட்டுவிடக் கூடாது. தோல்வி என்று எண்ணி இந்த யுத்தத்தில் பின் வாங்கக்கூடாது. ஒரு தோல்வி ஏற்பட்டால் 'இனிமேல் உள்ளத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வேன்' என்று சங்கற்பம் செய்துகொண்டு, 'உன் கட்டளைப்படி' என்று ஆண்டவனுக்கு விட்டுவிட வேண்டும். அகங்காரம் கொண்டவனுடைய பிரார்த்தனையை பகவான் ஏற்றுக்கொள்ள மாட்டான். அவனிடம் வியாபாரம் செல்லாது, எந்தவிதமான வியாபாரமும் செல்லாது. பயமின்றி, சந்தேகமின்றி அவனை அணுகவேண்டும். தீனனாக அணுகவேண்டும். 'நான் நீசன், என்னைக் கைவிடாதே' என்று தைரியத்துடன் அணுகவேண்டும். அவனுக்கு அனைவரும் சமம். லட்சக்கணக்கான பக்தர்களுக்கு அவன் அருள் காட்டியிருக்கிறான். உனக்கும் அருள்வான். பெரும் பாபம் செய்தவனுக்கும் "நீயே கதி" என்று பிரார்த்தித்

தால் அருள்வான். என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து இதைச் சொல்லுகிறேன். நரக வேதனையில் நான் அவன் அருளை அடைந்திருக்கிறேன். அவனுடைய அருளைப் பெற்றால் அனைத்தும் பெறுவோம்.

[யங் இந்தியா 4-4-29]

## 34

உண்மையை நாடுபவனுக்கு மௌனம் அத்தியாவசியம். மௌனத்தினுடைய பிரயோஜனத்தை நான் நன்றாக அறிந்தவன். சஞ்சீவியைப் போன்ற மருந்து அது.

தென் ஆப்பிரிக்காவில் ஒரு கிறிஸ்தவ மடத்துக்கு ஒரு நாள் சென்றேன். மிக அழகான ஆசிரமம். அங்கே பல ஆசிரம வாசிகள் மௌன விரதத்திலிருந்தார்கள். “இது ஏன்?” என்று தலைவரைக் கேட்டேன். அவர் சொன்னதாவது: “இது உனக்குத் தெரியாதா? நாம் அனைவரும் உள்ளத்தில் திடம் பெற்றவர்கள் அல்ல. இஷ்டப்படி பேசிவிடுகிறோம். உள்ளத்தில் உண்மையைப் பேசும் அந்தராத்மா உண்டல்லவா? அதனுடைய குரல் நம்மை எட்டவேண்டுமானால் நாம் சத்தம் போடாமல் இருக்கவேண்டும். நாம் சத்தம் போட்டுக்கொண்டேயிருந்தால் அந்தராத்மாவின் குரல் காதில் படாது.” அவர் செய்த உபதேசத்தின் பொருளை உணர்ந்தேன். பிறகு அது எனக்கு மிகவும் உதவி வந்தது. மௌனத்தின் ரகசியத்தைக் கண்ட நான் சொல்லுகிறேன், மௌனம் மிக உயர்ந்த சாதனம்.

[யங் இந்தியா 6-8-25]

உண்மையை நாடும் பக்தனுக்கு மௌனமானது மிக்க பயன் தரும் சாதனம் என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறேன். மனிதனுக்கு ஒரு கெட்ட வழக்கம்; எதையும் அதிகப்

படுத்திச் சொல்லுதல். தெரிந்தும் தெரியாமலும் உண்மையை மறைப்பதும் மாற்றுவதும் மனிதனுடைய வழக்கமாகிவிட்டன. இந்த வழக்கத்தை விட்டுத் தப்பவேண்டுமானல் மௌனம் அவசியமாகிறது.

கொஞ்சமாகப் பேசுகிறவன் யோசனையின்றிப் பேச மாட்டான். ஒவ்வொரு சொல்லையும் கவனித்துப் பேசுவான். சாதாரணமாக மக்கள் பேசுவதற்கு மிக விரும்புகிருர்கள். எந்தக் கூட்டத்திலும், சபாநாயகரின் மேஜையின்மேல், பேசுவதற்கு அனுமதி கேட்டுச் சீட்டுகள் குவிகின்றன. அனுமதி தந்தவுடன் கால நிர்ணயத்துக்கு மேல் பேசுகிருர்கள். கால வரம்புக்குமேல் அனுமதியின்றிப் பேசிக்கொண்டே போகிருர்கள். ஆட்சேபணை செய்தால் இன்னும் அவகாசம் வேண்டும் என்று கெஞ்சிக் கேட்கிருர்கள். இந்தப் பேச்செல்லாம் உலகத்துக்குப் பயன் தராத பேச்சு. வீண் கால விரயமே தவிர வேறில்லை.

[சுயசரிதம் - 1948-ம் வருஷத்திய பதிப்பு பக்கம் 84]

உலகத்திலுள்ள சங்கடங்கள் நாம் மௌனத்தின் குணத்தை அறிந்தோமானல் பாதி தீர்ந்துபோகும் என்று எண்ண இடமிருக்கிறது. இந்தக் காலத்து நாகரிகம் நம்மைச் சூழ்ந்துகொண்டதற்கு முன், நாளொன்றுக்குக் குறைந்தது ஆறு அல்லது எட்டு மணி மௌனத்தில் கழித்து வந்தோம். புது நாகரிகம் வந்த பிறகு இரவைப் பகலாக்கினேம். தங்கமயமான மௌனத்தை அழித்து அதற்குப் பதில் சந்தடியும் பேரிரைச்சலும் உண்டாக்கிக்கொண்டிருக்கிறேம். தினமும் இரண்டு மணி நேரமாவது நம்முடைய அலுவல்களை விட்டு மௌனமாகக் கழித்தோமானல் எவ்வளவு நன்ருக இருக்கும்! பகவானுடைய ரேடியோ எப்போதும் பாடிக்கொண்டிருக்கிறது. ஆனல் காது கொடுத்தால்தானே அது கேட்கும்? நம்முடைய இரைச்சலை நிறுத்தி மௌனமாக இருந்தால் ஆகாச வெளியிலிருந்து அந்த இசை

நம்முடைய காதுக்கு எட்டும். ஒரு கிறிஸ்தவ முனிவர் வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார்:

"மௌனம் பூண்டால் கூண்டுக்குத் திரும்பி வரும் தேனீக்களைப் போல் நம்முடைய புலன்கள் உள்ளத்தில் அடங்கும். ஒரு கஷ்டமுமின்றி உள்ளத்தில் ஒடுங்கும்.* ஆத்மாவை ஆட்டிக்கொண்டிருந்த அலைச்சல்கள் அடங்கும். பயந்த அடிமைகள்போல் புலன்கள் ஒடுங்கும். சொன்னபடி கேட்கும். மனமும் புலன்களும் வர வரப் பயிற்சி பெற்று, பண்பட்டு சாந்த நிலை எளிதில் அடையும். தியானத்துக்கு வேண்டிய பலத்தைப் பெறுவோம்."

[ஹரிஜன் 24-9-38]

தற்போது எனக்கு மௌன வழக்கம் இன்றியமையாதவழக்கமாகிவிட்டது. முதலில் ஓய்வு பெறுவதற்காக ஆரம்பித்தேன். எழுதுவதற்கு நேரம் செய்துகொள்வதற்காகவும் பயன்படுத்திக் கொண்டேன். கொஞ்ச காலம் வழக்கப்பட்டதும் அதனுடைய ஆன்மீகப் பயனை அறிந்தேன். ஆண்டவனைத் தியானிப்பதற்கு மிக நல்ல சாதனம் என்பதைக் கண்டேன். இப்போது அது என் இயற்கை ஆகிவிட்டது. அவ்வப்போது மௌனம் இன்றி என்னால் காலம் கடத்தவே முடியாது. அந்த நிலைக்கு வந்துவிட்டேன்.

உண்மையை நாடும் என்னைப் போன்றவர்களுக்கு மௌனம் மிகவும் பயன்படும். இருள் விலக்கி ஒளி தருகிறது. காட்சியானது தெளிவு அடைகிறது. வாழ்க்கை முழுதும் உண்மையைத் தேடுவதே நம்முடைய வேலை அல்லவா?

---

* உள்ளம் உரை செயல்
உள்ள இம் மூன்றையும்
உள்ளிக் கெடுத்து, இறை
உள்ளில் ஒடுங்கே

—திருவாய்மொழி

ஆத்மா தன் பூரண சக்தியடைய வேண்டுமானல் உள்ளத்தில் மௌனம் இருக்கவேண்டும்.

[ஹரிஜன் 10-12-38]

## 35

ஒரே ஊருக்குப் போகும் பல பாதைகளைப் போலாகும் சமயங்கள். போகவேண்டிய இடத்துக்குப் போய்ச் சேரும் பாதைகளில், எந்தப் பாதையில் போனல் என்ன, குற்றமில்லை. ஆராய்ந்து பார்த்தோமானல் உண்மையில் எத்தனை மக்கள் இருக்கிருேமோ அத்தனை வேறுபாடுகள் உண்டு சமயத்தில். ஒவ்வொரு உள்ளத்திலும் சமயம் என்பது தனித்தனி வடிவம் எடுத்துக்கொள்ளும். ஒரே சமயத்தாராயினும், தத்தம் அறிவுக்கும் குணத்துக்கும் தக்கபடி சமய உணர்ச்சி மாறுபடும். ஆனபடியால் உன்னுடைய சமயம், என்னுடைய சமயம் என்று சொல்லிக்கொண்டு பேத உணர்ச்சியை வளர்ப்பது தவருகும். எல்லா சமயங்களும் சமம்.

[ஹிந்த் சுவராஜ்-பக்கம் 36]

என்னுடைய கொள்கையின்படி எல்லா மதங்களுமே உண்மையாகும். ஏற்றக் குறைவு ஏதேனுமிருந்தால் அதை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. மனிதன் தொட்டது எல்லாம் பூரணத்துக்குக் குறைந்ததுதான் இருக்கும். எவ்விதக் குறையுமற்ற சம்பூரணம் மக்கள் உலகத்தில் எப்படிக் காணப் பெறுவோம்? கடவுள் ஒன்றே பரிபூரணப் பொருள். அந்தப் பரிபூரணப் பொருளைக் கருத்திலாவது மொழியிலாவது அடக்க முடியாது. ஒவ்வொருவனும் பூரண நிலை அடையமுடியும். அடைவதற்கு முயற்சி செய்யவேண்டும். ஆனல் அந்த நிலையை அடைந்துவிட்டால், அது சொல்லுக்கு அடங்காத நிலையாகும். ஆனபடியால் அடக்கத்துடன் சொல்லுகிறேன், வேதமும் குரானும் பைபிளுமே ஆண்டவனை நமக்குச் சம்பூரணமாக விளக்காது. குற்றமும் குறையும்

நிறைந்த நாம், விருப்புகளிலும் வெறுப்புகளிலும் தோய்ந் திருக்கும் நாம் கடவுள் என்ற சொல்லின் பொருளைக்கூட முற்றிலும் உணர்வது முடியாத காரியம்.

[யங் இந்தியா 22-9-27]

ஈசன் ஒருவன் இருக்கிறான் என்பது எல்லாச் சமயங் களுக்கும் அடிப்பீடம். ஆயினும் உலகத்திலுள்ள மக்கள் எல்லாம் ஒரேஒரு சமயத்தை ஒப்புக்கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அனைவருக்கும் ஈசன் ஒருவனே ஆயினும் அவனை அனைவரும் ஒரே வடிவத்தில் காணமாட் டார்கள். தேசத்துக்கும் சூழ்நிலைகளுக்கும் குணங்களுக்கும் ஒத்தவாறு பலவேறு சமயங்கள் இருந்தே தீரும்.

[ஹரிஜன் 2-2-34]

நாம் கோரவேண்டியது அனைவரும் ஒரே மதத்தினர் ஆவது அல்ல. ஒவ்வொரு மதத்தினரும் பிற மதத்தினரை வெறுக்காமல் பொறுத்துக் கொண்டும், கௌரவித்தும் வர வேண்டும் அவ்வளவுதான். எல்லாரும் ஒரேமதத்தை ஒப் புக் கொண்டு வேறுபாடுகள் ஒழித்துவிட்டு இருக்க வேண் டும் என்பதில்லை. வேற்றுமைகளுக்கிடையில் ஒற்றுமை வேண்டும். சம்பிரதாய பேதங்களை யெல்லாம் வேரோடு பறித்து எறிந்துவிட்டு, பரம்பரையாகவும் சூழ் நிலையின் காரணமாகவும் காலதேச வேறுபாடுகளினாலும் உண்டாகி வளர்ந்து வழக்கத்திலிருக்கும் சமய பேதங்களை அடியோடு ஒழித்து விடும் முயற்சி பயன் பெறாது. முடியாத காரியம். முடிந்தாலும் அது தெய்வ பக்தியைக் கெடுக்கும். சரீர வடிவ பேதங்களைப் போன்றது சமய பேதங்கள். பேத மற்ற ஆன்ம லக்ஷணத்தைப் போன்றது வெவ்வேறு சமயங்களில் கிடக்கும் பேதமற்ற உண்மை. சரீரம் வெவ்வேறாயினும் ஆன்மா ஒன்று. வடிவ வேற்றுமைகள் எப்போதும் இருந்தே தீரும். கொட்டைக்குள் பருப்பு இருக்கிறது! வெளி ஓடு

எவ்வளவு பேதப்பட்டாலும் உள்ளேயிருக்கும் பருப்பு —ஒன்றே.*

[யங் இந்தியா 25-9-29]

## 36

ஹிந்து தர்மத்தில் ஏசுவுக்கும் இடமுண்டு, மகம்மது நபிக்கும் இடமுண்டு. பார்ஸி ஆசாரியர் ஸோரோ ஆஸ்தருக்கும் யூதர்களுடைய ஆசாரியர் மோஸஸுக்கும்—எல்லாருக்குமே ஸ்தானம் உண்டு. யாரையும் ஹிந்து தர்மம் அப்புறப்படுத்தாது. இவர்கள் எல்லாருமே பகவானை அடைய வழி காட்டுகிறவர்கள் என்பது ஹிந்து சாஸ்திரம். ஒரே தோட்டத்தில் பல்வேறு புஷ்பங்கள் மலர்ந்திருப்பதைப் போல் பல்வேறு சமயங்களும் மலர்ந்திருக்கின்றன. ஒரு மரத்தில் பல கிளைகள் கிளைத்திருப்பது போல் பல மதங்களும் உண்மை என்கிற மரத்திலிருந்து கிளைத்திருக்கின்றன. எல்லா சமயங்களுமே உண்மையை விளக்குகின்றன. ஆனால் உபதேசத்தைப் பெறும் மக்கள் அந்த அந்த சமயங்களை எடுத்துச் சொல்லும்போது தங்களுடைய குற்றங் குறைகளுக்கு இசையவளைத்துச் சொல்லுகிறார்கள். ஒரு மதத்திலிருந்து, இன்னொரு மதத்துக்கும் மாறும் தற்கால வழக்கத்தை நான் கொஞ்சங்கூட ஒப்புக்கொள்ள முடியாது. தற்போது இந்தியாவிலும் மற்றத் தேசங்களிலும் நடந்து வரும் ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்துக்கு மாற்றும் முயற்சிகள் பெரும் தவறாகும். உலகத்தில் பூசல்கள் அடங்கி, சமாதானம் நிலைப்பதற்கு இந்த முயற்சிகள் பெருந் தடையாகும்.

சமயப் பூசல்கள் என்பதே ஆண்டவன் சந்நிதானத்தை அவமதிப்பதாகும். ஆண்டவன் சந்நிதிக்கு அழைத்துப்

---

* அவரவர் தமதமது அறிவு அறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர்; இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே !

என்ற இந்தத் திருவாய்மொழிப் பாட்டை ஒப்பு நோக்கலாம்.

போகும் உபதேசங்களுக்குள் வெறுப்புக்கும் பூசலுக்கும் இடம் ஏது? இந்தப் பேச்சே பாபமாகும். எப்படியாயினும் அந்தப்பூசல்கள் இந்தியாவில் நடந்துகொண்டுவருகின்றன. சமயம் என்பதே பிறந்த புனித பூமியாகிய இந்தியாவில் இந்தப் பூசல் நடைபெற்று வருகிறது. இது ஒரு பெருஞ் சோதனை:

ஒரு ஹிந்து கிறிஸ்தவனை வேண்டும் என்று ஏன் கிறிஸ்தவர்கள் விரும்புகிறார்கள்? கிறிஸ்தவன் ஒருவன் ஹிந்துவாக மாற வேண்டும் என்று ஏன் ஹிந்துக்கள் விரும்ப வேண்டும்? நல்லவனைகவும் தெய்வபக்தி யுள்ளவனைகவும் இருக்கும் ஒருவனை நாம் சும்மா விட்டுவிடாமல் ஏன் மத மாற்றத்தைக் கோருகிறோம்? ஒருவனுடைய குணமும் சீல மும் சரியாக இருந்தால் அவன் எந்தக் கோயிலுக்கு அல்லது மசூதிக்குப் போனால் என்ன? இதைப் பற்றி நாம் சண்டை போட்டுக் கொள்வது நாஸ்திகத்தில்தான் முடியும். சச்சர விலும் ரத்தப் பிரவாகத்திலும்தான் கொண்டுபோய்ச் சேர்க் கும்.

[ஹரிஜன் 30-1-37]

பிற மதங்களைப் பற்றியாவது சமய நூல்களைப் பற்றி யாவது குற்றங் குறைகளை எடுத்துச் சொல்வது என் னுடைய வேலையல்ல. அவற்றில் நான் காணும் பேருண்மை களை எடுத்துக்காட்டி, பிரசுரம் செய்வதே எனக்குக் கௌர வம் தரும் பணியாகும். பிறருடைய மதாசாரங்களிலும் பிர பந்தங்களிலுமுள்ள குற்றங்களை எடுத்து விமர்சனம் செய் வது என் தொழில் அல்ல. அவற்றில் நான் காணும் நல்ல விஷயங்களை எடுத்துக் காட்டுவதே எனக்கு மகிழ்ச்சி தரு கிறது. இஸ்லாமியத்தில் எனக்கு ஏதேனும் சரியாக விளங் காமற் போனால் எனக்கு நண்பர்களாகிய நல்ல முஸ்லிமான் பக்தர்களைக் கொண்டு விளக்கம் பெற முயற்சிப்பேன். எந்த மதமாயினும் சரி, அந்த மதத்தைச் சேர்ந்த நல்ல பக்தர் களைக் கொண்டு தான் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

பிற மதங்களையும் ஆசாரங்களையும் இப்படித்தான் மரியாதையாக அணுக வேண்டும். அப்போது தான் சர்வ சமய சமத்துவத்தை உணர முடியும். பிற சமயங்களைப்பற்றி எதுவாயினும் என்னுடைய சமயமாகிய ஹிந்து சம்பிரதாயத்தில் என்ன குறைகளை நான் காணுகிறேனே அவற்றை எடுத்துக் காட்டி அந்தக் குறைகளைத் தீர்க்கவும் குற்றங்களைக் களையவும்முயல்வது என்னுடைய கடமையுமாகும்; உரிமையுமாகும். ஒரு மதத்தைச் சேர்ந்தவர் பிற மதங்களின் குற்றங் குறைகளை எடுத்துப் பட்டியல் போடுவது மடமையாகும். ஹிந்து மதாசாரத்திலுள்ள குறைகளைப் பிற மதத்தினர் விமர்சிப்பதற்கு அதிகாரமில்லை. ஹிந்து சாஸ்திர சம்பிரதாயங்களை அவர்கள் உண்மைப் பொருள் அறிந்து சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. அவர்களுடைய பார்வை தெளிவான பார்வையாகாது. ஹிந்துக்கள் அல்லாதவர்கள் ஹிந்து தர்மத்தையும் சம்பிரதாயங்களையும் குற்றம் சொல்லும்போது அவர்கள் சொல்வது பிசகு என்று நான் காண்பதைப் போலவே, இஸ்லாமியத்தையாவது கிறிஸ்தவ மதத்தையாவது நம்மவர்கள் விமர்சனம் செய்து குற்றங்கள் எடுத்துக் காட்டுவது தவறு என்று நான் காண்கிறேன்.

[ஹரிஜன் 13-3-37]

இஸ்லாமியர்களுடைய 'அல்லா'வும் கிறிஸ்தவர்களுடைய 'தேவனும்' ஹிந்துக்களுடைய ஈசுவரனும் ஒருவனே யாகும். ஈசுவரனுக்கு ஹிந்து சம்பிரதாயத்தில் எண்ணற்ற நாமங்களுண்டு. இஸ்லாமியரும் ஆண்டவனுக்குப் பல பெயர்கள் கொடுத்திருக்கிறார்கள். பெயர்கள் எல்லாம் லட்சணங்களைக் குறிக்கும். கல்யாண குணங்களை வைத்துப் பல பெயர்கள் கொடுக்கிறோம். சொல்லுக்கும் கருத்துக்கும் அடங்காத பரம்பொருளின் லட்சணங்களைக்காண முயல்கிறோம். முற்றிலும் காண்பது முடியாதகாரியம். ஆண்டவனை நாம் வணங்குவது உண்மையானல் உலகத்திலுள்ள பல மக்களும் நம்முடைய சகோதரர்கள் என்பதை ஒப்புக்

கொள்ள வேண்டும். எல்லாச் சமயங்களும் சமம் என்பதை யும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

[ஹரிஜன் 14-5-38]

## 37

பிற மதங்களைப் பற்றி நாம் நடந்துகொள்ள வேண்டிய முறையை எடுத்துச் சொல்லுகிறவர்கள், "சகிப்புத் தன்மை" இருக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். "சகிப்பு" என்கிற சொல் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அதைவிட நல்ல சொல்லும் நான் காண முடியவில்லை.

'பிற சமயங்கள் நம்முடைய சொந்த மதாசாரத்தை விடக் குறைந்தனவாகக்கருதி, ஆனாலும் அவற்றைப் பொறுத் துக் கொள்ளவேண்டும். வெறுக்கக் கூடாது' என்பது"சகித் தல்" என்ற சொல்லுக்குப் பொருள். பிற சமயங்கள் தவ றான சமயங்கள் என்று எண்ணுவதே குற்றம். அந்தக் குற்ற மான எண்ணத்துடன் கலந்த சகிப்புத் தன்மை உதவாது. நம்முடைய சமயாசாரங்களைப் போலவே பிறருடைய சமயாசாரங்களைக் கௌரவிக்க வேண்டும் என்பது அஹிம்ஸா முறையின் தர்மம்.

நம்முடைய சமயம், நம்முடைய ஆசாரம் என்று சொல்லுகிறோமே அவற்றிலும் குறைகள் உண்டு என்பதை யுணர்ந்து பிறருடைய சமயாசாரங்களில் குற்றங்களைக் கண் டாலும் அந்தச் சமயாசாரங்களைப் பற்றிக் கௌரவமாக நடந்துகொள்ள வேண்டும். அன்பு நெறியில் உண்மையை நாடுபவனுக்கு இது கஷ்டமாக இராது. எளிதே ஆகும். உண்மையின் முழு தரிசனம் நாம் பெறவில்லை. பெற்றுவிட் டால் நாம் ஆண்டவனுடன் ஒன்றுபட்டு விட்டவர்களா வோம். அதன்மேல் தேடும் வேலை என்ன, நாடும் வேலை என்ன? சத்தியமும் கடவுளும் ஒன்றேயல்லவா! உண் மையை உணர்ந்துவிட்டேன் என்று ஒருவன் சொல்லிக் கொண்டால் நான் முக்தியடைந்துவிட்டேன் என்று சொல்லு வது போலாகும். நாம் ஜீவன் முக்தர்களல்ல, பக்தர்கள்.

ஆண்டவனுடைய பாத கமலங்களை அடைய முயற்சி செய்கின்றோம். நம்முடைய ஞானத்திலும் பக்தியிலும் உள்ள குறைகளை யுணர்ந்தே அவன் அடிகளை நாடுகிறோம். குற்றம் குறைகள் நிறைந்த நாம் எப்படிக் குறைவற்ற முறையில் சமய உண்மையை உணர்ந்துவிட முடியும்? பாத்திரத்தின் அழுக்கு அதில் தங்கும் ஜலத்தையும் கெடுக்கும் அல்லவா? கடவுளின் தரிசனமும் பெறவில்லை; தர்மத்தையும் பூரணமாகக் கண்டோமில்லை. அப்படியிருக்க, 'நான் கண்ட சமயமே சரி' என்று பிடிவாதம் செய்வது தவறாகும். நாம் அறிந்த சமய உண்மைகளைத் திரும்பத் திரும்பத் திருத்திக்கொள்ள வேண்டியதாகும். கண்டுவிட்டேன் என்று அகம்பாவம் கொள்வதற்கில்லை. உண்மையைமெள்ள மெள்ளத்தான் அணுக முடியும்.

ஆனபடியால் இந்தச் சமயம் உயர்ந்தது; அந்தச் சமயம் தாழ்ந்தது என்று பேசுவதற்கு இடமில்லை. எல்லாச் சமயங்களிலுமே மெய்ப் பொருளின் தரிசனம் ஓரளவு பெறலாம். எல்லாவற்றிலுமே குறையும் குற்றமும் உண்டு. சமயங்களைப் பக்தியோடு பின்பற்றலாம். கௌரவமும் அளித்து வரலாம். ஆனால் குறைகளில்லை என்று கண்ணை மூடிக் கொள்ள வேண்டியதில்லை. நாம் அனுசரித்து வரும் சமயத்திலும் குறைகளைக் காணலாம். அதற்காக அதை விட்டுவிட வேண்டியதில்லை. நம்முடைய அறிவைச் சீர்படுத்திக்கொண்டு வெற்றி பெறலாம். எல்லாச் சமயங்களையும் கௌரவித்து அந்தச் சமயங்களிலுள்ள நல்ல அம்சங்களை நாமும் எடுத்துக் கொள்ளலாம். அவற்றை நம்முடைய சமயத்திலேயே கூட்டிக் கொள்ளலாம். அப்படிச் செய்வதே கடமையாகும்.

உலகத்தில் ஏன் வெவ்வேறு மதங்களும் ஆசாரங்களும் இருக்கவேண்டும் என்று கேட்கலாம். ஆன்மா ஒருபான்மையதாயினும் சரீரங்கள் பல வேறு வடிவங்கள் கொண்டிருக்கின்றன. சரீரங்கள் பலவாயினும் ஆன்மா ஒன்றே. ஒரு மரத்தில் பல கிளைகள் இருப்பதுபோல் தர்மம் என்பது ஒரே மரம். சமயங்கள் கிளைகளையும் இலைகளையும்போல,

வேறுபட்டிருந்தாலும் மரம் ஒன்றே. எல்லா மதங்களுமே கடவுளின் பிரசாதம். மக்களுடைய குற்றங் குறைகள் கலந்தபின் அவை பல வடிவங்கள் அடைகின்றன. ஆண்டவனுடைய வரப்பிரசாதமானது சொல்லுக்கு அடங்காது. சொற்களில் அமைக்கப் பார்க்கிறோம். அவரவர்களுக்கு எட்டும் அளவில் சொற்களைத் தேடி அமைக்கிறார்கள். அதில் குற்றம் குறை இருப்பதில் வியப்பில்லை. முனிவர்களுடைய மொழிகளையும் பலவிதமாக வியாக்யானம் செய்கிறோம். இந்த வியாக்யானமே சரி, அந்த வியாக்யானமே சரி என்று பிடிவாதம் செய்வது மூர்க்கமாகும். அவனவனுடைய அறிவின்படி அவனவன் காண்பது சரியே யாகும். ஆனபடியால் பொறுமை வேண்டும். பிற மதங்களைச் சகிப்பது கடமையாகும். பிற மதங்களையும் கௌரவிக்கவேண்டும். அப்படிப் பொறுப்பதும் மதிப்பதும் பழக்கப்படுவதினால் தன்னுடைய சொந்த சமயத்தில் பக்தியோ அக்கறையோ குறைய வேண்டியதில்லை. தத்தம் சமயங்களில் அதிக சிரத்தையே உண்டாகும். பிற மதங்களை மதிப்பதனால் நம்முடைய ஞானம் பெருகும்; குறையாது. ஞானம் என்பது பிடிவாத மூர்க்கத்தனமல்ல. அதற்கு நேர் விரோதம். நல்ல ஞானம் அடைந்தோமானால் சமய பேதங்கள் கரைந்து போகும். சகிப்புத்தன்மை தானாகவே உண்டாகும். நம்முடைய மதத்தை நாம் சரியாக உணர வேண்டுமானால் பிற மதங்களைப் பொறுத்துக் கொள்ளும் வழக்கம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

நான் இதுவரையில் சொன்னதிலிருந்து ஒரு தவறான எண்ணம் ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது. நீதி அநீதி, தர்மம் அதர்மம், நன்மை தீமை இவைகளுக்கு இடையிலுள்ள வித்தியாசத்தை மறந்துவிடும்படி நான் சொல்லவில்லை. மறந்து விடலாகாது. உலகத்தில் மக்கள் கொண்டிருக்கும் முக்கியமான சமயங்கள் எல்லாம் நன்மைக்கும் தீமைக்கும் தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை ஒரே விதமாக ஒப்புக்கொண்டிருக்கின்றன. அதைப்பற்றி அபிப்பிராய பேதமே கிடையாது. எல்லாச்

சமயங்களிலுமே பக்தர்கள் அதர்மத்தை வெறுத்து தர்மத்தைக் கடைப் பிடித்திருக்கிருர்கள். நன்மைக்கும் தீமைக்குமுள்ள பேதத்தை நன்ருகக் கண்டு அடிப்படைக் கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கும் சமயங்களைப் பற்றித்தான் நான் இதுவரையில் சொன்னது.

தீமையை வெறுக்கவேண்டும். குற்றத்தையும் பாபத்தையும் வெறுத்தாலும் குற்றம் செய்து விட்டவனை அன்போடு நடத்தப் பயிலவேண்டும். பாபிகளிடம் அன்பு செலுத்துவதினல் பாபத்தின்பேரில் நமக்குள்ள வெறுப்புக் குறையக்கூடாது.

[யங் இந்தியா 2-10-30]

மெய்ப் பொருளை நாம் பூரணமாகக் காணமுடியாது. ஒவ்வொரு முனையிலிருந்து ஒவ்வொரு பாகம்தான் காண முடியும். மக்கள் .அனைவரும் ஒரே விதமாகச் சிந்தனையைச் செலுத்த முடியாது. ஆனபடியால் சமய விஷயங்களில் பரஸ்பரம் நாம் பொறுமையோடு நடந்துகொள்ளவேண்டும். சகிப்புத் தன்மையே தர்ம மார்க்கமாகும். அவனவனுக்குத் தன்னுடைய மனச்சாட்சியே சட்டம். ஆனல் தன்னுடைய மனச்சாட்சியைப் பிறர் பேரில் புகுத்துவது அநீதியான அட்டகாசமாகும், மற்றவர்களுக்கும் அவரவர்களுடைய மனச்சாட்சி உண்டு என்பதை உணர்ந்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

[யங் இந்தியா 23-9-26]

## 38

கிறிஸ்தவ பிரசாரகர்களுக்கு காந்தியடிகள் சொன்னது :

" நீங்கள் இந்தியாவில் பிரசாரம் செய்ய வருகிறீர்கள். கடவுளைப் பற்றி ஒன்றும் தெரியாத மக்கள் கூட்டம், கல்லையும் பொம்மையையும் பூஜை செய்யும் அஞ்ஞானிகள் என்று இந்திய மக்களைக் கருதி அவர்களுக்கு அறிவூட்ட வருகிறீர்கள். ஒரு கிறிஸ்தவ ஞானி மானிட உலகத்தைப்

பற்றி எழுதியிருக்கிற பாட்டில் ஒரு வரி என்னை எப்போதும் உறுத்துகிறது. 'கடவுள் படைத்த நாடு அழகாக இருக்கிறது. ஆனால் மானிடனே நீசனாக இருக்கிறான்.

பிஷப் ஹேபர் இப்படி எழுதாமல் இருந்திருக்கலாம். இந்தியா முழுதும் நான் சஞ்சாரம் செய்திருக்கிறேன். என்னுடைய அனுபவத்தில் இது உண்மையல்ல. இந்த விசால தேசத்தில் உள்ளதை உள்ளபடி காண வேண்டுமென்று எங்கும் அலைந்திருக்கிறேன். முந்தியே ஒரு முடிவை மனத்தில் வைத்துக் கொண்டு நான் பொய் ஆராய்ச்சி செய்தவனல்ல. பாரத தேசத்தில் நான் கண்ட மானிடன் நீசன் அல்ல. கங்கை, யமுனை, பிரம்மபுத்திரா முதலிய ஆறுகளின் வெள்ளத்துக் கிடையில் வாழும் மக்கள் பொய்யர்கள், கயவர்கள் அல்ல. என்னைப் போலவும், உங்களைப் போலவுமே அவர்கள் சத்தியத்தை நாடுகிறவர்கள். ஏன், நம்மைவிட மேம்பட்டவர்கள் என்றே சொல்லலாம். எனக்கு ஒரு பிரெஞ்சு நண்பர் சொன்ன கதை நினைவுக்கு வருகிறது.

ஞான விளக்கம் தேடிக் கொண்டு ஒரு படை வெளியேறியதாம். அதில் ஒரு கூட்டம் இந்தியாவில் இறங்கிற்றும். இறங்கி, சேரியில் ஒரு சிறு குடிசையில் கடவுளையும் சத்தியத்தையும் கண்டார்களாம்.

ஹரிஜனங்களுடைய பல குடிசைகளில் நீங்கள் தெய்வம் இருப்பதைக் காண்பீர்கள். உங்களுக்கு நான் உறுதியாகச் சொல்லுகிறேன். அவர்கள் வாதம் செய்ய மாட்டார்கள். ஆனால் அவர்களின் கடவுள் பக்தியை அசைக்க முடியாது. அவர்களுடைய தினசரி வாழ்க்கைக்கு அவர்கள் கடவுளையே நம்பியிருக்கிறார்கள். ஆண்டவனுடைய அருளைப் பெற்றும் வருகிறார்கள். சேரியில் வசிக்கும் ஹரிஜனங்களைப் பற்றி பல ஞானக் கதைகள் உண்டு. அவர்களில் பலர் அஞ்ஞானிகள்தான். கெட்டவர்களும் தான். ஆனால் அவர்களில் ஞானிகளும் உண்டு, மிகப் பெரிய ஆத்மாக்களும் உண்டு. நான் இப்படிக் கண்டது சேரிகளில் மட்டுமல்ல. பல பிராம்மணர்களிலும் இப்படியே கண்டிருக்கிறேன். பிராம்மணர்கள் அல்லாத பல ஜாதியினர்களி

லும் இதைக்கண்டிருக்கிறேன். உலகத்தில் எந்தப் பகுதி யில் நீங்கள் கண்டெடுத்துக் காட்டக் கூடிய பக்தியும் ஞான மும் இந்தியாவிலும் எந்த ஜாதியிலும் காணலாம்.

பிராம்மணர்களாகப் பிறந்தவர்கள் பல பேர் இருக்கி ருர்கள். தியாகம், தெய்வபக்தி, அடக்கம் இந்தக் குணங் களே உருக் கொண்டாற் போன்றவர்கள். உடல், ஆவி இரண்டையும் தீண்டாதவர்களுக்காகக் கொடுத்துச் சேவை செய்பவர்கள். எந்த பிரதியுபகாரமும் எதிர்பார்க் காதவர்கள் இருந்து வருகிருர்கள். வைதீகர்களுடைய விரோதத்தையும் சாபங்களேயும் அடைந்து சகித்து வருகி ருர்கள். தீண்டாதவர்களுக்குச் சேவை செய்வது தெய்வப் பணி என்று கருதி எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு வருகிருர்கள். இதற்கெல்லாம் என் அனுபவமே சாட்சி. இந்தத் தேசத்துக்கு நன்மை செய்வதற்காக நீங்கள் வந்தி ருக்கிறீர்கள். ஆனபடியால் இந்த தேசத்தை நன்ருக நீங்கள் அறிய வேண்டும். அதனுலேதான் இதையெல்லாம் உங்க ளுக்குச் சொல்லுகிறேன். இந்தியாவில் வாழும் மக்களின் கஷ்டமும் குறையும் என்ன என்பதை விசாரித்து அவற்றை நீக்க நீங்கள் வந்திருக்கிறீர்கள். இந்தியாவிலிருந்து நீங்க ளும் ஓரளவு நன்மையும் அறிவும் பெறலாம். வேண்டாம் என்று காதையும் கண்ணேயும் மூடிக் கொள்ளாதீர்கள். இந்த நாட்டில் நீங்கள் பெறக்கூடிய நல்ல விஷயம் ஏதுமே இல்லே என்று நெஞ்சைக் கல்லாக்கிக் கொள்ளாதீர்கள்! தெய்வ பக்தி இந்த நாட்டில் நன்ருக இருக்கிறது. உங்க ளுக்கு நான் இறுதியாகச் சொல்லுகிறேன். பைபிள் புஸ்த கத்திலிருந்து மந்திரம் எடுத்து உச்சரித்தால் மனிதன் கிறிஸ்தவனுகி விடுகிருன் என்று எண்ணுதீர்கள். ஏசு கிறிஸ்துவின் பெயரையே அறியாதவர்கள் பலர் இருக்கி ருர்கள். கிறிஸ்தவ மதத்தை உங்களுடைய வியாக்யானத் தின்படி ஒப்புக் கொள்ளாதவர்கள் பலர் இருக்கிருர்கள். இன்று ஏசுநாதரே திடீர் என்று நம்மிடையில் வந்து தோன்றினுல் இவர்களே அவர் ஒப்புக் கொள்வார். உங்களே யும் என்னேயும் ஒப்புக் கொள்ளாமலும் இருப்பார்.

மனத்தை விசாலப் படுத்திக்கொண்டு அடக்கத்துடன் உங்கள் கடமை இன்னதென்று யோசித்துச் செய்யுங்கள்.

டார்ஜிலிங்கில் ஒரு மிஷன் பள்ளிக்கூடத்தில் ஒரு நிகழ்ச்சியைச் சொன்னேன். அது இப்போது என் நினைவுக்கு வருகிறது. சில கிறிஸ்து மதப் பிரசாரகர்கள் ஸாலிஸ்பரி பிரபுவிடம் சென்றார்கள். 'நாங்கள் சீனா தேசத்தில் வேலை செய்ய வேண்டும், எங்களுக்குக் காப்பு வேண்டும்' என்று கேட்டார்கள். அதற்கு ஸாலிஸ்பரி பிரபு பதில் சொன்னார்: "கனவான்களே! நீங்கள் சீனாவுக்குச் சென்று ஏசுநாதருடைய உபதேசத்தைப் பிரசாரம் செய்ய விரும்பினீர்களானால் நீங்கள் அரசாங்கத்தின் உதவியைத் தேடாதீர்கள். ஆபத்துகளுக்குத் தயாராக நீங்கள் செல்ல வேண்டும். உங்கள் உயிரையும் இழந்துவிடத் தயாராக இருக்க வேண்டும். சீன தேசத்தார் உங்களைக் கொன்றுவிட்டால் ஆண்டவன் பணியில் உயிரை இழந்ததாக நீங்கள் எண்ணவேண்டும்." இவ்வாறு அவர் சொன்னதாக எனக்கு ஞாபகம். இந்தியாவில் வேலை செய்யும் கிறிஸ்தவப் பாதிரிமார் சர்க்காருடைய உதவியோடு வேலை செய்கிறார்கள். அந்த உதவி உதவியல்ல. தடையேயாகும். பிரசாரம் பயனடையாமல் செய்கிறது. பெற்றோரை இழந்த அநேக குழந்தைகளைக் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் எடுத்துக் காப்பாற்றி வளர்த்திருக்கிறார்கள். இந்தச் சேவையைப் பற்றிச் சந்தேகமில்லை. நானும் அந்த விஷயத்தை மறுக்கவில்லை. ஆனால் பாதிரிமார்களுடைய கடமை இதுவா என்பது என்னுடைய சந்தேகம். திக்கற்றகுழந்தைகளை வளர்ப்பதைவிட உங்களுக்குப்பெரும் கடமை இருந்து வருகிறது. பாதிரிமார்களுக்கு நான் நண்பன். விரோதியல்ல. வெள்ளைக்காரர்களுக்கும் நான் உண்மையான நண்பன். அந்த உரிமையைப் பாராட்டி என் உள்ளத்தில் கண்டதை உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்திய மக்களுடன் நீங்கள் ஒன்றுபட்டுச் சேரவில்லை. அதற்கு உங்கள் மனம் இசையவில்லை. அதற்கு வேண்டிய அடக்கத்தை உங்களிடம் நான் காணவில்லை. அவர்களிடமுள்ள நற்குணங்களைக் கண்டு அதன் பயனை

நீங்களும் அடைய வேண்டும். அதை நான் காணவில்லை. மறைக்காமல், ஒளிக்காமல் பேசினேன். உங்கள் உள்ளத்தில் என்னுடைய கருத்துக்கள் இடம் பெறுவதாக.

[யங் இந்தியா 6-8-25]

# 39

மக்களுக்குக் கஷ்ட நிவாரணம் செய்கிறோம் என்று சொல்லி மதம் மாற்றும் முயற்சிகள் நடத்துவது நல்லதல்ல. அக்கிரமம், மோசம் என்றே சொல்லக்கூடும். அதை நம்முடைய மக்கள் வெறுக்கிறார்கள். கடவுளை வழிபடும் முறையும், சமயமும், மதமும் அவனவனுடைய உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளைப் பொறுத்தவை. என்னுடைய வியாதியைத் தீர்த்த வைத்தியன் கிறிஸ்தவனாக இருக்கிறான். அவனுக்கு உகந்த மதம் அது. அவன் என் வியாதியைத் தீர்த்துவிட்டபடியினால் அவனுடைய மருந்தோடு அவனுடைய மதத்தையும் நான் எடுத்துக்கொள்ள வேண்டுமா? அவனிடம் நான் மருந்து வாங்கிச் சாப்பிடும் காலத்தில் அவனுக்கும் எனக்கும் ஒரு சம்பந்தம் ஏற்படுகிறது. அந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டு என்னுடைய மதத்தை மாற்ற முயல்வது நியாயமாகுமா? என் வியாதியைத் தீர்த்து விட்டால் அதனால் அந்த வைத்தியனுக்குத் திருப்தியும் பெருமகிழ்ச்சியும் உண்டாகும். அதற்கு மேல் அவனுக்கு என்ன கைம்மாறு வேண்டும்? என்னுடைய மதத்தையும் மாற்றவேண்டும் என்பது என்ன அவசியம்? கிறிஸ்தவப்பள்ளிக்கூடத்தில் என்னைச் சேர்த்துக் கொண்டு பாடம் சொல்லித் தந்தால் எனக்கு இஷ்டமில்லாத மத போதனையையும் ஏன் திணிக்கவேண்டும்? இது எல்லாம் நியாயமும் அல்ல. நன்மையும் தராது. சந்தேகமும் வெறுப்பும் தான் உண்டாகும். சமயக்கொள்கைகளைப் பிரசாரம் செய்ய வேண்டுமானால் சந்தேகாஸ்பதம் இல்லாத முறையில்செய்ய

வேண்டும். அபவாதத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது. சமயக் கொள்கைகளை வியாகரணம் கணிதம் இவற்றைப் போல் பாடம் சொல்லிப் புகுத்தல் இயலாது. பக்தியும் வழி பாடும் வெறும் பாடங்கள் அல்ல. உள்ளத்திலிருந்து தோன்ற வேண்டும். ஆசிரியன் உள்ளத்தில் பக்தியிருந்தால் அது தானாக அவனைச் சுற்றி சுவாசனை வீசும். பக்தியானது புஷ்பங்களைப் போல் தானாகவே தன்னுடைய சுவாசனையை விடும்.

மதமாற்றுதலை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்காகத் தற்காலத்தில் எடுக்கும் முயற்சிகளைக் கண்டிக் கிறேன். மதங்களுக்கு ஆள் சேர்ப்பது ஒரு வியாபாரம் ஆகி விட்டது. வரவு செலவுக்கணக்குகள் கூட வைக்கிறார்கள். ஒரு மிஷனரி ரிப்போர்ட்டில் படித்ததாக எனக்கு நினைவுக்கு வரு கிறது. மதம் மாறும் ஆள் ஒன்றுக்கு எவ்வளவு செலவு என்று கணக்குப் போட்டு, அடுத்த வருஷ மகசூல் அறுப்புக்கு எவ் வளவு வேண்டும் என்று செலவுத் திட்டம் போட்டிருந்தது.

இந்திய மக்கள் அனுசரித்து வரும் வழிபாட்டு முறை கள் அவர்களுக்குப் போதும், மாற்றவேண்டிய அவசிய மில்லை என்பது என்னுடைய உறுதியான கொள்கை. கிறிஸ்து மதம், யூதர்கள் மதம், ஹிந்துக்களுடைய பல சமயங்கள், இஸ்லாம், பார்ஸி மதம், எல்லா மதங்களுமே உயிர் கொண்டு வளர்ந்துவரும் மதங்கள். எந்த சமயமுமே பரிபூரணத்தை அடையவில்லை. ஆயினும் அவரவர்களுடைய சமயம் உகந்தது, மிகப் பிரியமான முறைகள். பரஸ்பரம் நட்பும் பரிசயமும் வேண்டுமே ஒழிய 'என்னுடைய முறை சரி,' 'உன்னுடைய முறை தவறு' என்று வீண் பூசல்களில் இறங்கிச் சண்டை பிடிக்க வேண்டியதில்லை. பரஸ்பரம் நட்புரிமைகொண்டு, ஒருவர் சமயத்தை மற்றவர்கள் நன்றாக அறிந்துகொண்டு வாழ்க்கை நடத்தினோமானால் எல்லாருமே குறைகளைத் தீர்த்துக் கொண்டும் சீர்திருத்தங்கள் செய்து கொண்டும் முன்னேற்றம் அடையலாம்.

தவறான முறைகளில் செய்யப்படும் மதமாற்றம் நமக் குத் தேவை இல்லை. உள்ளத்தைச் சுத்தப்படுத்திக் கொள்

வது அவசியம். பாப எண்ணங்களை நீக்கிக்கொண்டு ஆத்ம தரிசனம் பெறவேண்டும். அது அல்லவோ மதமாற்றம். பிறருடைய மதத்தை மாற்ற முயல்வதற்கு முன் நமக்குள் கிடக்கும் குற்றங்களை நீக்கிக் கொள்ளவேண்டும். 'மருந்து கொடுக்கிறேன்' என்று சொல்லும் வைத்தியருக்கே ஆரோக்கியம் இல்லை. " உன் நோயை முதலில் தீர்த்துக் கொள் " என்று சொல்லவேண்டியதாக இருக்கிறது. இது ஒரு பைபிள் வாசகம் !

ல்யூக் 4-23 [யங் இந்தியா 23-4-31]

## 40

ஒரு சமயத்தைப் பிரசாரம் செய்ய வேண்டுமானல் அதற்கு ஒரு வழிதான் உண்டு. அந்தச் சமயத்தின்படி தன் வாழ்க்கையை நடத்தி அதன் மேன்மையைக் காட்டுவதே வழியாகும். வாய் மொழிப் பிரசாரம் எனக்குப் பிடிக்கவே இல்லை. சொற்பொழிவுகள் செய்யும் உபதேசிகளைக் கண்டால் எனக்கு எப்போதும் சந்தேகம். வாயைத் திறவாமல் தங்கள் அறிவுக்கு எட்டின வகையில் சமயக் கொள்கைகளின்படி வாழ்க்கை நடத்துகிறவர்களை அவர்கள் எந்தச் சமயத்தினராயினும் நான் மிகவும் பாராட்டுவேன். மௌனமாகத் தங்கள் சமயங்களைப் பிரசாரம் செய்யும் இத்தகையவர்களுக்கு நான் வணங்குவேன். எளிய வாழ்க்கை நடத்தி ஏழைகளுக்கும் மற்றவர்களுக்கும் பணி செய்வதே உத்தமப் பிரசாரம். ஒரு மல்லிகைப் புஷ்பம் தன்னுடைய சுவாசனையைப் பற்றிப் பேசுவதில்லை. வாசனையை வீசி மௌனமாக இருக்கிறது. அதன் கந்தமே அதன் உபந்யாசமாகும். ஆட்களை வைத்து உபதேசகர்களைச் சம்பளம் கொடுத்து அமைத்து யாராவது ஏற்பாடு செய்தாலும் மல்லிகைப் புஷ்பம் வாங்குபவர்களின் எண்ணிக்கை உயராது. அதன் வாசனையைக் கண்டு வாங்குபவர்கள் தான் வாங்குவார்கள்.

ஒரு சமயத்தில் பக்தி வைத்து வாழ்க்கை நடத்துகிறவனுடைய பரிமளமும் பூவின் மணத்தைப் போன்றதேயாகும். பூவின் மணத்தைக் காட்டிலும் அதிக வேகமாகவே வீசிப் பரவும்.

[ஹரிஜன் 29-3-35]

என்னுடைய மதத்தை நான் விட்டுவிட விரும்பவில்லை. அவ்வாறே ஒரு கிறிஸ்தவனையாவது முஸல்மானையாவது, பார்ஸி அல்லது யூதனையாவது அவனுடைய மதத்தை விட்டுவிட்டு என் மதத்தை ஏற்றுக் கொள்ளும்படி கேட்க மாட்டேன். அவரவர்கள் சமயத்தின்படி அந்தச் சமயத்தின் பெயரைச்சொல்லிக்கொள்கிறவர்கள் நடப்பதில்லை. இந்தக் குறை ஹிந்துக்கள் உட்பட எல்லா மதத்தினரையும் பாதிக்கிறது. என் மதத்தைச் சேர்ந்தவர்களை என்னால் சீர்திருத்த முடியவில்லை. ஏன், என் மதத்தின்படி முற்றிலும் சரியாக நான் நடந்து கொள்வதே மிகச் சிரமமாக இருக்கிறது. இப்படி யிருக்க நான் பிற மதத்தினர்களுக்கு உபதேசப் பிரசாரம் செய்ய முயல்வேனோ? கனவிலும் எண்ணமாட்டேன். பிறர் குற்றம் கண்டு பிடிப்பதற்கு முன் ஒருவன் தன்னுடைய குற்றங்களைக் கண்டு பயந்து மற்றவர்களைக் குறை சொல்லாமலிருக்க வேண்டும். என்னுடைய உறுதியான முடிவு என்னவென்றால், செல்வமும் செல்வாக்கும் படைத்த கிறிஸ்தவ சங்கங்கள் இந்தியாவுக்குச் சேவை செய்ய விரும்பினால் மதத்தை மாற்றும் கருத்தை விட்டுவிட்டு மக்களுக்கு வேறு வழிகளில் பணி செய்து உதவ வேண்டும். இந்திய மக்களையாவது அல்லது கிராமங்களிலுள்ள பாமரர்களையாவது கிறிஸ்தவர்களாக்க வேண்டும் என்ற நோக்கத்தை முற்றிலும் விட்டு விட்டு அவர்களுக்குப் பணி செய்ய வேண்டும். பழக்க வழக்கங்களில் எவ்வளவு குற்றங் குறைகள் இருந்தபோதிலும் அவை இவ்வளவு காலமும் சமூகத்துக்குக் காப்பாக இருந்துவந்தன. பாதிரிமார்கள் என்ன விரும்பிய போதிலும் நாமே என்ன விரும்பிய போதிலும் ஹிந்து சமயத்தில் எது உண்மையோ அது நிற்கும். எது

பொய்யோ அது கழிந்துவிடும். இதைப் பற்றிச் சந்தேக மில்லை. சமயங்கள் உயிர் கொண்டிருப்பதும் மறைந்து போவதும் அவற்றுள் கிடக்கும் ஜீவ சக்தியைப் பொறுத் தது.

[ஹரிஜன் 28-9-25]

என்னுடைய அபிப்பிராயத்தில் கிறிஸ்தவ மதத்தில் இருப்பது போல் ஹிந்து சமயக் கோட்பாடுகளில் மத மாற்றத்துக்கு இடம் கிடையாது. இஸ்லாம் மதத்தில் ஓரளவு இடம் உண்டு என்று சொல்லலாம். ஆரிய சமாஜத் தைச் சேர்ந்தவர்கள் இந்த விஷயத்தில் கிறிஸ்தவக் கோட் பாட்டைப் புதிதாக அனுசரித்து வருகிறார்கள். கிறிஸ்தவர் களைப் பார்த்து நாமும் ஏன் இவ்வாறு செய்யலாகாது என்று ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்தப் புதுமுறை எனக்குப் பிடிக்கவில்லை. இதனால் நன்மையொன்றுமில்லை. தீமையே அதிகம். ஆன்மாவை ஒட்டியது மதக் கொள்கை. ஆண்ட வனை அணுகும் வழி சமயம். அது போய் லௌகீக லாபத்தை அனுசரித்து மத மாற்றங்கள் நடைபெறுகின்றன. ஹிந்து சம்பிரதாயத்தில் அடங்கியுள்ள தத்துவம், எல்லா மதங்களுமே உண்மை என்று போதிக்கிறது. எல்லா மதங் களுமே ஆண்டவனைப் போய்ச் சேரும் வழிகள். அவை எல் லாமே ஆண்டவன் காட்டிய வழிகள். மனிதனுடைய வாக் கின் வழியாக வந்த ஞானத்தில் மனிதனுடைய குறைகள் ஓரளவு கலந்து இருக்கின்றன. அவ்வளவே. நியாயமாக நடத்தவேண்டிய சுத்தி இயக்கம், அவரவர் தத்தம் சமயா சாரங்களைத் திருத்திக் கொள்வதேயாகும். பிறருடைய சமயத்தைத் திருத்துவதில் இல்லை. தத்தம் குணங்களைத் திருத்திக் கொள்ளவேண்டும். ஒரு அறையை விட்டு இன் னொரு அறைக்குப் போவதில் என்ன பிரயோசனம்? என் மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் கடவுளை மறந்து நடந்து கொண்டிருக்கும்போது, மற்றவர் களை நான் எப்படித் திருத்த முடியும்? என் வியாதியை

நான் தீர்த்துக்கொள்ள முடியவில்லை. மற்றவர்களிடம் சென்று, "நான் வைத்தியன். உங்கள் வியாதியைத் தீர்ப்பேன்," என்று சொன்னால் அது செல்லுமா? செல்லாது. சரீர வியாதி விஷயத்தில் செல்லாதது ஆன்ம விஷயத்தில் செல்லுமா?

[ யங் இந்தியா 29-5-24]

## 41

பாரம்பரிய இயற்கைத் தர்மத்தில் எனக்கு ரொம்ப நம்பிக்கை. ஹிந்து குடும்பத்தில் பிறந்தபடியால் நான் ஹிந்து சமயத்திலேயே இருந்துவிடுகிறேன். என்னுடைய ஆத்மீக வளர்ச்சிக்கு அது உதவாததாயின் நான் அதை ஒரு வருத்தமுமின்றி விட்டு விட்டு வெளியேறியிருப்பேன். என்னுடைய மனோ தர்மத்துக்கு உகந்தது அல்லதாயின், அதைத் தள்ளிவிட்டேயிருப்பேன். ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். நான் அறிந்த எல்லாச் சமயங்களுக்குள், விசால நோக்கம் கொண்டது ஹிந்து மதம்தான் என்பது உறுதி. சமய வேறுபாட்டைப் பொருட்படுத்தாமல் எல்லா மதத்தினரையும் நன்மதிப்போடு கௌரவிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது ஹிந்து சமயத்தைப்போல் வேறு எந்த மதத்திலும் இல்லை. கொள்கைகளைப்பற்றிய சுதந்திரம் ஹிந்து மதத்தில் அளவு கடந்து கிடக்கிறது. இந்த விசேஷம் என்னுடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. மற்ற சமயங்களைக் கண்டு ஹிந்து மதத்தினர் வெறுப்புக் கொள்ளமாட்டார்கள். அவற்றிலுள்ள நல்ல அம்சங்களை மதித்துத் தமதாக்கிக்கொள்ளவும் ஹிந்து சமயம் இடம் தருகிறது

'பிறரைத் துன்புறுத்தலாகாது என்கிற தர்மம் எல்லா மதங்களுக்கும் பொதுவாயினும் ஹிந்து மதத்தில் அஹிம்ஸைக்கு மிக உயர்ந்த ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அஹிம்ஸையே தர்மத்தின் சிறந்த அம்சமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஜெயின மதமும் பௌத்த மதமும் ஹிந்து

சமயத்துக்குப் புறம்பானதாக நான் கருதுவதில்லை. மக்கள் மட்டிலுமல்ல, பிராணி வகை அனைத்தையும் ஒன்றாகக் கருதுவது ஹிந்து மதக் கொள்கை. அதன் சின்னமே பசுவுக்கு நாம் தரும் கௌரவமும் பூஜையும். எல்லாப் பிராணிகளையும் ஒன்றாகக் கருதி, பிறர் நோவைத் தன் நோவாகப் பாவிப்பது அஹிம்ஸா தர்மம். இதுவே கோ பூஜையின் பொருள். மனிதன் பசுவாகவும் புழுவாகவும் ஜென்மம் எடுப்பான் என்ற கொள்கையும் சர்வ ஜீவ சமத்துவத்தைக் குறிக்கிறது. ஹிந்து சமயத்தில் எல்லாவற்றிலும் சிறந்த அம்சம் வர்ணாசிரம தர்மம். உண்மையை நாடிய ரிஷிகள் உண்மை ஒன்றையே மதித்த நம்முடைய முன்னோர்கள் வர்ணாசிரம தர்மத்தைக் கண்டார்கள்.

[யங் இந்தியா 20-10-27]

உன்னுடைய சமயம் என்ன என்று கேட்பவர்களுக்கு என்னுடைய சமயம் சனாதன ஹிந்து தர்மம் என்பேன். ஏனெனில்,

1. வேதம், உபநிஷத்துக்கள், 'புராணங்கள்' இன்னுமுள்ள ஹிந்து சாஸ்திரங்களையும் நான் அங்கீகரிக்கிறேன். கடவுள் அவதாரங்கள் எடுப்பதையும் புனர் ஜன்மக் கொள்கையையும் அங்கீகரிக்கிறேன்.

2. வர்ணாசிரம தர்மத்தையும் அங்கீகரிக்கிறேன். ஆனால் பழைய வைதீக முறையில்தான் அங்கீகரிக்கிறேன். தற்காலத்தில் வழக்கத்திலிருக்கும் கெட்டுப்போன முறையில் அல்ல.

3. கோபூஜையை அங்கீகரிக்கிறேன். இதுவும் மக்கள் சாதாரணமாகச் செய்யும் பூஜைமட்டுமல்ல. மிக விரிந்த பொருளில் நான் அதை அனுசரிக்கிறேன்.

4. மூர்த்தி பூஜையை நான் கூடாது என்று சொல்ல மாட்டேன். அதுவும் நல்ல பூஜை முறையாகும்.

வேதங்களும் மற்ற சாஸ்திரங்களும் தெய்வத்தினின்று நேராக அடைந்தவையாகக் கருதுவார்கள். நான் அவ்வாறு சொல்ல மாட்டேன். ஹிந்துக்களுடைய வேதம்

மட்டும் தெய்வீகம் என்றும், கிறிஸ்தவர்கள் இஸ்லாமியர்கள் பார்ஸியர்கள் இவர்கள் வேதமாகக் கருதும் சாஸ்திரங்களைத் தெய்வீகம் அல்ல என்றும் சொல்ல மாட்டேன். நம்முடைய வேதத்தைப் போலவே பைபிளும், குர் ஆனும், செந்து ஆவேஸ்தாவும் தெய்வீகமே.

சாஸ்திரங்களை நான் அங்கீகரிக்கிறேன் என்றால் அதில் காணும் ஒவ்வொரு மந்திரமும் ஒவ்வொரு மொழியும் என்னைக் கட்டுப்படுத்தும் என்பது அல்ல. மேலும் இந்த அபார சாஸ்திர புஸ்தகங்களை யெல்லாம் நான் நேரில் படித்தா இருக்கிறேன்? இல்லை. ஆயினும், அந்த சாஸ்திரங்களின் முக்கிய தத்துவங்களை உண்மை என்று தெரிந்தே அங்கீகரிக்கிறேன். அந்த சாஸ்திரங்களில் காணும் மொழிகளுக்குப் பிறர் கூறும் பொருளை நான் சில சமயம் ஒப்புக் கொள்ளாமலும் இருக்கலாம். எவ்வளவு படித்தவர்களாயினும் அவர்கள் சொல்லும் சில வியாக்கியானங்களை நான் மறுக்கவும் கூடும். என்னுடைய விவேகத்தில் தர்ம உணர்ச்சிக்கு விரோதமா யிருப்பின் மறுப்பேன். இப்போதுள்ள மடாசாரியர்களும் சாஸ்திரம் ஓதிய பண்டிதர்களும் சொல்லும் அர்த்தத்தை ஒப்புக்கொண்டே தீர வேண்டும் என்று யாரேனும் சொன்னால் ஒப்புக் கொள்ள மாட்டேன். கண்டிப்பாக மறுப்பேன். என்னுடைய அபிப்பிராயத்தில் நம்முடைய சாஸ்திரங்களைச் சரியாக எடுத்துச் சொல்லுகிறவர்கள் தற்போது மிகக் குறைவு. சாஸ்திர அறிவு பெரும் குழப்பத்தில் இருக்கிறது.

அஹிம்ஸா தர்மத்தைப் பூரணமாக நடத்தாதவன்; சத்தியத்தின் பழுதற்ற வடிவத்தைக் காணாதவன், பிரம்மசரியத்தை வழுவாமல் நடத்தி பூரண சுத்தமடையாதவன், பொருள்ப் பற்றை முற்றிலும் விட்டு விட்டு விடுதலையடையாதவன், சாஸ்திரம் உண்மையில் காண மாட்டான் என்பது வாக்கியம். இதை நான் முற்றிலும் அங்கீகரிக்கிறேன்.

ஹிந்து சம்பிரதாயத்தில் பரம்பரையாக வழங்கும் குரு-ய முறையை நான் அங்கீகரிக்கிறேன். ஆனால் இந்தக்

காலத்தில் கோடிக்கணக்கிலுள்ள மக்களுக்குத் தகுந்த குரு கிடைக்க மாட்டான். படிப்பிலும் சீலத்திலும் குறைவற்ற சம்பத்தைப் பெற்ற ஆசாரியன் கிடைப்பது அரிது. இதனால் நம்முடைய சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களை நாம் அறிய முடியாது என்று எண்ணக் கூடாது. எந்த மதத்தின் அடிப்படைத் தத்துவங்களையும் எளிதிலேயே அனைவரும் காணலாம். அவ்வாறே ஹிந்து மதக் கொள்கைகளும். ஈசன் ஒருவன் உண்டு. பாப புண்ணியத்தின் பலனாக மறு ஜன்மம் உண்டு, முக்தி உண்டு. இது ஹிந்து சமுதாயத்தைச் சேர்ந்த எந்தப் பாமரனுமே அறிவான். நான் ஒரு சீர்திருத்தக்காரன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சீர்திருத்த உற்சாகத்தில் ஹிந்து மதத்தின் அடிப்படைக் கொள்கை எதையும் விட்டுவிட மாட்டேன்.

மூர்த்தி பூஜையை நான் தவறு என்று சொல்ல மாட்டேன் என்றேனல்லவா? அவனவனுடைய பழக்க வழக்கம் இந்த விஷயத்தில் மிக முக்கியமான அம்சம். சில விதமான உருவ வழிபாடுகள் சிலருக்குத்தான் பிடிக்கும். பிறருக்கு பக்தியை உண்டாக்க மாட்டாது. அதனால் நாம் தவறான முடிவுக்கு வரலாகாது. ஏதேனும் ஒரு வடிவத்தையோ குறியையோ வைத்துத்தான் தெய்வ பூஜை செய்வது முடியும். அதுவே இயற்கை. குறியேதும் இல்லாமல் பூஜை செய்வது உள்ளத்துக்குத் திருப்தி தராது. மூர்த்தி பூஜையை விலக்கி விட்ட கிறிஸ்தவர்கள் ஏன் கோவிலுக்குப் போய்ப் பிரார்த்தனை செய்கிறார்கள்? வேறிடத்தில் பிரார்த்தனை செய்வது ஏன் போதாது?

ஏதேனும் ஒரு லிங்கத்தை வைத்துக்கொண்டால் பூஜைக்கும் பக்திக்கும் உதவுகிறது. மூர்த்தியைப் பூஜை செய்யும் எந்தப் பாமர ஹிந்துவும் அந்த மூர்த்தியே கடவுள் என்று எண்ணுவதில்லை. கடவுளைத் தியானிப்பதற்கு ஒரு சாதனமாகத்தான் எண்ணுகிறான். ஆகவே, மூர்த்தி பூஜை குற்றம் என்று கருதுகிறவர்களில் நான் ஒருவன் அல்ல.

நான் சொன்னதிலிருந்து ஒன்று தெளிவாகக் காண லாம். ஹிந்து மதத்தில் எவனையும் வேண்டாம் என்ப தில்லை. உலகத்தில் தோன்றிய எல்லா நபிகளுக்கும் ரிஷி களுக்கும் முனிவர்களுக்கும் ஹிந்து மதத்தில் இடமுண்டு. பிரசாரம் செய்து மக்களை மதத்தினின்று மாற்றும் சம்பிர தாயம் அதில் கிடையாது. பாரத நாட்டில், காட்டிலும் மலையிலும் வசித்து வந்த பல குலத்தினரை ஹிந்து சமயம் தனதாக்கிக் கொண்டிருப்பது உண்மை. ஆனால் இதில் மதமாற்றம் ஒன்றுமில்லை. இயற்கை பரிணம முறையில் நடந்த நிகழ்ச்சியாகும். அவரவர் தாம் தாம் அறிந்தவகை யில் தத்தம் தர்மத்தின்படி ஈசனை வழி படலாம் என்பது ஹிந்து சமயத்தின் சிறந்த உபதேசம். எந்தப் புறசமயத் தோடும் சண்டை கிடையாது. சாந்தமாக எல்லாச் சமயங் களோடும் ஹிந்து சமயம் ஒத்து வாழும்.

[யங் இந்தியா 6-10-21]

## 42

புத்தர், கடவுள் இருப்பதாக நம்பவில்லை என்று பலர் சொல்லக்கேட்டிருக்கிறேன். சில நூல்களிலும் அப்படியே எழுதி யிருக்கிறார்கள். இது சுத்தத் தவறு. பௌத்த மதத் தின் முக்கிய உபதேசத்துக்கு இது விரோதமாகும். கடவுள் இல்லை என்றால் புத்தருடைய உபதேசமெல்லாம் பயனற் றுப் போகும். புத்தர் நாஸ்திகர் என்று சொல்வது உண்மையல்ல. கடவுள் பெயரை வைத்து அந்தக் காலத் தில் நடைபெற்ற பல கெட்ட விஷயங்களை அவர் நிராகரித் தார். அவரை நாஸ்திகர் என்று எண்ணிக் குழப்பியதற்கு இதுவேதான் காரணம். யாரையாவது ஈசுவரன் துவே ஷிப்பான் என்றால், அத்தகைய ஈசுவரன் இல்லை என்று புத்தர் கண்டிப்பாகச் சொன்னார். பூமியை யாளும் அரசர் களைப்போல் அக்கிரமம் செய்தும், பொருளுக்காக அநி

யாயமாகச் சிலரை விரும்பியும் சிலரை வெறுத்தும் வரும் ஒரு கடவுள் இல்லை என்றுதான் புத்தர் சொல்வார். ஜீவ ஹிம்ஸை செய்து அதைப் பூஜையாகச் சமர்ப்பித்தால் அதைப் பெற்றுக்கொண்டு சந்தோஷப்படுவார் என்று எண்ணிய அறியாமையை அவர் மிகவும் வெறுத்தார். ஆண்டவன் படைத்த சாதுப் பிராணிகளின் உயிரை மாய்த்துச் செய்யப்பட்ட யாகங்களைக் கூடவே கூடாது என்று சொன்னார். ஆகவே புத்தர், கடவுளை அவனுக்கு உரிய அரியாசனத்தில் அமர்த்தினார். அவ்வளவே யொழிய, 'அவன் இல்லை' என்று சொன்னதில்லை. கருணை வள்ள லான ஈசனை மறந்து ஒரு குரூர அரக்கனை அவனுக்குப் பதிலாக வைத்துப் பூஜை செய்ததை ஒழித்து, மறுபடியும் உண்மை ஆண்டவனுக்கு மக்கள் உள்ளத்தில் இடம் செய் தார். வாழ்க்கையில் இன்றியமையாதது சீலம். பிரபஞ் சத்தின் ஆட்சி முறையே தருமம். அது என்றும் மாறுமல் நிலையாக நிற்கும் என்று புத்தர் ஹிந்து மதத்தில் சொல்லப் பட்டிருப்பதை ஊர்ஜிதப்படுத்திச் சொன்னார். தருமமே கடவுள் என்று சொன்னார்.

ஈசனுடைய செங்கோலும் சட்டமும் நிரந்தரமானது. என்றும் மாறுபடாதது. அவன் வேறு; அவன் சட்டம் வேறல்ல. அவனுடைய பரிபூரண சுபாவத்துக்கே தருமம் என்று பெயர். பௌத்த மதத்தில் கடவுள் இல்லை, தருமம் தான் உண்டு என்று சிலர் அதைப் பற்றிக் குழப்பிக் கொள்வதற்கு இதுவே காரணம். இதனாலேயே நிர் வாணம் என்றால் இன்னது பொருள் என்று சரியாகப் புரிந்து கொள்ளாமல் வாதித்து வருவதும். நிர்வாணம் என்றால் சூன்யமாகப் போவது அல்ல. புத்தருடைய சரித் திரத்தினின்று நான் அறிந்துகொண்ட முக்கியத்துவம் என்னவென்றால், நமக்குள் இருக்கும் குற்றங்கள் எல்லாம் கழிந்து முற்றிலும் நிர்மலமாவதுதான் நிர்வாணம். மாசு கள் தீர்ந்து அழிந்து போகவேண்டியதெல்லாம் அழிந்து விட்டுப் பூரண சுத்தப் பொருள் ஆவதுதான் நிர்வாணம். நிர்வாணம் என்பது மயானமல்ல. ஆத்மா தனக்குரிய

விடுதலை பெற்று வீடு அடைந்து பெறும் பேரின்பமே நிர்வாணம்.*

[யங் இந்தியா 24-11-27]

கடவுளுக்குக் கற்பித்த குரூர லட்சணங்களை அகற்றி விட்டு உரிய ஸ்தானத்தில் அமர்த்தியது போக, புத்தர் உலகத்துக்குச் செய்த பெரும் பணி ஜீவகாருண்ய உபதேசம். எந்தப் பிராணியின் உயிரையும் துன்புறுத்தலாகாது என்று புத்தர் போதித்த உபதேசமே அவருடைய சிறந்த பணி.

[யங் இந்தியா 20-1-27]

## 43

ஏசுநாதருடைய சரித்திரம் உண்மைச் சரித்திரமா அல்லது வெறும் கதையா என்கிற கேள்வியைப் பற்றி நான் கவலைப்பட மாட்டேன். அந்த விசாரமே எனக்கு வேண்டியதில்லை. ஏசுநாதருடைய சரித்திரம் உண்மையல்ல; அது ஒரு கற்பனைக் கதை என்று யாரேனும் நிரூபித்து விட்டாலும் அது என்னுடைய கொள்கையைப் பாதிக்காது. ஏசுநாதர் உண்மையில் இருந்தவராயினும் சரி, அவருடைய சரித்திரம் கற்பனையாக இருந்தாலும் சரி, அவருடைய உபதேசமாக நாம் பெற்றிருப்பதே போதும். அதில் காண்பது சத்திய வாக்கு. அந்தப் பேருண்மை சிறிதளவும் குறைவுபடாது.

[யங் இந்தியா 31-12-31]

* 'நிர்வாணம்' என்பது பௌத்த மதத்துக்கே உரிய தனி மொழி அல்ல. பகவத்கீதை இரண்டாவது அத்தியாயத்துக் கடைசி சுலோகத்தில் இந்தச் சொல்லைக் காணலாம். அந்த அத்தியாயத்தில் உபதேசிக்கப்பட்ட முறையில் மனிதன் வாழ்ந்தால் 'நிர்வாண'த்தை அடைவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் ஐந்தாவது அத்தியாயத்தில் 24, 25 26வது சுலோகங்களிலும் ஆறுவது அத்தியாயத்தில் 15வது சுலோகத்திலும், 'நிர்வாண' நிலையைக் குறிப்பிட்டிருக்கிறது. 'நிர்வாணம்' என்பது வீடு அல்லது முக்தி.

ஏசுநாதர் ஒருவரே தெய்வ அவதாரம் என்று நான் ஒப்புக்கொள்ள முடியாது. கண்ணன், ஸ்ரீராமன், முகம்மது நபி, ஸோரா அஸ்தர் முதலியவர்களுக்கு எவ்வளவு தெய் விகம் உண்டோ, அவ்வளவு ஏசுநாதருக்கும் உண்டு. பைபிளில் இருக்கிற ஒவ்வொரு மொழியும், வேதத்திலுள்ள ஒவ்வொரு மொழியும், குர் ஆனிலுள்ள ஒவ்வொரு வாக்கிய மும் கடவுள் வாக்கியம் என்று நான் எண்ண முடியாது. ஆனால் இந்தப் பல சமய சாஸ்திரங்கள் மொத்தத்தில் தெய்வ வாக்கு என்றே சொல்லுவேன். ஒவ்வொரு வரியும் புறக்கணிக்கக் கூடாத கடவுள் உத்தரவு என்று நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். என்னைப் பொருத்த மட்டில் கீதை, குர்ஆன், பைபிள், இவை ஒவ்வொன்றுமே மதிப்புக் குரிய தெய்விக சாஸ்திரமாகும்.

[ஹரிஜன் 6-3-37]

“ நீங்கள் ஏசுவை என்னவாகக் கருதுகிறீர்கள்?” என்று ஒரு கேள்வி. அதற்கு நான் சொல்லும் விடை என்ன வென்றால், உலகத்தில் அவதரித்து மக்களுக்கு உபதேசம் செய்த முனிவர்களுக்குள் ஒருவர் என்பேன். மிகப் புனித மான உபதேசம் செய்தவர். கிறிஸ்தவர்களுக்கு அவர் ஆண்டவனுடைய ஔரஸ புத்திரர். நான் அவ்வாறு ஒப்புக்கொள்ளாத படியினால் அவருடைய உபதேசத்தின் மகிமை எள்ளளவும் குறையாது. கிறிஸ்தவர்களுடைய இந்தக் கொள்கையை ஒப்புக் கொள்ளாதபடியினால் என் னுடைய வாழ்க்கையில் அவருடைய உபதேசம் பயன்படுவ தில், ஒரு ஏற்றத் தாழ்வும் உண்டாகாது. ஏசுநாதர் மக்களுக் குச் சொன்ன உண்மையும் காட்டிய வழியும் எனக்கு இல்லா மற் போகுமா? கட்டாயம் போகாது.

உலகத்திலுள்ள பல சமயங்களை ஒன்றுக்கொன்று தாரதம்யம் பார்த்து மதிப்பிட முடியாது. அப்படிச் செய் யப் பார்ப்பதும் தவறாகும். அவை யெல்லாமே மனிதன் வாழ்க்கையை நல் வழியில் செலுத்தும். அதற்காகவே அவை தோன்றின. ஏசுநாதருடைய சரித்திரம் மக்களை நல்

வழியில் செலுத்துவதற்கு மிகவும் பயன்படுகிறது. அவர் கிறிஸ்து மார்க்கத்துக்கு மட்டும் உரிமைப்பட்டவர் அல்ல. உலகத்தில் எல்லா ஜாதியினருக்கும் அவரை உரிமை பாராட்டும் பாத்தியம் உண்டு. எந்த ஜாதியினராயினும் பரம்பரையாக வந்த எந்தத் தெய்வத்தை வழிபடுபவர்களாயினும் அவர்கள் எல்லாருமே ஏசுநாதரைத் தங்கள் உடைமையாகக் கருதலாம்.

[மாடர்ன் ரிவ்யூ, அக்டோபர் 41]

பகவத்கீதையில் செய்யப்பட்ட உபதேசத்துக்கும் ஏசுநாதர் குன்றின் மேல் நின்று செய்த உபதேசத்துக்கும் ஒரு வேற்றுமையும் என்னல் காண முடியவில்லை. ஏசுநாதர் உள்ளத்தில் பதியும்படியாகச் சொன்ன உண்மைகளே பகவத்கீதையிலும் சூத்திரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பகவத்கீதையானது மானச தர்மத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு வைராக்கியத்தின் மேன்மையை நிரூபிக்கிறது. பௌதிக சாஸ்திரத்தில் உண்மைகளை நிரூபித்துக் காட்டுவது போல் பற்று நீக்கி வாழ்க்கை நடத்துவதே மேலான வழி என்று விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இதையே குன்றின்மேல் நின்று ஏசுநாதர் மிக அழகான மொழிகளில் உபதேசித்திருக்கிருர். பைபிளில் பூர்வ பாகத்தில் காணப்படும் சில பகுதிகள் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் புதிய சுவிசேஷம் என்று சொல்லப்படும் பிற்பகுதி என்னுடைய உள்ளத்துக்கு அளவு கடந்த சாந்தியும், எல்லையற்ற மகிழ்ச்சியும் தந்தது. இன்று எக்காரணத்தினலாவது திடீர் என்று பகவத்கீதை மக்களுக்குக் கிடைக்காமல் மறைந்து போனலும், அதில் சொல்லப்பட்ட தனைத்தையும் அனைவரும் மறந்துவிட்டு அழிந்தே போனதாக ஏற்பட்டாலும், ஏசுநாதருடைய வாக்கியங்கள் மட்டும் இருந்தால் போதும். கீதையில் நான் அடையும் மகிழ்ச்சியையும் சாந்தியையும் அதனின்று அடைவேன்.

[யங் இந்தியா 22-12-27]

கிறிஸ்து மதம், பௌத்த மதம், ஹிந்து மதம் - இவற்றைப் போலவே இஸ்லாம் மார்க்கமும் சாந்தி மார்க்கமாகும். பேதங்கள் இல்லை என்று நான் சொல்லவில்லை. சமயக் கொள்கைகளில் வேறுபாடுகள் உண்டு. ஆனால் இச் சமயங்கள் அனைத்துக்கும் நோக்கம் ஒன்றே.

[யங் இந்தியா, 20-1-27]

பாரத நாட்டின் ஆத்மீகச் செல்வம் இஸ்லாம் மார்க்கத்தினின்று இரு விதத்தில் லாபம் அடைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆண்டவன் ஒருவனே, கடவுள் ஒன்று என்பதைப் பற்றி எள்ளளவும் குழப்பமின்றி உறுதியாக ஊர்ஜிதப் படுத்தியது இஸ்லாம் நமக்குச் செய்த ஒரு பணி. மக்களிடையே சகோதர சமத்துவத்தை வாழ்க்கையில் நடத்திக் காட்டியது இரண்டாவது பணி. இந்த இரண்டு பணிகளையும் நான் பெரிதாகக் கருதுகிறேன். ஹிந்து சாஸ்திரத்திலும் சகோதர சமத்துவம் இருக்கிறது. ஆயினும் அதைப் பலவிதமாக ஆண்டு குழப்பிவிட்டிருக்கிறார்கள். வேதாந்தமாகச் சமத்துவம் சொல்லுகிறார்களே யொழிய, வாழ்க்கையில் சகோதர தர்மம் பழுதுபட்டிருக்கிறது. அதைப் போலவே, ஹிந்து சமயங்களில் கடவுள் ஒன்றேயாயினும் ஆசரணையில் பல தெய்வங்களை வைத்துக் கொண்டு வழிபடுவதால் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஈசன் ஒருவனே என்று இஸ்லாம் மார்க்கத்தில் வேற்றுமைக்கு இடந்தராமல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வழியில் பாரத நாட்டின் பண்பாடு இஸ்லாம் மார்க்கத்தினின்றும் லாபம் அடைந்திருக்கிறது என்று சொல்லலாம்.

[யங் இந்தியா, 21-3-29]

## 44

"ஹிந்து மதத்திலும் ஈசன் ஒருவனே என்பது உறுதிப்பட்டால் கிறிஸ்தவ மதமும் ஹிந்து மதமும் இரண்டும் கூட்டுறவு முறையில் இந்தியாவின் நன்மைக்குப் பாடுபடலாமே" என்ருர் ஒரு கத்தோலிக்கப் பாதிரியார். இதைக் கேட்டு காந்திஜி சொன்னுர்:

"இந்தக் கூட்டுறவுச் சேவை ஏற்படவேண்டுமென்று மிகவும் விரும்புகிறேன். ஆனல் தற்காலத்து கிறிஸ்தவப் பிரசாரகர்கள் ஹிந்து மதத்தைப்பற்றிக் கேவலமாகப் பேசி வருகிருர்கள்; அருவருப்பு உண்டாக்க முயல்கிருர்கள். ஹிந்து மதத்தை வெறுத்துத் துறந்து விட்டாலொழிய கடவுளை அடையமாட்டீர்கள் என்று ஹிந்துக்களுக்குச் சொல்லி வருகிருர்கள். பிரசாரம் இந்த முறையில் நடந்து வரும் வரையில் இரண்டு மதங்களுக்கும் கூட்டுறவு எப்படி நடைபெறும்? முடியாது. கிறிஸ்து மதத்தில் பக்தியோடு வாழும் ஒருவன் மௌனமாகத் தன் மார்க்கத்தை அனுசரித்து இந்தியாவில் பணிசெய்து கொண்டுபோனல் அதனல் எவ்வளவோ நன்மை யுண்டாகும். உண்மையான கிறிஸ்துவ வாழ்க்கையின் சுகந்தம் ஹிந்து சமுதாயத்தில் வீசிப் பரிமளிக்கும். ஒரு புஷ்பம் ஏதும் பேசாமல் தன் சுவாசனையைத் தருகிறது, சுவாசனை வீசுவதே அதன் பான்மை. தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்வதற்காக அது சுகந்தம் தருவதில்லை. அதன் சுபாவமே சுகந்தம் வீசுவது. இதைப் போலவே, எந்த மதத்தைச் சேர்ந்த பக்தி மார்க்கமும் நல்வாழ்க்கையும். இந்தப் பரஸ்பர நிலைமை ஏற்பட்டால் உலகத்தில் சாந்தி நிலவும். மக்களுக்குள் சினேக பாவம் வளரும். கிறிஸ்து மார்க்கத்தை மற்றவர்கள் ஒப்புக்கொள்ளச் செய்யவேண்டும் என்று ஒரு யுத்த முறையிலே வேலை செய்தால் சாந்த நிலை ஏற்படாது. சினேகமும் வளராது. இந்தத் தவருன முறைக்குப் பைபிளில் ஆதரவு கிடையாது."

**பாதிரியார்:** இந்தியர்கள் தெய்வம் ஒன்றே என்று

ஒப்புக்கொண்டு பல தேவதைகளைப் பூஜை செய்வதை நிறுத்திவிட்டால் இந்தச் சிக்கல் தீருமல்லவா?

**காந்திஜி** : கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த மக்கள் எல்லாம் இந்த அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்வார்களா? அவர்கள் எல்லாரும் ஒன்றுபட்டிருக்கிறார்களா?

**பாதிரியார்** : கிறிஸ்தவ மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஒன்றாக இல்லை. உட்பிரிவுகள் இருந்து வருகின்றன என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

**காந்திஜி** : ஆனபடியால் ஹிந்து மதத்துக்கும் கிறிஸ்துவ மதத்துக்கும் சமாதானம் செய்யும் உங்களுடைய யோசனை வெறும் வாதம் மட்டுந்தானா? காரியாம்சத்தில் உபயோகப்படாதல்லவா? கடவுள் ஒருவரே என்கிற கொள்கை இஸ்லாமுக்கும் கிறிஸ்துவ மதத்துக்கும் பொதுவான கொள்கை. ஆயினும் அந்த இரண்டு மதங்கள் ஒன்றாக இணைந்துவிடவில்லை, அந்த இரண்டு மதங்களுமே இணைந்து ஒரு மதமாகவில்லை என்றால் நீங்கள் இப்போது சொல்லும் கிறிஸ்துவ - ஹிந்து இணைப்பு அதைவிட அசாத்தியமல்லவா? இதைப்பற்றி என்னுடைய யோசனை வேறு, அதைச் சொல்வதற்குமுன் உங்களுக்கு நான் ஒன்று எடுத்துக்காட்ட வேண்டும். ஹிந்துக்கள் கடவுளின் ஏகத்துவத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்றும், பல தெய்வங்களை வெவ்வேறாக வைத்துப் பூஜை செய்கிறார்கள் என்றும், மூர்த்தி பூஜைக்காரர்கள் என்றும் நீங்கள் குறை கூறுவதை நான் சரியென்று ஒப்புக்கொள்ள முடியாது. தேவர்கள் பலர் இருப்பதாகத்தான் ஹிந்துக்கள் சொல்கிறார்கள். உண்மை. ஆனால் தேவர்களுக்கெல்லாம் தேவனான ஒரு ஈசன் உண்டு என்பது ஹிந்துமதம். இதை நீங்கள் சரியாக அறியவில்லை. மக்களுக்கு மக்களின் உலகம் உண்டு. மிருகங்களுக்கு மிருகங்களின் உலகம் வேறு. அதைப் போலவே மானிட ஜாதியைவிட உயர்ந்த ஒருவகை தேவர்கள் நம்முடைய கண்களுக்குப் புலனாகாதவர்கள் இருக்கிறார்கள் என்றும் அவர்களுடைய உலகமே வேறு என்றும் ஹிந்து சமய சாஸ்திரங்களில் சொல்லப் படுகிறது. ஹிந்து

சாஸ்திரத்தில் தேவர், அல்லது தேவதை என்ற பதங்களுக்கு நீங்கள் கடவுள் என்று பொருள் செய்துகொண்டு குழப்பிப் பேசி. வருகிறீர்கள். கடவுளுக்கு ஆங்கிலத்தில் உள்ள சொல்லை தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் உபயோகப்படுத்துவது தவறு.

## 45

காந்திஜி தொடர்ந்து கூறினர் :

ஆங்கில மொழியில் God என்பது ஹிந்து சாஸ்திரங்களில் **ஈசுவரன்**, தேவாதி தேவன், கடவுள் என்று வழங்கும். ஆனபடியால் மானிட ஜன்மத்தைவிட உயர்ந்த உயிர் வர்க்கங்களாகிய தேவர்களுக்கு God என்கிற ஆங்கில மொழியை வைத்துச் சொல்வது தவறு. அதனால் ஏற்பட்ட குழப்பமே யொழியக் கடவுள் ஒன்றே என்கிற உண்மை ஹிந்து மதத்திலும் உறுதியாகக் கொள்ளப்பட்டதேயாகும். நான் ஹிந்து மதத்தை முற்றிலும் ஒப்புக்கொண்டவனேயாவேன். கடவுளுக்குப் போட்டியாக வேறு ஒரு தெய்வமில்லை என்பதைப்பற்றி என் மனத்தில் எப்போதும்சந்தேகமிருந்ததில்லை. என்னுடைய குழந்தைப் பருவத்திலும்கூட இதைப் பற்றி என் மனத்தில் சந்தேகம் இருந்ததில்லை. ஈசன் ஒருவனல்ல, பல ஈசுவரர்கள் உண்டு என்று யாரும் எனக்குச் சொன்னதுமில்லை.

மூர்த்தி பூஜையைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும். எந்தச் சமயத்திலுமே சரி, ஏதேனும் ஒரு லிங்கத்தை வைத்துத்தான் கடவுளை வழிபடவேண்டும். முஸல்மான்களைப் பாருங்கள். மசூதியைக் கடவுள் குடியிருக்கும் வீடாகப் பாவிக்கிறார்கள். அந்தக் கட்டிடத்தைக் காப்பதற்கு உயிரைக்கொடுக்க அவர்கள் தயார். கிறிஸ்தவர்கள் ஏன் கோவிலுக்குப் போய்ப் பிரார்த்தனை செய்கிறார்கள் ? பிரார்த்தனைக்குக் கோவில்தான் இடம் என்று ஏன் நினைக்கிறார்கள்? பிரமாணம் செய்யும்போது ஏன் பைபிள் புஸ்த

கத்தைத் தொட்டுச் சத்தியம் செய்கிறார்கள்? இந்தச்சம்பிரதாயங்களைப்பற்றி நான் குறை கூறவில்லை. ஏதேனும் ஒரு சின்னம் வழிபாட்டுக்கு அவசியம் என்பதற்காகத்தான் எடுத்துச் சொல்லுகிறேன். மசூதிகள் கட்டவும் சமாதிகள் கட்டவும் லட்சக்கணக்கில் ஏன் பணம் செலவு செய்கிறார்கள்? அதுவும் ஒருவித மூர்த்தி பூஜைதானே! ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மேரி அம்மை முதலிய விக்கிரகங்கள் முன் ஏன் மண்டியிட்டு வணங்குகிறார்கள்? கல்லில் செதுக்கிய விக்கிரகமாயினும் சரி, படங்களாயினும் சரி, கண்ணாடியில் எழுதிய சித்திரமாயினும் சரி, பல வடிவங்களின் முன் விழுந்து நமஸ்கரிக்கவில்லையா?

**பாதிரியார்**: அது வேறு விஷயம், என்னுடைய தாயாரின் படம் ஒன்றை நான் வைத்துக்கொண்டு அன்பு காட்டுவது போலத்தான் நீங்கள் சொல்லுவதெல்லாம். என்னைப் பெற்றவர்களின் படத்தை நான் முத்தமிட்டு அன்பு காட்டினேனானால் அது மூர்த்தி பூஜையாகாது. கிறிஸ்தவ முனிவர்களையாவது, முனிவர்களின் உருவங்களையாவது நாங்கள் வணங்குவது கடவுள் பூஜையல்ல. நாங்கள் பூஜிப்பது ஆண்டவன் ஒருவனையே. அவன்தான் ஆதி கர்த்தா; ஈசன், வேறொருவருமல்ல.

**காந்திஜி**: நாங்கள் பூஜிப்பதும் கல்லையும், செம்பையும் அல்ல. கல்லிலும் செம்பிலும் உள்ள கடவுளைத்தான் நாங்கள் பூஜிப்பது. விக்கிரகம் அழகாக இருந்தாலும் சரி, கரட்டு லிங்கமாயினும் சரி, அது ஒரு லிங்கமே யொழிய கடவுள் அல்ல.

**பாதிரியார்**: ஆனால் கிராமத்திலுள்ள பாமரர்கள் கல்லைத்தானே கடவுள் என்று எண்ணுகிறார்கள்.

**காந்திஜி**: மன்னிப்பீராக. அவர்கள் செலுத்தும் பூஜை கல்லுக்கு அல்ல. நீங்கள் வழிபடும் ஆண்டவனையே தான் அந்தக் கல்லின் வழியாக அவர்கள் வழிபடுகிறார்கள். மேரி அம்மையின் விக்கிரகத்தின் முன் அல்லது சித்திரத்தின்முன் நீங்கள் மண்டிபோட்டு வணங்கும்போது உங்களுடைய உத்தேசமென்ன? ஏசுநாதனைப் பெற்ற தாயை

உங்களுக்காகப் பரிந்து பேசி ஆண்டவனிடம் அருள் பெறக் கோருகிறீர்கள். அம்மையைக்கொண்டு ஈசனை அடையப் பிரார்த்தனை செய்கிறீர்கள். ஈசனுக்கும் உங்களுக்கும் ஒரு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள மேரி அம்மையை வணங்குகிறீர்கள். ஹிந்துக்களும் அவ்வாறே ஆண்டவனுக்கும் தங்களுக்கும் ஒரு தொடர்பு வேண்டுமென்று கல்லில் செதுக்கிய ஒரு மூர்த்தியை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் மேரி அம்மையை வணங்குவதைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. அதன் பொருளை நான் காண்கிறேன். அதைப்போலவே ஹிந்து சம்பிரதாயத்தையும் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும். முஸல்மான்கள் ஒரு மசூதிக்குள் செல்லும்போது அவர்களுடைய உள்ளத்தில் பக்தியும் பயமும் ஆனந்தமும் காண்கிறோம். உலகமெல்லாம் ஒரு மசூதியல்லவா? பூமிக்குமேல் வளைந்து நிற்கும் வானமும் ஒரு மசூதியல்லவா? அந்தப் பெரிய மசூதியிருக்க ஒரு கட்டடத்துக்குள் புகும்போது ஏன் இந்தத் தனிப்பட்ட பக்தியும் பயமும்? இதை நான் அறிவேன். முஸல்மான்களுடைய கருத்தும் உணர்ச்சியும் எனக்கு நன்றாகத் தெரியும். அதில் எந்தவிதமான தவறுமில்லை. ஆண்டவனை அண்டுவதற்கு அவர்கள் கண்ட வழி இது. ஹிந்துக்கள் ஆண்டவனை அணுகுவதற்குக் கண்டவழி அவர்கள் அனுசரிக்கும் மூர்த்தி பூஜை. முறை வேறுபட்டாலும் எல்லாருமே ஒரே ஆண்டவனைத்தான் அவரவர்களுடைய முறையில் அவரவர்கள் அணுக முயல்கிறார்கள்.

**பாதிரியார்:** கத்தோலிக்கருடைய கொள்கை என்னவென்றால், ஆண்டவன் உண்மை மார்க்கத்தைத் தங்களுக்குக் காட்டிவிட்டான்; ஆனபடியால் மற்ற மார்க்கங்கள் தவறாகும். அவர்கள் அவற்றை ஆதரிக்க இயலாது என்பது.

**காந்திஜி:** ஆண்டவனுடைய கருத்துக்கள் ஒரே ஒரு புஸ்தகத்தில்தானா இருக்கவேண்டும்? பைபிள் என்னும் திருநூலில் மட்டுமே ஆண்டவன் பேசவேண்டுமா? ஆண்டவனுடைய ஆட்சியையும் சக்தியையும் ஏன் வரம்பிட்டு உரைக்கப் பார்க்கிறீர்கள்?

**பாதிரியார்:** ஏசுநாதர் அற்புத நிகழ்ச்சிகளை நிகழ்த்தித் தம்முடைய தெய்விகத்தை நிரூபித்துவிட்டார். ஆண்டவனிடமிருந்து பெற்ற செய்தியை ஏசுநாதர் உபதேசித்தார். ஆகையினால் அவருடைய வாக்கு நமக்குப் பிரதானம்.

**காந்திஜி:** முகம்மது நபியும் அப்படித்தானே உபதேசித்தார். அவர் பேச்சை ஏன் தள்ளிவிடவேண்டும்? கிறிஸ்தவ சாஸ்திரத்திலும், இஸ்லாமிய சாஸ்திரத்திலும், ஹிந்து சாஸ்திரத்திலும் எல்லாவற்றிலுமே தெய்விகச் சான்று சொல்லப்படுகிறது. ஒன்றைத்தள்ளி ஒன்றை எப்படி ஒப்புக் கொள்ளமுடியும்? எல்லாவற்றையுமே நாம் மதிக்க வேண்டுமல்லவா?

**பாதிரியார்:** முகம்மது நபி அற்புத நிகழ்ச்சிகள் தன்னால் நிகழ்த்திக் காட்டமுடியாது என்றாரே.

**காந்திஜி:** உண்மை. ஆண்டவனிடம் பக்தி செலுத்துவதற்கு அற்புத நிகழ்ச்சிகள் என்னத்திற்கு வேண்டும்? அந்த முறையில் பக்தியும் நம்பிக்கையும் தோற்றுவிக்க முகம்மது நபி பிரியப்படவில்லை. ஆயினும் ஆண்டவனுடைய செய்தியை நான் சொல்லுகிறேன் என்றுதான் முகம்மது நபி உபதேசித்தார்.

[ஹரிஜன் 13-3-37]

## 46

ஈசுவரன் நம்மைப் போன்ற ஒரு வியக்தி புருஷன் அல்ல. தனி மனிதனுக்குள்ள வரம்புகள் அவனுக்கு இல்லை. பகவான் ஒரு மனிதனாக அவதரித்தான் என்று நாம் சொல்லும்போது அதன் கருத்து என்னவென்றால் அந்த மனிதன் தெய்விக நிலைக்கும் பண்புக்கும் நெருங்கியவன் என்பதே.

கடவுள் எங்கும் நிறைந்த பொருள். ஒவ்வொரு மனிதனுடைய இதயத்திலும் பகவான் கோயில் கொண்டிருக்கிறான். ஆனபடியால் நாம் அனைவருமே அவனுடைய அவதாரங்கள். இது உண்மைப் பேச்சாயினும் அதில் பயனில்லை. ராமனும் கண்ணனும் பகவத் அவதாரம் என்றால் அவர்கள் நம்மைப்போன்றவர்களல்ல; தெய்விக குணங்கள் கொண்டவர்கள் என்பது பொருள். சரித்திர உண்மையாக ராமனும் கண்ணனும் பிறந்து வாழ்ந்தார்களா அல்லது மக்களுடைய வெறும் கற்பனையா என்கிற கேள்வியைப்பற்றி நாம் ஆராய்ந்து குழப்பம் உண்டாக்கிக்கொள்ள வேண்டியதில்லை. மக்கள் ராமன், கண்ணன் என்று தெய்விக குணங்களை ஏற்றித் தோற்றுவித்துக் கொண்டிருக்கும் கற்பனைச் சித்திரமே யாயினும் அதுவே போதும்.

பிரபஞ்சத்திலுள்ள சக்தியெல்லாம் கடவுளே. உயிருக்கெல்லாம் உயிரும் அவனே! சுத்த சித்த சொரூபமான அவனுக்கு முதலுமில்லை, முடிவுமில்லை. ஆயினும் எங்குமுள்ள அவனைக் காணவில்லை. கண்டு பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. மின்சாரம் பெரும் சக்தி அல்லவா? ஆனாலும் முறைப்படி அதை நாம் தோற்றுவித்த பிறகு அதன் பயனை அடையமுடியும். மின்சாரத்தின் லட்சணங்களை அறிந்து அந்த அறிவைக்கொண்டு எந்திரங்களை அமைத்து முயன்றால்தான் மின்சாரத்தின் பயனை நாம் அடையமுடியும். அவ்வாறே பராசக்தியான ஆண்டவனின் விதிகளுக்கு அடங்கி முயன்றால்தான் நமக்குள்ளும் நம்மோடும் இருக்கும் ஆண்டவனைக் காணலாம்.

[ஹரிஜன் 22-6-47]

ஹிந்து தர்மமானது ஒரு வரம்பற்ற கடலைப் போன்றது. ரத்னாகரம், மதிப்பிடமுடியாத மணிகளை அதில் காணலாம். எவ்வளவு ஆழம் மூழ்குகிறோமோ அவ்வளவுக்கு அதில் மணிகளைக் கண்டெடுக்கலாம். ஹிந்து சாஸ்

திரத்தில் கடவுளுக்கு அனேகம் பெயர்கள் உண்டு. ஸ்ரீராமனும் கிருஷ்ண பகவானும் அவதரித்து, இந்த நாட்டில் வசித்துவந்தார்கள் என்று பல்லாயிர மக்கள் நம்பி வருகிறார்கள். அவர்களைத் தியானித்து முக்தியடையலாம் என்பது அவர்களுடைய உறுதியான நம்பிக்கை. உண்மையும் புராணமும் கற்பனையும் பிரிக்கமுடியாத கதம்பமாகப் போயிருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து பொறுக்கி எடுக்கமுடியாது.' என்னைப் பொருத்தமட்டில் எல்லா நாமங்களும், எல்லா வடிவங்களும் எங்குமுள்ள வடிவமற்ற ஒரு ராமனுடைய இலக்கணங்களாகவே வைத்துக்கொண்டிருக்கிறேன். என்னைப் பொருத்தமட்டில் தசரதனுடைய குமாரன் சீதையின் நாயகன் என்று சொல்லப்படும் ராமன் எங்கும் பரந்து நிற்கும் ஈசனுடைய உருவமே. அவனுடைய நாமத்தை நம் உள்ளத்தில் எழுதிக்கொண்டோமானால் நம்முடைய கஷ்டங்கள் அனைத்தும், துயரங்கள் அனைத்தும், பாபங்கள் அனைத்தும் தீரும்.

[ஹரிஜன் 2-6-46]

## 47

கோவில்களில் செய்யப்படும் விக்கிரக ஆராதனை பாபம் என்றும் மூடநம்பிக்கை என்றும் சிலர் கருதுவது போல் நான் கருதவில்லை. பலர் கூடி ஆண்டவனுக்குப் பூஜை செய்யவேண்டியது அவசியம். இதை ஏதாகிலும் ஒரு முறையில்தான் செலுத்தவேண்டும். அதற்கென்று ஒரு பொதுவான இடமும் வேண்டும். இதனாலேதான் கோவில்கள் தோன்றியிருக்கின்றன. கோவிலுக்குள் ஒரு மூர்த்தியிருக்கவேண்டுமா அல்லது மூர்த்தியில்லாமலே பூஜை செலுத்தலாமா என்கிற கேள்வி அவரவர்களுடைய சுபாவம், அவரவர்களுடைய பண்பாடு ஆகியவற்றைப் பொறுத்தது.

விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருக்கும் ஹிந்துக் கோவில்களும், கத்தோலிக்கக் கோவில்களும் மூடநம்பிக்கைக்கும் உண்மைக் கடவுளை மறைப்பதற்கும் வழியாகும் என்று நான் கருதவில்லை. விக்கிரகம் வைக்கப்படாத மசூதிகளும் புதுத்திட்டக் கிறிஸ்துவக் கோவில்களும் குறையற்ற ஞான ஸ்தானங்கள் என்றும் நான் நம்பவில்லை. மூர்த்தியோ தெய்வச்சிலையோ இல்லாமற் போனபடியினலேயே அறியாமை நீங்கிவிட்டதாக எண்ணலாகாது. சிலுவை அல்லது வேறு ஒரு சின்னம் அல்லது ஒரு புஸ்தகம் மூடநம்பிக்கைக்கும் உண்மையை மறைப்பதற்கும் வழியாகலாம். ஆண்டவனை மறந்துவிட்டு மரமும் ஓலையும் நமக்கு உதவும் என்று மூடத்தனமாக எண்ணவும் முடியும். சீக்கியர் கோவில்களில் புஸ்தகமே மூர்த்தியாகிறது. கிறிஸ்தவக் கோயில்களில் சிலுவையே மூர்த்தி பூஜைக்கு உதவுகிறது. கண்ணன் விக்கிரகம் கல்லிலோ மண்ணிலோ மரத்திலோ செய்தது. ஏசுநாதரின் தாய் மேரி அம்மையின் விக்கிரகம் இவையெல்லாம், பூரண பக்திக்கும் மெய்ஞானத்துக்கும் உதவும் என்பது என் கருத்து. வழிபடுகிறவனுடைய உள்ளத்தைப் பொறுத்திருக்கிறது.

[யங்இந்தியா 5-11-25]

நாம் எல்லாம் முற்றிய ஞானிகள் அல்ல. நம்முடைய அறிவு மிகக் குறைவுபட்டுக் கிடக்கிறது. கண்ணுக்குப் புலனாகாத கடவுளைத் தியானித்துத் திருப்தி அடைவது கஷ்டம். ஏதேனும் ஒன்று, கையினல் தீண்டக்கூடியது, கண்ணுக்குக் காணப்படுவது - அதன் முன் விழுந்து நமஸ்கரிக்கக்கூடியது, ஒரு சின்னம் வேண்டியதாகிறது. அது கிரந்தமாக இருக்கலாம்; அல்லது கட்டடமாக இருக்கலாம், அல்லது மூர்த்திகள் அமைக்கப்பட்ட கோயில்களாகவும் இருக்கலாம். சிலருக்கு ஒரு புஸ்தகமே திருப்தி தருகிறது. சிலருக்கு வெறும் மசூதியே போதும். வேறு சிலருக்கு வெறும் கோவில் போதாது. கோவிலுக்குள் வீற்றி

ருக்க ஓர் மூர்த்தி வேண்டும். ஆனபடியால் கோவில்களை மூடநம்பிக்கையின் வடிவங்களாக எண்ணவேண்டாம். அந்த எண்ணத்தோடு போவதைவிடக் கோவில்களுக்குப் போகாமல் இருப்பதே நல்லது. கோவில்களுக்குச் சென்றால் பக்தியோடு போகவேண்டும். அப்படிப் போய்ப் பூஜை செய்தால் உள்ளம் சுத்தமடையும். பூஜைக்குப்பின் உள்ளத்தில் ஆண்டவன் கோவில் கொள்வான்.

[ஹரிஜன் 23-1-37]

நான் மூர்த்தி பூஜை செய்பவன். மெய்ப்பொருளை மறக்கச் செய்யும் சின்னத்தை வேண்டாம் என்று எதிர்க்கவும் செய்வேன். மூர்த்தி பூஜை என்றால் என்ன என்பதை உண்மைப் பொருளில் அறியவேண்டும். மூர்த்திக்குப் பூஜை செலுத்துபவனுடைய பக்தியைப் பாராட்டிப் பெரிதாகக் கருதுவேன். அதன் வழி மக்கள் மேம்பாடு அடைந்திருக்கிறார்கள். அது மிகவும் முக்கியமான சாதனம். ஆனபடியால் இந்த நாட்டைப் புனிதப்படுத்தி வரும் ஆயிரக்கணக்கான கோவில்களை என் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றும் சக்தியை ஆண்டவன் எனக்குத் தருவானாக.

[யங் இந்தியா 28-8-27]

## 48

உள்ளத்திலுள்ள மலம் நீங்குவதற்காகத்தான் கோவிலுக்குப் போகிறோம். தனக்குள்ளிருக்கும் நற்குணத்தையெல்லாம் திரட்டிக்கொள்வதற்காகத்தான் பக்தன் கோவிலுக்குச் செல்வது. உயிருடன் நடமாடும் பெரியார் ஒருவரைத் தரிசனம் செய்வதால் அந்தப் பெரியாரிடமிருந்து நன்மையை அடையலாம். அதற்கும் சுயநலமற்ற பக்தியோடு பூஜிக்கவேண்டும். நாம் பூஜிக்கத்தகும் பெரியார்களைவிட தேவாலயத்தில் நாம் பூஜை செய்யும் கடவுள்

பரிபூரண குணங்கொண்ட தெய்வமாகும். நம்முடைய கற்பனைக்கு அப்பால் நிற்கும் பூரணம். மக்களுக்கு நாம் எழுதும் கடிதங்கள் பயனற்றுப் போகின்றன. விண்ணப்பம் செய்வது ஏமாற்றத்தில் முடிகிறது. சிலசமயம் பதிலே வராது. ஆண்டவனுக்கு நாம் செய்யும் விண்ணப்பத்துக்கும் பக்தன் கோவிலுக்குச்சென்று பிரார்த்தனை செய்து கொள்வதற்கும் காகிதம் வேண்டியதில்லை. பேனாவும் வேண்டியதில்லை, மசியும் வேண்டியதில்லை. பேச்சுமே வேண்டியதில்லை. வாய் திறவாமல் மௌனமாகச் செய்யும் பிரார்த்தனையே போதும். அந்தக் கடிதத்துக்குப் பதில் இல்லாமல் போகாது. பூஜை முழுதும் ஒருவனுடைய பக்திக்குப் பயிற்சி தருவதாகும். அந்தப் பயிற்சியால் கஷ்டம் என்பது கிடையாது. பயனற்றுப் போவது என்பதும் கிடையாது. ஏமாற்றமும் கிடையாது. நாம் சொல்லுவதை அவன் தவறாகக் கொள்வான் என்கிற பயமும் கிடையாது. ஒரு மனிதப் பிறவிக்குச் செய்யும் விண்ண்ப்பத்துக்கும் ஆண்டவனுக்குச் செய்யும் விண்ணப்பத்துக்கும் இதுவே வித்தியாசம். கோவிலுக்கும் மசூதிக்கும் போய்ப் பூஜை செய்வதின் பொருள் இது. பகவானுடைய இருப்பிடம் என்று கருதி எந்தவித தேவாலயத்துக்குச் சென்று பூஜை செய்தாலும் இதுவே பொருளும் பயனும். நாம் செலுத்தும் பக்தியே அந்தக் கோவில்களின் சிறப்பு. கண்ணுக்கெட்டாத பொருளைத் தேடி அடைய ஆசைப்பட்டு மனிதன் கோவில்களைத் தோற்றுவித்தான்.

[ஹரிஜன் 18-3-33]

தெய்வம் அல்லாத ஒரு பொருளைத் தெய்வமாகப் பாவித்து வழிபடுவதைக் கண்டனம் செய்யும் கூட்டத்தில் நானும் ஒருவன். ஏனெனில் தாம் வழிபடும் முறையைத் தவிர மற்ற முறைகள் எல்லாம் தவறு, பயனில்லை என்று கருதும் மூர்க்கத்தனமும் மூர்த்தி பூஜையில் ஒரு வகையாகும். அந்த வகை மூர்த்தி பூஜையை நான் நிச்சயமாகக்

கண்டிப்பவன். நமக்குப் பிடித்த முறையே சரியான முறை; நம்முடைய மதமே சரியான மதம் என்று மூர்க்கமாகப் பிடிவாதம் செய்வது ஒருவகையான விக்கிரக பூஜையேயாகும். இந்த விக்கிரகப் பூஜையில் மோசமும் ஏமாற்றமும் அதிகம். கல்லும், செம்பும், மரமும் வைத்துப் பூஜை செய்வதைக் காட்டிலும் இந்த மூர்க்கத்தனம் அதிக மடமையாகும்; குற்றமுமாகும். ஒரு கல் விக்கிரகத்தைக் கடவுள் என்று வைத்துக்கொள்வதில் அவ்வளவு தவறில்லை. என்னுடைய மதமே சரியான மதம், மற்றவர்களுடைய சமயங்களெல்லாம் பாபமாகும் என்று தன்னுடைய பிடிவாதத்தையே கடவுளாகப் பாவிப்பது எல்லாவற்றையும்விடப் பெரிய அறியாமையாகும்.

[யங் இந்தியா 28-8-24]

பல ஹிந்துக் கோவில்களிலும், கிறிஸ்தவக் கோவில்களிலும், மசூதிகளிலும் மோசமும் திருட்டும் நடைபெறலாம். புனிதம் குறைந்து போய்க் குற்றம் மிகுந்திருக்கலாம். ஆயினும் பூஜை செய்யும் குருக்கள்மார்கள் அனைவரும் கெட்டவர்கள் என்று சொல்லமுடியாது. எல்லாக் கோயில்களுமே கெட்டுப்போயின என்று சொல்லமுடியாது. எந்த சமயத்திற்கும் ஒரு கோவில் அவசியமாகிறது. கோவிலில்லாமல் சமயம் இருக்கமுடியாது. சமயம் தோன்றியதும் அதற்கென்று ஒரு கோவில் தோன்றவே தோன்றும். இது ஒரு தவிர்க்கமுடியாத இயற்கை விதி.

ஆண்டவனுக்கு இந்த மனித உடலே ஒரு கோவில் என்பார்கள் அல்லவா? அப்படிச் சொல்வதில் தவறு ஒன்றுமில்லை. ஆயினும் தோலும் சதையும் கொண்ட அந்தக் கோவில்கள் எத்தனையோ பாபமும் குற்றமும் நிறைந்த கோவில்களாக இருக்கின்றன! அந்தக் கோவில்களையெல்லாம் இடித்து அழித்துவிட ஒப்புவோமா? சிலரேனும் நல்லவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இதயத்தில் ஆண்டவன் கோயில்கொண்டிருக்கிறான் என்பது நமக்குப் போது

மல்லவா? சதையும் தோலும் போர்த்திய உடல்களாகிய இந்தக் கோவில்களைப் போலவே கல்லும் சுண்ணும்பும் போட்டுக் கட்டிய அக் கோவில்களும் கெட்டுத்தான் போயிருக்கின்றன. அவை தோன்றியது நன்மைக்காகவே. ஆனால் மனிதனுக்குள்ள குறைகளினால் இரண்டுமே கெட்டுப் போகின்றன. இதற்காக கோவில்களே வேண்டாம் என்று சொல்வதற்கில்லை.

ஏதேனும் ஒரு இடத்தில் புனிதமாகக் கருதிக் கோவில் என்றோ மசூதி என்றோ மடம் என்றோ வைத்துக்கொண்டு தான் எல்லா மதங்களும் சமயங்களும் சம்பிரதாயங்களும் உலகத்தில் நடைபெற்று வருகின்றன. அப்படியல்லாத எந்தச் சம்பிரதாயத்தையும் நான் கண்டதில்லை. மக்களைத் திருத்துவதற்காகத் தோன்றிய பெரியோர்கள், மகாத்மாக்கள், அவதார புருஷர்கள் அனைவருமே தம்மைச் சேர்ந்த மக்கள் வைத்துக்கொண்டிருந்த கோவில்களை இடித்ததில்லை. விட்டுவிட்டதுமில்லை. சீர்திருத்தம் செய்யத்தான் பார்த்தார்கள். அழித்துவிட முயலவில்லை. கோவில்களிலேயே நின்று உபதேசம் செய்திருக்கிறார்கள்.

நான் பல ஆண்டுகளாகக் கோவில்களுக்குப் போனதில்லை. அதனால் நான் உயர்ந்தவனாகிவிடவில்லை. என்னைப் பெற்ற தாய் உடல் நோயால் பாதிக்கப்பட்டுத் தடைப்பட்ட சமயம் தவிர, எப்போதுமே கோவிலுக்குப் போய் வந்தாள். கோவிலுக்குப் போகாத என்னைவிட அவளுடைய தெய்வபக்தியே மிகச் சிறந்தது. இதில் சந்தேகமே இல்லை. அதைப்போலவே லட்சக்கணக்கான மக்களுடைய தெய்வபக்தியும், கோவில்களாலும் மசூதிகளாலும் காக்கப்பட்டு வருகிறது. அவர்கள் மூடர்கள் அல்ல, மூர்க்கர்கள் அல்ல. குருட்டு பக்தர்களும் அல்ல. அறியாமையும் மூர்க்கத்தனமும் எல்லா மக்களுக்கும் பொது. அந்தக் குறை சம்பிரதாய சமய முறைகளினால் உண்டானதல்ல. அது நம்முடைய உள்ளத்திலுள்ள குற்றத்தினால் உண்டான குறை: எந்தச் சம்பிரதாயத்தைக் கொண்டிருந்தாலும் ஒன்றே.

[ஹரிஜன் 11-3-33]

# 49

ஒருவர் கடிதம் எழுதியிருக்கிறார் :

"நான் அநேக இடங்களில் பார்த்திருக்கிறேன்; இன்னும் அனேகம் பேர்-ஆண்களும், பெண்களும் - மரப் பாவைகளையும், கற்சிலைகளையும், மரத்தையும், செடியையும், பூஜை செய்து வருகிறார்கள். உயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த படித்த பெண்மணிகளும்கூட இத்தகைய மூட வழக்கத்தை விடவில்லை. அவர்களில் சிலர் வாதம் செய்வது என்னவென்றால் இயற்கை உலகத்திலுள்ள தெய்விக அம்சத்தைப் பக்தியோடு பூஜை செய்கிறோம். இதில் என்ன தவறு என்கிறார்கள். இது சாவித்திரி பூஜை என்கிறார்கள். இந்த வாதமெல்லாம் எனக்குச் சரி என்று தோன்றவில்லை. இதைப் பற்றித் தாங்கள் விளக்கம் கொடுக்கவேண்டும்."

இந்தக் கடிதத்திலுள்ள கேள்வியை நான் வரவேற்கிறேன், மூர்த்தி பூஜை தவறு என்று எண்ணி இவ்வாறு எழுதியிருக்கிறார். மூர்த்தி பூஜையை நான் ஆதரிப்பவன். ஆனால் ஒருவிதத்தில் எதிர்க்கவும் செய்கிறேன். மூர்த்தி பூஜையானது சுத்த மூடநம்பிக்கையாகிவிட்டால் அதை எதிர்க்கவேண்டியது அவசியமாகிறது. பொய்யும் அறியாமையும் கலந்த மூர்த்தி பூஜையை எதிர்க்கத்தான் வேண்டும். ஆயினும் பக்தி செலுத்துவதற்கு ஏதேனும் ஒரு லிங்கம் இன்றியமையாதது. இது மனிதனுக்கு இயற்கையான குறைபாடு. பக்தி செலுத்துவதற்கு மூர்த்தி பூஜை மிகவும் பயன்படுகிறது. புனித நூல் என்று நாம் கருதும் ஒரு கிரந்தத்தை வைத்து வணங்கினாலும் அதுவும் மூர்த்தி பூஜையேயாகும். அதில் தவறில்லை. ஒரு கோவிலுக்கோ, மசூதிக்கோ பக்தியோடு சென்றோமானாலும், ஒரு தீர்த்தயாத்திரை செய்தாலும் அதுவும் மூர்த்தி பூஜையேதான். அதில் ஒரு தவறுமில்லை. ஆண்டவனை வழிபடுவதற்கு ஏதேனும் ஒரு சின்னம் வைத்துக்கொள்வது அவசியமாகிறது.

மரத்துக்குப் பூஜை செய்வதில் நான் ஒரு குற்றமும் காணவில்லை. அது மிகவும் அழகான பூஜை முறையாகும்:

மரங்கள் தங்கள் இலைகளாகிய பல்லாயிர நாக்குகளையும் கொண்டு ஈசனுடைய புகழைப் பாடுகின்றன. மரங்களைவிட வேறு எந்த அழகிய பொருளை நாம் காண முடியும்? வனஸ்பதி உலகம் இல்லையாயின் மனிதன் பூமியில் எப்படி வாழ முடியும் ? உயிருக்கு ஆதாரமல்லவோ தாவரம். தாவர வர்க்கம் சரியாகப் பாதுகாக்கப்படாமலும், மரங்கள் அழிந்து போயும் வருகின்ற நம்முடைய நாட்டில் மரங்களைப் பூஜை செய்யும் வழக்கம் மிக நல்ல வழக்கம் என்றே சொல்லுவேன். மரத்தை வலம் செய்து பக்தி செலுத்தும் பாமர ஸ்திரீகள் அந்தப் பூஜையின் தத்துவத்தை அறியாமல் இருக்கலாம். எடுத்துச் சொல்லவும் அவர்களால் முடியாது. ஆயினும் அவர்களுடைய பக்தியைப்பற்றி ஒரு குறைவுமில்லை. அவர்களுடைய உள்ளத்தின் சுத்தம் அவர்களைக் காக்கும். அவர்களுடைய பக்தி பெருஞ் செல்வமாகும். அதைப் போற்றுவது நமது கடமை.

இது என்னுடைய கொள்கையாயினும் இது வேண்டும், அது வேண்டும் என்று வேண்டுதலை செய்துகொள்ளும் முறையை நான் அங்கீகரிக்கமாட்டேன். வேண்டுதல்கள் செய்துகொண்டு சுயநல ஆசையோடு மரத்தைப் பூஜை செய்தாலும் சரி, கோவில்-மசூதி-தீர்த்தங்களுக்குச் சென்றாலும் சரி, எந்த பூஜையும் குற்றமேதான். சுயநல ஆசைகளோடு செய்யும் பூஜை பயனற்றது. மூர்த்தி பூஜையாயினும் மூர்த்தி யில்லாத பூஜையாயினும் இந்தக் குற்றம் வழிபாட்டைப் பழுதுபடுத்தும். ஒரு விக்கிரகத்தின் முன் நின்றோ, விக்கிரகமில்லாமல் மசூதியிலோ வேறு ஆலயத்திலோ சுயநலக் கோரிக்கைகள் சொல்லி வரம் கேட்பது தவறு.

இதையெல்லாம் நான் சொல்லி மரங்களை வழிபடும் வழக்கத்தை ஆதரித்தபோதிலும், எல்லாரும் மரங்களைப் பூஜை செய்யும் வழக்கத்தைக் கொள்ளவேண்டும் என்று நான் சொல்லவில்லை. பக்தியோடு தாவரத்தின் முன் வணங்கிப் பூஜை செய்பவர்களை நான் குற்றம் சொல்லமாட்டேன் என்பதே என் கருத்து. ஆண்டவனுடைய வடிவத்தை எண்

ணற்ற பொருள்களில் காணலாம். அவனைத் தியானித்து நாம் எதையும் வணங்கலாம் என்பது என் கொள்கை.

[யங் இந்தியா 26-9-29]

## 50

பகுத்தறிவின் சக்திக்கு வரம்பு உண்டு. ஒரு எல்லைக்கு மேல் அது பயன்படாது என்பதை என்னுடைய அனுபவத்திலிருந்து அறிந்து அடக்கமும் அடைந்தேன். இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் ஒரு பொருளானது பயன் படும். செல்வமாகக் கருதப்படும். கூடாத இடத்தில் இருந்தால் அதே பொருள் அழுக்குக் குப்பையாகும். தன் வரம்புக்குள் பகுத்தறிவு பயன்படும். வரம்பு மீறினால் பயித்தியக்காரத் தனமாகும்.

பகுத்தறிவு வாதிகள் மிக நல்லவர்களே. ஆனால் பகுத்தறிவே எல்லாவற்றையும் சாதித்துவிடும் என்று கருதத் தலைப்பட்டால் பகுத்தறிவு என்பது அவலட்சண சொரூபம் கொண்ட ஒரு பிசாசாக முடியும். சிலையையும் மரப் பொம்மையையும் கடவுளாக எண்ணிக் கடவுளை மறந்து அவற்றுக்குப் பூசை செலுத்துவது மடமையானால் மனிதனுடைய பகுத்தறிவுக்குச் சர்வ வல்லமை ஏற்றி அதைப் பூசை செய்வதும் மடமையாகும். கூடாத மூர்த்தி பூஜைகளுக்குள் இதுவும் ஒன்றாகும். பகுத்தறிவை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அதைப் புறக்கணிக்கவும் நான் பேசவில்லை, பகுத்தறிவுக்கும் மேல் நமக்குள் ஒரு புனித சக்தியுண்டு. அதுவே பகுத்தறிவுக்கும் சக்தி தந்து அதை ஒரு சுத்த சக்தியாக்குகிறது. இதை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதே என்னுடைய ஆசை.

[யங் இந்தியா 14-10-26]

பகுத்தறிவு எல்லாவற்றையும் தீர்த்துவிட முடியாது. சில விஷயங்கள் பகுத்தறிவுக்கு அடங்காத விஷயங்கள் என்று தெரிந்துகொண்டு பக்தி செலுத்த வேண்டும். பக்திக்கு வேண்டிய நம்பிக்கை பகுத்தறிவைப் புறக்கணிக்கவில்லை. அதற்கு அப்பால் செல்கிறது. ஐம்புலன்களுக்கும் அப்பால் உள்ள ஆருவது புலன் ஒன்ருகும் இந்த நம்பிக்கை. பகுத்தறிவுக்கு எட்டாத விஷயங்களில் இந்த ஆருவது புலனே பயன்படும்.

[ஹரிஜன் 6-3-37]

அலை கடலில் வழியறிந்து படகைச் செலுத்துவது பக்தி. பக்தி மலைகளைத் தூக்கும். பக்தியே கடலைத் தாண்டும். நமக்குள் கோயில் கொண்டிருக்கும் ஆண்டவனை மனக் கண்ணுல் காணப்பெறும் காட்சியே பக்தி என்பது. அந்தக் காட்சியைப் பெற்றவனுக்கு வேறு ஏதும் வேண்டியதில்லை. உடல் நோய்ப் பட்டிருந்தாலும் உள்ளம் நோயற்ற பூரண ஆரோக்கிய நிலையில் இருக்கும். பரம ஏழையாக இருந்தாலும் குறைவற்ற ஆன்ம சம்பத்தை அனுபவிப்பான்.

[யங் இந்தியா 24-9-25]

பக்தியும் நம்பிக்கையும் இல்லையேல் இந்த உலகம் ஒரு விநாடியில் ஒன்றுமில்லாமற் போகும். ஜபமும் தவமும் செய்து ஆண்டவனை வழிபட்டுப் பரிசுத்த வாழ்க்கை நடத்திய பெரியோர்களுடைய அனுபவ சித்தியை நம்முடைய பொருளாக எடுத்துக்கொண்டு ஆள்வதுதான் பக்தி என்று சொல்லப்படுவது. பல ஆண்டுகளுக்கு முன் அவதரித்த ரிஷிகள், நபிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலிய மகான்களை நம்புவதும் வழிபடுவதும் மூட பக்தி

யல்ல, விவேகமே யாகும். நமக்குள் உண்டாகும் ஆத்ம பசியைத் தீர்க்கும் உணவாகும்.

[யங் இந்தியா 14-4-27]

## 51

எல்லாருமே ஒரு பராசக்தியை நம்பிப் பிழைத்து வருகிறார்கள். கடவுளைப்பற்றி நம்பிக்கை இல்லை என்று சொல்லிக் கொள்பவர்களுங் கூடத் தங்களையும் அறியாமல் கடவுளை நம்பித்தான் வருகிறார்கள்.

ஒவ்வொருவனுக்கும் தன்னம்பிக்கையுண்டு. அந்தத் தன்னம்பிக்கையை மனித வர்க்கம் முழுவதற்கும் வைத்துப் பெருக்கிக் கணக்கிட்டோமானால் அதுவே கடவுள் நம்பிக்கையாகிறது. ஜீவராசிகள் அனைத்தும் சேர்த்தால் அதுவே கடவுள். உயிர்கள் அனைத்துமே பராசக்தியின் அம்சம். நீர்த்துளிகள் எல்லாம் சேர்ந்து சமுத்திரமாகிறது. கடலினின்று பிரிந்துபோன நீர்த்துளிகளைப் போல் உயிர்கள் சக்தியற்று நிற்கின்றன. ஆயினும் கடலுக்கும் நீர்த்துளிக்கும் உள்ள சம்பந்தம் அழிந்து போகாது. தெய்வத்தினின்று பிரிந்து நிற்கும் உயிர்களும் தெய்விக சக்தியை முற்றிலும் இழந்துவிடவில்லை. நம்முடைய 'தன்னம்பிக்கை' யெல்லாம் அந்தத் தெய்விகத்தினுடைய அம்சமேயாகும். நீர்த்துளிக்கு யாரேனும் "நீ கடலைச் சேர்ந்த பொருள்" என்று சொல்லி ஊக்குவித்தால் அதுவும் தன்பெருமையை அறிந்து களிக்கூத்தாடும்.

3-6-39]

பகவானுடைய தரிசனம் அடைவது எப்படி? நம்முடைய உள்ளத்தில் ஆண்டவன் கோயில்கொண்டிருப்பதை நிச்சய பக்தியுடன் உணர்வதே கடவுள் தரிசனம்.

தாயின் அன்பைக் குழந்தை எவ்வாறு அறிகிறது? பிறர் வந்து நிரூபித்து அறிவதில்லை; தானும் அதைப்பற்றி

விமரிசனம் செய்வதில்லை. தாயின் அன்பைத் தானாகவே உணர்ந்து அனுபவிக்கிறது. தாயின் அன்பைப் பிறருக்கு எடுத்து விளக்கக் குழந்தைகளுக்குத் தெரியாது. தாயின் அன்பு குழந்தைக்குப் பிரத்தியட்ச தரிசனம் தருகிறது. அவ்வாறே கடவுளின் உண்மையும். கடவுள் ஒரு நிரூபணப் பொருள் அல்ல. அனுபவப் பொருள். துளஸிதாஸர் அனுபவித்திருக்கிறார். சைதன்ய பகவான் அனுபவித்திருக்கிறார். ராமதாஸர் அனுபவித்திருக்கிறார். இன்னும் எத்தனையோ மகான்கள் அனுபவித்து மக்களுக்கு உபதேசமும் செய்திருக்கிறார்கள். பள்ளிக்கூட ஆசிரியர்களின் பாடங்களை மாணவர்கள் ஒப்புக்கொள்வதுபோல் பக்தர்களுடைய அனுபவங்களையும் சமயதேசிகர்களுடைய உபதேசங்களையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆசாரியர்களுடைய அனுபவங்களை நாம் இல்லை என்று சொல்லலாகாது. ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அவர்கள் அடைந்த பேரானந்த அனுபவத்தை நாமும் அடைய முயலவேண்டும்.

[யங் இந்தியா 9-7-25]

"உங்கள் சாஸ்திரங்களுக்குள் எது பிரமாணம்?" என்று பாஸில் மாத்யூஸ் என்பவர் கேட்டார்.

காந்திஜி அதற்கு விடையாகத் தம் மார்பைத் தொட்டு, "பிரமாணம் இங்கே யிருக்கிறது" என்றார்.

கீதையுள்பட சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட எதையுமே என்னுடைய அறிவைக் கொண்டுதான் பார்க்கிறேன். என்னுடைய பகுத்தறிவுக்கு விரோதமாயிருந்தால் அதை நான் ஒப்புக்கொள்வதில்லை. சாஸ்திரமாகக் கருதப்படும் நூல்கள் தெய்விக உணர்ச்சியைப் பெற்று எழுதியவை தான். ஆயினும் அவற்றில் இருவகையான குற்றங்களுக்கு இடமுண்டு. தெய்வப் பிரசாதம் பெற்றதாயினும் ஒரு மானுடன் வழியாகத் தானே வந்துள்ளது. மேலும் அதற்கு உரை எழுதியிருப்பவர்கள் மானுடர்கள். கடவுளிடமிருந்து நேராக எந்த சாஸ்திரமும் வந்ததில்லை. ஒரே விஷயத்தை

மாத்யூ ஒரு மாதிரி எழுதலாம்; ஜான் மற்றொரு மாதிரி எழுதலாம். ஆனபடியால் புனித நூல்களைச் சாஸ்திரமாக நான் ஒப்புக்கொண்டாலும் என்னுடைய பகுத்தறிவைத் துறக்க முடியாது.

எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. சாஸ்திரங்களின் பொருளே பிரதானம். அதுவே உயிர். சொற்களும் வாக்கியங்களும் அவற்றின் மேல்வாரியான அர்த்தமும் உண்மைப் பொருளை அழித்துவிடும். "சொல்லானது கொல்லும்; பொருளானது உயிரைத் தரும்" என்று பைபிளில் காணப்படும் கொரிந்தியனருக்கு எழுதிய நிருபத்தில் பால் முனிவர் சொல்லியிருக்கிறார் அல்லவா?

"இப்படி நான் சொன்ன போதிலும் எல்லாமே பகுத்தறிவைக் கொண்டு முடிவு செய்ய வேண்டும்; பக்திக்கும் நம்பிக்கைக்கும் இடமில்லை என்று நான் சொல்லவில்லை. சில விஷயங்கள் அறிவுக்கு எட்டாதவை. கடவுள் உண்டா இல்லையா என்று முடிவு செய்வதற்குப் பகுத்தறிவுப் பிரமாணம் போதாது. அந்த விஷயத்தில் என்னுடைய நம்பிக்கையையும் பக்தியையும் வாதங்களினால் அசைக்க முடியாது. வொர்ட்ஸ்வொர்த்பாடிய செய்யுள் தெரியுமல்லவா? அதில் ஒரு சிறிய பெண் 'நாங்கள் ஏழுபேர்' என்று இறந்து போனவர்களையும் சேர்த்தே திரும்பத் திரும்பப் பிடிவாதமாகச் சொல்கிறாள் அல்லவா? அந்தப் பெண்ணின் பிடிவாதமே என்னுடைய பிடிவாதம். யார் என்ன வாதம் செய்து என்னைக் குழப்பப் பார்த்தாலும் கடவுளின் உண்மையை நான் கைவிடமாட்டேன். ஈசன் இருக்கிறான் என்றே சொல்லுவேன்.

[ஹரிஜன் 5-12-36]

புஸ்தகம் படிப்பதினின்று ஞானம் வராது. அதுவாகவே நம் உள்ளத்தில் தோன்ற வேண்டும். நூல்களைப் படிப்பது ஓரளவு உதவும். அவ்வளவே. சில சமயம் படிப்

பானது ஞானம் உதயமாவதற்குத் தடையாகவும் இருக்கும்.

[யங் இந்தியா, 17-7-24]

திரும்பத்திரும்பச் சொல்லப்படுவதனால் அல்லது எழுதப்படுவதனால் உண்மையில்லாதது உண்மையாகிவிடாது. உண்மையை யாரும் காணாததால் அது பொய்யாகிவிடாது. உண்மை என்றும் உண்மையே.

[யங் இந்தியா, 26-2-25]

பகுத்தறிவுக்காவது மனச்சாட்சிக்காவது விரோதமான சாஸ்திர வசனத்தை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். விவேகத்துக்கு இசைந்த சாஸ்திரப் பிரமாணங்கள் பயன்படும். விவேகத்தைப் புறக்கணிக்கும் சாஸ்திரப் பிரமாணம் பயன் தராது. நம்முடைய உள்ளத்தில் பேசும் மனச்சாட்சியின் குரலுக்கு விரோதமான சாஸ்திரப் பிரமாணங்களை நான் ஒப்புக்கொள்ள முடியாது.

[யங் இந்தியா, 8-12-20]

## 52

நான் ஒரு வாசக பக்தனல்ல. அதாவது, சாஸ்திரங்கள் சொல்லும் வாசகங்களுக்கு நான் அடிமையாக மாட்டேன். பொருளைத்தான் கொள்வேன். உலகத்திலுள்ள பல சமய சாஸ்திரங்களையும் பொருள் கண்டு தெரிந்துகொள்ளவே முயற்சி செய்கிறேன். சாஸ்திரங்களில் கூறப்படும் சத்தியம், அஹிம்ஸை இந்தப் பிரமாணங்களை வைத்தே நான் சாஸ்திரங்களைப் பரிசீலனை செய்வேன். அந்தப் பிரமாணங்களின் சோதனையில் தேறினதை வைத்துக்கொள்வேன். தேறாததைத் தள்ளிவிடுவேன்.

உதாரணமாக வேதத்தை ஓதுவதற்கு முயற்சி செய்த ஒரு கீழ்ச்சாதியானை ராமச்சந்திரன் தண்டித்தான் என்கிற

கதையை நான் தள்ளிவிடுவேன். அது பின்னால் புகுத்திய செருகு கதையாகும். நான் வழிபடும் ராமன் சரித்திர ராமன் அல்ல. என் கருத்தில் பதிந்திருக்கும் பூரண ராமச் சந்திரனைத்தான் நான் வழிபடுகிறேன். சரித்திர ஆராய்ச்சி யின் பயனாக ராமனைப் பற்றிப் புதிய புதியதாக மாறுபட்ட முடிவுகள் ஏற்படலாம். அவை என்னைப் பாதிக்காது. என் னுடைய ராமன் வேறு. ஆராய்ச்சிக்காரர்களுடைய ராமன் வேறு. துளஸிதாஸர் பாடியிருப்பதும் அவருடைய தனி ராமனையே. ஆராய்ச்சிக்காரர்களுடைய பிரமாணங்களைக் கொண்டு பார்த்தால் துளஸி ராமாயணம் ஒரு பயனும் படாது; குப்பையில்தான் போடவேண்டும் என்பார்கள். ஆனால் பக்தனுக்குத் துளஸி ராமாயணத்தைப்போல் வேறு எந்தக் காவியமாவது சாஸ்திரமாவது கிடையாது. எனக்கு அது ஒரு ஒப்புயர்வற்ற கிரந்தமாகும். துளஸி ராமாயணத் திலுங்கூடப் பல பிரதிகளில் பல வேறுபாடுகள் காணப் படும். செருகு சுலோகங்கள் என்று சந்தேகிக்கலாம். அந்த நூலில் முதலிலிருந்து கடைசிவரை இடையறாது ஓடும் புனித பாவமே என்னை ஆட்கொண்டிருக்கிறது.

[யங் இந்தியா, 27-1-25]

மகாபாரதத்தில் வரும் கிருஷ்ணன் உண்மை மனிதனோ கற்பனையோ எனக்குத் தெரியாது. நான் பூஜிக்கும் கிருஷ்ண பகவான் மனிதனாகப் பிறந்து வாழ்ந்த எவனுமல்ல. தன் னைக் கௌரவிக்கவில்லை என்று ஒருவனைக் கொன்றுவிட்ட கிருஷ்ணனை நான் வணங்கமாட்டேன். பிற மதத்தினர் நெறி தவறிய சிறுவனாக எண்ணி வரும் கிருஷ்ணனை நான் வணங்கவில்லை. என்னுடைய கற்பனைக் கண்ணன் ஒருவித களங்கமுமற்ற அவதார புருஷன், கீதாசாரியன். கோடிக் கணக்கான மக்களுக்கு நன்னெறி போதிக்கும் ஆசாரியன்.

மகாபாரதமானது இக் காலத்துச் சரித்திர புஸ்தகங் களைப் போல் நடந்ததைச் சொல்லும் சரித்திரப் புஸ்தக

மென்று யாராவது எனக்கு நிரூபித்துவிட்டு, அதில் வரையப்பட்டிருக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் உண்மையான நிகழ்ச்சி என்று உறுதிப்பட்டும், மகாபாரதத்தில் கிருஷ்ணன் செய்ததாகச் சொல்லப்படும் எல்லா நிகழ்ச்சிகளும் உண்மை என்றும் ஏற்பட்டுவிட்டால் அந்தக் கண்ணன் கடவுள் அவதாரம் என்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். என்னை ஹிந்து சமுதாயத்திலிருந்து பகிஷ்கரிக்கலாம். ஆயினும் அத்தகைய கண்ணனைக் கடவுளாக ஒப்புக்கொள்ள மாட்டேன்.

மகாபாரதமானது ஆழ்ந்த கருத்துக்களடங்கிய அறநூல் என்பதில் சந்தேகமில்லை. அது சரித்திரமாக வைத்துக்கொள்வதற்கு எழுதப்படவில்லை. அதிலுள்ள நிகழ்ச்சிகள் நீதி உபதேசத்துக்காகக் கற்பனை செய்யப்பட்டவை. இது என்னுடைய மதம். நம்முடைய உள்ளங்களில் அறத்துக்கும் அதர்மத்துக்கும் இடைவிடாத போர் நடந்து வருகிறது. அதுவேதான் மகாபாரதப் போர். அந்தப் போருக்கு வடிவம் கொடுத்து நம்முடைய உள்ளங்களைக் கவரும்படியான வழியில் மனிதர்கள் போர்க்களத்தில் கூடி யுத்தம் செய்ததாக வர்ணனை செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் முதலில் எழுதிய மகாபாரதம் அப்படியே நமக்குக் கிடைத்திருப்பதாக வைத்துக்கொள்வதற்கில்லை. ரொம்பவும் மாற்றப்பட்டு அவ்வப்போது புதுச் சரக்குகளும் சேர்க்கப்பட்டிருப்பதாகவே நினைக்கிறேன்.

[யங் இந்தியா 1-10-25]

அறநூல்களைப் பிழையின்றிப் புரிந்துகொள்ள வேண்டுமானால் அவற்றைப் பக்தியோடு படிக்கவேண்டும். வாழ்க்கை அனுபவத்தையும் செலுத்திப் படிக்கவேண்டும். சாஸ்திரங்களைக் கீழ் மக்கள் படிக்கக்கூடாது என்று சொல்லுவதின் பொருள் இதுவே. யார் கீழ் மக்கள் என்றால் பண்பாடு அடையாதவர்கள். அவர்கள் வேதத்தையாவது மற்ற சாஸ்திரத்தையாவது படித்தால் தவறான பொருள்தான் கொள்வார்கள். சாஸ்திரம் படிப்பதற்கு

எல்லாருக்கும் தகுதியிருப்பதாக வைத்துக் கொள்வதற்கு இல்லை. கணித சாஸ்திர உயர்தரப் புஸ்தகங்களை எல்லாரும் படிக்க முடியுமா? படிப்படியாகப் பயிற்சி அடைந்த பிறகுதான் பொருள் தெரிந்து படிக்க முடியும். சாஸ்திரம் படிப்பதற்கும் பயிற்சிவேண்டும். தினமும் பாப காரியங்களைச் செய்துகொண்டிருக்கிற ஒருவன் ஹிந்து சாஸ்திரத்தைப் படித்து 'நான் பிரம்மம்' ஸோஹம் என்று சொல்ல முடியுமா? "நீயே பரம்பொருள்" தத்வமஸி என்று வேதாந்தத்தில் சொல்லியிருப்பதை அவன் எவ்வாறு பயன்படுத்திக் கொள்வான்? பாப காரியங்களுக்கே அந்த உண்மையையும் உபயோகப்படுத்திக் கொள்வான் அல்லவா?

எனவே, சாஸ்திரம் ஓதிப் பயன்படுத்திக் கொள்வதற்கு முன் அதற்கு வேண்டிய வாழ்க்கைப் பயிற்சியும் பண்பும் அடையவேண்டும். இயமம், நியமம் என்பது இதுவே. தகுதி பெறுவதற்குப் புலனடக்கமும் தினசரி கிரமங்களும் அவசியம்.

வாழ்க்கை எவ்விதம் நடத்தவேண்டும் என்பதை உணர்ந்து வாழ்க்கை நடத்தித் தகுதி அடையவேண்டும். வெளிவேஷ மந்திரமும், தந்திரமும் மட்டிலும் போதாது. பழைய காலத்தில் தகுந்த ஆசாரியன் ஒருவனை அடைய வேண்டுமென்று சொன்னார்கள். இக் காலத்தில் தகுதி வாய்ந்த ஆசாரியனைப் பெறுவது கடினம். அதற்குப் பதிலாகப் பக்தி புகட்டும் எளிய நூல்களைப் படித்துப்பண்பு அடையலாம் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

பக்தியில்லாதவர்களும் நம்பாதவர்களும் சாஸ்திரங்களுக்குப் பொருள் கூறமுடியாது. பக்தியும் நம்பிக்கையுமில்லாமல் அதிகப் படிப்புமட்டும் அடைந்தவர்கள் உண்டு. அத்தகைய வித்வான்களும்கூட சாஸ்திரத்துக்குப் பொருள் சொல்லி உபதேசம் செய்யமுடியாது. ஆத்ம அனுபவம் பெற்றவர்கள்தான் சாஸ்திரம் போதிக்க முடியும்.

எல்லாவற்றுக்கும் மேல் ஒரு முக்கியமான பிரமாணம் உண்டு. உண்மைக்கு மாறானது சாஸ்திரத்தின் பொருளா

காது. சத்தியம் என்றால் என்ன என்று விதண்டாவாதம் செய்பவனுக்கு நாம் ஒன்றும் சொல்ல இயலாது. சொல்லுவதில் பயன் இல்லை. அப்பேர்ப்பட்டவன் சாஸ்திரங்களில் ஒரு அர்த்தமும் காணமாட்டான்.

[யங் இந்தியா 12-11-25]

## 53

முதன் முதலில் 1888-ஆம் ஆண்டில் பகவத்கீதையை நான் கண்டேன். அப்பொழுதே நான் தீர்மானித்தேன். இது யுத்தத்தைப் பற்றி அரசகுமாரனுக்கும் கண்ணனுக்கும் நடந்த ஒரு உண்மை சம்பாஷணை என்று வைத்துக் கொள்ளக்கூடாது என்று எனக்குள் முடிவு கட்டிக் கொண்டேன். போரை ஒரு உருவமாக வைத்துக்கொண்டு மனித உள்ளத்தில் எப்போதும் நடைபெறும் யுத்தமாகிய மனக் குழப்பத்தைப் பற்றிய உபதேசம் கீதை என்றே நான் எப்போதும் கருதி வருகிறேன். மனிதன் உள்ளத்தை ஒரு புறம் நன்மை இழுக்கின்றது. மற்றொருபுறம் காமக் குரோதாதிகள் இழுக்கின்றன. இதுவே யுத்தம். இந்த யுத்தத்தைத்தான் குருக்ஷேத்திர யுத்தமாக வைத்துக் கொண்டு கண்ணன் உபதேசிக்கிறான். உள்ளத்தில் எப்போதும் நடைபெறும் மல்யுத்தத்தைப் பற்றி உபதேசிப்பதற்காகப் பாரத யுத்தத்தை எடுத்துக்காட்டாக வைத்து கீதை அமைந்திருக்கிறது. எனக்குப் பல ஆண்டுகளுக்கு முன் உண்டான இந்தக் கருத்து, பிறகு சமய ஆராய்ச்சி நன்றாகச் செய்து கீதையை ஆழ்ந்து படித்த பிறகு ஊர்ஜிதமாயிற்று. மகாபாரதத்தை ஆராய்ந்த பிறகும் இன்னும் உறுதிப்பட்டது.

நாம் படிக்கும் சரித்திர புஸ்தகங்களைப் போன்றது அல்ல மகாபாரதம். அதில் காணும் வீர புருஷர்களுக்கு

வியாச பகவான் அதிமானுஷ்ய லட்சணங்கள் தந்து; இது சரித்திரமல்ல நீதிக்கதை என்று தெளிவாகச் செய்து விட்டிருக்கிறார். கதா பாத்திரங்கள் உண்மையில் அரசு புரிந்தும் வாழ்ந்தும் வந்தவர்களாகவே இருக்கலாம். ஆனால் அவர்களை வைத்துக்கொண்டு, தர்மத்தைப் போதிக்கவே மகாபாரதம் எழுதப்பட்டிருக்கிறது. வெறும் சரித்திரமல்ல.

ஆயுதங்கள் எடுத்து யுத்தம் செய்வதே தர்மம் என்று மகாபாரதத்தில் உபதேசித்து நிரூபிக்கப்படவில்லை. விரோதத்திலும் போர் செய்வதிலும் உண்மையில் நன்மையில்லை என்றே மகாபாரதம் நிரூபிக்கிறது. யுத்தத்தில் வெற்றி பெற்றவர்கள் பிறகு கண்ணீர் வடித்து, துயரம் மேலிட்டுச் சங்கடப்படுவதாகவே பாரதத்தில் வர்ணிக்கப்படுகிறது. ஆயுத பலங்கொண்டு செய்யப்படும் யுத்தத்தில் வெற்றியடைவதனால் துக்கமே யன்றி சந்தோஷமில்லை என்பதே மகாபாரதத்தின் முடிவு. பாரதத்தின் சூடாமணி கீதையாகும். இரண்டாவது அத்தியாயத்தில் கீதாசாரியன் என்ன உபதேசிக்கிறான்? ஆயுதங்களைப் பற்றி உபதேசிக்கவில்லை. வியூகங்களைப் பற்றி உபதேசிக்கவில்லை. பூரண ஞானியினுடைய லக்ஷணங்களைப் பற்றி உபதேசிக்கிறான். ஒருவன் ஸ்திர புத்தியும் சம நிலையும் அடைந்ததாக எப்பொழுது சொல்லலாம் என்பதைப் பற்றித்தான் உபதேசிக்கப்படுகிறது. ஆயுதங்கள் எடுத்துப் போர் செய்யும் வீரனுடைய இலக்கணம் சொல்லப்படவில்லை. அந்த அத்தியாயத்தில் யுத்தத்தில் ஆயுதங்கள் எடுத்து எதிர் நின்று போர் செய்யும் இரு கட்சிகளுக்கு உதவக் கூடிய விஷயம் ஏதுமில்லை.

கீதையில் உபதேசம் தரும் கண்ணன் பூரண புருஷன். முற்றுணர்வு பெற்றவன் நம்மைப் போன்ற மனிதனல்ல, நாம் தெய்வமாகக் கருதும் கிருஷ்ணன் இருந்ததே இல்லை என்று நான் சொல்லவில்லை. இருந்தான். ஒரு சரித்திர புருஷனுக்கு அதிமானுஷ்ய இலக்கணங்களைக் கற்பித்து, ஒரு பூரண அவதாரமாகச் செய்திருக்கிறோம். தர்மப் பிரசாரத்துக்கு இது அவசியம். தவறு ஒன்றுமில்லை.

மக்களுக்கு மிகப் பெரிய சேவை யாரேனும் செய்தால் அவனை ஹிந்து சம்பிரதாயத்தில் அவதாரமாகக் கருதுவது வழக்கம். ஜீவன்களனைத்தும் ஈசனுடைய அவதாரமே யாகும். ஆயினும் எல்லாச் சாதாரண மனிதர்களையும் நாம் கடவுள் அவதாரமாக வழிபடுவதில்லை. தன்னுடைய வாழ்கையில் தர்மத்தை நிலைநாட்டி மக்களுடைய பாராட்டு தலைப் பெற்றவன் காலம் சென்றபின், பின் சந்ததியாரால் அவதார புருஷனாகக் கருதப்படுகிறான். இதில் நான் ஏதும் தவறு காணவில்லை. ஆண்டவனுடைய பெருமைக்கு இது குறையாகாது. அற வழியில் நின்று பெருமையடைந்தவர் களை அவதார புருஷர்களாகப் பாவிப்பது உண்மையைப் புறக்கணித்ததாக நினைக்கலாகாது, "பரம்பொருள் ஆகிய தீயினின்று பறந்த ஒரு பொறியாவான் ஆதம்" என்பது உருது பழமொழி. தர்மம் பிழையாமல் வாழ்பவன் கடவுளு டைய அம்சம் என்பதில் சந்தேமில்லை. இதை ஒப்புக்கொண் டால் கீதாசாரியனைப் பாரத மக்கள் அவதார புருஷனாக வழிபடுவது சரியே என்பதைக் காணலாம்.

## 54

மனிதன் பூரணத்தை அடைய ஆசைப்படுகிறான். முயற்சியும் செய்கிறான். இதனின்றே ஹிந்து சம்பிரதாயத் தில் பகவான் அடிக்கடி அவதாரம் எடுக்கிறான் என்கிற கொள்கை பிறந்திருக்கிறது.

கடவுள் தன்மையை அடைய வேண்டும் என்று மனித னுடைய உள்ளத்தில் இடைவிடாத ஆசையொன்று இருக் கிறது. ஆசைகளுக்குள் தர்மத்துக்குப் புறம்பாகாத ஆசை இது. தெய்விகத் தன்மையை ஆன்மா அடைய முடியும். கீதை மட்டிலுமல்ல, எல்லா மதங்களிலுமே 'உன்னுடைய

பூரணத்தை நீ கண்டு கொள்' என்று உபதேசிக்கப்படுகிறது. இந்தப் பூரணத்தை அடைவது எப்படி, தன்னைத் தான் உயர்த்திக் கொள்வது எப்படி, இதற்கு கீதை வழி காட்டுகிறது. ஹிந்து நூல்களில் எல்லாம் ஆங்காங்கே சொல்லப்பட்டிருந்த போதிலும், மிகத் தெளிவாக கீதையில் இது விளக்கப்பட்டிருக்கிறது. நன்றாகத் தெளிவுபடுத்துவதற்காக, 'கூறியது கூறல்' என்கிற குற்றத்தையும் பாராமல் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கிறது.

தன்னைத்தான் உயர்த்திக் கொள்வதற்கும் ஆன்மா பூரணத்தை அடைவதற்கும் வழி ஏதெனின், செய்யும் செயலில் உண்டாகும் பயனைக் கருதாமல் செய்ய வேண்டியதைச் செய்து முடித்தல், இதுவே கீதையின் முக்கியமான உபதேசம்.

கீதா சாஸ்திரத்தின் நடுநாயகமாக விளங்குவது. லாபத்தைக் கருதாமல் கடமையைச் செய்ய வேண்டும் என்கிற உபதேசம். துறவு என்றால் செயலினால் உண்டாகும் லாபத்தைத் துறத்தல். சந்நியாசம் என்றால் சுயநலனை விட்டு விடுதல். சுயநலனைக் கருதாமல் செய்ய வேண்டியதைச் செய்து கொண்டு போவதே உண்மையான துறவு நிலை. மற்ற உபதேசங்கள் எல்லாம் இந்த உண்மையை மையத்தில் வைத்து, சூரியனைக் கிரகங்கள் சுற்றுவது போலும் அதனின்று ஜோதியைப் பெற்றுப் பிரகாசிப்பது போலும் மற்ற எல்லா உபதேசங்களும் வேகம் பெறுகின்றன. தியானம், பக்தி, அமைதி முதலிய அநேக விஷயங்கள் கீதையில் போதிக்கப்பட்டாலும் பயனைக் கருதாமல் கடமையைச் செய்வதுதான் முக்கிய உபதேசம்.

உடல் என்பது ஒரு சிறை. அந்தச் சிறைக்குள் அடைபட்டிருக்கும் உயிர் கர்மம் செய்தே தீரவேண்டும். செய்யாமல் சும்மா இருக்க முடியவே முடியாது. இந்த நியதி அனைவரையும் கட்டுப்படுத்தும். ஆயினும் எல்லா மதங்களிலும் சொல்லப்படுவது என்னவென்றால் உடலை ஆண்டவனுடைய கோயிலாகக் கருதி வாழ்க்கை நடத்தினால் விடுதலை பெறலாம்.

எல்லாக் காரியத்திலுமே தோஷம் இருக்கும். எந்தச் சின்ன காரியத்திலுமே இது உண்மை. தோஷத்திலிருந்து முற்றிலும் விடுபட்ட செயலைக் காண்பது அரிது. செயலை எப்படிச் சுத்த மாக்குவது என்பது கேள்வி. உடலை எப்படி ஆண்டவனுடைய கோயிலாகச் செய்வது? இந்தக் கேள்விக்கு கீதையில் சொல்லப்படும் விடை என்னவென்றல், "சுயநலத்தைத் துறந்து எந்தச் செயலையும் செய், பலனைக் கருதாமல் கர்மத்தைச் செய். உன் காரியங்களை எல்லாம் ஆண்டவனுக்கு அர்ப்பணமாகச் செய். உன் உயிரையும் உடலையும் ஆண்டவனுக்குச் சமர்ப்பித்து விடு" என்பதே. இதுவே கீதையின் சாரம்.

பலனைத் துறந்து விட்டு உன் வேலையைச் செய் என்பது வெறும் பேச்சில் முடிந்து போகாது. உண்மையைக் காண்பது மட்டும் போதாது. அந்த முடிவை அடைய வேண்டுமானல் உள்ளத்தைக் கடைந்து கடைந்து வெண்ணெயைத் திரட்ட வேண்டும். படிப்பு மட்டும் போதாது. படித்தவர்கள் அறிவை அடைகிருர்கள். வேதங்களைத் தலை கீழாக ஒப்பிப்பார்கள். எவ்வளவு அறிவு அடைந்திருந்த போதிலும் சுயநலத்தை விட மாட்டார்கள். படிப்பு மட்டும் போதாது என்பதற்காகத்தான் கீதையில் பக்தியையும் தியானத்தையும் உபதேசிக்கிருன் கீதாசாரியன். சிரத்தையில்லாத அறிவு குறி தவறிய துப்பாக்கி வெடியைப் போலாகும். ஆனபடியால் கீதையில் சொல்லப்படுவது, பக்தி செலுத்து, அறிவு தானகவே வரும் என்று.

பக்தி என்பது வெறும் வாசா கைங்கரியமல்ல. யமனுடன் மல்யுத்தம் செய்வது போன்றதாகும் உண்மையான பக்தி. இதனலேதான் பக்தனுடைய இலட்சணங்களைச் சொல்லும் போதெல்லாம் கீதையில் யோகியைப் பற்றிச் சொல்வது போலச் சொல்லப்படுகிறது.

பக்தி வெறும் மூடக் கொள்கையல்ல. விஷயமறியாமல் பேச்சுக்கள் பேசுவது மல்ல. வெளி வேஷமும் அல்லவே அல்ல. துளசி மாலை, நெற்றியில் நாமம், கோவில் பூஜை இவையெல்லாம் இருக்கலாம். ஆனல் பக்திக்கு அடை

யாளம் இவைமட்டுமல்ல. யாரைக் கண்டும் பொருமைப் படாதவன் பக்தன். உள்ளத்தில் இரக்கம் நிறைந்தவன் பக்தன். 'நான்' 'எனது' என்கிற அகங்கார மமகாரங் களைத் துறந்தவன் பக்தன். தன்னை மறந்தவன் பக்தன். குளிரும் வெப்பமும் இரண்டையும் ஒன்ருகக் கருதுவான். சுகம்-துக்கம் என்கிற வித்தியாசம் பார்க்க மாட்டான். பிறர் செய்த குற்றத்தை மறப்பான். எப்போதும், உள்ளத்தில் திருப்தி நிறைந்திருக்கும். மனத்தை உறுதி நிலையில்நிறுத்தி யிருப்பான். தன் உள்ளத்தையும் தன்னையுமே பகவானுக்கு அடிமையாக்கி விட்டிருப்பான். அவனுக்குப் பிறரைக் கண்டால் பயமில்லை; அவனைக் கண்டால் யாருக்குமே பய மிராது. நல்லது வந்தால் மகிழ்ச்சிப் பரவசமாக மாட்டான். கஷ்டத்தைக் கண்டு துக்கப்பட மாட்டான். பயப்பட மாட் டான்.)

(உள்ளம் எப்போதும் சுத்தமாக இருக்கும். செய்யும் செயல்களில் குற்றம் குறை இருக்காது. சாமர்த்திய மாகவே செய்வான். ஆனாலும் பயனைக் கருத மாட்டான். வெற்றியினாலும் தோல்வியினாலும் நிலை இழக்க மாட்டான். புகழும் இகழும் இரண்டையும் ஒரே விதமாகப் பொறுப் பான். பாராட்டுதலினால் கர்வமடைய மாட்டான். அவ தூறினால் மனத்தாழ்ச்சியடைய மாட்டான். தனியாக இருப்பதும் பேசாமலிருப்பதுமே விரும்புவான். குற்றமற்ற அறிவைப் பெற்றிருப்பான். இவையே பக்தனைக் குறிக்கும் அடையாளங்கள். பற்றுக்களை யறுத்தவனிடம் தான்) இவற்றைக் காண முடியும்.

## 55

நான் சொன்னதிலிருந்து என்ன ஏற்படுகிறதென்ருல் பக்தியும் ஞான நிலையும் ஒன்றே. பக்தி வேறு, ஞானம் வேறல்ல.

பக்தியே முக்தி. ஞானமே முக்தி. ஞானம் அல்லது பக்தி இவற்றைக் கொண்டு வேருென்றை அதாவது முக்

தியை அடைவோமென்று எண்ணலாகாது. ஒரு ரூபாயை எடுத்துக்கொண்டு கடைக்குச் சென்ருல் தின்பண்டமோ அல்லது விஷமோ விலைக்கு வாங்கலாம். முத்திரையிட்ட பணத்துக்கு மதிப்பு அதைக்கொண்டு வேறு பொருளைப் பெறுவதுதான். அதற்கே தனிப்பயன் இல்லை. பக்தியும் ஞானமும் அம்மாதிரியல்ல. பண்டமாற்றலுக்கு அல்ல பக்தியும் ஞானமும் பெறுவது. வேருென்றையும் அவற்றைக் கொண்டு பெருமலேயே அவற்றினின்றே ஆனந்தம் பெறுகிறோம். ஞானமும் பக்தியும் சாதனங்கள் அல்ல. அடையவேண்டிய பயனும் அதற்கு வேண்டிய சாதனமும் ஒன்ருகவே தீர்ந்து போகின்றன. சாதனமே பயனுகிறது. பூரண சாந்தியே நிர்வாண நிலைக்கு வழி. அதுவே நிர்வாணமும்.* பக்தியும் ஞானமும் உண்மையான பக்தியும் ஞானமும் ஆக வேண்டுமானுல் எந்தப் பயனையும் கருதாத காரியமாக இருக்கவேண்டும்.

எது நல்லது எது தீயது என்று ஒருவன் அறிந்து விட்டால், அதுவே ஞானமாகி விடாது. அதனுலேயே முக்தியடைய முடியாது. புலமை அடைந்தவன் அதனுலேயே ஞானியாகி விடமாட்டான்.

படிப்பு ஏற ஏறச் சோம்பேறித்தனமும் ஏறுகிறது. தன் கையினுல் எந்த வேலையும் செய்யத் தகாதவனுகி விடு

* கீழ்க்கண்ட திருவாய் மொழிப் பாசுரங்களிலும் நம்மாழ்வார் இதையே சொல்லுகிருர்.

நன்ருய் ஞானம் கடந்து போய், நல் இந்திரியம் எல்லாம் ஈர்ந்து
ஒன்ருய்க் கிடந்த அரும்பெரும் பாழ் உலப்புஇல் அதனை உணர்ந்துஉணர்ந்து
சென்(று) இங்கு, இன்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து, பசைஅற்ருல்
அன்றே அப்போதே வீடு; அதுவே வீடு வீடாமே!
அதுவே வீடு; வீடு பெற்று இன்பம் தானும் அது; தேறி,
எது...வதானும் பற்று இன்றி யாதும் இலிகள் இகிற்கில்
அதுவே வீடு வீடு பெற்று இன்பம் தானும் அது; தேருது,
எதுவே வீடு? ஏது இன்பம்? என்று எய்த்தார் எய்த்தார் எய்த்தாரே.

கிறான். 'நான் சாஸ்திரம் படித்திருக்கிறேன். இந்தச் சின்னக் காரியங்களை யெல்லாம் நான் செய்யவேண்டுமா?' என்று எண்ணுகிறான்.

பக்தியும் சோம்பேறித்தனத்தில் முடிந்து விடுகிறது ஜெபமாலை கையில் வைத்து எண்ணிக்கொண்டு, கண்களில் நீர் மல்க, யாருக்கும் எந்தவிதமான பணியும் செய்வதற்கு அவகாசமில்லாமல் ஜெபம் நடத்துகிறார்கள். இது என்ன பயன் தரும்? உண்பதிலும் தூங்குவதிலும் செலவழிக்கும் காலம் தவிர எஞ்சிய போதெல்லாம் ஜெபமாலையை விடாமற் பக்தி செலுத்தி நெல் குத்தவோ, மா அறைக்கவோ, நோயாளியைப் பார்க்கவோ சமயம் இல்லாமல் பக்தி நடைபெற்று வருகிறது. இதில் பயனில்லை. கீதையில் சொல்லப்படுவது என்னவென்றால் பணிகளைச் செய்தே முக்தி பெறலாம். ஜனகன் முதலிய பெரியோர்களும் கடமைகளைச் செய்தே வீடு பெற்றார்கள். "நானும் கூடச் செய்யாமை பூண்டு விட்டேனானால் உலகம் அழிந்துபோகும். மக்களைப் பற்றிச் சொல்லவேண்டுமா? செய்யவேண்டிய தொழிலைச் செய்யவேண்டிய முறையில் செய்துகொண்டு போனால்தான் வீடு பெறமுடியும்." இது கண்ணன் வாக்கு.

எந்தச் செயலும் நம்மைப் பந்தப்படுத்துகிறது என்பது உண்மை. ஆயினும் உயிர் கொண்ட மக்கள் செயலின்றி யிருக்க முடியாது. விரும்பியும் விரும்பாமலும் செயல்களில் சிக்கியே தீரவேண்டும். 'செயல்' என்றால் எண்ணும் எண்ணங்களும் அதனுள் அடங்கும். செயல்களினால் கர்மபந்தத்தில் சிக்கிக்கொள்ளாமலிருக்க நாம் என்ன செய்ய வேண்டும்? இதைத்தான் கீதை நான் கண்ட வேறு எந்த சாஸ்திரத்திலும் சொல்லாத முறையில் நன்றாக விளக்கி யிருக்கிறது.

# 56

"உனக்கு ஏற்பட்டுள்ள காரியத்தைச் செய். அந்தக் காரியத்தில் உனக்கு உண்டாகக்கூடிய பயனைப் பற்றிய எண்ணத்தைத் துறந்துவிட்டுச் செய். லாபத்தை விரும்பாமல் பணிசெய்." இதுவே கீதையின் உபதேசம்.

கீதையின் சாரத்தைச் சந்தேகமறச் சொல்லிவிட்டேன். 'நான் செய்யாமை விரதம் பூண்டேன்' என்று ஒருவன் ஆரம்பித்தால் அவன் மீளமாட்டான். செயலைத் துறக்காமல் பயனைமட்டும் துறந்து வாழ்க்கை நடத்துபவன் உயர்வான்.

பயனைத் துறத்தல் என்றால் கவனம் செலுத்தாமலும் அக்கறையில்லாமலும் செய்வதல்ல. இன்னது செய்கிறேன், அதனுடைய விளைவு என்ன, என்ன சாதனங்களைக் கொண்டு செய்கிறேன். என்னுடைய சக்தி எவ்வளவு என்று இவற்றை யெல்லாம் கவனித்தே காரியங்களைச் செய்ய வேண்டும். செயலுக்கு வேண்டிய சக்தி, செய்வதற்கு வேண்டிய சரியான சாதனங்கள், செயலின் விளைவைப்பற்றிய அறிவு, இவை யெல்லாம் ஒன்றுசேரக் காரியத்தைச் செய்யவேண்டும். ஆனால் அந்தக் காரியத்தின் லாபத்தைத் தனக்கென்று வேண்டாமல் செய்யவேண்டும். லாபத்தைக் கோராமலிருந்தாலும் செய்யவேண்டியதைக் குறைவின்றிக் கவனமாகச் செய்யவேண்டும். இப்படிச் செய்தால்தான் கீதையில் சொல்லியபடி பயனைத் துறந்ததாகும்.

பலனைத் துறந்துவிடவேண்டும் என்றால், செய்யும் செயலின் நல்விளைவைத் தள்ளிவிட வேண்டும் என்பது அல்ல. கீதையில் இப்படி எங்கும் சொல்லப்படவில்லை. விளைவின் லாபத்தை அடையவேண்டும் என்கிற ஆசை உள்ளத்தில் வேலை செய்யலாகாது. அவ்வளவே. உண்மையில் லாபத்துக்கு ஆசைப்படாதவன்தான் பதின்மடங்கு லாபமடைகிறான். இந்தக் காரியம் எப்படி முடியுமோ என்று கவலைப்பட்டுக்கொண்டு செய்கிறவன் காரியத்தைச்

சரியாக செய்யமாட்டான். ஆசையும் கவலையும் சாமர்த்தியத்தைக் கெடுக்கும். கவலைப்படுகிறவன் பொறுமை இழப்பான். கோபமும் வந்து சேரும். தவறான முறைகளைக் கைக்கொள்ளச் செய்யும். நம்பிக்கையின்றி இதையும் அதையும் செய்துகொண்டு போவான். செயலின் முடிவைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு செய்தால் இவ்வாறெல்லாம் நேரும். இது எப்படி முடியும் என்கிற கவலையானது வேலையை ஒரு மனத்தோடு செய்ய இடம் கொடுக்காது. தர்ம மார்க்கத்தினின்று பிறழவும் தோன்றும். ஒரு பயனை அடைவதற்காக எதையும் செய்யலாம். நியாயம் அநியாயம் என்று பார்க்க வேண்டியதில்லை என்கிற தவறான கொள்கையில் கொண்டுபோய்விடும்.

ஒரு பயனை அடையவேண்டும் என்கிற ஆசை உள்ளத்தைக் கவர்ந்தால் அது மனிதனைக் கெடுத்துவிடும் என்கிற அனுபவத்தைக் கொண்டு கீதையில் வாழ்க்கைக்குச் சரியான மார்க்கம் காட்டப்பட்டிருக்கிறது: பயனைத் துறத்தல் என்கிற மார்க்கம். அதுவே சரியான மார்க்கம் என்பது கீதையில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. உலக வாழ்க்கைக்கும் சாஸ்திரத்தில் சொல்லப்படும் தர்மத்துக்கும் சம்பந்தமில்லை. அறத்தைப் பின்பற்றினால் லௌகீக வாழ்க்கை நடத்த முடியாது என்றெல்லாம் பலர் எண்ணுவது தவறு. வியாபாரத்துக்கும் சாஸ்திரத்துக்கும் வெகுதூரம். சாஸ்திரம் மோட்ச சாதனமாகும். உலக வாழ்க்கைக்கு ஒவ்வாது என்று பலர் பேசி வருவதைக் கேட்டிருப்பீர்கள். இந்த வாதம் தவறு என்று அதிலுள்ள பிழையைக் கீதாசாரியன் நன்றாக விளக்கிக் காட்டியிருக்கிறான். அது என்னுடைய உறுதியான அபிப்பிராயம். உலக வாழ்க்கைக்கும் மோட்ச சாதனத்துக்கும் வெவ்வேறு வழி என்று எண்ணுவது தவறு. உலக வாழ்க்கையில் நாம் செய்யவேண்டிய எல்லாக் காரியங்களுமே அறத்தின் வழியில் செல்ல வேண்டும் என்பதைக் கீதை வற்புறுத்துகிறது.

சாதாரணமான தினசரி வாழ்க்கையில் செய்ய முடியாதது கீதையில் சமயாசாரமாகச் சொல்லப்படவில்லை. பற்று

இல்லாமல் செய்யக்கூடிய காரியங்களைத்தான் மனிதன் செய்யவேண்டும். அப்படிச் செய்யமுடியாத காரியங்களைச் செய்யலாகாது. விட்டுவிட வேண்டும்; கொலையும், பொய் யும், விபசாரமும் பாவங்களாகும். பற்று நீக்கி வாழ்க்கை நடத்தினோமானால் இந்தப் பாப காரியங்களைச் செய்யத் தோன்றாது. எளிய வாழ்க்கையும் சாந்தமும் அடைவோம்.

இவ்விதமாகக் கீதையின் பொருளை ஏற்றுக்கொண்டு யோசித்ததில் சத்தியமும் அஹிம்ஸையும் கீதையில் உப தேசிக்கப்பட்ட மார்க்கத்தின் பயனைக் கண்டேன். லாபத்தை விரும்பாமல் பணியைச் செய்கிறவனுக்குப் பொய் சொல்ல வேண்டிய அவசியமே நேரிடாது. ஒரு பயனை அடைந்து லாபம் பெற வேண்டுமென்று விரும்பி னால்தான் பொய்யிலும் பலாத்காரத்திலும் மனிதன் இறங்கு கிறான்.

## 57

கீதையின் உபதேசத்தில் அஹிம்ஸையும் ஒருபாகமாக இருப்பின் ஏன் யுத்தத்தை வைத்து உபதேசம் எழுதப் பட்டிருக்கிறது என்கிற கேள்வி யுண்டு. அந்தக் காலத்தில் அஹிம்ஸா தர்மம் ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தபோதிலும் யுத்தம் தர்மத்தினின்று விலக்கப்படவில்லை. க்ஷத்திரிய கடமைகளுக்கும் அஹிம்ஸைக்கும் விரோதம் அந்தக் காலத் தில் பெரியோர்கள் காணவில்லை. கீதையின் நோக்கம் அஹிம்ஸா முறையை ஊர்ஜிதப்படுத்துவதற்கல்ல என் பதை ஒப்புக் கொள்ளுகிறேன். பயனைத் துறத்தல் என்கிற மார்க்கத்தைக் காட்டுவதற்காகவே கீதை தோன்றியது. இரண்டாவது அத்தியாயத்திலேயே இதுமிகத் தெளிவாகக் காணப்படுகிறது. ஒரு உண்மையை உபதேசிக்கும்போது

அதனுடைய எல்லா முடிவுகளையும் எடுத்துக் காட்டவேண்டும் என்பது அவசியமில்லை. 'பயனைத் துறந்து கடமைகளைச் செய்' என்பது கீதையின் உபதேசம். இந்த உபதேசம் வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் எங்கெங்கே கொண்டு போய்விடும் என்பதைப் பற்றியெல்லாம் கீதையில் விவரிக்கவில்லை. முனிவர்களுடைய பெருமை என்னவென்றால் அவர்களுடைய உபதேசம் சுருக்கமாக இருக்கும். அது காலத்துக்கு ஏற்றபடி பலவித நற்பயன்களைத் தரும். அந்தக் காலத்தில் எதிர்பாராத பொருளும் கூடப் பிற்காலத்தில் அதனின்று தோன்றும்.

யாகங்கள் கீதைக்கு முந்திய காலத்திலும் செய்யப்பட்டு வந்தன. வேள்விகளில் பிராணிகளை வதை செய்தும் வந்தார்கள். ஆனபோதிலும் யாகமென்று கீதையில் பல இடங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் பிராண ஹிம்ஸை கலந்த யாகம் அதில் காணப்படவே இல்லை. கீதையில் கூறப்பட்டிருக்கும் வேள்விகளுக்குள் ஜபயக்ஞம் என்பதே சிறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆண்டவனை ஏகாக்கிர சித்தத்துடன் தியானிப்பதே சிறந்த வேள்வி என்பதைக் காண்கிறோம். மூன்றாவது அத்தியாயத்தில் தேக சிரமத்தைச் செலுத்திப் பணி செய்வதும் ஒரு வேள்வியாகச் சொல்லப்படுகிறது. மூன்றாவது நான்காவது அத்தியாயங்களைச் சேர்த்துப் படித்தால் வேள்வி என்பதற்குப் பல பொருள்கள் காண்கிறோம். கீதையில் பல வேள்விகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தாலும் பிராணிகளைக் கொல்லும் வேள்விகளை அவற்றில் காண முடியாது. யக்ஞம் என்கிற பழைய சொல்லுக்குப் புதுப்பொருள்கள் கீதையில் தோன்றி விட்டன.

இப்படியே சந்நியாசம் என்கிற சொல்லும் கீதையில் பொருள் மாறி விட்டிருக்கிறது. எவ்விதக் காரியமும் செய்யாமல் இருக்கும் நிலை கீதையில் சொல்லப்பட்ட சந்நியாசம் ஆகாது. கீதையில் சொல்லப்பட்ட சந்நியாசத்தில் எல்லா வேலையும் செய்ய வேண்டியதே, செய்த போதிலும் செய்யும் முறையில் செய்தால் அது செய்யாமையேயாகும்.

பயனைக் கருதாது செய்யப்பட்ட கர்மம் அகர்மமாகும். ஆசையை மனத்தில் வைத்துக்கொண்டு வெளிப்படையாக ஆசையைப் பூர்த்தி செய்யாமலிருந்தாலும் அது கர்ம மாகும்.

கீதையில் யுத்தத்தை விலக்கவில்லை என்பது உண்மை யாயினும், நாற்பது ஆண்டுகள் கீதா உபதேசத்தின்படி வாழ்க்கையை நடத்த முயற்சி செய்து வந்ததில் நான்கண்ட உண்மை என்னவென்றால்-இதை மிக அடக்கத்துடன் சொல்லுகிறேன்-பற்றுக்களை அறவே நீக்க வேண்டுமானால் அஹிம்ஸை இல்லாமல் முடியாது. கீதை உபதேசத்தை முற்றிலும் நிறைவேற்றினால் யுத்தத்தை விலக்க வேண்டிய தாகிறது.

பகவத்கீதையானது சுருக்கமான சூத்திரங்கள்கொண்ட நூல் அல்ல. அதில் மூழ்க மூழ்க ஆழ்ந்த பல கருத்துக் களைக் காணலாம். சாதாரண மக்களுக்கென்று தோன்றிய நூலானபடியினால் கூறியதையே திரும்பத் திரும்ப இனிய முறையில் கூறுகிறது. படிக்கும்போது அது குற்றமாகத் தோன்றாது. நாள் செல்லச் செல்ல கால பேதத்தினால் சொற்களின் பொருள் விரிவடையும். ஆயினும் அதனுடைய நடுநாயக உபதேசம் மாறுபடாது. பக்தர்கள், கீதையி னின்று வெவ்வேறு ரத்தினம் போன்ற பொருள்களை அடை வார்கள். பக்தர்களுடைய கருத்துக்களும் கொள்கைகளும் வெவ்வேறு விதமாக இருக்கலாம். ஆயினும் முக்கிய உப தேசத்தை ஒன்றாகவே கண்டு ஒப்புக்கொள்வார்கள்.

செய்ய வேண்டியதும் விலக்கப்பட வேண்டியதுமான ஒரு பட்டியல் கீதையில் இல்லை. ஒருவனுக்கு ஒன்றைச் செய்ய வேண்டியது தர்மமாகும். மற்றொருவனுக்கு அது அதர்மமே யாகும். ஒரு காலத்தில் ஒன்றைச் செய்வதில் தவறில்லை. அதே செயல் மற்றொரு காலத்திலும் இடத்தி லும் தவறாக இருக்கலாம். எது தர்மம் எது அதர்மம் என்று முடிவு கட்டுவதற்கு உரைகல் ஒன்றே. லாபத்தை விரும்பாமல் செய்யப்பட்ட செயலா என்பதே அது. அது தான் எந்தச் சந்தர்ப்பத்திலும் கட்டுப்படுத்தும் நிபந்தனை.

ஞானத்தைப் பற்றி மிக மேன்மைப்படுத்தியே கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கீதையில் சிறப்பித்துச் சொல்லப்பட்ட ஞானம் மூளையை மட்டும் சார்ந்ததல்ல. இதயத்தைச் சார்ந்தது. அறிவு மட்டும் ஞானமாகாது. ஆனபடியால் பக்தியில்லாதவர்களுக்குக் கீதை பயன்படாது. இதனால்தான் கண்ணன் கீதை முடிவில் சொல்கிறான் :

"இந்த உபதேசத்தை வேள்வியற்றவனுக்குச் சொல்லாதே. சிரத்தை யில்லாதவனுக்குச் சொல்லாதே. உபதேசத்தை விரும்பாதவனுக்குச் சொல்லாதே. என்னை மறுப்பவனுக்குச் சொல்லாதே. இந்த உபதேசத்தை பக்தர்களுக்கு எடுத்துச் சொல்கிறவன் பெரும் புண்ணியம் செய்தவனாவான். அவன் என்னையே அடைவான். அசூயையில்லாமல் இந்த உபதேசத்தைப் பக்தியோடு ஒப்புக்கொண்டு வாழ்க்கை நடத்துகிறவர்கள் வீடு பெறுவார்கள்."

[யங் இந்தியா 6-8-31]

## 58

சூரியா அஸ்தமம், பாலசந்திரன், விண்மீன்கள் விளங்கும் இரவு இவற்றின் அழகைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. இவற்றின் அழகும் மெய்ப்பொருளின் அழகைத்தான் எடுத்துக்காட்டுகிறது. பேருண்மையான ஆண்டவனை இவை தியானிக்கச் செய்கின்றன. சிருஷ்டியிலிருக்கும் மெய்ப்பொருள் அல்லவோ இவற்றிற்கெல்லாம் அழகைத் தருகிறது. அந்தி மாலையின் அழகைக் கண்டு வியந்தாலும் சந்திரனுடைய வடிவழகில் மூழ்கினாலும் என் உள்ளம் மலர்ந்து ஆண்டவனின் பாதத்துக்குச் செல்கிறது. அவனையும், அவன் அருளையும் இந்தக் காட்சிகளில் காண முயல்கிறேன். அவனை உள்ளத்தில் வைத்தபோது

தான் இந்த அழகு நிறைந்த காட்சிகள் எனக்கு மகிழ்ச்சி தருகின்றன. அவனை மறந்துவிட்டேனுல் இவற்றில் ஒரு பயனுமில்லை. இவை தடுக்கும் இடையூறுகளேயாகும். முக்தியடைவதற்கு சரீரமே தடையாவதுபோல் கலைப் பொருள்களின் அழகும் தடையாகிவிடும்.

[யங் இந்தியா 13-11-24]

சத்தியமே முதலில் நாம் தேடவேண்டிய பொருள். அது கிட்டிவிட்டால், அழகு தானுக உண்டாகும். நற்பய னும் தானுக உண்டாகும். இதைத்தான் ஏசுநாதர் குன்றின் மேல் நின்று உபதேசித்தது. ஏசுநாதர் சிறந்த கலைஞன் என்றே நான் கருதுகிறேன். உண்மையைக் கண்டும்தான் அடைந்த தரிசனத்தைப் பிறருக்கு எடுத்துக்காட்டியும் வந்த அவர் ஏன் உத்தம கலைஞர் ஆகமாட்டார். அத்தகைய கலைஞரே முகம்மது நபியும். அரபி பாஷையில் குர் ஆனே சிறந்த கலைப்பொருள் என்று அரபி நூல்களைப் படித்தவர் கள் சொல்லுகிறுர்கள்.

அழகைப்பற்றிச் சிந்தனை செலுத்தாமலே ஏசுநாதரும் முகம்மது நபியும் பேசிய பேச்சில் கலைப்பொருளின் அழகு வந்துசேர்ந்தது. காரணம், வாக்கிலிருந்த சத்தியமே, சத் தியமும் சௌந்தர்யமும் முடிவில் ஒன்றே. அதை அடை வதுதான் என் ஆசை. அதற்காகத்தான் என் வாழ்க்கை, உயிரையும் கொடுத்து அதைப்பெறுவேன்.

[யங் இந்தியா 20-11-24]

கோடிக்கணக்கான மக்களுக்குக் கலையழகை எப்படிச் சொல்லித்தருவது? அழகை உணரச்செய்து, அதன் வழி அவர்கள் மெய்ப்பொருளைக் காணச்செய்வது முடியாத காரியம். ஆனபடியால் அவர்களை முதலில் உண்மையைக் காணச் செய்யவேண்டும். அதை அவர்கள் கண்டு அனு பவித்த பிறகு அழகை அவர்களே காண்பார்கள்: பசியில் வாடும் மக்களுக்கு எது உணவு தருகிறதோ அதில்தான்

நான் அழகையும் காண்கிறேன். முதற் கடமை அவர்கள் பிழைப்புக்கு வழி காட்டவேண்டும். பிறகு கலைகளும் அவற்றின் மகிழ்ச்சியும் அழகும் தாமாகத் தோன்றும்.

[யங் இந்தியா 20-11-'24]

உண்மையான கலையில் வெளித்தோற்றத்தின் அழகோடு பொருளின் அழகும் இருக்கவேண்டும். கலைகளில் இரண்டுவிதங்கள் உண்டு. கலை விஷத்தைப்போல் கொல்லவும் செய்யும், மருந்துமாகி உயிரைத்தரும். உண்மையான கலைப்பொருளை உண்டாக்கும் கலைஞன் சுத்த உள்ளமும் சீலமும் கொண்டவனாக இருக்கவேண்டும்.

[யங் இந்தியா, 11-8-'21 ]

கலைக்கும் சுத்த வாழ்க்கைக்கும் சம்பந்தமில்லை யென்று நாம் கருதுகிறோம். அது தவறு. என்னுடைய அனுபவத்தின் பேரில் இந்தக் கொள்கை சுத்தத் தவறு என்று சொல்வேன். சுத்த வாழ்க்கையே உத்தமக் கலைப் பொருளாகும். அதைப்போன்ற வேறு உண்மைக் கலைப் பொருள் கிடையாது. பயிற்சியடைந்து நன்றாகப் பாடப் பலரும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் பரிசுத்தமான வாழ்க்கை என்கிற கானத்தைத் தோற்றுவிப்பவர்கள் வெகு சிலரே. பரிசுத்தமான வாழ்க்கையே சிறந்த கானம்.

[ஹரிஜன், 19-2-'38]

## 59

சத்தியமே தெய்வம், சத்தியமே ஆண்டவன் பெயரும் என்று நான் வெகு நாட்களுக்கு முந்தியே கண்டேன். என்னுடைய அறிவு, என்னுடைய உணர்ச்சி இரண்டுமே என்னை அந்த முடிவுக்குக் கொண்டுபோய் விட்டன. ஆயினும் அந்த சத்தியத்தைத்தான் நான் 'ராமன்' என்று பெயர் சொல்லி இறைஞ்சுகிறேன். பெரிய இடுக்கண் வந்தபோதெல்லாம் அந்தப் பெயரே என்னைக் காப்பாற்றி வந்தி

ருக்கிறது. இப்பொழுதும் அந்த நாமமே என்னுடைய காப்பு.

இதற்குக் காரணம் என்னுடைய குழந்தைப் பருவத்துப் பழக்கமாக இருக்கலாம். இல்லை, துளசிதாஸருடைய மாயமாகவும் இருக்கலாம். எப்படியாயினும் ராமநாமமே என்னுடைய நிரந்தரத் துணை.

குழந்தைப் பருவத்திய நினைவுகள் வருகின்றன. எங்கள் ஊரில், எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த ராமர் கோவிலுக்குத் தினமும் போய் வருவேன். என்னுடைய ராமன் அப்போது அங்கேதான் வசித்துவந்தான். என்னுடைய பயத்தையெல்லாம் அவன் போக்கி வந்தான். என்னைப் பாபச்செயல்களில் இறங்காமல் தடுத்தான். மூடநம்பிக்கையல்ல, உண்மை. அந்தக் கோவிலில் பூஜை செய்த பூசாரி கெட்டவனாக இருந்திருக்கலாம். அது எனக்குத் தெரியாது. கோவிலில் அக்கிரமங்களும் நடந்து வந்திருக்கலாம். அதுவும் எனக்குத் தெரியாது. அவை என்னைத் தீண்டவில்லை. இதுவே ஹிந்து சமுதாயத்திலுள்ள கோடிக்கணக்கான மக்களின் உண்மையான நிலைமையும். என்னைப் போலவே அவர்களும் கோவிலில் நடக்கும் குற்றங்குறைகளால் தீண்டப்படாமல் நன்மையே அடைந்து வருகிறார்கள்.

[ஹரிஜன். 18-3-'33]

'ஹிந்துக்களுக்குத்தான் ராமனும் ராமநாமமும், முஸல்மான்களுக்கு அதில் ஏது இடம்' என்று யாரேனும் ஆட்சேபிக்கும்போது எனக்குச் சிரிப்பு வருகிறது. முஸல்மான்களுக்கு வேறு ஆண்டவன், நமக்கு வேறு ஆண்டவனா? முஸல்மான்களுக்கும் ஹிந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் பாரஸியர்களுக்கும் அனைவருக்குமே ஒரே ஒரு ஆண்டவன். எங்கும் நிறைந்து சர்வ வல்லமையும் கொண்டுள்ள ஒரே ஈசனுக்குப் பல நாமங்களிட்டு இறைஞ்சி வருகிறோம்.

நான் 'ராமன்' என்பது அயோத்தியையில் ஆண்ட தசரதனுடைய குமாரனுகிய அந்தச் சரித்திர ராமன் அல்ல. காலத்துக்கு அப்பால்; பிறப்பு அற்று, ஒரே பொருளாக, எப்போதும் நிற்கும் கடவுளைத்தான் நான் ராமன் என்று அழைத்து வழிபடுகிறேன். அவனுடைய அருளைத்தான் நான் நாடி வருகிறேன். நீங்களும் அதைத்தான் நாடவேண்டும். ஆனபடியால் முஸல்மான்களாவது வேறு யாராவது என்னுடன் சேர்ந்து ராமனை வழிபடுவதில் என்ன குற்றம்? நான் 'ராம' என்று சொல்லும்போது, என்னுடைய முஸல்மான் சகோதரன் 'அல்லா' என்றும் 'குதா' என்றும் மனத்துக்குள் சொல்லி தியானிக்கலாம். அதனுல் என் பூஜையோ, பஜனையோ கெட்டுப்போகாது.

[ஹரிஜன், 28-4-46]

நான் துளஸிதாஸ பக்தன். சிறு வயதிலிருந்து நான் ஆண்டவனை ராமன் என்றுதான் பூஜித்து வருகிறேன். இது பழக்கத்தினுல் வந்ததே யொழிய வேறல்ல. உலகத்தில் வெவ்வேறு நாடுகளிலும், வெவ்வேறு மொழிகளிலும் கடவுளுக்கு மக்கள் இட்டுவந்திருக்கும் பெயர்களில் எதைச் சொன்னுலும் அல்லது ஓம்காரம் முதற்கொண்டு எல்லாப் பெயர்களையும் சொல்லி இறைஞ்சினுலும் முடிவு ஒன்றே. அந்தப் பெயர்களுக்கெல்லாம் பொருளானவன் ஒருவனே. தருமமும் ஒன்றே. தர்மத்தைக் கடைப்பிடித்தலே சிறந்த வழிபாடு. தர்மத்தோடு கலந்து ஒன்றிவிட்ட மனிதனுடைய வழிபாடு ஒரு பெயருமிட்டு அழைக்காமலே முடிவடைந்து விடுகிறது. அத்தகையோனுக்கு சுவாசிப்பது எப்படி இயற்கையோ அப்படி கடவுள் தியானமும் இயற்கையாகி விடுகிறது. மார்பில் பிராணவாயு நிறைந்து உயிரைத் தாங்குவதுபோல் தியானமும் அவனுக்கு இயக்கமாகி விடுகிறது. அவனுக்கு வேறு எந்த பூஜை சாதனமும் வேண்டியதில்லை.

[ஹரிஜன், 24-3-46]

## 60

இயற்கை வைத்தியத்தை நான் சிலாகிப்பதற்குக் காரணம் என்ன வென்றால் அது உடலையும் உள்ளத்தையும் ஆன்மாவையும் மூன்றனையும் கருதிச் செய்யப்படும் மருத்துவ முறையாகும். எல்லாவற்றையும்விடச் சிறந்த இயற்கை வைத்தியம் எதுவெனில் ராமநாமம் என்பேன். அது எந்த நோயையும் தீர்க்கும் தவறாத மருந்து. ராம பாணம் என்று சொல்லுகிறோமே,—எந்த நோயையும் ராம நாமம் தீர்க்கும் என்பதனால்தான் அந்தச் சொல் வழக்கத்திற்கு வந்திருக்கிறது. அதுதான் மனிதனுடைய மேன்மைக்குத் தகுதி வாய்ந்த மருந்து. எந்த நோய் வருத்தினாலும் உள்ளம் கரைந்து உச்சரிக்கப்படும் ராமநாமம் நிச்சயமாக ஆறிவிடும். ஆண்டவனுக்குப் பல பெயர்கள் உண்டு. அவனவன் தனக்குப்பிடித்த பெயரை வைத்து ஜபம் செய்யலாம். ஈசுவரா, அல்லா என்று சொல்லி ஜபம் செய்வதும் ராம ஜபமேயாகும்: இந்த ராமநாமம் உதவ வேண்டுமானால் கிளிகளுக்குக் கற்றுக் கொடுத்த பேச்சைப்போல் சொன்னால் போதாது. பக்தி சிரத்தையுடன் உள்ளத்தினுள் உச்சரிக்க வேண்டும். மண்ணும் நீரும் காற்றும் சூரியனும் ஆகாயமும் கூடி நம்முடைய உடல் உண்டாகி யிருக்கிறது. இந்த ஐந்துமே உடலுக்கு வந்த நோய்க்கு மருந்துமாகும். கூட ராமநாமத்தைச் சேர்த்தால்போதும். அதற்குமேல் மரணம் வந்து எய்தினால் துயரப்படலாகாது. மகிழ்ச்சியே அடையலாம். பௌதிக வைத்திய சாஸ்திரங்களில் அமரத்வம் தரும் மருந்தை இதுவரையில் காணவில்லை. உடலில் தங்கியிருக்கும் ஆன்மாவுக்கு மரணம் கிடையாது. அதை அசுத்தம் தீண்டாமல் வைத்துக்கொள்வதே நமது கடமை.

நான் சொல்வது உண்மையென்று ஒப்புக்கொண்டால் இந்தப் பெரிய ஆஸ்பத்திரிகளும், படித்துப் பாண்டியத்தியம் அடைந்த வைத்தியர்களும் இன்னும் மற்ற சாமக்கிரியைகளும், இவற்றுக்காகும் செலவுகளும் வேண்டாம் என்று நீக்கிவிடலாம் அல்லவா? உண்மையில் இவையெல்

லாம் எத்தனை பேருக்கு உதவி வருகின்றன? பெரும்பாலோர் இவற்றினல் ஒரு பயனும் அடைவதில்லை. பெரும்பாலோருக்குப் பயன்பட முடியாத ஏற்பாட்டை ஒரு சிலருடைய நன்மைக்காக வைத்துக்கொண்டு ஏன் பெரும் செலவு செய்யவேண்டும்?

[ஹரிஜன் 3-3-46]

நான் சொல்லும் ராமநாமம் ஒரு இந்திர ஜாலவித்தையல்ல. அளவுக்கு மீறி உணவு உண்டு, அதனல் வரும் நோயைத் தீர்த்துக்கொண்டு மறுபடியும் எதேச்சையாகச் சாப்பிடலாம் என்று ஆசைப்படுகிறவனுக்கு ராமநாமம் உதவாது. நன்மைக்குத்தான் ராமநாமம் உதவுமே யொழியப் பாபம் செய்வதற்கு உதவாது. திருடர்களும் கொள்ளையடிப்பவர்களும் ராமநாமம் சொல்லித் தங்கள் தொழில் நடத்த முடியாது. சுத்த வாழ்க்கையை நடத்தி உள்ளத்தையும் மலம் நீக்கி வைத்துக் கொள்பவர்களுக்குத்தான் ராமநாமம் பயன்படும். வரம்பு மீறி ஆகாரவிகார போகங்களைத் தேடுபவர்களுக்கு அது கொஞ்சமும் பயன்படாது. வரம்பு மீறி உண்டவனுக்கு மருந்து உபவாசமும் ஜபமுமல்ல. உபவாசமிருந்து அதனுடன் ஜபம் செய்யலாமே யொழிய, பிரார்த்தனை மட்டும் போதாது. உபவாசத்தின் கஷ்டத்தைப் பிரார்த்தனை மூலம் குறைத்துக்கொள்ளலாம். உபவாசத்தைத் தாங்க முடியாது என்று கஷ்டப்படுகிறவர்கள் ராமநாமத்தின் வழியாக உபவாசத்துக்கு வேண்டிய உறுதியைப் பெறலாம்.

கண்ட மருந்துகளை யெல்லாம் உள்ளே துருத்திக் கொண்டு வந்து அதே சமயம் ராமநாம உச்சரிப்பும் செய்து வருவதில் ஒரு அர்த்தமுமில்லை. நோயாளிகளுடைய அக்கிரமங்களுக்கு உடந்தையாக வைத்தியர்கள் தங்களுடைய கல்வியையும் சாமர்த்தியத்தையும் பயன்படுத்தித் தருகிறார்கள். இது நோயாளி, வைத்தியர் இருவருக்குமே நன்மை

யல்ல; தீமையாகும். உடலைப் பெற்றிருப்பதின் பயன் அதன் மூலம் ஆண்டவனை ஆராதிப்பதேயாகும். அதை விட்டுவிட்டுச் சரீரத்தையே பூஜை செய்து அதற்காகப் பணத்தை வாரிக் கொட்டிச் செலவு செய்வது என்ன மடமை. ராமநாமம் உடலுக்கும் மருந்தாகும்; ஆன்மாவை யும் மேல் தூக்கித் தரும்.

[ஹரிஜன் 7-4-46]

## 61

ராமநாமத்தைச் சரியாக ஜபம் செய்தும் சுத்த வாழ்க்கை நடத்தியும் வருகிறவர்கள் ஏன் சில சமயம் நோய்க்கு ஆளா கிறார்கள் என்பது சரியான கேள்வியே. யாருமே பூரண சுத்தமடையவில்லை. அடையவும் முடியாது. அசாத்தியம். இயற்கை அதற்கு இடம் தராது. முயற்சிதான் செய்ய முடி யும். அதுவே கடமை. வரம்பை அறிந்து வாழ்க்கை நடத்த வேண்டும். வரம்பு மீறினால் நோய் வந்து தாக்கும். வரம்பு மீறிய உணவும் வரம்பு மீறிய மற்றவையும் நோய்க்குக் கார ணம். உணவிலும் மற்றவிஷயங்களிலும் அவனவன் வரம்பை அவனவனே உணர்ந்து வாழ்க்கை நடத்தவேண்டும். இப்படி வாழ்பவன் நீண்ட ஆயுள் பெற்று வாழ்வான்.

[ஹரிஜன் 19-5-46]

இயற்கை முறையையும் ஆயுர்வேத முறைகளையும் நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆயினும் மேல்நாட்டு வைத்தியம் அடைந்திருக்கும் முன்னேற்றத்தை நான் ஒப்புக் கொள் கிறேன். மேல்நாட்டு வைத்தியம் உன்னத நிலை யடைந் திருப்பது உண்மையாயினும் அந்த உன்னத நிலை அடைவ தற்காகக் கையாண்டு வரும் முறைகளை நான் கண்டிக் கிறேன். உயிரும் உணர்வும் கொண்ட பிராணிகளை ஹிம்ஸை செய்தும் இன்னும் பல அக்கிரமங்களைச் செய்தும் மனித னுடைய சரீர நலத்தையே மேலாகக் கருதி மனித உடலைத் தாக்கும் நோய்களுக்கு மருந்து தேடி வருகிறார்கள். பாட

காரியங்கள் செய்து மனிதனுடைய உடலைக் காப்பாற்றுவது என்ன தருமம்? இதனாலேதான் இயற்கை முறையில் எவ்வளவு குறைகளிருந்த போதிலும், இயற்கை முறை வைத்தியர்களில் அனேகம் பேர் பொய்யர்களாயினும், முயற்சியும் சாமார்த்தியமுமின்றித் தங்கள் தொழிலை நடத்தி வருபவர்களாயினும், இயற்கை வைத்திய முறையை நான் பாராட்டி வருகிறேன். மற்ற வைத்திய முறைகளில் அந்த அந்த வைத்தியர்களின் உதவி யில்லாமல் முடியாது. இயற்கை முறையில் ஒருவன் வைத்தியனைத் தேடாமல் தனக்குத் தானே வைத்தியனாக அமையலாம். இதுவே ஒரு பெரிய லாபம்.

[ஹரிஜன் 11-8-46]

இயற்கையிலுள்ள பல வேகங்களில் ஆன்ம சக்தியும் ஒரு வேகம். ஆன்ம சக்தியை மறந்துவிடுதல் பெரும் தவறாகும். நம்முடைய முன்னோர்கள் பலர் அதைக்கொண்டே தங்களுடைய வியாதிகளைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள். உடலுக்கு வரும் நோய்களில் பலவற்றை வெற்றிகரமாகவே ஆன்ம சக்தியைக் கொண்டு சொஸ்தப்படுத்திக் கொள்ள முடியும். பூத உடலில் ஆன்ம சக்தியும் கலந்தேயிருக்கிறது. ஆன்ம சக்தி சிலருக்குத்தான் உண்டு. சிலர் தான் கையாளலாம் என்கிற ஆட்சேபணை சரியல்ல. மேல் நாட்டு மருந்துகளும் கூட எல்லாருக்கும் கிடைப்பது அரிது. பலர் குளிப்பதில்லை என்பதற்காக நாம் குளிக்காமல் இருப்போமோ? பலர் உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாமலிருந்தாலும் நாம் சிலராவது குளித்துச் சுத்தமாக வாழ்க்கை நடத்தினால் தான் பிறருக்குப் பணி செய்ய முடியும். சமூகத்துக்குப் பயன்பட முடியும். தேகத்தை சுத்தமாக வைத்துக்கொள்வது போலவே உள்ளத்தையும் சுத்தமாக வைத்துக் கொண்டு ஆன்ம சக்தி அடைய வேண்டும். சமூகத்தில் பலருக்கு இது முடியாது என்று நாமும் அந்த முயற்சி செய்யாமல் விட்டு விடக்கூடாது.

எல்லா விதத்திலும், அதாவது உடலும் உள்ளமும்

பரிசுத்தமாக நோய் இன்றி யிருப்பதே தர்ம மார்க்க மாகும். நாம் அந்த மார்க்கத்தில் நின்று மற்றவர்களுக்கும் வழிகாட்ட வேண்டும். வழி காட்டுவதோடு ஆரோக்கிய நிலையில் உடலையும் உள்ளத்தையும் வைத்துக்கொண்டு மற்றவர்களுக்காக நன்ருகப் பாடும் படலாம்.

[ஹரிஜன் 1-9-46]

## 62

மனிதர்களாகிய நாம், உயிர்கொண்ட பிராணிகளனைத் தையும் நம்முடைய உறவினர்களாகவும் நம்முடன் ஒரு குடும்பமாகவும் பாவிக்கவேண்டும். இப்படிச் சகல பிராணி களுடன் சகோதரத்துவம் கொண்டாடுவது நம் உரிமையு மாகும்; கடமையுமாகும்.

பிராணிகளைப்பற்றிய இந்த என் கொள்கை டார்வீன் சொன்னபடி குரங்குமட்டிலுமல்ல—குதிரை, ஆடு; சிங்கம், சிறுத்தை, பாம்பு, தேள் இத்தகைய எல்லா ஜந்துக்களும் அடங்கக்கொள்ளும். அந்த ஜந்துக்களுக்கு இந்தச் சகோ தர உணர்ச்சியிருக்க முடியாது. ஆனல் உணர்வு பெற்ற மனிதர்களாகிய நமக்கு இந்த ‘அடங்கல் சகோதர உணர்ச்சி’ கடமையாகும். இது என்னுடைய கொள்கை. என்னுடைய வாழ்க்கைக்கு இது அடிப்படையான தர்மம். எல்லாருமே இந்தத் தர்மத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது என் ஆசை. மனிதனுக்கு ஆண்டவன் ஞானம் தந்திருக்கிருன். மற்றப் பிராணிகளுக்கு அது இல்லை. ஞானஸ்வரூபியான கடவுளின் சிருஷ்டியில் மனிதனுக்குத் தான் அந்த ஞானஸ்வரூபத்தில் ஒரு பங்கு உடமையாக இருக்கிறது. இப்படி ஞானம் பெற்ற மனிதன் சகல ஜந்துக்களிடமும் சகோதர மனப்பான்மை கொள்ள வேண் டும். சிலருக்கு இந்த ஞானம் இல்லாமலிருக்கலாம். அல்லது இருந்து மழுங்கிப்போயிருக்கலாம். அவர்கள் கிடக்கட்டும்; தன்னுடைய மேன்மையறிந்த ஒவ்வொரு மனிதனும் அந்த

மேன்மையின் கடமையாகிய சர்வஜந்து சகோதரப்பான்மையைக் காப்பாற்ற வேண்டும்.

ஞானம் என்கிற தெய்விகப் பான்மையைத் தான் அடைந்திருப்பதை ஒருவன் அறியாமல் இருக்கலாம். ஆட்டு மந்தையில் ஆடுகளுடன் ஆடாக வளர்க்கப்பட்ட சிங்கக்குட்டி சில நாட்கள் வரையில் தன்னையும் ஆடாகவே பாவித்து நடந்துகொள்ளும். ஆனால் நாள் செல்லச் செல்லத் தன் உண்மை சொரூபத்தை அது கண்டுகொண்டுவிடும். தான் சிம்மம், ஆடு அல்ல என்று அறிந்து கொண்டுவிடும். மனிதனும் தன் தெய்விகப் பான்மையை முதலில் அறியாவிடினும் பிறகு உண்மையைக் காண்பான். தெய்விக மனப் பான்மையை அடைவான்.

எல்லாருமே இவ்வாறு ஞானம் பெறுவிடினும், ஒருவன் அறிவை அடைந்தால் அது போதுமல்லவா? பிற மக்களுக்கு அது உரிமையாகும். இந்தசக்தி மனித ஜன்மத்துக்கு உண்டு என்பதை நிரூபிக்க உலகத்தில் பெரியோர்கள் பலர் ஞானிகளாக விளங்கித் தங்களுடைய தெய்விகப்பான்மையை நிரூபிக்கவில்லையா? நாம் ஏன் சந்தேகப்படவேண்டும்? அனைவருக்கும் இந்தச் சக்தியுண்டு. உள்ளத்தில் விருப்பமும் மன உறுதியுமிருந்தால் முடியும்.

[யங் இந்தியா 8-7-26]

என்னைக் கேட்டால் ஒரு பாம்பைக் கொன்று அதன் உயிரை மாய்த்து என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பமாட்டேன். அதைக் கொல்வதைவிட அது என்னைக் கடிக்கப் பிரியப்பட்டால் கடிக்க விடவேண்டியதுதான். இதுவே தர்மம் என்பதை நான் அறிவேன். ஆயினும், ஆண்டவன் இம்மாதிரி என்னைச் சோதித்தானானால் நான் அந்தச் சோதனையில் தோல்வியடையலாம். என் உயிரைக் கொடுக்க எனக்குத் தைரியம் வராமற் போகலாம். நானும் தருமம் காணாத சாதாரண ஜந்துவைப் போல் நடந்துகொள்ளலாம். பாம்பைக் கொன்று என் உடலின் உயிரைக் காப்

பாற்றிக்கொள்ளலாம். இப்படி நான் சோதனையில் தோற்றேனாலும் என்னுடைய கொள்கை மாறுபடாது. என்னுடைய கொள்கையில் இன்னும் நான் ஆசைப்படும் உறுதி எனக்கு ஏற்படவில்லை. விஷப் பாம்புகளுடன் தைரியமாகவும் அன்புடனும் வாழ இன்னும் நான் கற்க வில்லை. பாம்பைக் கண்டால் பயம் போகவில்லை. அவ்வளவே. அதற்காக இன்னும் முயன்றுகொண்டே இருப்பேன்.

நம்முடைய உள்ளங்களில் வேலை செய்யும் கெட்ட எண்ணங்களின் கணக்குக்கு வரம்பு இல்லை. அவற்றை விட இந்த விஷப் பாம்புகள் கொடியனவா? நம்முடைய உள்ளங்களில் மறைந்து கிடக்கும் விஷத்தை எடுத்துக் காட்டவே ஆண்டவன் இந்தப் பாம்புகளை நாம் காணும்படியாகத் தோற்றுவித்திருக்கிறான். நம்முடைய தீய கருத்துக்களைப் போலவே இந்தப் பாம்புகளும் புலிகளும். தீய வடிவங் கொண்ட நம்முடைய எண்ணங்களும் பாம்புகளும் ஒரு குடும்பமாகும். நீங்களும் எங்களைப்போலவே விஷ ஜந்துக்கள் என்று இந்தப் பாம்பும் புலியும் நமக்குச் சொல்கின்றன. அந்த எச்சரிக்கையை உணர்ந்து நாம் நம்முடைய தீய எண்ணங்களை நீக்கிக் கொள்ளவேண்டும்.

விஷப் பாம்புகளையும் மிருகங்களையும் கொல்லுவதற்கு முன் மக்கள் சமமாக வாழ்வதற்காக என்னுடைய உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் விஷக் கருத்துக்களைப் போக்க வேண்டும். என் ஆயுளை நீடித்துக்கொள்வதற்காக இந்த மிருகங்களையும் பாம்புகளையும் விஷ ஜந்துக்கள் என்று கருதி அவற்றைக் கொல்ல விரும்புகிற நான் எப்படி என்னுடைய உள்ளத்தைப் பரிசுத்தமாக்கிக்கொள்ள முடியும்? என் உயிரையே பெரிய பொருளாக மதித்து அதற்காகப் பிற ஜீவன்களை மாய்க்க விரும்பாமல் என் உயிரைத் தத்தம் செய்துவிட்டால், அதனால் பிறகு நல்ல ஜன்மத்தையே பெறுவேன். இவ்வாறு உறுதியான நம்பிக்கை அடைந்தேனால் நான் எப்படி என் ஆருயிரைப் போலவே ஒரு உயிரைப் படைத்த பாம்பைக் கொல்வேன்?

[யங் இந்தியா, 14-4-27]

ஹிம்ஸையில்லாமல் உயிரைக் காப்பாற்றவே முடியாது. உடலும் உயிரும் கூடியிருப்பதற்கு ஏதாவதொரு ஹிம்ஸை செய்யாமல் முடியாது. உயிர்கள் எல்லாம் ஒன்றை யொன்று ஹிம்ஸித்தே ஜீவித்து வருகின்றன. சரீரமும் உயிரும் பிரியாமல் நிற்பதற்கு ஹிம்ஸை இன்றியமையாத தாகிறது. ஆகையினல்தான் அஹிம்ஸையை உபாசிப்பவன் இந்த உடல் பாரத்தை நீக்குவதற்கு ஆசைப்படுகிருன். முக்தி என்பது அதுவே. மறுபடியும் ஜன்மம் எடுத்துச் சரீர பாரம் அடையாமல் இருக்க வேண்டுமென்று கோருகிருன். உயிர் வாழ்க்கை என்பது எப்போதும் ஹிம்ஸையோடு கலந்தே நிற்கிறது. மறு பிறப்பில்லாமல் முக்தியடைவதே எல்லாச் சமயங்களின் நோக்கமும்.

[யங் இந்தியா, 4-10-28]

அஹிம்ஸைக் கொள்கையானது என்னுடைய உயிரேயாகும். அஹிம்ஸையும் சத்தியமும் ஆகிய இரண்டு தருமங்கள் எனக்கு இரண்டு சுவாவசப் பைகளைப் போலாகும். அவையின்றி நான் உயிர் வைத்திருக்க முடியாது. அப்படியாயினும் அஹிம்ஸையினுடைய பெருமையையும், கூடவே மனிதனுடைய சிறுமையையும் தெளிவாகக் காண்கிறேன். ஒவ்வொரு விஷயத்திலும் இதைக் காண்கிறேன். வனவாசம் செய்யும் முனிவனும்கூட, களங்கமற்ற கருணை உள்ளம் படைத்த ரிஷியுங்கூட, ஓரளவு ஹிம்ஸையின்றி ஜீவயாத்திரை நடத்த முடியாது. சுவாசம் கொள்வதும் விடுவதுமே ஹிம்ஸையாகும். மனிதனுடைய உடலே ஒரு கசாப்புக்களம். எவ்வளவு உயிர்களை ஜீரணித்துச் சரீரம் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்கிறது. ஆனபடியால் நாம் இறப்பும் பிறப்பும் வேண்டாம் என்று பிரார்த்தனை செய்கிருேம். உடலைக்கொண்டு அனுபவிக்கும் சுகங்கள் எல்லாம் நிலையற்றவை. உடலினின்று விடுபடுவதே விடு

தலையும் ஆனந்தமும். அதுவரையில் ஹிம்ஸை என்கிற விஷபானத்தைத் தினசரி உட்கொண்டே தீர வேண்டும்.

[யங் இந்தியா, 21-10-26]

சரீரயாத்திரை ஹிம்ஸையில்லாமல் நடத்த முடியாது. இந்த உண்மையை நான் கண்டதனாலேதான் என்னுடைய சரீர நிலையைப்பற்றி வரவர அக்கறை எனக்குக் குறைந்து வருகிறது மூச்சு விட்டாலுங்கூட எவ்வளவோ உயிர்களை, கண்ணுக்குத் தெரியாத உயிர்களைக் கொலை செய்கிறோம். இது தெரிந்தே மூச்சும் விடுகிறேன். சைவ உணவிலும் ஹிம்ஸை யில்லையா ? கறிகாய்களிலும் பழங்களிலும் உயிர் உண்டு என்பதை அறிவேன்· ஆயினும் அவற்றை விட்டு விட்டேனா ? இல்லை. மருந்துகள் உபயோகித்துக் கொசுக் களைக் கொன்றுவிட்டுத்தான் படுக்கிறேன். அதுவும் ஹிம்ஸைதான். ஆசிரமத்தில் கண்ட விஷப்பாம்புகளைக் கொல்லாமல் விடுகிறார்களா ? அந்த ஹிம்ஸையையும் சகித் துத்தான் வருகிறேன். ஆசிரமத்தில் வேலை செய்யும் மாடு களை அடித்துத்தான் ஓட்டுகிறார்கள். இவ்வகையான எத் தனையோ ஹிம்ஸைகளுக்கு நான் பொறுப்பாளிதான். அஹிம்ஸா முறையில் என்னுடைய குறைகளுக்குக் கணக்கே இல்லை. அவற்றை மறைக்கவும் நான் விரும்பவில்லை. ஆனால் இதற்காகக் கொள்கையை முற்றிலும் விட்டுவிட முடியுமா? பூரண அஹிம்ஸையை நான் கடைப்பிடிக்க முடியவில்லை என்று முற்றிலும் அந்தத் தர்மத்தை விட்டுவிட முடியுமா ? நான் என்னைப்பற்றிச் சொல்லிக் கொள்வதெல்லாம் இவ் வளவே; அஹிம்ஸா தத்துவத்தின் உண்மையை உணர்ந்து உள்ளம், உரை, செயல் இவற்றில் அந்தத் தர்மத்தைக் கடைப்பிடிக்க முயன்று வருகிறேன் என்பதே. விடா முயற்சி யுடனும் கவனத்துடனும் இந்தத் தர்மத்தைக் காப்பாற்ற என்னாலானதைச் செய்து வருகிறேன். இந்த முயற்சி பயனற்றுப் போகவில்லை. ஆயினும் வெற்றி வெகு தூரத் தில் நிற்பதையும் காண்கிறேன்.

[யங் இந்தியா, 1-11-28]

வாழ்க்கையில் எவ்வளவோ அபாயங்கள். எப்போதும் மரண பயம். எப்படி யிருந்தபோதிலும் மெய்ப்பொருளைப் பற்றி நம்முடைய அசிரத்தைக்கு அளவே இல்லை. அகம் பாவமோ அதற்கும் மேல். வாழ்க்கையில் ஒரு பயமும் இல்லா மற் போய்விட்டால் இன்னும் எவ்வளவு அதிக அகம்பாவம் கொள்வோம்!

[யங் இந்தியா, 7-7-27]

ஹிம்ஸையை நாம் வழக்கப் படுத்திக்கொண்டு விட்ட படியினால் கொலை என்பது வெகு எளிதாகிவிட்டது. சிறு காரணங்களுக் கெல்லாம் பிற உயிர்களைக் கொல்கிறோம். மக்களுமே ஒருவரை யொருவர் கொல்லத் தயங்குவதில்லை. உண்மையில் நாம் தெய்வ பக்தி கொண்டிருந்தால், அன்பும் அருளுமே அவன் வடிவம் என்று ஆண்டவனை நாம் நம்பினோ மானால், இப்படி ஜீவஹிம்ஸை செய்வோமா? நடுங்க மாட் டோமா? உயிருக்குப் பயந்து விஷ ஜந்துக்களையும் பாம்பு களையும் பூச்சிகளையும் கொல்கிறோம். நானுமே இவ்வாறு செய்கிறேன். ஆயினும் எனக்கு அறிவும் தைரியமும் அருள வேண்டுமென்று இடைவிடாமல் ஆண்டவனைப் பிரார்த்திக் கிறேன். உயிர்களை மாய்க்கும் அவசியமில்லாமல் வாழும் திறமையை அடைய வேண்டுமென்று இடைவிடாமல் இறைஞ்சுகிறேன். ஆண்டவனிடம் நான் கோரும் அருளை, மற்ற உயிர்களிடம் நான் காட்டும் சக்தியை அடையவேண்டு மென்று எப்போதும் பிரார்த்தித்து வருகிறேன்.

[...ன், 9-1-37]

உயிர்களுக்குள் பரிசுத்தமான பிராணி பால்தரும் பசு, எல்லா உயிர்களுக்குமாகச் சேர்ந்து மனிதனை இறைஞ்சு கிறது, "நம்மைக் கொல்லவேண்டாம்" என்று. "உயிர் களுக்குள் சிறந்த வடிவம் எடுத்திருக்கிறாய், மனிதனே! நமக்கு அருள்வாய். கொல்லாதே" என்று எல்லாப் பிராணி

களுக்குமாகப் பசு நம்மைப் பார்த்துக் கேட்டுக் கொள் கிறது. இவ்வாறு கெஞ்சுவதை அதன் கண்களில் காண லாம். "நம்மைக் கொல்லவா நீ பிறந்தாய்? நம் ஊனைத் தின்று பிழைக்கவா ஆண்டவன் உன்னைப் படைத்தான்? எங்களுக்கு நண்பனாக இருக்க மாட்டாயா? எங்களுக்குக் காப்பாக இருக்க மாட்டாயா?" என்று தன் கண்கள் வழி யாய்ப் பசு நம்மிடம் மன்றாடுகிறது.

[யங் இந்தியா, 26-6-24]

கருணாமூர்த்தியான பசுவை நான் பூஜை செய்வதை விடமாட்டேன். உலகமெல்லாம் எதிர்த்தாலும் அது பூஜைக்கு உரியது என்று உறுதியாகச் சொல்வேன்.

[யங் இந்தியா, 1-1-25]

## 65

ஒரு நண்பர் கேட்கிறார்: "பிரம்மசரியம் என்றால் என்ன? அதை முற்றிலும் பழுதின்றிக் காப்பாற்றுவது சாத்தியமா?"

பிரம்மசரியம் என்றால் பிரம்மத்தை அடையப் பார்ப் பது. அந்த முயற்சிக்கு வேண்டிய விரதமே பிரம்மசரியம். ஈசுவரன் உள்ளத்தில் உளன். ஒவ்வொரு உள்ளத்திலும் உளன். அவனைக் காண வேண்டுமானால் உள்ளத்தைச் சோதித்து அந்தராத்மாவைக் காணவேண்டும். புலன்களை முற்றிலும் வசப்படுத்தினாலன்றி அந்தக் காட்சியை அடைய முடியாது.

ஆகவே, பிரம்மசரியம் என்றால் மனோ வாக்குக் காயங் களை வசத்தில் நிறுத்தி வைப்பது. எப்போதும் எந்தச் சூழ் நிலையிலும் அந்தப் புலனடக்கம் நிலைகுலையா திருக்க வேண் டும். பிரம்மசரியத்தை வெற்றியுடன் நடத்தினால் காம மாவது கோபமாவது கிட்டே நெருங்காது. ஆண்டவன் அண்மையிலேயே எப்பொழுதும் வாழ்க்கை நடைபெறும். ஈசுவரத் தன்மையை அடைந்தே விடுவோம். இத்தகைய

பிரம்மசரியம் சாத்தியம் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. மனோ வாக்குக் காயங்களை முற்றிலும் அடக்கி யாள்வது முடியும்.

[யங் இந்தியா, 5-6-24]

சத்தியத்துக்கென்று தன் வாழ்க்கையை ஒப்புவித்த ஒருவன் சத்தியத்தை வழிபடுவதிலேயே எப்போதும் ஈடுபடுவான். வேறு விஷயத்தில் தன் மனத்தை எவ்வாறு செலுத்துவான்? செலுத்தினால், கொண்ட மனைவிக்குத் துரோகம் செய்தவாறு ஆவான். சிற்றின்பத்தில் மனம் செலுத்தமாட்டான். சத்தியத்துக்கென்று தன் உயிரை அர்ப்பணம் செய்த ஒருவனுக்குக்குழந்தைகளைப் பெற்றுக் குடும்பத்தை நடத்த அவகாசமே இராது. சத்திய வாழ்க்கையும், புலன்களின் வழி இன்பம் தேடுவதும் ஒன்றுக்கொன்று நேர் விரோதமானவை.

சத்தியத்தை விட்டுவிட்டு அஹிம்ஸையை வைத்துப் பார்த்தாலும் சுயநலமும் புலன்கள் வழி இன்பம் தேடுவதும் அஹிம்ஸைக்கு முற்றிலும் முரணாகும். அஹிம்ஸை என்றால் ஜீவராசிகள் அனைத்தினிடத்துமே அன்பு செலுத்த வேண்டும். ஒருவன் தன் மனைவிக்கு மட்டும் முற்றிலும் அன்பைத் தந்து விட்டால், உலகத்துக்கு என்ன மிஞ்சும்? அவ்வாறே ஒரு ஸ்திரீயானவள் தன் புருஷனுக்கே தன்னுடைய அன்பையெல்லாம் செலுத்திவிட்டால் ஜீவராசிகள் அனைத்துக்குமே செலுத்த வேண்டிய அருள் எஞ்சி நிற்காது. தாம் இருவர்தான் உலகம் என்று முடிந்துவிடும். கற்புள்ள ஸ்திரீயாவது, புருஷனாவது அஹிம்ஸை முறையில் உலகம் முழுவதையும் தன் இனமாகப் பார்க்க வேண்டிய தர்மத்தை நடத்த இயலாது. தங்கள் அன்புக்குச் சுவர் எழுப்பி வரம்பு கட்டினவர்களாவார்கள். குடும்பம் பெருகப் பெருக உலகம் மறைந்து போகும். அஹிம்ஸா தத்துவத்தைக்கடைப்பிடிக்க விரும்புகிறவர்களுக்கு விவாகம் செய்து கொண்டு இன்பம் நுகர்வதற்கு இடமில்லை. இல்லறத்தைத் தாண்டிய இன்பங்களைப்பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை.

ஆகவே, விவாகம் ஆகிய மக்களுக்கு என்ன வழி என்கிற கேள்வி எழலாம். அவர்களுக்குச் சத்தியம், அஹிம்ஸை என்கிற மார்க்கம் சாத்தியமே இல்லையா? உலகம் முழுவதற்கும் செலுத்த வேண்டிய அருள் அவர்கள் விஷயத்தில் முற்றிலும் முடியாததா?

அவ்வாறல்ல. விவாகம் ஆகியிருந்தபோதிலும், விவாகம் ஆகாத தனிப்பட்டவர்களைப் போலவே நடந்துகொள்ளலாம். இதைச் சிலர் செய்து பார்த்து வெற்றியும் அடைந்திருக்கிறார்கள். நான் சொல்லும் முறையை அனேகம் பேர்கள் வெற்றியுடன் கடைப்பிடித்திருக்கிறார்கள். இருவரும் சகோதர சகோதரிகளாகப் பாவித்துக்கொண்டு ஜீவராசிகளின் சேவையில் தங்கள் வாழ்க்கையைச் செலவிடலாம்.

## 66

ஒவ்வொரு ஸ்திரீயும் தனக்கு ஒரு கூடப்பிறந்த சகோதரி அல்லது தாய் அல்லது மகள் என்கிற எண்ணம் கொண்டுவிட்டால் அந்த எண்ணமே ஒருவனுடைய உள்ளத்தை மேலே தூக்கித் தரும். பற்றுகள் அற்றுப்போகச் செய்யும். கணவனும் மனைவியும் பிரம்மசரிய விரதத்தால் நஷ்டமடைய மாட்டார்கள். குடும்ப நிலையும்கூட முன்னை விட நல்ல நிலையடையும். அவர்களுக் கிடையிலுள்ள அன்பு காம விகாரத்தினின்று விடுபட்டுப் பரிசுத்த மடையும். அவர்களுடைய அன்பு இன்னும் பலம்பெறும். நிர்மலமான அன்பு வளர்ந்து ஒருவருக்கொருவர் முன்னைவிட அதிகமாக நல்ல பணி செய்வார்கள். குடும்பத்தில் நடைபெறும் சிறு பூசல்களுக்குக் காரணமில்லாமற் போகும். அன்பானது சிறுமையடைந்து சுயநலமாக மாறிவிட்டாலே தான் பூசல்கள் உண்டாகின்றன.

நான் இதுவரையில் சொன்னதின் உண்மையைக் கண்டபின் பிரம்மசரிய விரதத்தினால் சரீரத்துக்கு உண்டாகும் நன்மையைப் பற்றி எடுத்துக் காட்ட வேண்டிய

அவசியமுமிராது. நான் பெற்றிருக்கும் உயிர்ச் சக்தியை வீணுக்கி நாசப்படுத்தி விடுவது எவ்வளவு அறிவீனம்? மூளைக்கும் உள்ளத்துக்கும் தேகத்துக்கும் வரம்பற்ற பலத்தைத் தரும்படியான ஒரு சக்தியைச் சிற்றின்பத்தில் வீணுக்கி இழந்து விடுகிறோம். இந்தத் துர்விநியோகமே பல நோய்களுக்குக் காரணம்.

பிரம்மசரியம் என்கிற விரதம் மற்ற விரதங்களைப் போலவே மனம், வாக்கு, காயம் மூன்றிலுமே காக்கப்பட வேண்டும். கீதையில் எடுத்துக் காட்டியிருப்பதுபோல் உடலில் மாத்திரம் பிரம்மசரியத்தைக் காத்து, மனத்தில் காமத்தை வளர்த்தால் அது பயனற்ற முயற்சியாகும். உடலுக்கு அது நல்லதுமாகாது. மனம் சென்ற வழியில் உடலும் இன்றோ நாளையோ கட்டாயம் செல்லும். அசுத்தமான எண்ணங்களில் மனத்தைச் செல்லவிடுவது குற்றமாகும். இவ்விடத்தில் ஒன்று சொல்லவேண்டும். நாம் எவ்வளவு முயன்றாலும் மனமானது தவறிச் செல்லப் பார்க்கும். அதை நாம் தடுத்துக்கொண்டே வரவேண்டும். முடிவில் வெற்றியடைவோம். மனம் தீய வழியில் செல்லும் போது, அதை நாம் சத்துருவாகப் பாவித்து அதன் வழி நாமும் செல்லாமல் உள்ளத்தைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

அனுபவத்தில் பார்க்கிறோம்; உடலைத் தடுக்கலாம். உள்ளத்தை அடக்கியாள்வது மிகக் கஷ்டம். இடையருத கவனம் செலுத்தவேண்டும். தேகத்தை அடக்கியாண்டு கூடவே உள்ளத்தையும் இழுத்துப் பிடிக்கவேண்டும். நம்மால் செய்யக் கூடியதை யெல்லாம் செய்தோமானல் ஆண்டவனுடைய உதவிகிடைக்கும். இந்திரியங்களை அடக்கி விட்டு மனத்தைத் தன்பாட்டுக்குச் செல்லவிட்டோமானல் பெரிய மோசத்துக்கு ஆளாவோம். பொய்யர்களாவோம். ஒவ்வொரு விடிைடியும் ஜாக்கிரதையாக இருந்து ஒரு அசுத்தமான கருத்தானது வரும்பொழுதே அது நெருங்காமல் தடுத்தோமானல் உடலும் உள்ளமும் சேர்ந்தாற்போல் பிழையின்றிச் செல்லும்.

பிரம்மசரிய விரதம் மிகக் கடினம், ஏன், ஆகாத காரியமே என்று பலர் எண்ணுவார்கள். பிரம்மசரிய விரதம் இன்னதென்று சரியாகப் புரிந்து கொள்ளாமலிருப்பது இப்படி நினைப்பதற்கு ஒரு காரணம். பிரம்மசரியத்துக்கு விரிந்த பொருள் தராமல் குறுகிய பொருள் கொண்டு அதை நடத்தப் பார்க்கிறார்கள். ஆண்-பெண் சேர்க்கை மட்டும் கூடாது என்று வைத்துக்கொண்டு மற்ற விதங்களில் எதேச்சையாக நடந்தோமானால் விரதத்தைக் காக்க முடியாது. எல்லாப் புலன்களையும் அடக்கி யாண்டாலொழிய வெற்றிபெற மாட்டோம். ஒரு புலனை மட்டும் ஆளப் பார்ப்பது வீண். காதால் கேட்கும் கதைகளும், பார்வையைச் செலுத்தும் காட்சிகளும், ருசி தேடி உண்ணும் உணவு முதலிய அனைத்திலுமே அபாயம் உண்டு. இந்தத் துறைகளில் இன்பங் கண்டு அனுபவித்துக் கொண்டு பிரம்மசரியத்தைக் காக்கப் பார்ப்பது வீணாகும். நெருப்பில் கையை வைத்துக் கை சுடாமலிருக்க வேண்டும் என்று விரும்புவது போலாகும். எல்லாப் புலன்களையும் அடக்கி யாண்டாலேதான் வெற்றி காண்போம். பல துறைகளிலும் ஆசைகளை அடக்கி யாளவேண்டும். எல்லாப் புலன்களையும் அடக்கியாள வேண்டும். அப்பொழுதுதான் பிரம்மசரியத்தில் வெற்றி பெறுவோம். நாக்கை முதலில் அடக்கியாள வேண்டும். உண்ணும் உணவு அடிப்படையான விஷயம். நம்முடைய ஆசிரமத்தில் இதனாலேதான் ஆகாரக் கட்டுப்பாட்டை முக்கியமாக வைத்துக்கொண்டிருக்கிறோம்.

'சரியம்' என்றால் நடத்தை. மெய்ப் பொருளை, அதாவது பிரம்மத்தைத் தேடிச் செல்லும் பாதை அல்லது நடத்தை பிரம்மசரியம் என்பது. புலன்களை அடக்கியாள்வதே பிரம்மசரியம். எல்லாப் புலன்களை அடக்குவதும் அதில் அடங்கும். ஆண் பெண் சேர்க்கையைத் துறத்தல் மட்டுமல்ல.

[எரவாடா சிறையிலிருந்து எழுதியது]

பிரம்மசரியத்துக்கு முதல்படி அதன் அவசியத்தை உணர்வது. அதைப்பற்றி மனத்தில் சந்தேகம் இருந்தால் ஒரு நாளும் பிரம்மசரிய விரதத்தை அநுசரிக்க முடியாது.

அடுத்தபடி என்னவென்ருல் பொதுவாக எல்லாப் புலன்களையும் அடக்கியாளுதல், உண்பதில் நாக்கை கட்டாதவன் பிரம்மசரியமலையின் மேல் ஏற முடியாது. உயிரைக் காப்பதற்காக உணவு உட்கொள்ள வேண்டுமே யொழிய ருசியான சாப்பாட்டின் வழி இன்பமடைவதற்காக உணவு என்று கருதலாகாது. பரிசுத்தக் காட்சிகளைத்தான் பார்க்க வேண்டும். சிற்றின்பக் காட்சிகளில் கண்களைச் செலுத்தலாகாது. நடக்கும்போது இங்குமங்கும் பார்வையைச் செலுத்தாமல் கீழ்நோக்கி நடப்பது பண்பாடு அடைந்தவனுடைய முறை. பிரம்மசரியத்தைக் கோருபவன் கெட்ட பேச்சுகளுக்குக் காது கொடுக்க மாட்டான். வாசனைப் பொருள்களின் இன்பத்தைத் தேடமாட்டான். அற வழியில் நடப்பவனுக்கு அத்தர் சந்தனுதி வாசனைத் திரவியங்களைக் காட்டிலும் மழை பெய்த மண்ணின் வாசனைமிகச் சிறந்த நறுமணமாகும் பிரம்மசரியத்தை அடைய விரும்புகிறவனுக்குச் சோம்பல் உதவாது. நாள் முழுதும் நல்ல பணியில் தன்னுடைய அங்கங்களைச் செலுத்த வேண்டும். அவ்வப்போது உபவாசம் இருக்க வேண்டும்.

மூன்ருவது, சகவாசம் நல்ல சகவாசமாக இருக்க வேண்டும். படிக்கும் புஸ்தகங்களும் நல்ல புஸ்தகங்களாக இருக்க வேண்டும். சுத்தமாக இருக்க வேண்டும். நல்லவர்களுடைய சகவாசமும் பாப கருத்துக்களை ஒதுக்கிய புஸ்தகங்களும் அத்தியாவசியம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, பிரார்த்தனையும் ஜபமும் அவசியம். உள்ளத்தைச் செலுத்திய ஜபம் தினம் தவருமல் செய்து ஆண்டவன் அருளை வேண்டிப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

இவை யொன்றும் கடினமல்ல. சாதாரண மக்கள் அனுசரிக்கக்கூடிய முறைகள். பிரம்மசரியத்தை உண்மையில் விரும்பினால் இந்த முறைகளில் ஒரு கஷ்டமுமிராது. அடையவேண்டும் என்கிற விருப்பம் உறுதியாக இல்லாமற் போனாலேதான் இந்த முறைகளில் ஒருவன் கஷ்டப்படுவான். பார்க்கப்போனால் நான் சொல்லிய பண்பாடுகளும் கட்டுப்பாடுகளும் சாதாரண மக்கள் ஓரளவு ஒப்புக்கொண்டு நடந்து வருவதினாலேதான் உலக வாழ்க்கை நடைபெற்று வருகிறது. சாதிக்க முடியாத விஷயம் ஒன்றுமில்லை.

[யங் இந்தியா, 29-4-26]

பிரம்மசரியத்தில் வெற்றியைக் காண விரும்புகிறவர்கள் ஒரு புலனைமட்டிலும் கட்டுப்படுத்திவிட்டு மற்ற விஷயங்களில் சாதாரண மக்களைப்போலவே நடந்துகொள்ளலாம் என்று எண்ணுவதனாலேதான் வெற்றி காணாமல் இருக்கிறார்கள். உண்பதிலும் பார்ப்பதிலும் கேட்பதிலும் எல்லோரையும் போலவே இருந்தால் பிரம்மசரியத்தில் வெற்றி எப்படிக் காண முடியும்? வேனிற் காலத்தில் மார்கழி மாதத்தின் குளிர்ச்சியைத் தேடுவதுபோலாகும். பிரம்மசாரியினுடைய வாழ்க்கை வேறு; மற்றவர்கள் வாழ்க்கை வேறு; இந்த வேறுபாட்டை நன்றாக உணர வேண்டும். இருவருக்கும் கண்கள் ஒன்றே. ஆனால் பிரம்மசாரி ஆண்டவனுடைய விபூதியைக் காண்பான்; மற்றவர்கள் காண்பது கூத்தும் வேடிக்கையும். இருவருக்கும் காது ஒன்றே. ஆனால் ஒருவனுடைய செவியில் கேட்பது நாராயணன் புகழ்; மற்றவன் செவி கிராமிய ஹாஸ்யங்களில் இன்பங் காணும். இருவருமே தூங்காமல் ஜாகரணம் அனுஷ்டிக்கலாம். ஒருவன் பிரார்த்தனைக்கோ சத்காலட்சேபக் கதைகள் கேட்கவோ அப்படிச் செய்வான். மற்றவன் கூத்துக்கும் கேளிக்கைக்கும் தூக்கத்தைக் கைவிடுவான். இருவருமே உணவு உண்கிறார்கள். ஒருவன் ஆண்டவன் கோயில் கொண்டிருக்கும் உடலைச்

சரியான நிலையில் வைத்திருப்பதற்காக உண்கிருன். மற்ற வனே ருசிகள் அனுபவிக்க அளவுக்கு மீறித் தின்று பூஜா பாத்திரமாகிய வயிற்றைச் சாக்கடையாக்கிக் கொள்கிருன். பிரம்மசரிய விரதம் பூண்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இவ்வாறு மிக வித்தியாசம். விரதத்தில் படிப்படியாக வெற்றி பெறும்போது இந்த வித்தியாசமும் வரவர அதிக மாவதைக் காணலாம்.

## 68

மனத்தையும் பேச்சையும் செயலையும் அடக்கியாள்வது பிரம்மசரியம். புலன்களின்மேல் நம்முடைய ஆட்சியைச் செலுத்த வேண்டும். அவற்றின் ஆட்சிக்குள் நாம் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது. இதில் வெற்றியடைய நான் கூறிய கட்டுப்பாடுகள் மிக அவசியம் என்பதை நான் என்னுடைய அனுபவத்தில் கண்டு வருகிறேன். இது முடியாத காரியம் அல்ல. ஆனல் பலர் தோல்வியடைகிருர்கள். இந்திரியங்களை அடக்கியாள ஆசைப்படுகிருர்களேயன்றி அதற்கு வேண்டிய பல துறை முயற்சிகளைக் கையாள்வதில்லை. பிரம்மசரியத்தை அடைய ஆசைப்படுகிறவன் தன்னுடைய குற்றங் குறைகளை அவ்வப்போது அறிந்து கொள்வான். உள்ளத்தில் மறைந்து கிடக்கும் ஆசை வேகங்களைத் தேடிக் கண்டுகொண்டு, அவற்றை அகற்றிவிட இடைவிடாமல் முயல்வான். உள்ளத்தில் அலையும் எண்ணங்களை, முற்றிலும் வசப்படுத்திக் கொள்ள வேண்டும். உள்ளத்தில் தோஷமிருக்கும்வரையில் பிரம்மசரியம் இல்லை என்று வைத்துக்கொள்ள வேண்டும். மனிதனுடைய உள்ளத்தில் எண்ணங்கள் தாமாகத்தோன்றும். வேண்டாம் என்ருலும் தோன்றிக் கொண்டே யிருக்கும். காற்றையும் அடக்கலாம். மனத்தை அடக்குவது அதைவிடக் கடினம். ஆனல் உள்ளத்தினுள்ளே ஈசனும் இருக்கிருன் அல்லவா? அவனுடைய அருள் பெறின் அந்த உள்ளத்துக்கும் சக்தி வரும்; குற்றங்

களைக் களைய, யாருமே இது முடியாத காரியம் என்று எண்ணி விட்டுவிடலாகாது. பெருஞ் செல்வத்தை அடைய முயற்சியும் பெரிதாகவே இருக்கவேண்டும். அதற்குப் பயப்படலாகாது.

நான் இந்தியாவுக்குத் திரும்பி வந்த பிறகுதான் பிரம்மசரியத்தை அடைவதற்கு மனிதனுடைய முயற்சி மட்டும் போதாது என்பதை யுணர்ந்தேன். அதற்குமுன் நான் வேறுவிதமாக நினைத்தேன்; ஆகார நியமனம் மட்டும் போதும், அதனுலேயே காமக்குரோதாதிகளை அடக்கிவிடலாம் என்று பைத்தியக்காரனைப்போல் எண்ணி வந்தேன். இங்கே வந்த பிறகே உண்மையை உணர்ந்தேன். ஈசன் அருளும் வேண்டும் என்பதை யுணர்ந்தேன். என்னுடைய சொந்தக் கதையை இந்தச் சமயம் வளர்க்கவில்லை; நிறுத்திக்கொள்ளுகிறேன்.

தன்னம்பிக்கையும் தெய்வ பக்தியும் இரண்டும் நிறைய இருந்தால் பிரம்மசரியத்தை அடையலாம். ஈசனையும் அடையலாம் என்று எல்லாருக்கும் உறுதி கூறி நிறுத்திக் கொள்கிறேன். உபவாசம் முதலிய விரதங்கள் அனுஷ்டித்து, புலன்களுக்கு நுகர்ச்சிப் பொருள் தராமல் இருக்கலாம்; ஆனுல் நுகர்ச்சியிலுள்ள ரஸம் உள்ளத்தைவிட்டு நீங்காது. அந்த ரஸமும் நீங்கவேண்டுமானுல் நோக்கம் ஈசனிடம் செல்லவேண்டும். இது கீதா வாக்கியம். வீடு பெற வேண்டுவதற்கு வழி அவன் நாமமும் அவன் அருளுமே. இந்தியாவுக்குத் திரும்பிய பிறகுதான் நான் இதை யுணர்ந்தேன்.

—சுயசரிதம்.

## 69

நானுமே இன்னும் வெற்றிபெறவில்லை. எங்கிருந்தோ உள்ளத்துக்குள் நாம் விரும்பாத கருத்துக்கள் புகுந்து தொந்தரவு செய்கின்றன. அவற்றை வாயிலுக்கப்பால் நிறுத்தமுடியவில்லை. எவ்வளவோ முயற்சி செய்கிறேன். வெற்றி பெறவேண்டும் என்று விரும்புகிறேன். வேண்டாத

எண்ணங்களை உள்ளே பிரவேசிக்காமல் கதவை அடைப்பதற்கு வழி உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒவ்வொருவனும் அதைத்தானே காணவேண்டும். முனிவர்களும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தங்களுடைய அனுபவங்களைப் பாடி யிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இதற்கென்று ஒரு பிழையா மருந்தைத் தரவில்லை. ஆண்டவன் அருளைத் தவிர வேறொன்றும் வழியில்லை. பெரியோர்கள் ஜபம் செய்த மந்திரங்களும் நாமாவளிகளும் இருக்கின்றன. அந்த மந்திரங்களோடு அவர்கள் செய்த தவமும் அவர்களுடைய உள்ளத்தின் மாசற்ற பண்பும் கலந்து நிற்கின்றன. அவர்கள் உச்சரித்துப் பயன் பெற்றும் புனிதமாக்கியுமுள்ள மந்திரங்களையும் நாமாவளிகளையும் நாமும் உச்சரித்து ஆண்டவன் அருளைப் பெறுவோமாக. எல்லா மதங்களிலும் இதுவே செய்யப்பட்ட உபதேசம். அதன் உண்மையை நான் அனுதினமும் காண்கிறேன்.

—சுயசரிதம்

ஒன்று நிச்சயம். கடவுளை நம்பினால்தான் வெற்றி பெறுவோம் வெறும் பேச்சில் பயனில்லை. உறுதியான பக்தி வேண்டும். "கடவுள் வேண்டியதில்லை; சுத்தமான வாழ்க்கையே வாழ்ந்தால் போதும். கடவுளைப் பற்றிக் கொள்கை ஏது மில்லாமலேயே பரிசுத்த வாழ்க்கை வாழ முடியும் என்று பேசுவது இந்தக் காலத்தில் வழக்கம். அவர்களோடு நான் வாதாடி ஜயித்து நம்மையாளும் பராசக்தி ஒன்று உண்டு என்று அவர்கள் காணும்படி செய்ய என்னால் முடியாது. என்னுடைய அனுபவத்தைத் தான் நான் சொல்ல முடியும். நம்முடைய கருத்துக்குள் அடங்காத ஒரு பராசக்தி உலகத்தை ஆள்கிறது என்று அசையாத நம்பிக்கை இல்லாவிடில் வாழ்க்கை பூரணத்தை அடையாது. இது என்னுடைய அனுபவத்தின் முடிவு. பக்தியில்லாதவனுடைய கதி கடலினின்று வீசிச் சிதறிப் போன ஒரு நீர்த்துளியைப் போலாகும். அழிந்துபோவது

நிச்சயம். கடலோடு கலந்து நிற்கும் நீர்த்துளிகளோ கடலி னுடைய பெருமையில் ஒவ்வொன்றும் பங்குகொண்டு நின்று மக்களின் உயிருக்கு அமிர்தமான பிராணவாயுவைத் தரு கின்றன.''

[ஹரிஜன் 25-4-36]

# 70

மனிதன் அழகைக் கண்டான். அழகிய பொருள்களைத் தான் செய்யும் ஆற்றலையும் பெற்றான். அறிவு வளர வளர எது நன்மை எது தீமை என்பதைக் கண்டு பயனற்றவை களையும் தீயவைகளையும் விலக்கி, அழகோடு பயனும் பண் பும் கலந்த கற்பனைகளையும் பொருள்களையுமே போற்றும் படியான பகுத்தறிவை அடைந்தான். வாய்க்கு ருசியான பண்டங்களை உண்பதில் மகிழ்ச்சியைக் கண்டபோதிலும் அளவு கண்டு உயிருக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு மட்டும் உண்பதுவே நன்மை என்று கண்டான். பிறருக்காக வாழ்வதில் தனக்கு மட்டும் வாழ்வதைவிட அதிக மகிழ்ச்சி யைக் கண்டான். மக்களுக்குப் பணி செய்து அதன் மூலம் ஈசனை வழிபடுவதிலுள்ள ஆனந்தத்தைக் கண்டான். இவ் வாறு அறிவு முதிர்ந்து, ஆண் பெண் சேர்க்கையும் கிராமிய சிற்றின்பத்துக்கு அல்ல, மக்கட்பேறு அடைவதற்காக என் பதை மனித ஜாதி உணர்ந்து விவாகம் என்கிற வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொண்டது. அதுவின்றி ஆண் பெண் சேர்க்கை அவலட்சணமாகும், அபாயமுமாகும், சமூகத்தையே கொல்லும் சத்ருவாகி முடியும் என்பதை உலகம் முழுதும் மக்கள் ஜாதி அறிந்துகொண்டது.

[ஹரிஜன் 4-4-36]

மனித வாழ்க்கை என்பது அறிவின் மலர்ச்சியேயாகும். புலன்கள் செல்லும் வழியில் அவற்றை விடாமல் தடுத்து அடக்கி யாள்வதே நன்மையைத் தரும். ஆனபடியால் புலனை அடக்கியாளவே உலகத்தில் விவாக முறை தோன்

றிற்று. மக்கட் பேறு விரும்பி அதைப் பெறவும் சிற்றின்பத்துக்கு வேலி போட்டு அடைக்கவும் விவாக முறை உண்டாயிற்று.

[யங் இந்தியா, 16-9-26]

சந்தானக் கட்டுப்பாடு அவசியம் என்பது உண்மை. யோசனையின்றி மக்களைப் பெற்றுக் கஷ்டப்படுவதில் பயனில்லை; துன்பமேயாகும். ஆனால் மக்கட்பேறு கட்டுப்படுத்துவதற்கு வழி பெரியோர்கள் காட்டியிருப்பது—பிரம்மசரியம் அல்லது புலனடக்கம், தன்னைத்தான் அடக்கியாளுதல். இதுதான் நல்ல முறை. மற்றவையெல்லாம் தீமை பயக்கும். இதற்கென்று புதிதாகக் கையாளும் முறைகள் சமூகத்தில் பாவம் பரவச் செய்யும்.

கருவைச் சிதைக்கும் முறைகளை விட்டுவிட்டுத் தன்னைத் தான் அடக்கி யாள்வதற்கு ஏதேனும் வழியிருந்தால் அதை வைத்திய நிபுணர்கள் காணவேண்டும். அப்படி அவர்கள் கண்டு மக்களுக்கு உதவினால் மக்கள் யாவரும் அவர்களுக்கு நன்றி செலுத்துவார்கள்.

கெட்ட நடத்தைக்கு வழி காட்டுவதாகும் கர்ப்பத் தடை முறைகள். அளவுக்கு மிஞ்சி சிற்றின்பத்தில் இறங்குவதற்குத் தூண்டுவதாகும். இந்த முறைகளை விளம்பரப் படுத்தியும் அவற்றை கையாளச் சௌகரியங்களை அமைத்துக் கொடுத்தும் வருவதனால் சமுதாயப் பண்பாடே கெட்டுப்போய் வருகிறது. மக்களுடைய ஆரோக்கியமும் குறைந்து வருகிறது. ஒரு நோய்க்கு மருந்து செய்யப் போய், நோயை விட மருந்து பெரிய நோயாகி வருகிறது. மக்கட் பேற்றின் எண்ணிக்கையைக் குறைக்கப் போய்ச் சமூகத்தின் சீலத்தையே அழித்து விடுவோம்.

எதைச் செய்கிறோமோ, அதன் பயனை அனுபவித்தலே நன்மை. சுகமாயினும் துக்கமாயினும் பயனை அனுபவித்தாலே தான் அறிவு பெறுவோம். பயனை விலக்கி விட வழி தேடினோமானால் ஒருநாளும் நல்லறிவைப் பெறமாட்டோம். அளவுக்கு மிஞ்சி உண்டவனுக்கு அஜீரணத்தினால் வயிற்று

வலி உண்டாவதும் பிறகு ஏற்படும் லங்கணமும் நன்மையே யாகும். வரம்பு கடந்து தின்றுவிட்டு மருந்துகள் உண்டு தன்னுடைய அக்கிரமத்தின் பலனினின்று தப்பித்துக் கொள்வது ஒருவனுக்குத் தீமையையே உண்டாக்கும். பசியைப் பற்றியும் உணவைப் பற்றியும் இதுவாயின், பசு தர்மத்தைப் பற்றியும் அதுவே உண்மை. செயலின் பயனைப் புது முறைகளைக் கொண்டு விலக்கிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டோமானால் இயற்கைத் தேவி நம்மைச் சும்மா விடமாட்டாள். தண்டனை தருவாள் என்பது நிச்சயம். பெருந் தண்டனையாக முடிவில் அனுபவிக்க வேண்டியதாகும்.

புனிதப் பயன்களை அடைய வேண்டுமானால் புனித முறைகளைத் தான் கையாளவேண்டும். மற்ற முறைகள் தீமைகளை விளைத்துச் சமுதாயத்துக்கு நஷ்டமுண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.

[யங் இந்தியா 12-3-25]

பிரஜோற்பத்திக்காக இயற்கையில் அமைந்திருக்கும் சக்தியைக் கண்டபடி பயன்படுத்திக் கெட்டுப் போகலாகாது. அடக்கி யாண்டோமானால் இந்த இயற்கை அமைப்பைப் பற்றி வெட்கப்பட வேண்டிய அவசியமே யில்லை. முறையும் வரம்பும் தவறினோமானால் ஆண்டவன் தந்திருக்கும் வரப் பிரசாதமானது பாபத்தில் முடியும். ஆண்டவனுக்கும் மக்கள் சமூகத்துக்கும் செய்த துரோகமாகும்.

[ஹரிஜன் 28-3-46]

புது முறைகள் மனிதனைக் கேவலம் மிருகமாக்கிவிடும். மனிதனுடைய பண்பைக் கெடுத்து அவனை மிருகமாக்குவது வெகு எளிது. மிருகமாக்கும் முறைகளுக்கு அழகிய விளம்பரங்களும் தந்து பிரசுரித்தால் சொல்ல வேண்டியதே இல்லை. இது அக்கிரமம் என்கிற உணர்ச்சியையே இழந்து விட்டுத் தங்கு தடையின்றி அதில் இறங்குவான். கர்ப்பத் தடைக்காரர்கள் செய்யும் பணி இதுவே.

[ஹரிஜன் 31-3-35]

அன்பை உபாசிப்பவன், சத்தியமே பரம்பொருள் வடிவம் என்று கருதுகிற ஒருவன், நாளைக்கென்று பொருளைச் சேர்க்கமாட்டான். பகவானை நம்பிப் பிழைப்பதானால் நாளைப் பற்றி நாம் ஏன் சந்தேகப்பட வேண்டும். அன்றுடம் வேண்டியதற்கு மேல் ஆண்டவனுடைய நியதியை மீறிப் பொருள் சேர்த்துவைக்கும் பழக்கத்தினால் உலகத்தில் ஏற்றத் தாழ்வுகளை ஏற்பட்டுச் சங்கடங்களை நாமே உண்டாக்கிக்கொண்டிருக்கிறோம். அளவுக்கு மிஞ்சிய பொருள் பணக்காரர்களிடம் சேர்ந்து அவர்களும் அந்தப் பொருளைச் சரிவரப் பராமரிக்காமல் வீணாக்கி வருகிறார்கள். கோடிக்கணக்கில் மக்கள் பசியிலும், குளிரில் உடையில்லாமலும் தவிக்கிறார்கள். அவனவனுக்கு வேண்டியதை மட்டும் அவனவன் வைத்துக் கொண்டு வாழ்ந்தால் யாருமே கஷ்டப் படமாட்டார்கள். எல்லாரும் திருப்தியுடன் வாழலாம். இப் போது என்ன நிலைமை? ஏழைகள் மட்டுமல்ல; பணக்காரர்களுக்கும் திருப்தி கிடையாது. ஏழைகள் பணக்காரர்களாக வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள், லட்சாதிபதி கோடீசுவரனாக வேண்டுமென்று விரும்புகிறான். உணவுக்கு வேண்டியது இருப்பினும் அது போதாது என்று மக்கள் வருத்தப்படுகிறார்கள். இது உண்மையாயினும் உணவுக்கு வேண்டிய அளவாகிலும் எல்லாருக்கும் ஏற்பாடு செய்ய வேண்டியது நியாயம். அனைவரும் திருப்தியாக இருக்க வேண்டுமானால் பணக்காரர்கள் முதலில் ஆரம்பிக்க வேண்டும். தங்களுடைய ஆசையை அடக்கி லோப குணம் மிதமிஞ்சிச் செல்லாமல் பணக்காரர்கள் நடந்து கொண்டார்களானால் ஏழைகளுக்குப் பசியின்றி உணவு கிடைக்கும். திருப்தியாக வாழவும் பயில்வார்கள்.

பொருள் ஈட்டலை விட்டு விட்டுச் சரியானபடி துறவு விரதத்தைக் காக்க வேண்டுமானால் மனிதன் பறவை

களைப்போல் வாழவேண்டும்; தலைமேல் கூரையில்லாமலும் குளிரைக் காக்கும் ஆடைகள் இல்லாமலும் நாளைக்கென்று உணவு சேர்த்து வைத்துக் கொள்ளாமலும் பறவைகளைப் போல் பிழைக்கவேண்டும். அன்றைக்கு வேண்டிய உணவு ஆண்டவன் தருவான் என்று இருக்கவேண்டும். இப்படிச் சாதாரண மக்கள் இருக்க முடியாது. நாம் செய்யக்கூடியது என்னவென்றால், இந்தக் குறிக்கோளை மறவாமல் நினைவில் வைத்துக்கொண்டு அளவுக்கு மிஞ்சிய பொருளைச் சேர்க்காமலும் தினசரி ஓரளவேனும் குறைத்துக்கொள்ள முயற்சி செய்தும் வாழவேண்டும்.

பண்பாடு அடைந்த மனிதன் 'இது வேண்டும், அது வேண்டும்' என்று தன்னுடைய வாழ்க்கையை மேலும் மேலும் சிக்கலாக்கிக்கொள்ள மாட்டான். தானாகவே யோசித்து வேண்டாததை நீக்கிக்கொண்டு வாழ்க்கையை எளிமையாக்கிக் கொள்வான். தேவைகளின் கணக்கை எவ்வளவு குறைக்கமுடியுமோ அவ்வளவு குறைத்துக் கொண்டு எளிய வாழ்க்கை வாழ்ந்தால் உண்மையான சுகமும் சந்தோஷமும் அடைவோம். பிறருக்குப் பணி செய்ய அவகாசமும் பெறுவோம். ஒவ்வொருவனும் முயற்சி செய்தால் தன் தேவைகளைக் குறைத்துக்கொள்ள முடியும். அப்படிக் குறைத்துக் கொண்டால்தான் சுகம், ஆரோக்கியம், சாந்தி இவற்றைப் பெறுவோம். ஆன்மாவானது உடலை ஒரு பாரமாகச் சுமந்து நிற்கிறது. ஆசைகளை அதிகப்படுத்திக் கொண்டோமானால் இந்தப் பாரம் வர வர அதிகமாகிறது. ஆசைகளைக் குறைத்துக்கொண்டாலே தான் சரீரபாரமும் குறையும். சம்சாரச் சுழலினின்று விடுபடுவோம். பரம்பொருளின் தன்மை பெற்றிருக்கும் ஆன்மாவுக்குச் சரீரம் என்கிற தடை என்னத்துக்கு? அது பறவையை அடைத்து வைக்கும் கூண்டைப் போலவேயாகும். அந்தக் கூண்டைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பாபங்களும் செய்கிறோம். உண்மையில் உயிரும் சரீரமும் கூடியிருக்கும் வரையில் அந்தச் சரீரத்தைச் சேவைக்கு மட்டும் பயன்படுத்தி

வாழவேண்டும். மனித வாழ்க்கைக்கு வேண்டியது உணவல்ல, சேவை. அந்தச் சேவைக்காகவே உணவு உண்பதும் நீர் அருந்துவதும் தூங்குவதும் விழிப்பதும். இகத்தில் சுகமும் பிறகு மோட்சமும் தரும்.

சொத்து படைத்தவர்கள் எல்லாம் இதை ஆராய வேண்டும். பொருளைப்பற்றிய ஆசிரம விரதமானது சொத்தைப்பற்றி மட்டுமல்ல, மூளையில் சேர்த்துவைக்கும் அறிவுக்கும் பொருந்தும். உபயோகமற்ற விஷயங்களையெல்லாம் அறிந்துகொள்ள வேண்டுமென்று ஆசைப்படலாகாது. அளவுக்கு மிஞ்சிய கல்வி ஆசையும் நம்முடைய துறவு விரதத்துக்கு மாறுபட்டது. பகவானை நோக்கிச் செல்லும் அறிவே அறிவு. அவனை விட்டு வேறு வழியில் செல்லும் கல்வி, அறிவு ஆகாது. நமக்கு உதவாது. அது நம்முடைய முன்னேற்றத்துக்குத் தடையேயாகும். கீதை 13வது அத்தியாயத்தைப் பாருங்கள். எது உண்மையான ஞானம் என்று அதில் சரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அமானித்வம் அதாவது அடக்கம், அதம்பித்வம் அதாவது ஆடம்பரமின்மை, அஹிம்ஸை, பொறுமை, சீலம் ஆசார்ய உபாசனம், சுத்தம், உறுதியான மனம், புலனடக்கம், வைராக்கியம், ஆணவமின்மை, பிறப்பு இறப்பு வயோதிகம் நோய் இவற்றிலுள்ள துன்பத்தை உணர்தல், மக்கள் மனைவி வீடு இவற்றிலும் பொருள்களிலும் பற்றில்லாதிருத்தல்—சித்தத்தில் அமைதி, வேண்டியதையும் வேண்டாததையும் ஒரேவிதமாக அனுபவித்தல், பகவானிடத்தில் பக்தி செலுத்தல், ஜனக் கூட்டத்தை விரும்பாமல் தனிப்பட்ட இடத்தில் வசிக்க மனம் செல்லுதல், ஆன்ம ஞானமே பெரிதாக மதித்து மெய்ப்பொருளைக் காணுதல்-இவை உண்மை அறிவு. மற்றவையெல்லாம் அறியாமை.

இப்படி கீதையில் உபதேசித்திருக்கிறது. நாம் கல்வி, கல்வி என்று இப்போது தேடி அலையும் பல விஷயங்களில் துன்பமேயொழிய நன்மை யொன்றுமில்லை. அவை சுகம் தரமாட்டா. இங்குமங்கும் மனத்தை அலையச்செய்யும்.

ஏன், மூளைக் கோளாறும் உண்டாக்கும். பல பாபங்களிலும் மனிதனைச் செலுத்தும்.

இப்படியெல்லாம் நான் சொல்வதனால் சோம்பல் பிரசாரம் நான் செய்யவில்லை. சும்மா இருக்கவேண்டும் என்பது என்னுடைய நோக்கமல்ல. ஒவ்வொரு விநாடியையும் சுறுசுறுப்பாகப் பயன்படுத்தத்தான் வேண்டும். ஆனால் சாத்வீக முறையில் பயன்படுத்தவேண்டும். சத்தியத்தை அணுகிச் செல்லவேண்டும். சேவை செய்வதில் வாழ்நாளைச் செலுத்த வேண்டும். சும்மா இருக்கலாகாது. தீமையை விலக்கி நன்மை எது என்று அறிந்து அதில் ஈடுபட வேண்டும்.

[எரவாடா சிறையிலிருந்து எழுதியது]

அனைத்திலும் உன் உரிமையைத் துறந்துவிட்டு அவற்றை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு வாழ்க்கை நடத்துவாய். அவ்வாறு துறப்பதனாலேயே உயிருடன் வாழ்வதற்கு உரிமை ஏற்படுகிறது. மற்றவர்கள் தங்கள் தங்கள் கடமையைச் செய்தபின் நானும் அந்தப் பணியில் இறங்குவேன் என்று சொல்லவேண்டாம். மற்றவர்கள் செய்தால் செய்யட்டும், அல்லது செய்யாமல் இருக்கட்டும். உன் பணியை முதலில் நீ செய், எஞ்சியதை ஆண்டவனுக்கு விட்டுவிடு.

[ஹரிஜன் 6-3-37]

இன்றைக்கு வேண்டியதைமட்டும் நாம் பார்த்துக்கொண்டோமானால் நாளை விஷயத்தைப்பற்றிக் கவலை 'இல்லை' பகவான் பார்த்துக்கொள்வான்.

[யங் இந்தியா 13-10-21]

பொருள் இருந்தால்தான் உலகத்துக்குப் பணி செய்ய முடியும் என்று எண்ணவேண்டாம். ஏசு கிறிஸ்து, நபி முகம்மது, புத்தர், நானக், கபீர், சைதன்யர், சங்கரர், தயானந்தர், ராமகிருஷ்ணர் உலகத்துக்குப் பணி செய்தார்கள் அல்லவா? எவ்வளவு பெரிய அளவில் செய்திருக்

கிறார்கள். லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கிறார்கள். இவர்கள் தோன்றியதே பெருஞ்செல்வம் என்று உலகம் கருதுகிறது. இவர்கள் அனைவரும் செல்வத்தைத் துறந்து வறுமையையே நன்மையாகக் கருதி வாழ்ந்தார்கள். கட்டாயத்தில் அல்ல; சுயமாகவே அப்படிச் செய்தார்கள்.

கோடிக்கணக்கானவர்களுக்கு இல்லாததை நாமாகவே வேண்டாம் என்று துறந்துவிடவேண்டும். இதுதான் நியாயமும் தர்மமும். ஆனால் அப்படித் துறப்பது எளிதல்ல. அதற்கு வேண்டிய மன உறுதி திடீர் என்று ஒருவனுக்கு வந்துவிடாது. பயிற்சி செய்து கொள்ள வேண்டும். முதலாவதாக உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் அனுபவிக்காத சௌகரியங்கள் எனக்கு என்னத்திற்காக? வேண்டாம் என்று மனத்தைப் பண்படுத்திக்கொள்ளவேண்டும். அது முடிந்த பின் கூடிய துரிதத்துடன் நம்முடைய வாழ்க்கையை அந்த சங்கற்பத்தை அனுசரித்து வரவர மாற்றிக்கொள்ள வேண்டும்.

[யங் இந்தியா 24-6-26]

## 72

உலகம் படைத்தவன் மக்களைச் சிருஷ்டிக்கும்போது யக்ஞம் அதாவது தியாகத்துடன் சிருஷ்டித்ததாகக் கீதையில் சொல்லப்படுகிறது. இந்தக் காமதேனுவைக் கொண்டு பிழையுங்கள் என்று சொல்லி மனித சமூகத்தையும் வேள்வியையும் உலகம் படைத்தவன் தோற்றுவித்தான் என்பது கீதா வாக்கியம். யக்ஞம், வேள்வி, தியாகம், இவை யனைத்துக்கும் ஆங்கிலத்தில் ஒரே பெயர்-Sacrifice தனக்குப் பயன்படும்படியான ஒரு பொருளைத் தெய்வத்துக்கென்று அளித்துவிடுவது யக்ஞம் அல்லது வேள்வி. பிறருக்குக் கொடுத்துவிட்டுத் தன் உரிமையைத் துறந்துவிடுவது தியாகம். 'தியாகத்தால் உங்களுடைய எல்லா ஆசைகளையும் தீர்த்துக் கொள்ளுங்கள்' என்பது உலகம்

படைத்தவனுடைய வாக்கு என்ருல் மனித வர்க்கத்தினுடைய முன்னேற்றத்துக்கு வழி ஒவ்வொருவனும் தன்னலத்தை அதிகமாகக் கருதாமல் பிறருக்குத் தன்னுடைய பொருளை மனப்பூர்வமாக உதவவேண்டும் என்பது அர்த்தம்.

கீதையில் இன்னும் சொல்லப்படுகிறது: வேள்வி செய்யாமல் உண்பவன் திருட்டுச் சோறு உண்கிருன். இதன் பொருள் என்னவென்ருல், சமூகத்தினுடைய உதவியால் ஒருவனுக்கு வயிருர உண்ண உணவு கிடைக்கிறது; அந்த உணவைத் தின்பவன் தன்ஞல் இயன்றதைச் சமூகத்துக்குச் செய்து வரவேண்டும். இல்லாவிடில் அவன் உண்ட சோறு திருட்டுச் சோருகும்.

. எல்லாரும் உழைத்து அவனவனுக்கு வேண்டிய உணவை அவனவன் சம்பாதித்து அவனவனுக்கு வேண்டியதற்கு மேல் சேர்த்து வைத்துக்கொள்ளாமல் இருந்தால் யாருமே பசியால் கஷ்டப்படமாட்டார்கள். எல்லாருக்குமே போதிய ஓய்வும் இருக்கும். ஜனத்தொகை அதிகமாகிவிட்டது என்கிற பேச்சு இருக்காது. உலகத்தில் வியாதியும் இருக்காது. வேறுவிதத் துயரமும் ·இருக்காது. இந்த முறையை ஒப்புக்கொண்டு எல்லாரும் உழைத்து உண்டால் அந்த உழைப்பு மிகச் சிறந்த வேள்வியேயாகும். உணவுக்கு மாத்திரம் அன்றி உடலையும் மூளையையும் கொண்டு வேறு பல தொழில்களும் செய்யலாம். ஆனல் அவையெல்லாம் சுயநலத்துக்கல்லாமல் சமுதாய நன்மைக்காகச் செய்யப்படவேண்டும். இவ்வாறு நடைபெற்ருல் ஏழைகளென்றும் பணக்காரர்கள் என்றும் மேலோர் என்றும் கீழோர் என்றும் தீண்டும் சாதி என்றும் தீண்டத்தகாத சாதி என்றும் வேறுபாடுகள் இல்லாமல் நாடு சந்தோஷமாக இருக்கும்.

இது நடைமுறையில் ஆகாத காரியமாக இருக்கலாம். அதற்காக அந்த வழியில் நாம் முயற்சி செய்யவேண்டியதில்லை என்றல்ல. முற்றிலும் இந்த வேள்வி நியதிப்படி செய்து தீர்க்காவிட்டாலும் நம்முடைய உணவுத் தேவைக்குச் சமமாக ஏதேனும் ஒரு வழியில் சரீரத்தைக் கொண்டு

உழைப்பது என்று மட்டுமாவது வைத்துக்கொண்டோமானால் கடமையை வெகுவாகச் செய்தவர்களாவோம்.

இப்படி வாழ்க்கையை நடத்தினோமானால் நம்முடைய தேவைகள் ரொம்பக் குறையும். நம்முடைய சாப்பாட்டு முறையும் வரம்பு மீறாமல் சாமான்ய வகையில் நிற்கும். உயிரைக் காப்பதற்கு உண்போம், உண்டு களிப்பதற்காகவே உயிரைப் பெற்றோம் என்று வாழ மாட்டோம். நான் சொன்னதில் யாரேனும் ஐயப்பட்டால் அவர் செய்து பார்க்கலாம். ஒருவன் தான் உண்ணும் உணவைத் தானே உழைத்துச் சம்பாதிக்க முயன்றால் அப்படி அடைந்த உணவை மிகவும் ருசிப்பான். தன்னுடைய தேக சிரமத்தினால் உண்டான அன்னத்திலும் காய்கறிகளிலும் அமுதம் போன்ற சுவை காண்பான். ஆரோக்கியம் வளரும். அதற்குமுன் மிக அவசியம் என்று அவன் எண்ணிய பல உணவுப் பொருள்கள். அனாவசியம் வேண்டியதேயில்லை என்று காண்பான்.

நம்முடைய உணவுக்காக உடலைக் கொண்டு சிரமம் எடுப்பதே கடமையா? மூளையை உபயோகித்து உணவுக்கு வேண்டிய அளவு சம்பாதிக்கலாகாதா? என்று கேட்பீர்கள். இல்லை என்பேன். உடலுக்கு வேண்டியதை உடலைக் கொண்டே சம்பாதிக்க வேண்டும், மூளையைச் செலுத்தி, தேக உழைப்பின்றிச் செய்யும்படியான தொழில் உள்ளத் தூய்மைக்கும் ஆன்ம உயர்வுக்கும் பயன்பட வேண்டும். அதன் வழி உடலுக்கு வேண்டிய உணவை விலைக்கு வாங்கலாகாது. மூளையைக் கொண்டு செய்யும் தொழிலுக்குக் கூலி கேட்கலாகாது. நல்ல முறையில் நடைபெறும் சமூகத்தில், வைத்தியர்களாவது நீதி நிபுணர்களாவது அவர்களைப் போன்ற மற்றவர்களாவது சமுதாயத்துக்குத்தான் உழைப்பார்கள். அறிவை விலைக்கு விற்க மாட்டார்கள். வரும்படிக்காகத் தங்கள் மூளையை உபயோகப்படுத்தமாட்டார்கள்.

நான் சொன்ன விதத்தில் உணவும் உடல் உழைப்பும் பிணைக்கப்பட்டால் ஒரு சத்தமும் குழப்பமுமின்றிச் சமூகம் சீர்ப்பட்டுப்போகும். தத்தம் சுயலாபத்துக்கென்றும் பிழைப்புக்கென்றும் போட்டியிடுவதற்குப் பதிலாகச் சமூக சேவை

யில் ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவார்கள். மிருக வாழ்க்கை மறைந்து உண்மையான மனித வாழ்க்கை தோன்றும். "நகரங்களை விட்டுக் கிராமங்களுக்குச் செல்லுங்கள்" என்ற உபதேச மந்திரத்தின் பொருள் இதுவே. உடல் உழைப்பின் வழியாகவே வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். மூளையைக் கொண்டு செய்யும் தொழில்களுக்குக் கூலி கேட்கலாகாது.

[ஹரிஜன், 29-6-35]

# 73

பிறர் நன்மைக்காகச் சேவை செய்யும் பக்தனுடைய இதயமே ஆண்டவன் பிரியப்படும் கோயில். அவனே தேடி வருவான். "அபூபென் ஆதம்" அத்தகைய ஒரு பக்தன். அவன் ஆடம்பரமின்றி ஏழைகளுக்குப் பணி செய்து வந்தான். அதனால் தேவலோகத்தில் வைத்திருந்த பட்டியலில் முதல் ஸ்தானம் பெற்றான்.

துன்பமும் துயரமும் அடைந்து கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவ வேண்டும். ஏழைகளுக்கும் முன்னேற வசதியில்லாதவர்களுக்கும் உதவ வேண்டும். உடலையும் உள்ளத்தையும் செலுத்தி எல்லாவிதத்திலும் உதவினால் தான் ஒருவன் பக்தனாவான். ஏழைகளுக்கென்று நூல் நூற்கவும் கூட இஷ்டமில்லாமல் சமாதானங்கள் சொல்லிச் சும்மாயிருப்பவனுக்குச் சேவை என்பதன் பொருள் தெரியாது. தானும் நூற்று, ஏழைகளுக்கு வழிகாட்டி அவர்களையும் நூற்கச் செய்கிறவன் தெய்வத்துக்குப் பணி செய்கிறவனாவான். 'புஷ்பம் பழம் இலை எதையேனும் பக்தியுடன் எனக்குத் தந்தால் போதும், அவன் எனக்கு மிகப் பிரியமானவன்' என்று கண்ணன் கீதையில் சொல்லியிருக்கிறான். நீசர்கள் என்று கருதப்படுகிறவர்கள் இருக்கும் சேரியே ஆண்டவனுக்குப் பிரியமான க்ஷேத்திரம். அத்தகைய

சேரியிலிருப்பவர்களுக்காக நூல் நூற்ருமாஞல் அதுவே பெரிய ஜபமும் பூஜையும் வேள்வியுமாகும்.

[யங் இந்தியா, 24-9-25]

"பூஜையில் செலவழிக்கும் காலத்தை ஏழைகளின் பணியில் செலவிடுதல் நலமல்லவா? சமூகத்துக்கு உண்மையில் சேவை செய்கிறவனுக்குப் பூஜையும் தெய்வ வழிபாடும் வேண்டியதில்லை, அல்லவா?" என்று ஒருவர் கேட்டார்.

நான் சொன்ன விடை: இந்தக் கேள்விகளுக்குக் காரணம் நாஸ்திகமும் சோம்பேறித் தனமும் என்று எண்ணுகிறேன். எந்தச் சிறந்த கர்மயோகியும் பூஜையையும் பக்தி செலுத்துவதையும் விடுவதில்லை. பிறருக்குச் சேவை செய்வதே பூஜையாகும். அவர்கள் பாடல்கள் பாட வேண்டிய அவசியமுமில்லை என்பது உண்மை. ஆயினும் பஜனைக் கூட்டம், பூஜை முதலியவை உண்மையான சேவைக்கு உதவுகின்றன. உள்ளத்தில் ஆண்டவனுடைய நினைவை நிறுத்தப் பயன்படுகின்றன.

[ஹரிஜன், 13-10-46]

ஆண்டவனை நினைவில் வைத்து அவனுக்கென்று அர்ப்பணம் செய்யப்பட்ட எந்தச் சிறிய பணியும் பெரிய பணியே யாகும். அந்த முறையில் செய்யப்பட்ட தொழில்கள் எல்லாம் சம மேன்மைபெறும். ஆண்டவன் பணியாக மலத்தையும் அசுத்தத்தையும் கூட்டிப் பெருக்குகிறவனுடைய பணியும், ஒரு அரசன் பகவானை எண்ணித் தன்னுடைய செல்வத்தை ஈசனுக்குச் சேர்ந்த செல்வமாக எண்ணி நியாயமாக வழங்கிஞல் அந்தப் பணியும் சமமே யாகும். ஒன்றுக் கொன்று குறைந்ததல்ல.

[யங் இந்தியா, 25-11-26]

தினமும் ஒரு மணி நேரம் ஏழைக் கூலிகள் செய்ய வேண்டிய வேலையை நாம் செய்தோமானால் அதைவிட மேன்மையான தேசத்தொண்டு இல்லை என்பேன். அத்தகைய வேள்விப் பணியினால் நம் நாட்டிலுள்ள ஏழைகளோடு நாமும் ஒன்று பட்டு, அவர்கள் மூலம் உலக சமுதாயத்துடன் ஐக்கியப்படுவோம். ஏழைகள் செய்யும் கூலி வேலையை ஆண்டவனுக்கென்று நாம் செய்தோமானால் அதைவிடச் சிறந்த பூஜை வேறில்லை.

[யங் இந்தியா 20-10-21]

உடல் உழைப்பின் சிறப்பைப் பற்றி எவ்வளவு சொன்னாலும் போதாது. உழைத்து அனைவருக்கும் வழி காட்ட வேண்டும். கீதையில் கண்ணபிரான் சொல்லியிருக்கிறதையே நான் சொல்லுகிறேன். "ஒரு நிமிடமும் நான் சும்மா இருப்பதில்லை. சும்மா இருந்தேனானால் என்னைக் கண்டு பிறரும் சோம்பேறிகளாவார்கள்" என்றான்.

[ஹரிஜன், 2-11-35]

வேலை செய்யக் கூடிய ஆணோ பெண்ணோ யாருக்கேனும் தொழில் செய்ய வசதியில்லாமல் பசியால் வருந்தினால் அது மானக் கேடாகும். அவர்கள் பசியால் வருந்தும் போது நாம் உண்பது பாவமாகும்.

[யங் இந்தியா 6-10-27]

உணவுக் கென்று உழைக்காமல் சமூகத்தில் வாழ எவனுக்கும் உரிமை கிடையாது. உடல் உழைப்பு வேள்வியே யாகும்.

[யங் இந்தியா 10-9-28]

## 74

குழந்தைகளாவது, வாலிபர்களாவது, விருத்தாப்பியம் அடைந்தவர்களாவது மரணமடைந்து நம்மை விட்டு நீங்கினால் அதற்காக நாம் அமைதி இழக்கலாகாது.

ஒவ்வொரு நிமிஷத்திலும் ஒரு உயிர் தோன்றுகிறது; ஒவ்வொரு நிமிஷமும் ஒரு உயிர் உடலை விட்டுப் பிரிந்து போகிறது. இந்த உலகத்தில் ஒரு குழந்தை பிறந்தது என்றாவது, ஒருவர் இறந்து போனார் என்றாவது மகிழ்ச்சியடைவதும் அழுவதும் இரண்டுமே பைத்தியக்காரத்தனம். இந்துக்களும் முஸல்மான்களும் பாரசீக மதத்தினரும் எல்லாருமே இந்த உடல் வேறு, இந்த உடலில் குடிகொண்டிருக்கும் ஆன்மா வேறு என்று நம்புகிறார்கள். அந்த ஆன்மாவுக்கு மரணமில்லை என்றும் அறிவார்கள். உயிருடன் இருப்பவர்களுடைய ஆன்மாக்களும் மரண மடைந்தவர்களின் ஆன்மாக்களும் பேதப்படவில்லை. இரண்டுக்கும் ஒன்றும் வித்தியாசமில்லை. பிறப்பும் இறப்பும் இடைவிடாமல் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. அவற்றில் நாம் வருத்தப்படுவதற்கோ மகிழ்ச்சியடைவதற்கோ காரணம் ஒன்றுமில்லை. மற்ற நாடுகளை மறந்து விட்டு நம்முடைய நாட்டை மட்டும் கவனித்தாலும் நாட்டில் எவ்வளவோ குடும்பங்கள். மரணத்துக்கு அழுவதென்றால் அதற்கு முடிவு இல்லை. இறந்துபோனவர்களைப் பற்றி அழ ஆரம்பித்தால் கண்ணீரைத் துடைப்பதற்கே அவகாச மில்லாமற் போகும். மரணத்தைப் பற்றிப் பயப்படுவதையும் வருந்துவதையும் முற்றிலும் ஒழித்துவிட வேண்டும்.

[யங் இந்தியா, 13-10-22]

இறப்பும் பிறப்பும் ஆன்மாவைப் பொருத்தமட்டில் ஒரு வேறுபாடுமில்லை. இரண்டிலும் மகிழ்ச்சிக்கும் காரணமில்லை; துயரத்துக்கும் காரணமில்லை. ஆன்மாவுக்குப் பிறப்பாவது இறப்பாவது இல்லை.

[யங் இந்தியா, 20-11-24]

ஒரு பயனை அடைவதற்குப் பல வழிகள் உண்டு. பயனே முக்கியம், சாதனங்களைப் பற்றி எதுவானால் என்ன என்று சிலர் எண்ணுகிறார்கள். இது தவறு. என்னுடைய கொள்கையின்படி ஒரு பயனை அடைவதற்காக நாம் எடுக்கும் முறைகளே மிக முக்கியம். முறைகள்

பிழைபட்டால் பயனும் பிழை பட்டதே. பயன் வேறு; பயனை அடையும் வழி வேறு என்பது பொய். முயற்சியே பயனும் ஆகும். நாம் எடுக்கும் முயற்சிமட்டுமே ஓரளவு நம்முடைய சுவாதீனம். பயன் என்பது ஆண்டவனுடைய ஆதீனம். ஆனபடியால் நாம் எடுக்கும் முயற்சியும் முறையுமே நம்முடைய பொறுப்பு. நாம் கையாளும் முறைகள் குற்றமான முறைகளானால் எந்தப் பயனும் நமக்குப் பயன் படாது. இது என்னுடைய உறுதியான கொள்கை. இதற்கு விதிவிலக்கை ஒப்புக்கொள்ளவே மாட்டேன்.

[யங் இந்தியா 17-7-24]

மெய்ப்பொருளைக் காண வேண்டுமானால் தன் உயிரைப் போலவே பிற உயிர்களைக் காண வேண்டும். அற்ப ஜீவன்களையும் தன் உயிரைப்போலவே மதிக்க வேண்டும்: நம் உயிரில் நாம் வைத்துக் கொண்டிருக்கும் பற்று பிற உயிர்களிடம் ஜீவகாருண்யமாகப் பரிமளிக்க வேண்டும். ஒருவன் தன் உயிரைப்போலவே பிற உயிர்களையும் மதித்தால் அவன் எந்த விவகாரத்தை இது என் பொறுப்பல்ல என்று புறக்கணிக்க முடியும்? முடியாது. ஆனபடியால் தான் உண்மையை உபாசிக்கும் நான் அரசியலில் வேலை செய்து வருகிறேன். அரசியல் விவகாரத்துக்கும் தெய்வ பக்திக்கும் சம்பந்தமில்லை என்று எண்ணுபவர்கள் அறியாமையால் அப்படி நினைக்கிறார்கள். பக்தி அல்லது சமயம் இன்னதென்று சரியாக உணராதவர்கள்தான் சமயம் வேறு, அரசியல் வேறு என்று எண்ணுவார்கள். இதைப் பற்றி எனக்குக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. வேறு அபிப்பிராயம் கொண்டவர்களிடம், இதை மிக வணக்கமாகச் சொல்லுகிறேன்.

[சுயசரிதம்]

அரசியல் என்பது மக்களுடைய க்ஷேம நலத்தைப் பற்றிய விவகாரம். மக்களுடைய க்ஷேம நலத்துக்காகப் பணி செய்யும் தகுதி யார் உடையவர்கள்? தெய்வத்தை யும் மெய்ப் பொருளையும் நாடும் மனிதர்களே அந்தப் பணி யில் ஈடுபட வேண்டும். தெய்வபக்தி யில்லாதவர்கள் அரசியல் முயற்சிகளில் சேராமலிருப்பதே நலம்.

உண்மை தெய்வபக்தி கொண்டவர்கள் மக்களுடைய க்ஷேமத்தைப் பற்றிக் கவலைப்பட்டே தீரவேண்டும். ஆன படியால் அரசியலில் அவர்கள் சம்பந்தப்படாமல் இருக்க முடியாது. அரசியல் விவகாரங்களில் ஆண்டவனுடைய ஆட்சியை உணர்ந்து நிலைநாட்ட வேண்டும். தெய்வ பக்தியைப் புறக்கணித்த அரசியலானது அழுக்குக்குச் சமானமாகும். அதைத் தீண்டலாகாது.

[யங் இந்தியா 18-6-25]

மக்களுடைய க்ஷேமத்தையும் நலனையும் கவனியாத ஒருவன் எப்படி சமய வாழ்க்கை நடத்த முடியும்? பக்தர் கள் அரசியலில் புகுவதில் வியப்பில்லை. வாழ்க்கை முழு வதும் ஒன்றே. அதை இலாக்காக்களாகப் பிரித்து ஒன்றுக் கொன்று சம்பந்த மில்லாமல் ‘இது சமூகத் தொண்டு, இது பொருள் நிலைத் தொண்டு. இது அரசியல் தொண்டு, இது வேறொன்றிலும் சம்பந்தப்படாத சமயத் தொண்டு’ என்று பிரிவினை செய்து வாழ்க்கை நடத்த இயலாது. வாழ்க்கைக்குச் சம்பந்தப்படாத தெய்வபக்தி எனக்கு விளங்காது. நன்னெறியே எல்லா முயற்சிகளுக்கும் பணி களுக்கும் ஆதாரம். சன்மார்க்கத்தோடு இணைக்கப்படாத பணிகள் வெறும் ‘ஆகுல நீர’; அதாவது வெற்று ஆர்ப் பாட்டமே. பொருளற்ற வீண் முயற்சிகள்.

[ஹரிஜன் 24-12-38]

நம்முடைய உடலானது ஆரோக்கியம் இழந்து நோய்ப் பட்டால் அதைப்பற்றிக் கவனிக்க வேண்டிய கடமை

நமதாகும். ஆரோக்கியம் இழப்பது நம்முடைய குற்றம். நோயைக் கவனிக்காமலிருப்பது அதைவிடப் பெரிய குற்றம். செய்துவிட்ட குற்றத்தைத் திருத்திக்கொள்வது ஒருவனுடைய கடமையாகும். நேற்று பிழை செய்தோம் என்று, இன்று அந்தப் பிழையைத் திருத்துவதற்கு வேண்டிய முயற்சியை எடுக்கச் சோம்பக் கூடாது. ஏன் நோய்ப்பட்டேன் என்று ஆராய்ந்து கவலைப்பட்டுத் தான் தீர வேண்டும். எந்த நியதியைப் புறக்கணித்தேன் என்று ஆராய்ந்து பார்த்து நோயைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

எல்லாம் விதிப்படி நடக்கும் என்று நாம் சும்மா இருக்க லாகாது. ஆண்டவனுடைய இச்சைப்படி அனைத்தும் நடப்பது உண்மை. அவன் நம்மைப்போல் கண்டபடி நடப்பதில்லை. அவனுடைய இலக்கணம் வேறு; நம் முடைய இலக்கணம் வேறு. நியதிக்கு நியதியானவன் அவன். நியதி எப்போதும் தவறாது. உலகம் எல்லாம் மாறி மாறி இயங்கும். அவனுடைய நியதியோ, மாறாத நியதி.

[ஹரிஜன் 28-7-46]

முன்னேற்றம் என்பது ஒரே அடியாக வந்துவிடாது. பிழைகள் செய்து, அறிவடைந்து பிழைகளைத் திருத்திக் கொண்டேதான் முன்னேற்றமடைய முடியும். முற்றிலும் நன்மையாக ஆண்டவன் நமக்கு எதையும் தரமாட்டான். மீண்டும் மீண்டும் செய்த பிழைகளைத் திருத்திக்கொண்டு தான் பல தோல்விகளுக்குப் பின் வெற்றி அடையமுடியும். இதுவே தனி மனிதனுடைய முன்னேற்றத்தைப் பற்றிய நியதி. அந்த நியதிப்படியே சமூக முன்னேற்றமும் அர சியல் முன்னேற்றமும் நடைபெறும். பிழை செய்யும் உரிமையும் அதைத் திருத்திக் கொள்ளும் உரிமையும் நமக்கு உண்டு. அதுவே முன்னேற்றத்துக்கு வழி.

[கட்டுரைகள் 1933]

பிழையும் திருத்தமும் செய்து கொண்டேதான் மக்கட் சமூகங்கள் முன்னேற்றமடைந்திருக்கின்றன. சில

சமயம் புரட்சிகரமான மாறுதல்களும் செய்து முன்னேற்ற மடைந்திருக்கின்றன. படிப்படியாகச் செல்லும் முறையும் புரட்சி முறையும் இரண்டுமே முன்னேற்றத்துக்கு வேண்டும். பிரபஞ்சத்தில் மரணம் பிறப்பு என்று இரண்டு உண்டல்லவா? மரணம் என்பது புரட்சிகரம். பிறப்பும் உயிர் வாழ்வும் மெதுவாக நடைபெறும் விஷயம். படிப்படியாக வளர்ந்து வாழ்க்கை நடைபெறுகிறது. மரணம் அவ்வாறல்ல. திடீர் என்று நடைபெறுகிறது. மனித வர்க்கத்துக்கு உயிரைப் போலவே மரணமும் அவசியம். ஈசுவரன் பெரிய புரட்சிக்காரன். அவன் அனுப்பும் புயல்காற்றுகளுக்கும் பூகம்பங்களுக்கும் வெள்ளங்களுக்கும் சமானம் வேறு எந்தப் புரட்சிகரமான நிகழ்ச்சியுண்டு? பல்லாயிரம் ஆண்டுகளில் வளர்ந்த மலையும் நிலப் பிரதேசமும் ஒரு விநாடியில் அழிந்து போகும்படியான நிகழ்ச்சிகளை நடத்துகிருன். ஒரு மேகமும் காணப்படாத நிர்மலமான வானம் ஒரு நிமிஷத்தில் மேக மயமாகிப் போய் ஒரே வெள்ளமாகப் பெய்து கிராமங்களை அழித்து விடுவதைக் கண்டிருக்கிறேன். உலகத்தின் சரித்திரமெல்லாம் முன்னேற்றமும் புரட்சியும் கலந்த சரித்திரம்.

ஆன்மாவுக்கு மரணத்துக்குப் பின் மறுபிறப்பு உண்டு. முன் ஜன்மத்தில் அடைந்த சம்ஸ்காரங்கள் ஆன்மாவின் மறு பிறப்பில் தொடர்ந்து வரும். இந்த இந்துமதக் கொள்கையை நான் முற்றிலும் ஒப்புக்கொள்கிறேன்.

[ஹரிஜன் 18-8-40]

சமயங்கள் சர்க்காரினுடைய உதவியை எதிர்பார்க்கலாகாது. அரசாட்சியின் உதவியால் நிலைத்து நிற்கலாம் என்று எண்ணும் சமயங்கள் அழிந்துபோகும். அத்தகைய சமயங்களில் சக்தி இல்லை என்றே வைத்துக் கொள்ளலாம். அரசாட்சியினுடைய ஆதரவைப் பெற்று நடைபெறும் சமயங்கள் நாட்டுக்கு நன்மை தரமாட்டா. தத்தம் பலத்தையும் உறுதியையும் கொண்டே சமயங்கள் நிலைபெற்று மக்களுடைய பக்தியை அடையவேண்டும்.

[ஹரிஜன் 31-8-47]

வாழ்க்கையில் பூரணமாக நடத்தி வெற்றி பெற இயலாது என்பது எந்த தர்மத்தைப் பற்றியும் ஒரு ஆட்சேபணையாகாது. சமயமும் தார்மிகக் கொள்கையும் பக்தியோடு கலந்து குறிக்கோள்களாக இருக்குமே யொழிய ஊனுடலில் வாழும் மக்கள் சம்பூரணமாக அந்தக் கொள்கைகளின்படி வாழ்க்கை நடத்திவிட்டு வெற்றியைக் கொண்டாட முடியாது. உயர்ந்து உயர்ந்து சென்று கொண்டேயிருக்கவேண்டும். ஆன்மாவின் முன்னேற்றம் முடிந்துவிட்டது என்று எந்தச் சமயத்திலும் திருப்தியடைய முடியாது. தர்ம வாழ்க்கை என்பது இந்த ஜென்மத்தில் முடிவுபெறாத யாத்திரை. இதனாலேதான் சமயங்கள் வேறுபாடும், கொள்கைகள் வேறுபாடுகளும் உலகத்தில் இருந்து வருகின்றன. எல்லாருக்கும் ஒரு கொள்கை அல்லது ஒரு மதம் என்பது முடியாத காரியம்.

இப்படி மேல்நோக்கிச் செல்வதற்கு முடிவில்லையாயினும் மேல் நோக்கிச் செல்லும் பக்தன் தினத்துக்குத்தினம் அதை நெருங்கிக்கொண்டே செல்வான். குறையாத பக்தியுடன் செல்வான். அதை அடைந்துவிட முடியாது என்பதனால் யாத்திரையில் தளரமாட்டான். இப்படித் தளர்ச்சி அடையாமல், பக்தியை இழக்காமல் குறிக்கோளை நோக்கிச் செல்வதே உண்மை வாழ்க்கை.

[யங் இந்தியா, 22-11-28]

## 76

உரிமைகளை மட்டும் மனத்தில் வைத்துக்கொண்டு நம்முடைய கடமைகளை மறந்துவிட்டால் அந்த உரிமைகளை நாம் என்றும் அடைய மாட்டோம். கடமைகளைச் செய்து தீர்த்தோமானால் உரிமைகள் தாமே வந்து சேரும். கடமைகளைச் செய்யாமல், உரிமைகளை அடைய ஓடினோமானால் உரிமைகள், கொள்ளி வாய்ப் பிசாசைப்போல் நம் கைக்கு எட்டாமல் தூரமாகவே போய்க்கொண்டிருக்கும். நாம் ஓட ஓட அதுவும் கைக்கு எட்டாமல் முன்னால் ஓடும். “உன்

கருமத்தை நீ செய்; பயனைப் பற்றிக் கவலை கொள்ளாதே. கருமமே உன் கடமை. பயனை எனக்கு விட்டுவிடு" என்று கண்ணன் உபதேசித்ததற்கும் இதுவே கொள்கை. கருமம் என்பது கடமை. பயன் என்பது உரிமை.

[யங் இந்தியா 8-1-25]

எதையும் ரகசியமாக மறைத்து வைப்பது பாவம் என்பது என் கொள்கை. பகவான் எப்போதும் அண்மையிலேயே இருந்து, அனைத்தையும் பார்த்து வருகிறான். இதனால்தான் ஆண்டவனுடைய நாமங்களில் "சாட்சி" என்பது ஒன்று. எதையும் அவன் நேரில் பார்க்கிறான். அப்படியிருக்க நாம் எதையேனும் ஏன் மறைத்து வைக்க வேண்டும்? ஆண்டவனுடைய சான்னித்தியத்தை உணர்ந்தோமானால், அனைத்தையும் அவன் நேரில் காண்கிறான் என்பதை உணர்ந்தோமானால் நாம் எப்படிக் கெட்ட எண்ணங்களை எண்ணுவோம். பாப காரியங்களிலும் பாபமான எண்ணங்களிலும் பாவப் பேச்சுக்களிலும் பயனில்லை. அழுக்கும் குற்றமும் இருந்தாலேதான் மூடி மறைத்து வைக்கவேண்டியதாகிறது. உள்ளத்திலுள்ள அழுக்கை மறைக்க ஆசைப்படுகிறோம். அதற்குப் பதிலாக அப்படி மறைக்க வேண்டிய எண்ணங்களுக்கு மனத்தில் இடங் கொடுக்காமலிருக்க வேண்டும் என்பது என்னுடைய உபதேசம். எதையும் மறைக்கவேண்டாம்.

[யங் இந்தியா, 22-12-20]

செய்த பாபத்தின் பயன்களினின்று விடுபடவேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்யமாட்டேன். பாபத்தினின்று விடுபடவேண்டும் என்றே வேண்டிக் கொள்வேன். பாப எண்ணமே என் மனத்தில் எழ விடாமல் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான் வேண்டிக் கொள்வேன். அவ்வாறு குற்றமற்ற மனநிலையை அடையும் வரையில் சாந்தி இல்லை என்பதை அறிவேன்.

ஆண்டவன், பாவம் செய்தவனையும் நன்னெறியில் நின்று வாழ்க்கை நடத்துபவனையும் சமமாகவே மதிக்கிறான்.

இருவரும் முன் செல்லலாம், பின் செல்வதற்கும் உரிமை யுண்டு. இருவருக்குமே அவன் பிதா. நன்னெறியில் நிற்ப வன் தவறினவனைக் கண்டு இகழ்ந்தால் அந்த அகம்பாவத் தினல் அவனுடைய சன்மார்க்கம் பழுதுபடும். அகம்பாவம் கொண்ட ஒருவன், வேறு பாவம் செய்யாதவனுக இருந்தா லும், பாவம் செய்தவனைக் காட்டிலும் தாழ்ந்து போவான். தருமத்தை உணராமல் ஒருவன் செய்யும் பாபத்தைக்காட்டி லும் தருமத்தை உணர்ந்த ஒருவனுடைய அகம்பாவம் பெரிய பாபமாகும்.

[ஹரிஜன் 14-10-33]

இறந்து போனவர்களோடு நான் சம்பாஷித்தது கிடை யாது. இறந்து போனவர்களின் ஆன்மாக்கள் எனக்குச் செய்தி அனுப்பியதும் கிடையாது. அப்படி இறந்து போன வர்கள் உயிருடன் இருப்பவர்களுக்கு ஏதேனும் செய்தி அனுப்புவதுண்டா. அப்படிச் செய்திகளை அடைந்ததாகச் சொல்லிக் கொள்கிறவர்களுடைய பேச்சு உண்மையா என்று என்னைக் கேட்டால் அவையெல்லாம் பொய் என்று சொல்வதற்கு என்னல் முடியாது. அப்படிச் சொல்வதற்கு எனக்கு உரிமை இல்லை. ஆயினும் ஒன்று சொல்வேன். இறந்தவர்களோடு பேசப் பார்ப்பது முற்றிலும் தவறு என்பது என்னுடைய அபிப்பிராயம். இறந்துபோன ஆன் மாக்களுடன் சம்பாஷிப்பதும் அவர்களினின்று செய்திகள் அடைவதும் அனேகமாக மோசமும் மனப்பிராந்தியுமே யாகும். இத்தகைய சம்பாஷணைகள் நடத்துவதில் அவை யெல்லாம் உண்மையாகவே வைத்துக்கொண்டாலும் இறந்தவர்களுடைய சாந்தியைக் கெடுத்தவர்களாவோம். அவர்களுடைய முக்திக்குத் தடை செய்தவர்களாவோம். உடலை விட்டுப் பிரிந்தவுடனே ஆன்மா புனிதமடைந்து விட வில்லை. உயிருடன் இருந்தபோது அடைந்த குற்றங்கள் அந்த ஆன்மாவை இன்னும் பாதித்துக் கொண்டுதான் இருக்கும். ஆனபடியால் இறந்தவர்களிடமிருந்து அடையும் யோசனைகள் எல்லாம் நன்மையென்று வைத்துக் கொள்வ

தற்கில்லை, தவறான யோசனைகளும் இறந்தவர்கள் சொல்லக்கூடும். ஆனபடியால் இறந்தவர்களோடு சம்பாஷிப்பதை நான் முற்றிலும் கண்டிக்கிறேன். அவர்களுக்கும் அது நன்மையல்ல; நமக்கும் அது நன்மை அல்ல. என்னுடைய அனுபவத்தில் இத்தகைய சம்பாஷணைகள் நடத்துபவர்கள் எல்லாம் மூளைக் கோளாறுக்காரர்கள். இத்தகைய சம்பாஷணைகளினால் நன்மையடைந்தவர்களை என்னுடைய அனுபவத்தில் கண்டதில்லை.

[யங் இந்தியா, 21-9-29]

சரியான முறையில் வாழ்க்கை நடத்த ஆரம்பித்தோமானால் மூடநம்பிக்கைகளும் பிறகுற்றங்களும் தாமாகவே விலகிப்போகும். சரியான முறையில் நடந்து கொள்வதே முக்கியம். மனத்திலுள்ள நம்பிக்கைகள் எவ்வாறாயினும் சரி. அவை தாமாகவே சீர்ப்படும்.

[யங் இந்தியா, 11-8-27]

என்னுடைய பல குற்றங் குறைகளையும் பாபங்களையும் மறைக்காமல் ஒப்புக்கொண்டு வந்திருக்கிறேன். அப்படி ஒப்புக்கொண்டு வருவதால் அவை எனக்குச் சுமையாக இல்லை. ஆண்டவனை நோக்கிச் செல்லுகிறேன் என்கிற உணர்ச்சி யிருக்கிறபடியினால் அந்தச் சுமையின் பாரம் எனக்கு இல்லை. ஆண்டவனுடைய அருளாகிய குளிர்ந்த வெண்ணிலாவில் நடந்து செல்லுகிறேன். என்னுடைய நியமங்களும் உபவாசங்களும் ஜபங்களும் என்னைக் காப்பாற்றும் என்று நான் எண்ணவில்லை. அவனுடைய அருள் ஒன்றே என்னைக் காக்கும். அவன் நினைவு இருப்பதற்காகவே இந்த விரதங்களும் ஜபங்களும் பயன்படும் அவ்வளவே.

[ஹரிஜன், 18-4-36]

முற்றும்